வரு.74 இல. 36 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2022 செப்டெம்பர் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை September 04 Sunday, 2022
28 பக்கங்கள் 80/-




02 டயஸ்போரா அல்ல; புலம்பெயர் இலங்கையர் என்பதே சரி
03 மக்கள் இன்று தேர்தலை நடத்துமாறு கோரவில்லை!
12 உய்கூர் முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்
24 தடுமாற்றமும் பலம் தரலாம்!









## அரசின் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தினூடாக

# 35 இலட்சம் குடும்பங்களுக்கு நேரடியான நிவாரணங்கள்

**சமுர்த்தி உதவி பெறுவோர், ஆதரவற்ற முதியோர், சிறுநீரக நோயாளர், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் உதவித்திட்டம்**



பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினூடாக சுமார் 35 இலட்சம் குடும்பங்களுக்கு நேரடியான நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது

இத்திட்டத்தின் கீழ் உணவு பாதுகாப்பற்ற குடும்பங்கள் உட்பட சமுர்த்தி உதவி பெறுவோர், ஆதரவற்ற முதியோர், விசேட தேவையுடையோர் போன்றவர்களுக்கும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் இதனூடாக நன்மைகள் கிடைக்கவுள்ளன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினூடாக தற்போது சமுர்த்தி உதவி பெறும் சுமார் 17 இலட்சத்து 49 ஆயிரத்து 666 குடும்பங்களுக்கும் காத்திருப்பு பட்டியலில் இருக்கும் சுமார் 07 இலட்சத்து 31 ஆயிரத்து 975 குடும்பங்களுக்கும் இதனூடாக நிவாரணங்கள் கிடைக்கவுள்ளன. இத்திட்டத்தின்படி சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 5,000 ரூபாவுக்கு பதிலாக 7,500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. அதேபோன்று காத்திருப்பு பட்டியலிலிருக்கும் குடும்பங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது மேலும் உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு 2,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபா வரையில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

05

# தாமரைக் கோபுர செயற்பாடு செப்டம்பர் 15 முதல் ஆரம்பம்

**ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை தெரிவிப்பு**

இலங்கை மக்களுக்கு புத்தம் புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமான தாமரை கோபுரத்தின் செயல்பாடுகளை செப்டம்பர் 15 முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 113 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரத்தின் செயற்பாடுகள்

05





# IMF வழங்கிய நிதியுதவி நாட்டிற்கு புதிய நம்பிக்கை

**பொருளாதார மீட்சிக்கு நிச்சயம் வழிவகுக்கும்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதானது நாட்டின் பொருளாதாரத்தில் புதிய நம்பிக்கைக்கு வழிவகுத்துள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருந்தால் எதிர்க்கட்சி அது தொடர்பில் மௌனம் காக்காமல் தெரிவுக் குழு ஒன்றை கோர முடியும் என சபையில் தெரிவித்த அமைச்சர் அந்த தெரிவுக் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கவும் தயார் என்றும்

05

## வெளிநாட்டு பணப்பரிமாற்று முறை;

# உண்டியல் நடைமுறைக்கு எதிராக புதிய சட்டங்கள்

**விரைவில் அமுலாகும் என்கிறார் அமைச்சர் மனுஷ நாணயக்கார**



வெளிநாட்டு பண பரிமாற்று, உண்டியல் முறைக்கு எதிராக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு

05

# ஐ.தே.கவின் 76 ஆவது ஆண்டு விழா செப்.06 இல்

**ஜனாதிபதி ரணில் தலைமையில் கொழும்பில்**



ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு நிறைவு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செவ்வாய்க்கிழமை (06) கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் "ஒன்றிணைவோம்" என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது. 28 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கட்சி மாநாட்டிற்கு தலைமை தாங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 1993 ஆம் ஆண்டு டி.பி. விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக

05

# 2023 வரை ஆசிரியர்களது இடமாற்றத்துக்கு இடமில்லை

**விண்ணப்பங்கள் ஏற்கப்படாது என அறிவிப்பு**



ஆசிரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் 2023 புதிய கல்வி ஆண்டு வரையில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு, வைத்திய அறிக்கையில் கூறப்படும் சுகாதார காரணங்களின் அடிப்படையில் வழங்கப்படும் பாடசாலைகளின் சேவை அவசிய தன்மையை அடிப்படையாக கொண்ட ஆசிரிய இடமாற்றங்களை பெற்றுக் கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

05

## கையடக்கத் தொலைபேசி மற்றும் T.V

# சேவை கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டது



கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான மற்றும் கட்டண தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணங்களை திருத்துவதற்கு தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது. இதன்படி, கையடக்கத் தொலைபேசிகளுக்கான கட்டணம் 20 சத வீதமாகவும் நிலையான மற்றும் கட்டண தொலைக்காட்சி சேவைகளுக்கு 25 சத வீதமாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

# CPC விரைவில் கணக்காய்வுக்கு உட்படுத்த கஞ்சன எதிர்பார்ப்பு



பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அடுத்த இரு வாரங்களுக்கு கணக்காய்வுக்கு உட்படுத்த எதிர்பார்ப்பதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தாம் அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்று 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில் சுமார் 100 கூட்டங்களில் பங்கேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டங்களின் போது தமக்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகள், கூட்டத்துக்கு கூட்டம் மாறுபட்டு

05

# முன்னாள் ஜனாதிபதி நாட்டை வந்தடைந்தார்

**முக்கியஸ்தர்கள் பலரால் வரவேற்பு**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று முன்தினம் நள்ளிரவு தாய்லாந்திலிருந்து இலங்கை வந்தடைந்துள்ளார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் நேற்று முன்தினம் நாட்டுக்கு வந்திறங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அவர் கொழும்பு மலலசேகர மாவத்தையிலுள்ள இல்லத்துக்கு நேற்று அதிகாலை 12.50 அளவில் வந்தடைந்துள்ளார்.

05

## எங்கள் கருத்து...

# நம்பிக்கை தருகின்ற மூன்று சமிக்ஞைகள்!

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பெரும் பிரயத்தனங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில், கடந்த ஒரு வார காலத்தில் நம்பிக்கை தருகின்ற பல விடயங்கள் கூர்ந்து நோக்கத்தக்கவையாக உள்ளன. எமது நாடு பொருளாதார சரிவிலிருந்து மீண்டெழுவது உறுதியென்ற நம்பிக்கையை அவ் விடயங்கள் மக்களுக்கு ஏற்படுத்துகின்றன.

இலங்கையை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து கைதூக்கி விடும் வகையில், சர்வதேச நாணய நிதியம் எமது நாட்டுக்கு கடனுதவி வழங்குவதற்கு இணங்கியிருப்பதை இங்கு பிரதானமான விடயமாகக் குறிப்பிடலாம். நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதாயின் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியினால் மாத்திரமே முடியுமென்று பொருளாதார நிபுணர்கள் பலரும் அண்மைக் காலமாக கருத்து வெளியிட்டு வந்தனர்.

ஆனால் அக்கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைச் சாத்தியமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னரே சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்குக் கிடைக்கவிருப்பது உறுதியாகியுள்ளது. நாட்டின் பொருளாதார மீட்சிக்கான பிரகாசமான சமிக்ஞையாகவே இக்கடனுதவியைக் கொள்ள வேண்டியுள்ளது.

நம்பிக்கை தரும் விடயங்களில் மற்றொன்று பாராளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் வருடத்துக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டம் ஆகும்.

05

## கடலரிப்புக்கு உடனடி தீர்வு;மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய்;

# அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தீர்வு

**சுலைமா லெப்பையிடம் அமைச்சர் டக்ளஸ் உறுதி**



நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பின் தற்போதைய நிலை பற்றி நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் வை.எல். சுலைமாலெவ்வை நேற்று முன்தினம் (02) கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சில் சந்தித்து விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

தற்போது நிந்தவூர் பிரதேசத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கடல் அரிப்பினை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அவசரமாக எடுக்க வேண்டிய

05

## IMF உடனான ஒப்பந்தம்;

# ஐரோப்பிய யூனியன் வரவேற்று டுவிட்டர் பதிவு



சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு வரவேற்றுள்ளது.

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர்

05

## மலையக மக்களின் அவசர தேவைக்கு

# தமிழகத்திலிருந்து அடுத்த இரு வாரங்களில் கோதுமை மா

**ம.ம.மு சதீஷ்குமாரிடம் BJP அண்ணாமலை தெரிவிப்பு**



மலையக மக்களின் அவசர பயன்பாட்டுக்காக சில மாதங்களுக்கு தேவையான ஒரு தொகை கோதுமை மாவினை அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக

05

# அரச நிறுவனங்களில் இலகுவான சேவைக்கு புதிய TP இலக்கங்கள்

**பொது மக்களுக்கு உடனடி சேவையை வழங்க புதிய திட்டம்**



அரச நிறுவனங்களுக்கு சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற பொது மக்களுக்கு உடனடி சேவைகளை வழங்குவது கட்டாயமாகும் என சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பொதுமக்களின் வசதிக்காக சகல அமைச்சுகள் மற்றும் அரச அதிகாரிகளும்

05

## ஏனைய நாடுகளுடன் இணைந்து

# இலங்கைக்கு ஆதரவு வழங்க சீனா தயார்



இலங்கைக்கு ஆதரவளிக்க ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படத் தயார் என சீனா அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், இலங்கையுடன் கடன் ஒப்பந்தத்தை எட்டியுள்ள நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து அனைத்து கடன் வழங்குநர் நாடுகளுடன் கலந்துரையாட

05

# டயஸ்போரா அல்ல; புலம்பெயர் இலங்கையர் என்பதே சரியான பதம்



## ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும் பிரதான அதிகாரியுமான சாகல ரத்நாயக்கவுடன் ஒரு நீண்ட உரையாடல்

தெனியாயவை பிறப்பிடமாகவும் மாத்தறை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான இந்நாட்டின் முன்னணி அரசியல்வாதியுமான சாகல கஜேந்திர ரத்னாயக்க இன்றைய உயர்மட்ட அரசியல் நகர்வுகளில் முக்கிய பங்காற்றி வருபவர். 1999இல் அரசியலுக்கு வந்த அவர் 2015இல் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரம சிங்கவின் பிரதான அதிகாரியாகவும் சட்ட ஒழுங்கு அமைச்சராகவும் பணியாற்றியவர். இன்றைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகராகவும் அவரின் பிரதான அதிகாரியாகவும் பணியாற்றி வருபவர். அரசின் உயர்மட்ட தீர்மானங்களில் பங்களிப்பு செய்பவராகவும் குறிப்பாகச் சொன்னால் ஜனாதிபதியின் இதயமாகவும் செயல்பட்டு வருபவர்.

கடந்த வாரம் அவரை ஜனாதிபதி செயலகத்தின் இரண்டாம் மாடியில் சந்தித்தோம். கொஞ்சமாக சீனி கலந்த தேனீருடன் அவரைச் சந்தித்து உரையாடியபோது மிகத் தெளிவான சொற்களைப் பயன்படுத்தி வெகு இயல்பாவும் நிதானமாகவும் கேள்விகளுக்கு பதில் அளித்தார். எதை வேண்டுமானாலும் கேளுங்கள் ஐந்தரை மணிக்குள் என்றார். ஐந்தரைக்கு அவர் அடுத்த வேலையைப் பார்க்க வேண்டியிருந்ததால் நான்கு மணிக்கே பேச்சை ஆரம்பித்தோம். எந்தவொரு அமைச்சின் கீழும் தான் பணியாற்றவில்லை என்றும், அரசியல் மற்றும் அரசு விவகாரங்களில் தான் பணியாற்றுவதாகவும் அரசின் பொருளாதாரக் கொள்கை உருவாக்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள், சமீபத்தில் வரவு செலவு திட்ட விவாதங்களில் கலந்துகொண்டமை என்பன என் பணிகளாக இருக்கின்றன என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் சாகல ரத்நாயக்க.

இப் பொருளாதார நெருக்கடி அரசியல் ஸ்திரத்தன்மையற்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது அல்லவா? என்ற முதல் கேள்விக்கு, நான் அப்படி நினைக்கவில்லையே என்றார் சாகல ரத்நாயக்க.

'பாராளுமன்றத்தில் தனியொரு உறுப்பினராக தெரிவான ஒருவரால் இப்போதுதான் நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் வரமுடிந்திருக்கிறது. இது ஒரு பெரிய அரசியல் மாற்றம். இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மக்கள் அமைதியாக எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு தருகின்றன. இணைந்து பணியாற்றவும் ஒத்துழைப்புதரவும் தயாரான நிலை இதற்கு முன்னர் இலங்கை அரசியலில் காணப்படாத ஒன்று. யாரும் நாற்காலியை இழுத்து கவிழ்க்க முயலவில்லை என்பது புது விஷயம் அல்லவா? எனவே இதுதான் மக்கள் நலன் பற்றி யோசித்து செயலாற்றுவதற்கான அற்புதமான நேரம் என்றே நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அரசு சீர்குலைக்காது. அதற்காக எமது அமைச்சர்களும் தீவிரமாக பணியாற்றி வருவதைப் பார்க்க முடிகிறது. நாம் அனைவருமே சரியான பாதையில் இப்போது பயணித்துக் கொண்டிருப்பதாகவே கருதுகிறேன்' என்று பதிலளித்த அவர்,

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் தெருக்களில் காணப்பட்ட நீண்ட வரிசைகள் காணாமற்போயின. ஆனால் பிரச்சினைகள் முற்றாகத் தீர்ந்ததாக நான் சொல்ல மாட்டேன். மக்கள் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறார்கள் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்புகிறாரே அது மீண்டும் பிரச்சினைகளைக் கிளப்புவதாக அமையாதா? என்ற கேள்வியை எழுப்பினோம்.

"ஆமாம், முதலில் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கக்கூடாது எனினும் அவர் இந்நாட்டுக் குடிமகன். அந்த வகையில், அரசமைப்பு சட்டத்தின் கீழ் அவர் பாதுகாக்கப்பட வேண்டியவர். குடிமக்களைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை. நான் அவரது பேச்சாளர் அல்ல. எனினும் அவர் பொது வாழ்வில் அல்லது அரசியலில் ஈடுபடுவாரா என்பது எனக்குத் தெரியாது. அப்படிச் செய்ய மாட்டார் என எதிர்பார்க்கிறேன்" என்றதும் அவ்வாறானால் வெளிநாட்டு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த ஜனாதிபதி, அவர் நாட்டுக்குள் இப்போது வருவது நல்லதல்ல என்பது போன்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தி இருந்தாரே என்று உப கேள்வி ஒன்றைத்தொடுத்தோம்.

> ' ஐ.தே.கவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் இணைந்து கொள்வதில் எந்தத் தடையும் இல்லை. அதற்காக ஏனைய கட்சியில் உள்ளவர்களை கவர்ந்து இழுக்கப் போவதில்லை. எமது கதவுகள் திறந்தே உள்ளன.'

"ஆமாம் அப்படிச் சொல்ல காரணம் இருந்தது. அப்போது நாட்டில் உக்கிரநிலை காணப்பட்டது. வீதிகளில் வரிசைகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்பக் கட்ட பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருந்தன. ஏற்கனவே ஜுலை மாதம் நடைபெற்ற சம்பவங்களால் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை ஒரு மாதம் பிந்திப் போனது. இச் சூழல் முன்னாள் ஜனாதிபதியின் வருகைக்கு உகந்தகாலமாக இருக்கவில்லை. இதனால்தான் ஜனாதிபதி, கோட்டாவின் வருகைக்கு இது உகந்த காலமல்ல என்ற கருத்தை வெளியிட வேண்டியதாயிற்று" என்றொரு விளக்கத்தைத் தந்தார்.

> 'வர்த்தகத்தில் ஈடுபடுவது ஒரு அரசின் வேலை அல்ல. நாட்டை நிர்வகிப்பதும், பிரச்சினைகளை தீர்த்து வைப்பதும் பொருளாதார வளர்ச்சிக்கான பொறிமுறைகளை உருவாக்குவதும் மட்டுமே அரசின் பணியாக இருக்க வேண்டும்.'



உரையாடல் ரஞ்சன் ராமநாயக்கவின் நிபந்தனையுடனான விடுதலை தொடர்பாகத் திரும்பியது.

"நீதியரசர்களை விமர்சிப்பது போன்ற கருத்துகளை அவர் வெளியிட்டிருந்தார். அது நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கு உட்பட்டது. எனவே அவர் எழுத்து மூல மன்னிப்பைக் கோர வேண்டியிருந்தது. அவர் நிபந்தனைகளுடனான விடுதலையை பெற்றுள்ளார். அவரது சிவில் உரிமைகள் வழங்கப்படும் வரை அவர் அரசியலில் ஈடுபட முடியாது. மன்னிப்புகள் பல ரகமானவை. புண்ணிய தினங்களில் விடுவிக்கப்படுவது ஒரு வகையான மன்னிப்பு. இது நிபந்தனைகளுடன் கூடியது"



அவ்வாறானால் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தின் கீழ் சிறை சென்ற பொதுபல சேனாவின் தலைவர் ஞானசாரதேரர் நிபந்தனைகளின்றி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விடுதலை செய்யப்பட்டாரே! என்ற கேள்வியை எழுப்பினோம்.

"ஆமாம்... ஒவ்வொரு ஜனாதிபதிக்கும் வெவ்வேறான சிந்தனைகள் வரையறைகள் உள்ளன. அரசமைப்பு சட்டம் நீதித்துறை போன்றவற்றின் மீது வெவ்வேறான பார்வைகள் உள்ளன.

ஒரு ஜனாதிபதி பொறுப்பு கூறுபவராக இருக்க வேண்டும்" என்றார் சாகல ரத்நாயக்க பதிலுக்கு தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்படப் போவதாகக் கேள்விப்பட்டோமே!

"தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்பது முப்படைகளின் ஆலோசகர் என்று பொருள்படாது. பாதுகாப்பு என்பது யுத்தத்துடன் மட்டும் தொடர்பு படாது. தேசிய ஒருமைப்பாடு, உணவு பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு, சக்திவளப் பாதுகாப்பு. சுகாதார பாதுகாப்பு என பாதுகாப்பு என்பது பல்வகைப்படும். இவற்றை ஒருங்கிணைக்கும் தேசிய பாதுகாப்பு கவுன்சில். அதற்கான செயலகம் தனியாக நிறுவப்படவுள்ளது. ஏனெனில் பாதுகாப்பு தொடர்பான இன்றைய சட்ட ஏற்பாடுகள் பழைமையானவை"

டயஸ்போராவுக்கென ஒரு தனி அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாக கேள்விப்படுகிறோம்...

ஆம், ஆனால் அதை டயஸ்போரா அலுவலகம் என நாம் அழைப்பதில்லை. புலம்பெயர் இலங்கையர் (Overseas Srilankan) என்பது அதன் பெயர். டயஸ்போரா என்ற ஆங்கில வார்த்தை ஒரு நாட்டு குடிமக்கள் மற்றொரு நாட்டில் வாழ்வதைக் குறிக்கிறது. விடுதலைப் புலிகளின் காலத்தில் புலம்பெயர் அமைப்புகள் மேற்குலகில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டன. அவர்களைக் குறிக்கும் வகையில் டயஸ்போரா என்ற பதம் உபயோகிக்கப்பட்டதால் அது 'கெட்ட' வார்த்தையானது. அதனால் தான் அப்பதத்தை நீக்கினோம். நாம் இப்போது புலம் பெயர் அமைப்புகளுடன் பேசி வருகிறோம். எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இப்போது சொல்வதற்கில்லை. எதிர்காலத்தில் அது பற்றி வெளிப்படையாக பேசக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன் என்று எமக்கு தகவல்களைத் தந்தார் சாகல ரத்நாயக்க.

> 'கோட்டாபய ராஜபக்ச பொதுவாழ்வில் அல்லது அரசியலில் ஈடுபடுவாரா என்பது எனக்குத் தெரியாது. அப்படிச் செய்ய மாட்டார் என எதிர்பார்க்கிறேன்'

சரி, தமிழ்க்கட்சிகளை சர்வகட்சி அரசுக்கு அழைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் எவ்வாறுள்ளன?

"நாம் அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருடனும் விக்னேஸ்வரனுடனும் பேசி வருகிறோம். எமது கதவு அனைவருக்கும் திறந்திருக்கிறது. ஏனெனில் இது நாட்டை முன்நிறுத்தி யோசிக்க வேண்டிய காலம். தமிழ்க்கட்சிகள் எம்முடன் இணைந்து பணியாற்றுவதில் எம் தரப்பில் எந்தத் தடையும் இல்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் தடைகளைக் கடந்து

> 'இணைந்து பணியாற்றவும் ஒத்துழைக்கவும் கட்சிகள் தயாராக இருக்கும் ஒரு நல்ல சூழலை இதற்கு முன்னர் இந்நாட்டில் பார்த்தேயிருக்க முடியாது. நாம் சரியான பாதையில் பயணிப்பதாகவே தெரிகிறது'

பிரச்சினைகளுக்கு முடிவு காண முடியும் எனக் கருதுபவரே எமது ஜனாதிபதி. இது நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் என்பதை எவரும் மறந்துவிடலாகாது. இந்தப் பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று முடிந்து அடுத்த வாரமளவில் புதிய அமைச்சரவை, இராஜாங்க அமைச்சர்கள் நியமனங்கள் நடைபெறலாம் என எதிர்பார்த்துள்ளேன்"

> ' சில அரசு நிறுவனங்களை அரசின் கீழ் வைத்திருக்கவே வேண்டும். சில நிறுவனங்களில் அரசு பங்குகளைக் கொண்டிருக்கும். சிலவற்றை அப்படியே கொடுத்துவிடலாம் தனியார் முதலீட்டாளர்களிடம்.'

அரசாங்கம் அரச நிறுவனங்களில் காணப்படும் ஊழல், மோசடி, திறமையின்மை என்பனவற்றை ஒழிக்க வேண்டும்; வினைத்திறன் கொண்ட அரச சேவையை உருவாக்க வேண்டும் என்பதை நோக்கி பயணிப்பதாகவும் அதன் பொருட்டு ஒரு பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் செயலகம் ஒன்று உருவாக்கப்பட்டவுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க கூறுகிறார்.

"ஸ்ரீலங்கன் விமான சேவையை எடுத்துக் கொள்ளுங்கள் . பில்லியன் கணக்கில் நஷ்டத்தைத்தான் அது சம்பாதித்துத் தந்திருக்கிறது. சில அரச நிறுவனங்களை நாம் முழுமையாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். சில நிறுவனங்களை முழுமையாகத் தனியார் வசம் கொடுத்து விடலாம். மேலும் சில அரச நிறுவனங்களில் அரசாங்கமும் பங்காளிகளாக விளங்க முடியும். எனவே நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மீளமைத்து செயல்திறன் கொண்ட நிறுவனங்களாக மாற்றி அமைப்பது மிக முக்கியம். இது தொடர்பான வழிகாட்டல்கள் நிபுணர்களின் ஆலோசனைகளின் பேரில் உருவாக்கப்பட உள்ளது. உண்மையைச் சொல்வதானால் ஒரு அரசாங்கம் வர்த்தகத்தில் ஈடுபடக்கூடாது நாட்டை நிர்வகிப்பதும் பிரச்சினைகளைத் தீர்ந்து பொருளாதார வளர்ச்சிக்கான பொறிமுறைகளை உருவாக்கித் தருவதே அரசின் பணியாக இருக்க வேண்டும். அதைத்தான் செய்யப் போகிறோம்" என்று அவர் விரிவாகப் பேசினார்.

நிதியறிக்கையில் 2048ம் ஆண்டில் இலங்கை முன்னேறிய நாடாகத் திகழும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது தொடர்பாகக் கேட்டோம்.

ஆமாம், அதை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டுவர வேண்டும். வரிவிதிப்பை தொடர வேண்டியிருக்கும். ஆரம்பத்தில் சில வருடங்கள் சிரமமாகத்தான் இருக்கும். அதன் பின்னர் வளர்ச்சியை உணரக்கூடியதாக இருக்கும். சர்வதேச நாணய நிதியம் தரவுள்ள கடன் உதவிகள் அல்ல இங்கே முக்கியம். அது இந்நாட்டில் ஏற்படுத்தவுள்ள புதிய கட்டமைப்பே இங்கே முக்கியம் என்றவரிடம்,

அரசு நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதற்கு அளவுக்கு அதிகமான சேவையாளர்கள் பதவிக்கு வரும் அரசுகளினால் நியமிக்கப்பட்டதே காரணம். அது இப்போது உச்சத்துக்கு வந்துள்ளது. என்ன செய்யப்போகிறீர்கள்? என்று கேட்டோம். அதை அவர் ஒப்புக்கொண்டார்.

அதற்காகத்தான் விரும்பியவர்கள் ஐந்து வருட விடுப்பில் வெளிநாடு சென்று உழைக்கலாம் என்ற நடைமுறையை கொண்டு வந்துள்ளோம். 65வயது என்றிருந்த ஓய்வு வயதை 60 எனக்குறைத்துள்ளோம். இதன் மூலம் அறுபது வயதானோர் வெளியேற, இளைஞர்களுக்கு அரச உத்தியோக வாய்ப்பு கிட்டும். நாம் தொழில் வழங்க வேண்டும் என்பதற்காக தொழில் வாய்பபுகளை வழங்கப் போவதில்லை.

அரச தொழிலில் இருப்பவர்களை முகாமைத்துவம் செய்து அவர்களின் உழைப்பைப் பெற முயற்சி செய்வோம். இந்த ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் செயலாளர்கள் மேலதிக செயலாளர்கள் கூட பஸ்சில் தான் வந்து போகிறார்கள். எனவே இவற்றை எல்லாம் சரிசெய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார் அவர்.

ஐ.தே.கவின் 76அவது வருடாந்த மாநாடு எதிர்வரும் ஆறாம் திகதி நடக்கப்போவது பற்றியும் அது பிரிந்த ஐ.தே.கவை ஒன்றிணைக்குமா? என்றும் கேட்டோம்.

மிகுந்த புன்னகையுடன் பதிலளித்த அவர், எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. பிரிந்து சென்றவர்கள் யாராக இருந்தாலும் தாய்க் கட்சியுடன் இணைந்து கொள்வதில் தடையே இல்லை. ஆனால் நாங்கள் எந்தக் கட்சியில் இருந்தும் உறுப்பினர்களை கவர்ந்து இழுக்க மாட்டோம்.

விரும்பியோர் வரலாம் என்பதே எமது கொள்கை என்றவரிடம், ஏதாவது நடக்குமா? என்று கேட்டபோது, பொறுத்திருந்து பாருங்களேன் என்று கூறி முடித்துக் கொண்டார் தன் பளிச் புன்னகையுடன்.

உரையாடியவர்:
அருள் சத்தியநாதன்
புகைப்படங்கள்
துஷ்மந்த மாயாதுன்ன




# மக்கள் இன்று தேர்தலை நடத்துமாறு கோரவில்லை!

## விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் சந்திப்பு

**நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறானதொரு நேரத்தில் மக்கள் தேர்தலொன்றைக் கோரவில்லையென விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: கடந்த இரண்டு வாரங்களாக அனைத்துக் கட்சி ஆட்சியை அமைப்பது தொடர்பான கலுந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும், இதுவரை இணக்கப்பாடொன்று எட்டப்படவில்லை. இதற்கான காரணம் என்ன?**

பதில்: உண்மையில், இது ஒரு குறிப்பிட்ட நபருக்கு மட்டுமே காணப்படும் பிரச்சினை அல்ல. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு கைகோர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.. இந்த விடயம் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி நேரம் ஒதுக்கி ஏற்கனவே கலந்துரையாடியுள்ளார். சில அரசியல் கட்சிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கும்போது, மற்ற அரசியல் கட்சிகளும் இந்த முயற்சியை வெற்றியடையச் செய்ய சாதகமாகப் பதிலளிக்க வேண்டும். ஒரு கட்சி அல்லது ஒரு குழு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கும் நிலையில் இல்லை. இதற்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டியுள்ளார். எனவே, மற்றக் கட்சிகளும் கைகோர்த்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையும்.

**“சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டியுள்ளார். எனவே, மற்றைய கட்சிகளும் கைகோர்த்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதே நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையும்”**



**கே: இது விடயத்தில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன? அவ்வாறான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க கட்சி முடிவு செய்துள்ளதா?**

பதில்: முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே சர்வகட்சித் திட்டத்தை முன்வைத்தது. இதில் நாம் ஆர்வமாக இருந்ததுடன், முக்கிய பங்கினையும் வகித்தோம். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து முடிவெடுப்பதற்காக நடந்து வரும் பேச்சுக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நேரடித் தலையீடு இத்தருணத்தில் மிகவும் அவசியமானது. இது தொடர்பில் நான் மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி அரசியல்பீடம் மற்றும் பல்வேறு மட்டங்களில் தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். உண்மையில் சர்கட்சி அரசாங்கம் அமைப்பதில் சுதந்திரக் கட்சியே முன்னிலை வகிக்க வேண்டும்.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற அண்மைய சந்திப்பைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் இணைவதற்கான கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் நிராகரித்துள்ளார். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலை. அரசாங்கத்திற்கு வெளியே இருப்பவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் சிறந்த நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவை வழங்குவதாகக் கூறுகின்றனர். பொருட்களின் விலைகளைக் குறைத்தல், மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது போன்றன நல்ல நடவடிக்கைகள் என்று அவர்கள் நினைக்கலாம். அப்போது அவர்கள் இத்தகைய நகர்வுகளுக்கு தங்கள் ஆதரவை வழங்குவார்கள்.

இது மிகவும் வெளிப்படையானது, எதிர்க் கட்சிகளும் மற்ற அனைத்துக் கட்சிகளும் இத்தகைய மக்களின் முயற்சிகளுக்கு எப்போதும் தங்கள் ஆதரவை வழங்குகின்றன. இல்லையெனில், அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காமல் அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்ப முடியாது.

அரசாங்கத்துடன் இணைந்து தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அதைச் செய்ய முதலில் அவர்கள் அரசாங்கத்தின் பங்குதாரராக மாற வேண்டும். புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைப்பது குறித்து இந்த நாட்களில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அமைச்சரவை மற்றும் அதன் உறுப்பினர்களின் இலாகாக்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவாதங்களில் பங்கேற்க வேண்டும். அப்பணியில் ஈடுபட தங்கள் பிரதிநிதிகளையும் நியமிக்க வேண்டும். அப்போதிருந்து,நாம்முன்னேறலாம்.தனியார்மயமாக்கல் விவகாரம் மற்றும் அது எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது குறித்து எதிர்க்கட்சிகளும் கைகோர்த்து விவாதிக்க வேண்டும். அரசாங்கத்தின் பங்குதாரராக மாறாமல் சர்வகட்சி அரசாங்கத்துக்கு அல்லது அத்தகைய திட்டத்திற்கு வெளியில் இருந்து அவர்களின் ஆதரவை வழங்குவது வெற்றிகரமானதாகவோ அல்லது நடைமுறைக்குரியதாகவோ இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

**கே: எதிர்க்கட்சிகளின் தற்போதைய நடத்தை குறித்து உங்கள் பகுப்பாய்வு என்ன? அரசியல் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அவர்கள் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?**

பதில்: கண்டிப்பாக. இத்தருணத்தில் பாராளுமன்றத்தில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாற வேண்டும். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு, மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே புறக்கணித்து முழுப்பொறுப்பையும் ஒரு குறிப்பிட்ட குழு அல்லது நபர் மீது சுமத்த முற்படுவது, நாடு எதிர்கொண்டுள்ள துரதிஷ்டமான நிலையையே காட்டுகிறது.

**கே: அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் குழு ஒன்று புதிய அரசியல் கூட்டணியை செப்டம்பர் 4ஆம் திகதி அமைக்கவுள்ளது. இது அரசுக்கு ஏதேனும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமா?**

பதில்: அதைப் பற்றி எனக்குக் கூறத் தெரியவில்லை. உண்மையில், இது புதிய அரசியல் கட்சிகளை உருவாக்கவோ, கூட்டணி அமைக்கவோ, ஏற்கனவே உள்ள கட்சிகளை வலுப்படுத்துவதற்கான நேரமே இல்லை. இத்தருணத்தில் மக்களை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகும்போது, புதிய அரசியல் கட்சிகளையோ, கூட்டணிகளையோ உருவாக்குவதற்கு இதுபோன்ற சூழலைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு மக்கள் சார்பாக நேர்மையாகப் பணியாற்றுவதும், பயனுள்ள பங்களிப்பைச் செய்வதும் காலத்தின் தேவையாகும்.

(20ஆம் பக்கம் பார்க்க)




# நாட்டின் கட்டமைப்பு மாற்றத்தை நோக்கமாக கொண்ட பொருளாதாரப் புரட்சியே அவசியம்!

பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டியது மிக முக்கியமாகும். நெருக்கடி அனைத்து மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. வாழ்க்கையை வாழ்வதே சிரமம் என்னும் அளவுக்கு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. வீழ்ச்சியின் விளிம்பில் உள்ள இலங்கையை அதிலிருந்து மீட்பதே எமது அனைவரினதும் பொறுப்பாகும்.

மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், துறைமுகம் மற்றும் விமான சேவைகள் உள்ளிட்ட பிரிவுகளில் மறுமலர்ச்சி தேவையாகும். முறையாக, முகாமைத்துவம் செய்வது முக்கியமாகும். அதற்கு இணைந்ததாக நவீன சீர்திருத்தத் திட்டம் ஒன்றை பரிந்துரைக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் திட்டங்களை செயல்படுத்தும் பாரம்பரிய கட்டமைப்பில் இருந்து விலகி திட்டங்களை செயல்படுத்தக் கூடியவர்களுக்கு இடமளிக்க வேண்டியதோடு, ஒழுங்கமைப்பு மற்றும் சமூகநலன் போன்ற விடயங்களில் முழுமையாக கவனம் செலுத்துவது நல்லது.

உழைப்பை விட அறிவுக்கு இடம் உண்டு. முதலீட்டை விட முதலீட்டில் ஈடுபட செய்வது முக்கியமாகும். சுதந்திரம் பெற்ற வேளையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, பெட்ரோலியம், எரிவாயு, வங்கி மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட தனியார் தொழில் முனைவு தொகுதி ஒன்று நாட்டில் காணப்பட்டது. கடந்த காலங்களில் காணப்பட்ட அரசாங்கங்கள் அந்த தொழில் முனைவுகளை அரசமயப்படுத்தி செயல்படுத்தியதன் மூலம் மிகவும் நல்ல பலனை எதிர்பார்த்திருந்திருக்கலாம். பல தசாப்தங்களுக்குப் பின்னர் அதன் விளைவு எம் முன்னால் உள்ளது.

இலங்கை நடுத்தர வருமான மட்டத்திற்கு வந்த பின்னர் நிவாரணங்கள் நின்று போனதோடு வர்த்தக கடனை பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வர்த்தகக் கடன்களை பெற்றுக் கொண்ட அரசாங்கம், அதன் மூலம் சமூகத்தைப் பராமரிக்கவும் மக்களுக்கு நிவாரணம் தரும் அரச சேவையை நிலைநிறுத்தம் பிரபலமான திட்டங்களில் ஈடுபட்டதோடு, அவற்றின் மூலம் கடனை செலுத்துவதற்கு அந்நிய செலாவணியைப் பெற முடியவில்லை. பாதைகள், விமான நிலையங்கள், துறைமுகம் போன்ற நீண்ட காலத் திட்டங்களில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கவில்லை. அவற்றுக்கு பாதிப்புகள் ஏற்படுத்திய காரணங்கள் காணப்பட்டன. தற்போது செய்ய வேண்டியது புதிய பாதைகளைத் தெரிவு செய்வதாகும்.

எரிசக்தி பிரிவு இங்கு முதலிடத்தில் உள்ளது. மசகு எண்ணெய், மின்சாரம், எரிவாயு, வங்கி மற்றும் நிதி, கல்வியும் சுகாதாரமும் உள்ளிட்ட பிரிவுகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு எல்லை உண்டு. மசகு எண்ணெய் இறக்குமதி, விநியோகம் அதிக செலவு செய்ய வேண்டிய அவதானம் மிக்க பிரிவாகும். இலங்கை இந்திய ஒயில் நிறுவனம் தற்போது மேற்கொண்டு வரும் வர்த்தகத்துக்கு மூன்றாவது தரப்பினரை இணைத்துக் கொள்ள முடியும் என்பதோடு, அது பாவனையாளர்களுக்கு உயர்ந்த சேவையையும் வழங்கும். எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்திற்கு இந்தியாவை இணைத்துக் கொண்டு குழாய்களை அமைக்க முடியும். திருகோணமலை போன்ற இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. மசகு எண்ணெய் உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய கூடியவாறு பாரிய அளவில் முதலீடுகளை பெற்று அதன் மூலம் அந்நிய செலாவணியைப் பெற முடியும். இந்தியா மற்றும் இலங்கைக் கிடையே எண்ணெய் கையிருப்பை பேணக் கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பது பயனளிக்கும்.

தற்போது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவில் பத்து மடங்கை பூநகரியை அண்டிய பிரதேச காற்றாலை மூலம் உற்பத்தி செய்ய முடியும். சூரியசக்தி மின்சார உற்பத்திக்கும் சந்தர்ப்பம் உண்டு. தனியார் தொழில் முனைவோரை அழைத்து முதலீடுகளை விரைவுபடுத்தினால் பாவனையாளருக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்க முடியும். மேலதிக மின்சாரத்தை இந்தியாவுக்கும் விற்க முடியும். கட்டமைப்பை விரிவுபடுத்தினால் அது வருமானத்தைப் பெறக்கூடிய பிரிவாகும். தற்போது அதிக நட்டத்தை பெறுவதோடு கட்டண அதிகரிப்பு மூலம் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றார்கள்.

மசகு எண்ணெய் மற்றும் மின்சாரம் போன்ற பிரிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தினால் பொருளாதாரம் இலகுவாகும். குறைந்த விலைக்கு மின்சாரம் மற்றும் எண்ணெய் பெறப்படும் நாட்டில் கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரிவின் செலவு வீழ்ச்சியடையும். உடனடியாக செய்ய வேண்டிய மறுசீரமைப்பு பற்றி கவனத்தை செலுத்தாமல் ஊழல் மற்றும் மோசடி குறித்து கதைத்து காலத்தை வீணடிப்பது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி உள்ளது.

துறைமுகம், விமான நிலையம்,அதிவேகப் பாதை அமைத்தல், பராமரித்தல் போன்ற செயல்களில் இருந்து அரசாங்கம் விலக வேண்டும். அவற்றின் சுமையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதோடு அதன் மூலம் சேமிக்கப்படும் சக்தியை பொதுமக்களின் நன்மைக்காக செலவிட முடியும். சுகாதாரம், கல்வி, நிதி, டெலிகொம் மற்றும் காப்புறுதி போன்ற பிரிவுகளில் அரச மற்றும் தனியார் பிரிவுக்கிடையே போட்டி அவசியமாகும். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் மாத்திரமல்ல இலாபம் பெறும் பிரிவுகளை கூட திறமையான தொழில் முனைவோருக்கு வழங்குவது நன்மையாகும்.

அது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அழுத்தத்தைக் குறைக்கும். சந்தர்ப்பம் வழங்குவதன் காரணமாக புதிய தொழில்முனைவோர் உருவாகுவார்கள். வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதோடு, கல்வியை நிறைவு செய்யும் மாணவர் சமூகம் அரசாங்கத்துடன் இணைய வேண்டிய அவசியம் ஏற்படாது. வெற்றிகரமான தொழில்முனைவுகள் மூலம் கிடைக்கும் வருமானமும் அரசாங்கத்துக்கு நன்மையே. தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்தப் பிரிவுகளில் பெருமளவு நட்டம் ஏற்படுவதோடு மக்களிடமிருந்து அறவிடும் அதிகளவு வரியால் அவற்றை மிகைநிரப்பி வருகின்றார்கள். இந்த முறைகளுக்கான மீளமைப்பு முக்கியமாகும். நவீன தொழில்நுட்பத்தையும் திறனையும் ஏற்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

**எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கான அறிவிப்பு**

தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்களாகிய நாங்கள், இலங்கை ரூபாவின் பணவீக்கத்தின் விளைவாக செயற்பாட்டு செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், 2022 செப்டெம்பர் 05 முதல் எமது சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்பதை எங்கள் பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அதன்படி, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் (TRCSL) அனுமதியின்படி மொபைல், நிலையான இணைப்பு, புரோட்பாண்ட் பிளான்கள் மற்றும் பெறுமதி சேர் சேவைகளுக்கான (முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு) கட்டணங்கள் 20% ஆல் அதிகரிக்கப்படும் அதேவேளையில் அனைத்து கட்டண தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணங்கள் 25% ஆகவும் அதிகரிக்கப்படும்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய 2022 செப்டம்பர் 05 முதல் அனைத்து தொலைத்தொடர்பு மற்றும் கட்டண தொலைக்காட்சி சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 12% இலிருந்து 15% ஆக அதிகரிக்கப்படும். எங்கள் வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்கான எங்கள் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் இணையத்தளமான www.trc.gov.lk க்கு செல்லுங்கள்.

நன்றி.

airtel Dialog HUTCH LANKA BELL SLTMOBITEL The Connection

# நான்கு நூற்றாண்டுகால அடிமைத்தளையிலிருந்து இலங்கையை விடுவித்த ஐக்கிய தேசிய கட்சி

## ஐக்கிய தேசிய கட்சியின் 76 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவால் எழுதப்பட்ட கட்டுரை

1993 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்ட அனுரபண்டார நாயக்க 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி கூட்டத்தில் நிகழ்த்திய விசேட உரையொன்று உண்டு. அது பின்வருமாறு "எனது தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க மேற்கொண்ட அரசியல் செயற்பாடுகளில் ஏதேனும் எஞ்சியிருந்தால் அது ஐக்கிய தேசிய கட்சி மட்டுமே. இன்று நான் அந்த இடத்திலேயே இருக்கின்றேன். "ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கிய கடந்த கால முன்னோடிகளின் இரண்டாவது பரம்பரையை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலேயே அனுர அவ்வாறு கூறினார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னோடிகள் அனைவரும் இவ்வுலகை விட்டு விடை பெற்றுள்ளார்கள். இன்று ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாவது தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலேயே உள்ளது. அவர் கட்சியின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை மூன்றாவது பரம்பரையினரிடம் ஒப்படைப்பதற்காக தனது கோட்பாடுகளை செயல்படுத்தி வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பிக்க அன்றிருந்த கட்சிகள் மற்றும் அதற்கு சமனான அனைத்து அரசியல், மற்றும் தேசிய அமைப்புகள் தங்களுடைய சர்ச்சைகளை புறத்தள்ளியே ஒன்றாக இணைந்தன.

அதற்காக அரசியலில் ஈடுபடாத அன்று இந்நாட்டில் காணப்பட்ட முக்கியமான பௌத்த அமைப்பான பரம வித்யார்த்த பௌத்த சங்கம், கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம், அகில இலங்கை பௌத்த பொது சம்மேளனம் ஆகியவற்றின் தலைமைத்துவத்தில் இருந்தவர்கள் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கியமை விசேட அம்சமாகும். அவ்வாறு இணைந்த தலைவர்கள் நானூறு வருடங்களாக ஏகாதிபத்தியவாதிகளின் அடிமைத்தனத்தில் இருந்த நம் தாய் நாட்டை அடிமை தளையில் இருந்து விடுவித்து சுதந்திர நாடாக உருவாக்குவதையே நோக்கமாக கொண்டிருந்தார்கள். கடந்த நூற்றாண்டுகளில் இருந்த தேசியத் தலைவர்களின் முன்னிலைப் படுத்தலால் உருவான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று 76 ஆண்டுகள் நிறைவடைவது நாட்டிற்கும் இனத்திற்கும் பெருமையளிக்கும் விடயமாகும்.


ஜனாதிபதி ரணில்

ஐக்கிய தேசிய கட்சி இந்நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்வைத்த கொள்கையின் தொனிப்பொருள் ' குளமும் தாது கோபுரமும் கிராமமும் விஹாரையும்' என்பதாகும். அக் கொள்கைக்கு அமைய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இந்நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம்,பறங்கியர், மலேயர் என அனைத்து மக்களும் தாங்கள் கொண்டிருந்த அபிப்பிராய பேதங்களை மறந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார்கள்.

1931 ஆம் ஆண்டு முதலாவது அரச சபையின் உறுப்பினராக போட்டியின்றி தெரிவான டி.எஸ். சேனாநாயக்க ஆரம்பித்த புதிய விவசாயக் குடியேற்றத் திட்டம் தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு புத்துயிர்ப்பை ஏற்படுத்தியது. அதன் மூலம் மின்னேரிய, காகம, பக்கமூன, கட்டியாவ போன்ற புதிய விவசாயக் குடியேற்றங்கள் உருவானதோடு 1935 தொடக்கம் 1985 வரையான 50 ஆண்டுகளில் இந்நாட்டில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொண்ட காணிகளின் அளவு 15 லட்சமாகும். அதன் மூலம் 40 லட்சத்துக்கு அதிகமானோர் பெற்ற பலன்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இரண்டாவதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம், மூன்றாவதாக ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டம் என்பன இந்நாட்டு விவசாயிகளுக்கு பெரும் நன்மையை பெற்றுக் கொடுத்தன. இவ்வாறான பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மூலம் இந்நாட்டை பலப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி பாரிய முயற்சிகளை எடுத்தது. இந்த பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு பெரும் சக்தியாக அமைந்தது ஐக்கிய தேசிய கட்சியின் ஆரம்பம் மற்றும் விரிவாக்கமாகும்.

1946 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் திகதி கொழும்பு பார்ம் கோர்ட் மாளிகையில் ஒன்று கூடிய இலங்கை தேசிய சங்கத்தின் தலைவர்கள் உள்ளிட்ட சிங்கள பொது சபை, இலங்கை சோனகர் சங்கம், மலேயர் தேசிய சங்கம், பறங்கியர் முன்னணி, தமிழ் சங்கம், முஸ்லிம் முன்னணி, ஐரோப்பிய சங்கம், ஹெல கூட்டமைப்பின் சில பிரிவுகள் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை பல தேசிய இலக்குகளை முன்வைத்து உருவாக்கின.

இலங்கைக்கான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதே அதன் முதலாவது இலக்காகும். இங்கு கட்சியின் தலைவராக டி. எஸ் சேனநாயக்கவும் செயலாளராக எச்.டபிள்யூ. அமரசூரியவும், இணைப்பொருளாளர்களாக ஸ்ரீமத் ராசிக் பரீத் மற்றும் ஜே ஆர் ஜெயவர்தனவும் தெரிவு செய்யப்பட்டார்கள். கட்சியின் நிறமாக பச்சை நிறத்தையும மிகப்பெரிய விலங்கான யானையை சின்னமாகவும் டி. எஸ். சேனநாயக்கவின் விருப்பத்தின்படி தெரிவு செய்தார்கள்.

1947 இல் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக பாரிய பணியை மேற்கொண்ட தேரரான வணக்கத்திற்குரிய ராஜகீய பண்டித்த ஹேன்பிடகெதர தேரர் பல சந்தர்ப்பங்களில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

ஆனால் டி எஸ், ஹேன்பிடகேதர தேரரின் கோரிக்கைக்கு உடன்படாததால் அவர் டி எஸ் உடன் மனஸ்தாபம் அடைந்தார். இவ் வேளையில் உடகென்தாவல ஸ்ரீ சரணங்கர தேரர் இடதுசாரிகளுடன் இணைந்து மேற்கொண்ட மார்க்சியவாத நடவடிக்கைகளையும் அனுமதிக்காத டி எஸ் சேனநாயக்க எதிர்கால பிக்குகள் மார்க்சியவாத ,கமயூனிஸ்ட் வாதத்தின் ஊடே பயணித்து புத்தசாசனத்தை அழிவுக்கு இட்டுச் செல்வார்கள் என கூறினார்.


டி.எஸ். சேனநாயக்க


ஜே.ஆர்.ஜயவர்தன

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த அனைத்து சிங்களத் தலைவர்களும் பௌத்த கொள்கையை மதிக்கும் பௌத்தர்கள் ஆவார். அனைத்து இனங்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு எவ்வித விவாதமும் இன்றி நிழலை அளிக்கும் பாரிய விருட்சமாக ஐக்கிய தேசியக் கட்சியை சர்வதேசம் ஏற்றுக்கொண்டது. புதிய உலகை காணும் தேசியத்தை மதிக்கும் கட்சியை சில காலத்துக்குப் பின்னர் கட்சியில் இருந்தவர்களே புரிந்து கொள்ளாததது நாட்டிற்கு பெரும் துரதிர்ஷ்டமாகும்.

சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கியதன் மூலம் இந்நாட்டில் ஏற்பட்ட தேசிய பாதிப்பு இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். அன்று ஆங்கில மொழிக்கு இருந்த இடம் மேலும் அதிகரித்து ஆங்கிலம் தெரியாத சிங்களவர்கள் சர்வதேசத்திலும் நாட்டிலும் ஒதுக்கப்படும் நிலைமைக்கு மாறியுள்ளார்கள். கடந்த நூற்றாண்டில் 50 களில் சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்ற பிள்ளைகள் ஆங்கில மொழியை பேசுவதற்கும் எழுதுவதற்கும் அறிந்திருந்தார்கள். அது 60 களின் பின்னர் சிங்களம் மாத்திரம் என்னும் தேசிய கொள்கையால் அழிந்து போனது.

நாட்டில் தோன்றிய இடதுசாரி கட்சிகளைத் தவிர ஏனைய அனைத்து கட்சிகளின் பலவீனமான புள்ளியாக ஐக்கிய தேசியக் கட்சி இருந்தது. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் முதலாவது தேர்தலை 1947 ஆம் ஆண்டு நடத்த முடிவானது. அதன்படி கட்சியின் ஆரம்பத் தலைவர் டி.எஸ் சேனாநாயக்க, எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்க, ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல, எச். டபிள்யூ அமரசூரிய, ஸ்ரீமத் ராசிக் பரீத், டி.பி. ஜாயா, டட்லி சேனாநாயக்க, டி.ஏ.ராஜபக்ச, ஏ ரத்னாநாயக்க, ஈ.ஏ.நுகவெல, எம்.டி பண்டா, ஜே.ஆர். ஜயவர்தன, ஆர்.ஜி. சேனாநாயக்க, ஆகியோர் இலங்கையின் பல மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்து பல தொகுதிகளில் போட்டியிட்டார்கள்.

எச்.டபிள்யூ. அமரசூரிய, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கர ஆகியோரைத் தவிர ஏனையோர் அமைச்சரவைக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். உறுப்பினர்கள் போட்டியில் வெற்றி பெற்ற அவர்கள் புதிய அரசில் மந்திரிகளாகவும் அமைச்சர்களாகவும் பதவி பிரமாணம் செய்து புதிய பணிகளில் நாட்டுக்காக தமது கடமையை பெரும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றினார்கள். அரசு அமைக்கப்பட்டு ஐந்து மாதங்களின் பின்னர் ஆங்கிலேய அரசு இலங்கைக்கு சுதந்திரம் வழங்க உடன்பட்டதால் 1948 பிப்ரவரி 4ம் தேதி இலங்கை சுதந்திர இறைமையான நாடாகியது. இலங்கை முழுவதையும் பெரும் பொறுப்புடன் ஆட்சி செய்ய ஐக்கிய தேசிய கட்சி நடவடிக்கை எடுத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்ப காலம் தொட்டே தேசிய,மத ஒற்றுமையை எதிர்பார்த்த கட்சியாகும். சுதந்திரத்துக்கு பின்னர் தற்போது வரை நாட்டை ஆண்டது ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது அமைச்சரவை சபையை பிரதிநிதித்துவம் செய்தவர்களோ அவர்களின் பிள்ளைகளோ ஆவார்கள். சிலர் அந்த அரசின் அமைச்சர்களின் பிள்ளைகள் ஆவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தந்தையார் மாத்திரமல்ல தாயார் சிறிமாவோ அம்மையாரும் 1947 பொது தேர்தலில் தங்களது வாக்குகளை பாவித்தது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக ஆகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தந்தையார் 1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெலியத்த தேர்தல் பிரிவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார் அது எமது கட்சிக்கு கிடைத்த கடந்த கால கௌரவமாகும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

தமிழில் வீ.ஆர்.வயலட்

# சிகிரியாவின் அழகை இனி கொழும்பில் இருந்தே அனுபவிக்கலாம்

## 15ஆம் திகதி திறக்கப்படுகின்றது தாமரைக் கோபுரம்







வாழ்க்கையின் இனிமையான கனவை நிஜத்தில் காண்கின்றேன். உலகின் புதுமைகளை கண்டு பஞ்சு போன்ற மேகங்களுக்கு ஊடே உப்பரிகையில் இருந்து தேவதைகளுடன் பயணிப்பதாக கண்ட கனவு இதுவல்லவா என எண்ணுகிறேன். உலகின் அழகான நகரம் எனது காலடியில். பறவை போன்று அந்த உணர்வை பற்றிப் பிடித்து அதனை ஒரு கணமும் நழுவ விடாமல் என்னுடனேயே வைத்திருக்க விரும்புகிறேன்.

நான் தற்போது கொழும்பு தாமரைக் கோபுரத்தின் உச்சியில் அதன் நுழைவாயிலில் இருக்கின்றேன். அதில் 'கொழும்பு வானத்தின் கீழ் ' என குறிப்பிடப்பட்டுள்ளது. எனது காலடியின் கீழ் பரந்துள்ள கொழும்பு நகரை ஒரு தாம்பளத்தில் எடுத்துக் கொள்ள முடியும். பேரை வாவி கொழும்பை அலங்கரிக்கும் பசுமை போர்வையாக தெரிகிறது. உலக வர்த்தக மையம் என அறியப்படும் பாரிய கட்டடம் எனது காலடியில் எறும்பு போல் தோற்றமளிக்கின்றது. தொடர்ச்சியாக பயணிக்கும் வாகனங்கள் வண்டுகள் போல் தோற்றமளிக்கின்றன. தூரத்தில் தெரியும் கோட்டை புகையிரத நிலையம், கட்டடங்களுக்கு அப்பால் ஒருபுறம் கொழும்புத் துறைமுகம், அதற்கப்பால் அமைக்கப்பட்டு வரும் துறைமுக நகரம் நீல நிற கடல் பின்னணியில் எல்லை வரை பரந்து விரிந்துள்ளது. மறுபுறம் நாட்டின் மத்தியில் அமைந்துள்ள மலைமுகடுகள் மெல்லிய முகில்களுக்கிடையே நீல பச்சை சாம்பல் கலந்த நிறங்களில் சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன.

மழை முகில்கள் சூழ்ந்தததால் காட்சிகள் தெளிவாக தெரியவில்லை. ஆனால் மேகங்களற்ற தெளிவான வானத்தைக் கொண்ட நாட்களில் சீகிரியா, சிவனொளிபாதமலையின் உச்சி, நக்கல்ஸ் மலைத்தொடர் போன்றவற்றை இந்த இடத்திலிருந்து நான் பார்த்திருக்கிறேன். அவற்றை அவதானிப்பதற்காக தொலைநோக்கி ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

காணும் காட்சிகளில் இருந்து விடுபட மனம் விரும்புவதில்லை. நான் அனுபவிக்கும் இந்த அனுபவத்தை எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் நீங்களும் அனுபவிக்க முடியும். அதற்காகவே இந்த குறிப்பை எழுதி வைக்கின்றேன். இந்த சிறிய நாட்டில் அழகை வரிசையையாக அனுபவிக்க சந்தர்ப்பம் கிடைத்தது புதுவிதமான வாழ்க்கை அனுபவமாகும்.

தாமரை மொட்டின் வடிவத்தில் இந்த பாரிய நிர்மாணம் தொடர்பான ஒப்பந்தம் 2012 ஜனவரி 3ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அவ்வேளையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்சவால் 2012 ஜனவரி 22 ஆம் திகதி கொழும்பு தாமரை கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

தடைகளுடன் பயணித்து 10 வருட காலம் கடந்துள்ளது. இதுவரை 115 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்பட்ட தாமரை கோபுரம் தெற்காசியாவிலேயே உயரமான கட்டடம் என கருதப்படுகின்றது. எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் நீங்கள் பிரவேசிப்பது 350 மீற்றர் உயரமான தெற்காசியாவின் உயரமான கட்டடத்திற்காகும். தாமரைக் கோபுர வளாகம் 10.5 ஏக்கரில் பரந்துள்ளது. 'கொழும்பு 'தாமரைக் கோபுர தனியார் நிறுவனம் 'கூறுவது போன்று தற்போது உள்ளூர் முதலீட்டாளர்கள் நூற்றுக்கு 80 வீதமானோரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நூற்றுக்கு 20 வீதமானோரும் தாமரைக் கோபுரத்திற்காக முதலீடுகளை செய்துள்ளார்கள். 22 முதலீட்டாளர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட விருப்பம் தெரிவித்துள்ளார்கள். இவ்வருட டிசம்பர் மாதமளவில் பதினைந்து விழாக்களுக்கான கேள்விகள் கிடைத்துள்ளன. எதிர்காலமும் வெற்றிகரமாக அமையும் என நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தாமரை கோபுரத்திற்குள் பிரவேசிப்பதற்கு 500 மற்றும் 2000 ரூபாய் கட்டணம் அறவிடப்படும். 500 ரூபா அனுமதி பத்திரத்துடன் உள் நுழையும் நபர் ஒரு குழுவாகவே தாமரைக் கோபுர உச்சிக்கு அனுப்பப்படுவார். (15 ஆம் பக்கம் பார்க்க)

டானியா மோசஸ்
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# எங்கள் கருத்து

## நம்பிக்கை தருகின்ற மூன்று சமிக்ஞைகள்!

அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான வரி அதிகரிப்பு உட்பட பல்வேறு முன்னேற்றகரமான விடயங்களை இடைக்கால வரவுசெலவுத் திட்டம் கொண்டிருப்பதாக பலதரப்பினரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதுடன், உள்நாட்டு வருமானத்தையும் அதிகரித்துக் கொள்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை இடைக்கால வரவுசெலவுத் திட்டம் கொண்டுள்ளதாக பலரும் பாராட்டுகின்றனர்.

நம்பிக்கை தரும் அறிகுறிகளில் மூன்றாவது விடயமாகத் தென்படுவது புலம்பெயர் தமிழர்களுடனான நல்லிணக்கப்பாடு ஆகும். நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் கூடுதல் அக்கறை காண்பிப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

மேற்கு நாடுகளில் பொருளாதாரத்திலும், அந்நாடுகளின் அரசியலிலும் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கும் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை இலங்கையில் ஏற்படுத்திக் கொள்ளும் விடயமானது நீண்ட காலமாகவே பேசுபொருளாக இருந்து வருகின்றது. ஆனால் தென்னிலங்கையின் இனவாத சக்திகள் சிலவற்றின் விமர்சனங்கள் காரணமாக புலம்பெயர் தமிழர்களுடனான நல்லிணக்கம் சாத்தியப்படவில்லை. இன்று இனவாத விமர்சனங்களை அலட்சியம் செய்யும் வகையில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளையும் அரவணைத்துச் செல்வதில் அரசு அக்கறை காட்டுவது முன்னேற்றமான செயலாகும்.

புலம்பெயர் தமிழர்கள் எனப்படுபவர்கள் வேற்றுநாட்டவர்கள் அல்லர். அவர்களும் இலங்கையை தாயகமாகக் கொண்டவர்கள்தான். அன்றைய கால இனக்கலவரங்கள் மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக உயிர்ப்பாதுகாப்புக்காக புலம்பெயர்ந்து சென்ற எமது தாயக மக்களே அவர்களாவர்.

புலம்பெயர் தமிழர்களை அரவணைத்துச் செல்வதென்பது நாட்டுக்கு விரோதமான செயலென்று எவராவது வாதிடுவார்களானால், அது அறியாமை ஆகும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூன்று விடயங்களும் நாட்டின் பொருளாதார மீட்சிக்கான சிறப்பான திட்டங்களாகவே உள்ளன. வீண்விமர்சனங்களும், இனவாத சிந்தனைகளும், அரசஎதிர்ப்பு அரசியலும் எக்காலமும் நன்மைகள் தரப் போவதில்லை. மீட்சிக்கான இலட்சியத்தை நோக்கி புத்திசாலித்தனமான திட்டங்களுடன் நாம் முன்னோக்கிச் செல்வதே இன்று அத்தியாவசியம்.

# நெருக்கடியான காலத்தில் IMF ஐ நாட இலங்கைக்கு இந்தியா மட்டுமே உதவி புரிந்தது

### உயர்ஸ்தானிகர் மிலிந்த நன்றி தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தை, அணுகுவதற்கு அண்டை நாடான இந்தியா அளித்த ஆதரவுக்கு இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் நன்றி தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியம் உடன்படிக்கை வந்துள்ள நிலையில், மேலும் பல நாடுகள் உதவிகளை வழங்கும் என இலங்கை எதிர்பார்ப்பதாக மொரகொட குறிப்பிட்டார்.

நெருக்கடி வேளையில் இந்தியா மட்டுமே இலங்கைக்கு பங்காளியாக செயற்பட்டது என்றும் அவர் எடுத்துரைத்தார். உண்மை என்னவென்றால், சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் அளவிலான ஒப்பந்தம் இலங்கைக்கு நம்பிக்கை அளிக்கிறது. பணம் பெரியதாக இல்லை, ஆனால் அது இலங்கைக்கு நம்பிக்கையை அளிக்கிறது. இந்த நிலையில் ஜப்பான் போன்ற முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வரக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல ஊக்கப்படுத்திய இந்தியாவுக்கு, இலங்கை நன்றி கூறுகிறது.

அதில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் பங்கு வகித்தனர். இலங்கையிடம் எந்த விதமான திட்டமும் இல்லாமல் இருந்த போது இந்தியா மட்டுமே ஒரே பங்காளியாக இருந்தது என்று அவர் மேலும் கூறினார். இந்தநிலையில் துறைமுக நகரமான திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்துவது குறித்து இந்தியா ஆராய முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

# தலவாக்கலை கிரேட்வெஸ்டன் தோட்ட தேயிலை அதிக விலைக்கு விற்பனை





*தலவாக்கலை குறூப் நிருபர்*

உயர்தர தேயிலைகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற ஹேலிஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் இடம்பெற்ற ஏலத்தில் Dust No. 1 தர தேயிலை தூள் 2650 ரூபாய் விலையைப் பெற்று சாதனை படைத்தது.

இந்த தேயிலை போப்ஸ் மற்றும் வோக்கர்ஸ் தனியார் ஏற்றுமதி நிறுவனத்தால் வாங்கப்பட்டது. கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் மிகவும் தரமான தேயிலை தூள் வகைகளான FBOP ஒரு கிலோ 3000 ரூபாய்க்கும், BOPS ஒரு கிலோ 1800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டம் தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கு காரணமாக முகாமையாளர் சரத் ரணவீர மற்றும் சிரேஸ்ட உதவி முகாமையாளர் தினேஸ் மெதிவக்க, தொழிற்சாலை நிர்வாகி எம்.பரமசிவம் ஆகியோர் விளங்குகின்றனர்.

### மன்னாரில் கனிய மன் அகழ்வு, காற்றாலை மின் கோபுரங்கள்;

# மக்கள் விடுதலை முன்னணி மன்னார் பிரஜைகள் குழு சந்திப்பு



*மன்னார் குறூப் நிருபர்*

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரம் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் (2) மதியம் மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு மன்னார்பிரஜைகள்குழுவினரை சந்தித்து கலந்துரையாடினர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மக்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்ற கனியமண் அகழ்வு மற்றும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது உள்ளிட்டவை தொடர்பாக ஆராயும் பொருட்டு வருகை தந்து மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

மக்களின் பிரச்சினைகள் குறித்து மன்னார் பிரஜைகள் குழு தொடர்ச்சியாக மக்களுக்காக குரல் கொடுத்து வரும் நிலையில் இப் பிரச்சினைகள் குறித்து அறிந்து கொண்டு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம் விஜயம் மேற்கொண்டதாக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்தனர்.

மேலும் மக்களுக்காக பிரஜைகள் குழுவினர் முன்னெடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக தாம் மன்னாருக்கு வருகை தந்ததாக கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

## முன்னாள் ஜனாதிபதி ...

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவரை வரவேற்பதற்காக அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஜூலை 13ஆம் திகதி இலங்கையில் இருந்து மாலைத்தீவுக்கு சென்றார்.

அதன் பின்னர் சிங்கப்பூருக்கு சென்ற அவர், அங்கிருந்து இறுதியாக தாய்லாந்தில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளார் .

## ஐரோப்பிய யூனியன்...

பதிவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ட்விட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,..

பொது நிதி மேலாண்மை மற்றும் ஏற்றுமதி தொழில்கள் உட்பட பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றில் தொடர்ந்து ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## உண்டியல் நடைமுறைக்கு...

தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், வெளிநாட்டுப் பணம் சரியான முறையில் அனுப்பப்பட்டால் 700 முதல் 800 மில்லியன் டொலர்கள் வரை நாட்டிற்கு வந்தடையும்.

அது நாட்டிற்கு கிடைத்துவிடுமோ என்ற அச்சத்தில் அதனை அனுப்ப வேண்டாம் என கூறப்படுகின்றது.

இன்று உண்டியல் முறையில் பணம் அனுப்புவோரை கைது செய்ய புதிய சட்டங்களை அமல்படுத்தியுள்ளோம். இது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

உண்டியல் முறையைப் பயன்படுத்தி இலங்கைக்கு பணத்தைக் கொண்டு வந்து இலங்கையில் உள்ள அவர்களின் வங்கிக் கணக்கிற்கு மாற்றிக் கொண்டாலும் அந்த வங்கிகள் சோதனையிடப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும். நேர்மையான முறையில் பணம் சம்பாதிப்பவர்கள், நேர்மையான முறையில் இலங்கைக்கு பணத்தை அனுப்புமாறு கோரிக்கை விடுக்கிறோம். அந்தப் பணத்தை சட்டப்பூர்வமாக அனுப்புபவர்களுக்கு, மின்சார வாகனம் வாங்க உரிமம் வழங்குதல், குறைந்த வட்டியில் வீட்டுக்கடன் வழங்குதல், ஓய்வூதியம் போன்ற அனைத்து சலுகைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 35 இலட்சம் குடும்பங்களுக்கு....

சமுர்த்தி உதவி பெறாத குடும்பங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி பந்துல திலக்கசிறி தெரிவித்தார்

இதற்கு மேலதிகமாக ஆதரவற்றவர்களாக கருதப்படும் நான்கு இலட்சத்து 16 ஆயிரத்து 667 முதியோர்கள், முப்பத்தி ஒன்பதாயிரத்து 169 சிறுநீரக நோயாளிகள், விசேட தேவையுடையவர்கள் என கருதப்படும் 72 ஆயிரத்து 06 பேருக்கும், கர்ப்பிணி தாய்மாருக்கும் இந்த கொடுப்பனவு கடைக்கவுள்மை விசேட அம்சமாகும்

சமுர்த்தி கொடுப்பனவுக்காக மட்டும் அரசாங்கம் மாதாந்தம் 530 கோடி ரூபாவை செலவிடுவதுடன், வரவு செலவுத் திட்டத்தினூடாக வழங்கப்படும் நிவாரணங்களுக்காக 2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் மூலதன செலவில் மற்றும் குறைந்த முன்னுரிமையடிப்படையிலான செலவுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

அத்துடன் இதற்கு மேலதிகமாக உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு 20 ஆயிரம் கோடி ரூபா உலக உணவு திட்டத்தின் ஊடாக கிடைக்கவுள்ளது.

மேலும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யுனிசெப் உள்ளிட்ட அமைப்புகள் பலவற்றிலிருந்து இதற்கான பங்களிப்புகளை பெற்றுக் கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது

இந்த நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின்படி ஒரு குடும்பத்தில் பலர் இருந்தாலும் அவர்கள் ஒரு குடும்பமாகவே கருதப்படுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## CPC விரைவில் கணக்காய்வுக்கு

காணப்பட்டன.

கனியவள கூட்டுத்தாபனத்தின் வசமுள்ள சொத்துகள் மற்றும் உடைமைகள் குறித்து, எந்த வகையிலும் உறுதிப்படுத்தக்கூடிய தரவுகள் அதன் முகாமைத்துவத்திடம் இல்லை.

அத்துடன் தற்போது வரை 24 முன்னணி நிறுவனங்கள் இலங்கையில் கனியவள சந்தையில் இணைய இணக்கம் வெளியிட்டுள்ளன.

அடுத்த மாதம் இறுதியாகும் போது, அவற்றில் இரண்டு அல்லது மூன்று நிறுவனங்கள் நாட்டின் சந்தையுடன் தொடர்புபடும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு ஆதரவு...

ஒன்றிணையுமாறு ஜப்பானிய நிதி அமைச்சர் நேற்று முன்தினம் மீண்டும் வலியுறுத்தினார்.

இதற்கமைய, சீனா மற்றும் இந்தியா உட்பட அனைத்து கடன் வழங்கும் நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பற்றி கலந்துரையாட ஒன்று கூடுவது முக்கியம் என ஜப்பானிய நிதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறான நிலையில், சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சீனாவின் இந்த நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் சவால்கள் குறித்து சீனா உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா தம்மால் இயன்ற உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தநிலையில் முறையான தீர்வுகளுக்காக இலங்கையுடன் கலந்தாலோசிப்பதில் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சீனா ஆதரவளிப்பதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்...

நிலைமை பற்றி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் இம்மாதம் 23,24 ஆம் திகதிகளில் நிந்தவூரிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் தற்போது வரைக்கும் இந்த கடலரிப்பு விடயத்தில் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வரும் பிரதித் தவிசாளரினால் அமைச்சரின் கவனத்திற்கு பல்வேறு விடயங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதில் தற்போது அம்பாறை மாவட்டத்தில் மீன் பிடி தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர்கள் தங்களது தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான போதிய அளவு மண்ணெண்ணெய் இல்லாமல் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், இந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து மீனவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை மானிய அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இவைகளை கவனத்தில் எடுத்துக் கொண்ட அமைச்சர் இதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

மேலும் தற்போது நிந்தவூர் பிரதேசத்தில் அதிகரித்து வரும் கடல் அரிப்பினை நிலையாக கட்டுப்படுத்த கிழக்குமேற்காக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட நிந்தவூர் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அவர்களது மீனவர் கட்டடங்கள், மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஐ.தே.கவின் 76 ஆவது...

இருந்த போது கட்சியின் ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

ஆண்டு விழா கூட்டத்தை தொடர்ந்து கட்சியில் பல முக்கிய பதவிகளில் மாற்றங்கள் நிகழலாம் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 2023 வரை ஆசிரியர்களது...

போக்குவரத்து பிரச்சினை காரணமாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக இணைப்பு கடந்த 31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படவிருந்தது. இந் தநிலையில் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களது இணக்கப்பாடு இருந்தால் மாத்திரமே, ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளில் எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை சேவையில் ஈடுபட முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## IMF வழங்கிய நிதியுதவி...

அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நாட்டிற்கு கிடைக்கும் வருமானம் போன்று மூன்று மடங்கு செலவினங்களுக்கு அவசியமாக உள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் நாட்டில் குறைந்த வருமானம் பெறுவோர் உள்ளிட்ட கீழ் மட்டத்தில் உள்ள மக்கள் 30 இலட்சம் பேருக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பல அரச நிறுவனங்கள் நட்டமீட்டும் நிலையிலேயே இயங்குகின்றன.

அந்த வகையில் வருமானத்தை அதிகரித்து செலவுகளை குறைக்கவும் வெளிநாட்டுக்கு எமது நிதி செல்வதை தடுக்கவும் அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்ளவும் என இந்த நான்கு முக்கிய நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுமாறு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அரச நிறுவனங்களில் இலகுவான...

செயல்பட வேண்டியது முதன்மையான பொறுப்பாகும். எந்தவொரு நபரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதற்கு இடங்கொடுக்காது, வினைத்திறனான சேவையை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று சகல அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திடமிருந்து பொது மக்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளுவதற்காக பொது மக்களின் வசதி கருதி தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கீழ் காணும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஊடாக பொது மக்கள் தங்களுக்கான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

சிசிர ஜயகொடி (ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளர் நீதித்துறை ), கையடக்க தொலைபேசி 0718132590 , அலுவலக தொலைபேசி 0112354329 / 0112354354, கலாநிதி சுலக்சன ஜயவர்தன (ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ), கையடக்க தொலைபேசி 0719994133 / 0711992354, அலுவலக தொலைபேசி 0112354329 / 0112354354, மின்னஞ்சல் முகவரி addlsec.fsd@presidentsoffice.lk

## தாமரைக் கோபுர செயற்பாடு செப்டம்பர்...

ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பல புதிய அனுபவங்களை வழங்க கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இவ்வருடம் மார்ச் மாதம் திறைசேரியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அதன் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகிறது.

உலகிலுள்ள செல்வந்த நாடுகளில் இருப்பதைப் போன்ற பொழுதுபோக்கு மற்றும் புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்க திட்டமிட்டிருப்பதாக கொழும்பு லோட்டஸ் டவர் தனியார் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு சாகச விளையாட்டுகளான ஸ்கை டைவிங் (Sky diving ) மற்றும் பங்கி ஜம்பிங் (Bungee jumping) ஆகியவையும் இதில் அடங்கும்.

இதுவரை 80 சதவீதமான உள்நாட்டு முதலீட்டாளர்களும் 20 சதவீதமான வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தாமரை கோபுரத்தில் முதலீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டயலொக் டெலிகொம் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் என்பன தலா 200 மில்லியன் ரூபா முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன.

தாமரைக்கோபுரத்தின் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நுழைவுச் சீட்டைக் கொள்வனவு செய்து, அனைவரும் இதனைப் பார்வையிடவும் புதிய அனுபவங்களை பெறவும் முடியும். நுழைவுச் சீட்டொன்றின் விலை 500 ரூபா என்பதோடு விசேட நுழைவுச் சீட்டின் விலை 2,000 ரூபாவாகும். பார்வையிட வரும் வெளிநாட்டவர் ஒருவருக்கான நுழைவுச் சீட்டு 20 அமெரிக்க டொலர்களாகும். அடுத்த சில மாதங்களில் நுழைவுச் சீட்டுக்கு பதிலாக QR தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழகத்திலிருந்து அடுத்த ...

பா.ஜ.கவின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை, சதீஷ்குமாரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் நுகர்வு தேர்வைக்காக சராசரியாக மாதாந்தம் சுமார் ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் கோதுமை மா தேவைப்படுவதாக தெரிய வருகிறது.

மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை (செப் 1) பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கே. அண்ணாமலையை சென்னையிலுள்ள பா.ஜ.க தலைமையகத்தில் வைத்து சந்தித்துள்ளார்.

இலங்கைத் தமிழரின் அபிலாசைகளுகேற்ப சிறுபான்மை மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வுகள் மற்றும் மலையக மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு தொடர்ந்தும் கவனம் செலுத்துமென அண்ணாமலை தெரிவித்துள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு உதவிகளை வழங்கி வரும் மத்திய அரசு அடுத்த இரண்டு வாரங்களில் மலையக மக்களின் அவசர பயன்பாட்டுக்காக பெருந்தொகை கோதுமை மா, மருந்து பொருட்கள் மற்றும் பசளை வகைகளையும் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், மலையக மக்கள் மீது விசேட கரிசனையுடன் உள்ளதாகவும் பா.ஜ.க தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இ.தொ.கா தலைவர்களான ஜீவன் தொண்டமான், செந்தில் தொண்டமான் ஆகியோர் அண்ணமலையை சந்தித்துள்ளதுடன் மலையகம் மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் அவர் விஜயம் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரப் பாதிப்பினால் உண்டான வலியை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்!

**இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இன்றைய நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பது ஓரளவுக்கு நிம்மதியைக் கொடுத்துள்ளது.**



## 'இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால நோக்கு' – மத்திய வங்கி ஆளுநர் அளித்துள்ள யதார்த்தபூர்வ விளக்கம்!

சர்வதேச நாணய நிதியத்தினால் நான்கு வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் 2.9 பில்லியன் டொலர் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் (Extended Fund Facility) பெற்றுக் கொள்வதற்கான அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை சர்வதேச நாணய நிதியத்தின் குழு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் அறிவித்திருந்தது.

புதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடு, நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், ஊழல் பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சித் திறனைத் அதிகரிப்பதுடன், பேரண்டப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை, கடன் மறுசீரமைப்பு போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வரிவருவாயை அதிகரித்தல், செலவீனங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் செலவீனங்களை ஈடுசெய்யக் கூடிய வகையில் கட்டண அதிகரிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை உறுதிப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களை சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறது. இதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியிருக்கும்.

குறைந்த வருமானம் பெறுபவர்கள் உள்ளிட்ட தரப்பினரைப் பாதுகாக்கும் சமூக நலன்புரி பாதுகாப்பு வலைகளை பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் கடனுதவித் திட்டம் அமையும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் மென்மேலும் பாதிப்புக்கு உள்ளாகும் பட்சத்தில் அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடி அதனால் ஏற்படக் கூடிய விளைவு மிகவும் பாரதூரமானதாக அமையும்.

இதுவரை நடைபெற்ற போராட்டம் மத்திய தர மக்களால் மாற்றம் வேண்டி நடத்தப்பட்ட போராட்டம். எனினும், வாழ்வதற்கு வழி இன்றி குறைந்த வருமானம் பெறும் தரப்பினரால் போராட்டம் நடத்தப்படுமாயின் அது இரத்த ஆறு ஓடுவதற்கே வழிவகுக்கும். எனவே, அவ்வாறானதொரு நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்லாதிருப்பதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகவே சமூக நலன்புரி பாதுகாப்பு வலைகளைப் பலப்படுத்துவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் அதிக அக்கறை காண்பிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

பாராளுமன்ற விவாதங்களின் போது, நிதி தொடர்பான விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயலூக்கப் பங்களிப்பை உறுதிப்படுத்தவும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் எதிர்கால பொருளாதாரப் பாதை குறித்து பயனுள்ள கலந்துரையாடலை ஏற்படுத்தும் நோக்கிலும், 'இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால நோக்கு' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்வொன்று பாராளுமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும்போதே மத்திய வங்கியின் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியை ஒரு சில மாதங்களில் தீர்த்துவிட முடியாது. எனவே சர்வதே நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கக் கூடிய காலம் வரை, அதாவது எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை நாட்டுக்கு மிகவும் கஷ்டமான காலமாக அமையும்.

இதனை அனைவரும் புரிந்து கொண்டு, கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார். அதேநேரம், பொருளாதார நெருக்கடிகளால் ஏற்படக் கூடிய வலியானது சகல தரப்பினராலும் சமமாக உணரப்பட வேண்டும். வருமானம் குறைந்த தரப்பினருக்கான வலி அதிகமாகவும், அதிக வருமானம் ஈட்டுபவர்கள் எதுவித வலியும் இன்றி இருப்பது சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி குழப்பத்துக்கே வழிவகுக்கும்.

எனவேதான் அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து வரிகளை அறவிட்டு, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு வசதிகளைச் செய்ய அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. இதன் ஒரு அங்கமாகவே வரி அதிகரிப்பும் காணப்படுகிறது என்ற விளக்கத்தை அவர் வழங்கினார்.

அதேநேரம், தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இறக்குமதித் தடைகள் குறித்து விளக்கமளித்த அவர், தேவையற்ற இறக்குமதிகளை மேற்கொள்ளும்போது அந்நிய செலாவணி நாட்டைவிட்டு வெளியே செல்லும். இதனால் எரிபொருள், எரிவாயு, மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி கிடைக்காமல் போகும்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் வர்த்தகத் துறையில் உள்ளவர்களுக்குப் பாதிப்புக்கள் இருக்கின்றன என்பதை மறுக்கவில்லை. அவர்களைப் பாதுகாப்பதாகக் கூறி இறக்குமதித் தடைகளை நீக்குவோமாயின் நாட்டில் மீண்டும் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கான வரிசைகள் அதிகரித்து மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கும் நிலை ஏற்படும்.

அதேநேரம், இறக்குமதிகளுக்கு இடமளித்தால் தேவையற்ற பொருட்களின் இறக்குமதி அதிகரித்து விடும். எனவே, இக்கட்டான சூழ்நிலையில் ஒரு சில தரப்புக்களுக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்திருந்தார்.

அதிகரித்த பணவீக்கம் காரணமாகப் பாதிக்கப்படும் தரப்பினராகக் குறைந்த வருமானம் பெறுபவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் தரப்பினரே அதிகம் காணப்படுகின்றனர். உதாரணமாக ஓட்டோ ஓட்டுபவர்கள் விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப தமது கட்டணத்தை அதிகரித்துக் கொள்வார்கள், வியாபாரிகள், கூலி வேலை செய்பவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் விலைவாசிக்கு ஏற்ப தமது அறவீடுகளையும் அதிகரித்துள்ளனர்.

இருந்தபோதும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் பணவீக்கம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியத்தில் அதிகரிப்பு இல்லை, மாறாக விலைவாசி அதிகரித்துள்ளது. இதனால் அவர்களுக்கான பாதிப்பு அதிகம். எனவேதான் பொருளாதாரப் பாதிப்பினால் ஏற்படக் கூடிய வலியை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது குழப்பத்தை ஏற்படுத்தும் என அவர் விளக்கமளித்தார்.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட பிழையான தீர்மானங்கள் நாடு மோசமான நிலைக்குச் செல்ல வழி வகுத்திருந்தன. இந்தத் தவறுகளுக்கு ஒட்டுமொத்தமாக அரசியல்வாதிகளைக் குறைகூற முடியாது. அரசியல்வாதிகளை வழிநடத்த வேண்டிய அரசாங்க அதிகாரிகளுக்கும் இதற்கான கூட்டுப்பொறுப்பு உள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)




**சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு காரணமாக இலங்கைக்கு இன்று ஏற்பட்டுள்ள நிம்மதி!**







பி.ஹர்ஷன்...

# சீனாவின் இன்றைய பொருளாதார சரிவும் இந்தியாவின் முன்னோக்கிய பாய்ச்சலும்!



**சீனாவில் தற்போது நிலவி வரும் பொருளாதார மந்த நிலைமையால் இந்தியா தனது பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் அடைவதற்கு வாய்ப்புண்டு என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. சீனாவின் பொருளாதார மந்த நிலைமைக்கு மத்தியில், இந்தியா பலனடையக் கூடும் என்று ஏற்கனவே பல நிபுணர்களும் கூறி வரும் நிலையில், தற்போது எஸ்.பி.ஐ மேற்கொண்ட ஆய்வறிக்கையும் அதனையே சுட்டிக் காட்டுகின்றது.**

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளும் தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. ஆனால் இந்தியா அப்படி அல்லாமல் மற்ற நாடுகளை விட வளர்ச்சிப் பாதையிலேயே சென்று கொண்டிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.



சீனா தற்போது பொருளாதார பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. கொரோனா தாக்கம் மற்றும் ரியல் எஸ்டேட் துறையில் நிலவி வரும் தாக்கம் என்பன போன்ற பல பிரச்சினைகளை சீனா எதிர்கொண்டுள்ளது. இதன் காரணமாக சீனா பொருளாதார சரிவினைக் கண்டுள்ளது.

ஏற்கனவே சீனாவில் நிலவி வரும் பொருளாதார மந்த நிலைக்கு மத்தியில், ஐபோன் 14 உற்பத்தியை இந்தியாவில் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இந்த ஸ்மார்ட்போன் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், உற்பத்தியினை இந்தியாவிலும் செய்ய திட்டமிட்டுள்ளது. இது சீனாவில் நிலவி வரும் மந்த நிலைக்கு மத்தியில், இந்தியாவின் மாபெரும் சந்தையினை இழக்க நிறுவனம் தயாராக இல்லை என்பதையே உணர்த்துகிறது.

இது அதன் விற்பனையை அதிகரிப்பதற்காக என்றாலும், உற்பத்தியினை இந்தியாவில் செய்யும் போது அது இந்தியாவின் வளர்ச்சிக்கும் சாதகமாக அமையும். இங்கு வேலை வாய்ப்பினையும் அதிகரிக்கும். மொத்தத்தில் சீனாவின் மந்த நிலை, இந்தியாவுக்கு சாதகமான விஷயம் என எஸ்.பி.ஐ நம்புகிறது.

இந்தியாவின் வீடு விற்பனை கடந்த ஆண்டை விட 60 வீதம் அதிகரித்து, 1,58,708 யூனிட்களாக இருந்தது. கடந்த 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியை விட 19% அதிகரிப்பினை கண்டுள்ளது.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் சீனாவின் முக்கிய வணிகமாக இருந்து வந்த ரியல் எஸ்டேட் துறையானது, பலத்த சரிவினைக் கண்டுள்ளது.

சீனாவில் நிலவி வரும் பிரச்சினை இந்தியாவுக்கு சாதகமாக மாறத் தொடங்கியுள்ளது. உலகெங்கிலும் உள்ள பல்வேறு புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில், சீனாவில் விநியோக சங்கிலியில் தாக்கம் நிலவி வருகின்றது. இது இந்தியாவுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

இந்தியா பொருளாதார வளர்ச்சி வீதமானது முதல் காலாண்டில் இரு இலக்கில் வளர்ச்சி காணலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பல நிபுணர்களும் இந்த ஜி.டி.பி குறித்ததான வளர்ச்சி கணிப்பினை 12 16 வீதத்திற்குள் இருக்கலாம் என்றும் கணித்துள்ளனர். தற்போது கொரோனாவில் இருந்து மீளத் தொடங்கியுள்ள பொருளாதாரம், பல துறைகளிலும் நல்ல வளர்ச்சியினை காணத் தொடங்கி விட்டது.

இதற்கிடையில் ஆராய்ச்சி நிறுவனமான இக்ரா, முதல் காலாண்டில் வளர்ச்சி வீதம் 13% வளர்ச்சி காணலாம் என கணித்துள்ளது. ராய்ட்டர்ஸ் கணிப்பில் 15.2% ஆக இருக்கலாம் என்று கணித்துள்ளது. ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியாவின் ஆய்வறிக்கையில், 15.7% ஆக வளர்ச்சி காணலாம் என்றும் கணித்துள்ளது.

இம்மாத தொடக்கத்தில் ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கை கூட்டத்தில், மத்திய வங்கியானது நடப்பு நிதியாண்டின் இந்தியாவின் வளர்ச்சி வீதம் 7.2% ஆக இருக்கலாம் என்று கணித்துள்ளது. இந்த கணிப்பில் இரண்டாவது காலண்டில் 6.2% ஆகவும், மூன்றாவது காலாண்டில் 4.1% ஆகவும், 4வது காலாண்டில் 4.0% ஆகவும் கணித்துள்ளது. இதே அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டில் வளர்ச்சி இன்னும் சீரடைய தொடங்கி விடும் என்றும் கணித்துள்ளது.

எஸ்.பி.ஐயின் அறிக்கையின்படி, இந்தியாவின் ஜி.டி.பி வீதம் முதல் காலாண்டில் 15.7% ஆக இருக்கலாம் என்று கணித்துள்ளது. கொரோனாவின் வீழ்ச்சியில் இருந்து மீண்டு பல துறைகளில் நல்ல வளர்ச்சி கண்டுள்ளன என தெரிவித்துள்ளது.

2020 இல் தொடங்கிய கொரோனா பரவல் தாக்கமானது இந்தியாவில் மக்களின் ஆரோக்கியத்தை பாதித்தது மாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைத்தது. தொழில் இழப்பு, தொழில் முடக்கம், வருமான இழப்பு, ஏழைபணக்கார ஏற்றத்தாழ்வு அதிகரிப்பு, பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டதால் கேள்விக்குறியான இளைஞர்களின் எதிர்காலம் என பல்வேறு சவால்களைச் சந்தித்து வரும் நிலையில் தற்போதைய பொருளாதார வளர்ச்சியானது பாராட்டும்படியாக உள்ளதாக பொருளாதார நிபுணர்களின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

**சீனாவில் நிலவி வரும் பொருளாதார மந்த நிலைக்கு மத்தியில், தனது ஐபோன் 14 உற்பத்தியை இந்தியாவில் தொடங்குவதாக சீன நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தியாவின் மாபெரும் சந்தையை இழக்க சீன நிறுவனம் தயாராக இல்லை!**

எஸ்.சாரங்கன்...

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்று 2048 ஆம் ஆண்டாகும் போது முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக மாறுவதற்கான திட்டம் தயாரிக்கப்படவிருப்பதாக ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.**



# முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றியமைக்க நடவடிக்கை!

அவருடைய இந்த அறிவிப்புக்கான அடித்தளம் போடப்பட்டிருப்பது அண்மையில் அவரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டில் எஞ்சிய காலப் பகுதிக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் தெளிவாகப் புலப்படுகிறது. இந்த நாட்டை ஆட்சி செய்த ஏனைய தலைவர்களுக்குச் சவாலாக இருந்த விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தும் அளவுக்கு அவர் தனது துணிச்சலை வெளிப்படுத்தியுள்ளார்.

நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான முழுமையான யோசனைகள் எதிர்வரும் சில மாதங்களில் முன்வைக்கப்படவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ள போதும், அதற்கான ஒரு முன்னோடியாக தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தைக் குறிப்பிடலாம்.

அந்நிய செலாவணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு சவால்களிலிருந்து வெளியே வருவதை நோக்காகக் கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் ஒருபக்கமிருக்க, குறிப்பாக அரசாங்க நிறுவனங்கள் தமது நோக்கங்களிலிருந்து வேறுபட்டு வணிக நிறுவனங்கள் போன்று செயற்பட்டமையால் உரிய இலக்கை அடைய முடியாது போயுள்ளது. இதனாலேயே பல தசாப்தங்களாக பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டன என்பதை அவர் இதன் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

ஒரு அரசாங்கத்தின் பிரதான ஆதாய மார்க்கமாக வரி அறவீடு காணப்படுவது நாம் அனைவரும் அறிந்த விடயம். கடந்த அர

ஏற்கனவே 15 வீதமாக் காணப்பட்ட பெறுமதி சேர் வரியானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எவ்வித சாத்திக்கூற்று ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாது 8 வீதமாகக் குறைக்கப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்துக்குப் பல பில்லியன் வருமான இழப்பு ஏற்பட்டமையும் நாடு தற்பொழுது எதிர்நோக்கும் நெருக்கடிக்கு ஒரு காரணம் எனலாம்.

இந்த நிலையில் பெறுமதி சேர் வரியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் யோசனை தற்பொழுது அரசினால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் வரி வருமானத்தை மேலும் அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இது இவ்விதமிருக்க, 18 வயது நிரம்பிய அனைவருக்கும் கட்டாய வரிப் பதிவொன்றினை மேற்கொள்வதற்கான



முன்மொழிவும் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இது நல்லதொரு விடயமாக இருந்தாலும் வரி அறவீடுகள் தொடர்பில் அனைவரும் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டும். விசேடமாக அதிக வருமானம் ஈட்டுபவர்களிடம் அறவிடப்பட வேண்டிய வரிகள் உரிய முறையில் அறவிடப்படுகின்றவா என்பது கண்காணிக்கப்பட வேண்டும். சாதாரண மக்கள் தமக்கான வரிகளை சரியாகச் செலுத்தினாலும், அதிக வருமானம் ஈட்டுபவர்களே பெரும்பாலும் வரி செலுத்துவதிலிருந்து தப்பிக் கொள்வார்கள். இந்த நிலைமை தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி அனைவரும் நியாயமாக நடத்தப்படுவதும் முக்கியமாகும்.

அரச வரி வருவாய் அதிகரிப்புக்கு அப்பால் செலவீனங்களைக் கட்




## வரிகள் ஊடாக அரசாங்கத்தின் வருவாயை அதிகரித்து, சரிவடைந்த பொருளாதாரத்தை மீண்டும் நிலைநிறுத்துவதில் அரசு அக்கறை

**சாதாரண மக்கள் தமக்கான வரிகளை சரி-யாகச் செலுத்தினாலும், அதிக வருமானம் ஈட்டுபவர்களே பெரும்பாலும் வரி செலுத்துவதிலிருந்து தப்பிக் கொள்கிறார்கள். இந்த நிலைமை தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்**




மேற்கொள்ள முடியாமை போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவியாக மேலதிக மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு 2022 மே முதல் யூலை மாதம் வரை மேலதிகமாக ரூபா 31,000 மில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

மேற்குறித்த பாதிப்புகளுக்குட்பட்டவர்கள் மீதான பொருளாதார நெருக்கடியினால் ஏற்படும் அழுத்தத்தினைக் குறைப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு இந் நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 20,000 ரூபாவிற்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபாவினை மாதாந்த மேலதிக கொடுப்பனவாக வழங்குவது, போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2022 ஆம் ஆண்டில் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு குடும்பமொன்றுக்கு 10,000 ரூபாவினை வழங்குவது போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் ஜனாதிபதியின் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன.

இதுபோன்ற பல்வேறு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டரீதியான மாற்றங்கள் குறித்தும் இவ்வரவுசெலவு முன்மொழிவில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இது தவிரவும் நாடு எதிர்கொண்

நாட்டில் நிலவும் நெருக்கடி நிறைந்த சூழ்நிலையால் ஏற்கனவே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் மென்மேலும் வீழ்ச்சியடைந்து விடாதிருக்கும் நோக்கில் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்களும் இதில் முன்மொழியப்பட்டுள்ளன.

பல தசாப்தங்களாக நஷ்டத்தில் இயங்கி வரும் அரசாங்க நிறுவனங்களின் ஊடாக வருமானத்தை ஈட்டும் பொருட்டு அவற்றை தனியார் கூட்டாண்மையுடன் வினைத்திறனாக்கும் யோசனைகள் குறிப்பாக 50 அரசாங்க நிறுவனங்களை அரசதனியார் கூட்டாண்மையின் கீழ் கொண்டு வருவதற்கான முன்மொழிவு சாதகமாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ்வாறான யோசனைகள் பல்வேறு தரப்பினராலும் விமர்ச்சிக்கப்பட்டு வந்த நிலையில், நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு இது 'ஸ்மார்ட்' யோசனைகளாகத் தற்பொழுது பார்க்கப்படுகின்றது.

பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களைத் தூக்கியெறிந்து விட்டு அடிமட்ட மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளின் யதார்த்தங்கள் பற்றி புறநிலையாக சிந்தித்தல் வேண்டும் எனத் தனது உரையில் குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி, மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் ஹந்துன்நெத்தியினால் அண்மையில் தெரிவிக்கப்பட்ட கூற்றொன்றினையும் மேற்கோள் காட்டியிந்தார்.

அதாவது, 'அரசாங்கம் கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும். அரசாங்கம் தொழில் முயற்சிகளை செயற்படுத்தக் கூடாது' என்பதாக அது அமைந்தது. புதிய உலக ஒழுங்கின் புதிய எண்ணக்கருக்கள் பற்றிய புதிய சிந்தனைகளை நாம் கொண்டிருப்போமாயின், பொருளாதார நெருக்கடியினைத் தீர்ப்பதற்கு எம்மால் முடியுமாகவிருக்கும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி வெளியிட்டிருந்தார்.

சாங்கத்தின் காலத்தில் எடுக்கப்பட்ட வரிக் குறைப்புத் தீர்மானம் நாட்டை எந்தளவு வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லக் காரணமானது என்பது கண்கூடு.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வரி வருவாய் அதிகரிப்புக் குறித்து அக்கறையுடன் உள்ளது என்பதை இடைக்கால வரவுசெலவுத் திட்டம் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது. இதன் ஒரு அங்கமாக இதுவரை 12 வீதமாகக் காணப்பட்ட பெறுமதி சேர் வரி 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடி சவால்களை முறியடிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவுசெலவுத் திட்டம்

டுப்படுத்துவது அல்லது முகாமைத்துவம் செய்வது என்பதும் தற்பொழுது அத்தியாவசியமான விடயமாகும்.

இது தொடர்பில் ஜனாதிபதி கூறியிருப்பதாவது,

'அரசாங்க செயன்முறை சிறந்த முறையில், அது செயற்பட வேண்டிய வகையில் செயற்படுவதனை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பினைக் கொண்ட, ஐக்கிய அமெரிக்காவில் காணப்படுகின்ற கண்காணிப்பாளர் நாயகம் போன்ற முறைமையொன்றினை தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன். அரசாங்க நிறுவனங்களில் மோசடி, வீண் விரயம் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதனை தடுப்பதுடன் அவற்றினை இனங்காண்பதன் மூலம் அரசாங்கத்தின் நன்மதிப்பினைப் பாதுகாப்பதற்கு இந்த கண்காணிப்பாளர் நாயகம் அதிகாரமளிக்கப்படுவதுடன் தீவிரமாக செயற்படுதலும் வேண்டும்' என்பதாக அமைந்தது.

ஜனாதிபதியின் முன்மொழிவுகளில் மற்றுமொரு விடயமாக அரசாங்க ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 60 ஆக மீண்டும் குறைக்கப்பட்டமை பெரிதும் பேசப்படுகிறது. ஓய்வுபெறும் வயது எல்லை இதுவரை காலமும் 60ஆகக் காணப்பட்டு வந்த நிலையில் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த வயது எல்லையை 65ஆக அதிகரித்திருந்தார்.

இது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் காணப்பட்டன. இந்த நிலையில் 60 வயது நிரம்பிய அனைத்து அரசாங்க ஊழியர்களும் இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் ஓய்வுபெற வேண்டும் என இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. அரசாங்கத் துறையை மறுசீரமைக்கும் யோசனையின் ஓர் அங்கமாகவே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிரவும் தற்போதை எரிபொருள் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு அரசாங்க நிறுவனங்களில் மின்சார வாகனங்களின் (எலக்ரிக் வாகனங்கள்) பயன்பாட்டை அதிகரிப்பதற்கான முன்மொழிவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.





## விவசாய அபிவிருத்தி, மக்கள் போஷாக்கை அதிகரித்தல், அரசாங்க நிறுவனங்களில் மோசடி, வீண் விரயம் மற்றும் துஷ்பிரயோகங்களை ஒழித்தல் போன்றவற்றில் ஜனாதிபதி கூடுதல் கரிசனை

தற்பொழுது நிலவுகின்ற நெருக்கடிகளினால், பெரும்பாலானோர் எதிர்நோக்குகின்ற சிரமங்களை நன்கு அறிந்திருப்பதால், மூலதனச் செலவினத்தினைக் குறைத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகரித்த சலுகையினை வழங்குவதற்கும் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்த வகையில், வேலை இழப்பு, விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி மற்றும் பல்வேறு காரணங்களினால் பயிர்ச்செய்கை

டுள்ள இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு அனைத்துத் தரப்பினரதும் உதவியை ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை கோரியிருந்தார். சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வருமாறு ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்த அழைப்பை அவர் மீண்டும் நினைவுபடுத்தியிருந்தார். நாட்டை பிரச்சினைகளிலிருந்து மீட்பதற்கான கூட்டுப்பொறுப்பு அனைத்துத் தரப்பினருக்கும் இருப்பதால் ஒவ்வொருவரும் தமது வகிபாகத்தினை நன்கு உணர்ந்து அதற்கான ஒத்துழைப்பை வழங்குவது காலத்தின் தேவையாகக் கருதப்படுகிறது.

**பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களைத் தூக்கியெறிந்து விட்டு, அடிமட்ட மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளின் யதார்த்தங்கள் பற்றி புறநிலையாக சிந்திப்பதே பயன் தரும்!**

## 61 ஆயிரம் பயனாளர்களில்

# பெருந்தோட்டம் உள்ளடங்குமா? இல்லையேல் மாற்று ஏற்பாடு உள்ளதா?



**‘ மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மீனவ குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று கூறியதன் மூலம் பெருந்தோட்ட சமூகம் கண்டுகொள்ளப்படாதோ எனும் கவலை எழுவது தவிர்க்க இயலாததே. இதைச் சரிசெய்வது போலவே இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ வன் தொண்டமான் இதுபற்றி தாம் ஜனாதிபதியோடு பேசியிருப்பதாகவும் அவர் ஆவண செய்ய உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார் ’**

அரசாங்கம் 2022ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 61 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் 4 மாதங்களுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்தே இந்த 61 ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளது. அப்படி தெரிவு செய்யப்படும் குடும்பங்களின் பட்டியலில் பெருந்தோட்ட சமூகம் உள்வாங்கப்படுமா என்னும் கேள்வி எழவே செய்கின்றது. ஏனெனில் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்க பெருந்தோட்ட மக்களுக்கும் மீனவ குடும்பங்களுக்கும் நிவாரண உதவி வழங்கப்படும் என்று கூறியிருக்கின்றார். அது எவ்வாறான நிவாரணம் என்பது குறித்து அவர் பிரஸ்தாபிக்கவில்லை.

61 ஆயிரம் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குள் பெருந்தோட்ட மக்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் 4 மாதங்களுக்கு தொடர்ந்து 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமாயின் அது வரவேற்புக்குரியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஏற்கனவே நிர்ணயிக்கப்படும் சம்பளம்பெறும் தொழிலாளர் பட்டியலில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். அதாவது தமது அன்றாட வாழ்க்கைச் செலவுப் புள்ளியை மையப்படுத்தி சம்பளம் நிர்ணயம் செய்யப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றார்கள் இவர்கள். எனவே இவர்களை குறைந்த ஆதாயம் பெறுவோராக சேவைகள், வேலைவாய்ப்பு விவகாரங்கள், அரசு சார்பிலான அனர்த்த நிவாரணங்களைக் குறிப்பிடலாம். இவை யாவும் அரச பொது சேவைக்குள் உள்ளடக்கப்படாமையே பின்னடைவுக்கான அடிப்படை காரணம்.

அதன் பின்னணியிலேயே ஜனாதிபதி தமது வரவு செலவுத்திட்ட உரையில் பெருந்தோட்ட மக்களுக்கான நிவாரண உதவி பற்றி தனியாகவே குறிப்பட நேர்ந்தது. இதேவேளை மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மீனவ குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று கூறியதன் மூலம் பெருந்தோட்ட சமூகம் கண்டுக்கொள்ளப்படாதோ எனும் கவலை எழுவது தவிர்க்க இயலாததே. இதைச் சரிசெய்வது போலவே இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இதுபற்றி தாம் ஜனாதிபதியோடு பேசியிருப்பதாகவும் அவர் ஆவண செய்ய உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுவாக பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்படும் எனும் ஜனாதிபதியின் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, மண்ணெண்ணெய் விலையேற்றம், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் எதிர்நோக்கும் சவால்கள், குழந்தைகளுக்கான போஷாக்கு உணவு, சுகாதார நெருக்கடி போன்ற பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டு... உதாரணத்துக்கு வருமானம் குறைந்த பிற சமூகத்தவர்கள் சமூர்த்தி பயனாளிகளாக மாதந்த உதவி பெறுகிறார்கள். ஆனால் பெருந்தோட்ட மக்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை.

அவர்கள் தமது வேதனத்தை மட்டும் நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. தற்

**பன். பாலா ...✍**

போதைய பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் தனியொரு மனிதனின் மாதாந்த செலவினம் 11 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் சுட்டுகின்றன. ஆனால் இவ்வாறான ஒரு தொகையை நான்கு அல்லது ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட தமது குடும்பத்துக்காக பயன்படுத்தியாக வேண்டிய கட்டாய நிலைமையே பதற்கான ஏற்பாடுகள் எதுவுமே காணப்படுவதாக இல்லை. முக்கியமாக விவசாயத் தேவைகளை விரிவுப்படுத்தக்கூடிய வகையில் நில வசதி கிடைப்பது இல்லை. கடும் உழைப்பைக் காணிக்கையாக்கத் தயாராக இருந்தும் ஏணியாக இருந்து இவர்களை ஏற்றிவிடத்தான் எவருமே இல்லை.

ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட அறிவிப்பில் பயன்படுத்தப்படாத காணிகளை இளைய சமூகத்துக்கு பகிர்ந்தளித்து விவசாய முயற்சிகளை முடக்கி விடுவது பற்றியும் கூறியுள்ளார். இதன்பேரில் பலரது பார்வையும் பெருந்தோட்ட தரிசுக்காணிகள் மீதே படியும். எனவே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்த விழைவது பெருந்தோட்ட தரிசு காணி விநியோகம் இடம்பெறும் பட்சத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும். உடனடியாக சொந்தமாக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை. காலவரையறைக் குட்பட்ட ஒப்பந்த அடிப்படையில் வழங்கினாலே போதும். இதேநேரம் நன்றாக விளைச்சல் தரக்கூடிய காணிகளைக்கூட தமக்கு வேண்டியவர்களுக்கு சொந்தமாகவோ குத்தகைக்கோ கொடுக்கும் நடவடிக்கை கணிப்பது எங்ஙனம் என்பது சிலரது வாதம்.

அதேநேரம் பெருந்தோட்ட சமூகம் இன்னும் தேசிய ரீதியிலான பொது வேலைத்திட்டங்களின் கீழ் கொண்டுவரப்படவில்லை. அவர்களுக்கான சகல தேவைகளும் தோட்ட கட்டமைப்பை மையப்படுத்தியே தீர்மானிக்கப்படுகின்றன. குறிப்பாக வீடமைப்புத் திட்டம், சுகாதார வாக்குறுதி எந்த அடிப்படையில் நிறைவேற்றப்படப் போகிறது என்று அறிந்துகொள்ளும் ஆவல் பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்படவே செய்யும். எது எப்படியாயினும் வருமானம் குறைந்தோருக்கு வழங்கப்போவதாக அறிவித்திருக்கும் 4 மாதங்களுக்கான மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டிய அவசியம் இருக்கவே செய்கின்றது.

குறைவான வேலை நாட்கள், அதிகரித்து வரும் விலைவாசி, பெருந்தோட்டங்களில் காணப்படுகின்றது. இதனால்தான் தற்போது வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத் தொகையான தினசரி 1000 ரூபாய் போதுமானதல்ல என்னும் கருத்தியல் மேலோங்கி நிற்கின்றது.

இதேவேளை மேலதிக நிரந்தர வருமானத்துக்கான வழிவகைகள் உருவாக்கப்படாமையினால் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படவே செய்கின்றது. குறிப்பாக உபரி வருமானத்துக்காக விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முனைந்தாலும் அதனை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகள் களில் தோட்ட கம்பனிகள் ஈடுபட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. காணிகளை அரசுடமையாக்கி அதனைப் பகிரும் முயற்சிக்கு தடைபோடும் தார்மீக உரிமை கம்பனி தரப்புக்குக் கிடையாது என்பதே பலரதும் கருத்து.

இந்த தரிசு காணி விவகாரத்தில் இனவாதம் மேலோங்கிட இடமளிக்க கூடாது. தவிர வெளியார் தோட்டப் பிரதேசங்களில் பெருமளவு கால் பதிக்கும் பின்புலத்தில் அமைதியின்மைக்கே வழிகோலும். ஏலவே கிராமத்தவர்கள் சிலர் அத்துமீறி தோட்டக் காணிகளை கபளீகரம் செய்து கொண்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதையெல்லாம் கண்டும் காணாததும் போல வாளாவிருக்கின்றது கம்பனி தரப்பு. ஆனால் பெருந்தோட்ட மக்கள் தமது விவசாய முயற்சிகளுக்காக அல்லது கால்நடை வளர்ப்புக்காக தோட்டக் காணிகளை பயன்படுத்தும் பட்சத்தில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க கம்பனி நிர்வாகம் தயங்குவதே இல்லை. இவ்வாறான காரியங்கள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துவது நல்லது. பெருந்தோட்ட சமூகம் தேயிலைத் துறை மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவது போல விவசாய உற்பத்திகள் மூலம் பசுமைப் புரட்சியை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தவும் முடியும்.

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஊக்குவிக்கும் வகையிலான வேலைத்திட்டங்களில் அரசாங்கம் வெளிப்படையானதும் வினைத்திறன் மிக்கதுமான கொள்கையை கடைப்பிடிப்பதே உகந்தது. ஏனெனில் அவர்களும் இந்நாட்டு ஏனைய சமூகங்களைப் போல சமதையான அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வாழவேண்டியவர்களே!

# மலையகக் கட்சிகள் சர்வகட்சி ஆட்சியில் இணையலாமா, வேண்டாமா?

**மலையக சமூகத்தை தேசிய நீரோட்டத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும்**

நாட்டை இப் பொருளாதார புதைச் சேற்றில் இருந்து மீட்கும் வகையில் சகல அரசியல் கட்சிகளும் இணைகின்ற சர்வகட்சி ஆட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் அழைப்புக்கு மலையகக் கட்சிகள் சாதகமாக பதிலை அளித்தால் என்ன என்ற கேள்விக்கு மூன்று மலையக பிரதிநிதிகள் தமது கருத்துக்களை தெரிவித்தனர். அவற்றைத் தொகுத்து தருகிறோம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி. சக்திவேலை அணுகி இதுபற்றிக் கேட்டோம்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்துள்ளார்.

இஸ்லாமியர்கள், பெரும்பான்மை சிங்களவர்கள் தமக்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி தங்களுக்கு தேவையான அமைச்சு பொறுப்புக்களைப் பெற்று தமது சமூகங்களைச் சார்ந்த மக்களுக்கு பாரிய சேவைகளை செய்து வருகின்றனர்.

அவர்கள் பெற்றுக் கொள்கின்ற பல்வேறு அமைச்சுகள் சமூகத்திற்கு சேவையாற்றக்கூடிய அமைச்சுக்களாக இருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை மலையக மக்களும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மலையகப் பிரதிநிதிகள், கட்சித் தலைவர்கள் பல்வேறு கட்சிகளுக்கு தங்களது ஆதரவை தெரிவித்திருந்தாலும் தேசிய அரசு ஒன்றில் இணைவதில் அனைத்து மலையக பிரதிநிதிகளும் தலைவர்களும் கருத்து வேறுபாடுகளை களைந்து முடிந்தளவு அதிகமான அமைச்சுகளைப் பெற்று மலையக சமூகத்தின் குறைபாடுகளை நீக்கும் வகையில் முன்வர இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அவ்வாறு அவர்கள் பெறுகின்ற அமைச்சுகளில் இருந்து இந்த மக்களுக்கு எல்லாவித சேவைகளும் கிடைக்க வேண்டும். குறைந்தது மூன்று அல்லது நான்கு அமைச்சரவை அந்தஸ்து அமைச்சுக்களை மலையக தலைமைத்துவங்கள் பெறவேண்டும் என்பது என் விருப்பம்.

எனவே, நான் அந்தக் கட்சி இந்தக் கட்சி என அடையாளப்படுத்தாது கட்சிப் பேதங்களை மறந்து அனைவரும் அமைச்சுப் பதவிகளைப் பெற்று இந்த அரசாங்கத்தை வலுப்படுத்தி மக்களின் குறைபாடுகளை நீக்க ஒன்றுபடுவது காலத்தின் தேவை என்கிறார் இவர்.

மத்திய மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருமான ஆர். இராஜாராமிடம் சர்வகட்சி அரசு தொடர்பாகக் கேட்டோம்.


ஏ.பி.சக்திவேல்


எஸ்.சதாசிவம்


ஆர்.ராஜாராம்

"அமைச்சுப் பதவிகள் வழங்குவது ஒரு கண்துடைப்பாகும். அமைச்சு பதவி வழங்குவதால் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறாது" என்றார் ஒரே போடாக!

நாட்டில் அமைச்சுப் பதவிகள் வழங்குவதைவிட நாட்டில் தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும் மக்கள் தங்களது தொழிலை இழந்து இரவும் பகலுமாக எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்பதை நிறுத்த முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ஆட்சிமுறை நிலைத்ததில்லை. மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் இத்தகைய ஆட்சியை விரட்ட முடியும் என்பதை கொழும்பு காலிமுகத் திடலில் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டம் ஒரு எடுத்துக்காட்டு.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தங்களது ஆட்சிப் பதவிகளை விட்டு விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் இளைஞர்களை அரசாங்கம் அடக்கி ஒடுக்க முடியாது. இளைஞர்கள் இந்த நாட்டின் சொத்துக்கள் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். இந்த நாட்டில் அமைச்சர்களுக்கு ஒரு சட்டம் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமென இரண்டு இருக்க முடியாது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்வு பெற்றுத்தர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பதிலாக அமைச்சுப் பதவி வழங்குவதாலோ அமைச்சு பதவிகள் வழங்கி பாராளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்துவதாலோ நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

எனவே, மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இன்றைய தேவை என்பது இராஜாராமின் கருத்தாக இருக்கிறது.

இந்த நாட்டில் தடை செய்யப்பட்டிருந்த புலம்பெயர்ந்தோர் சமூக அமைப்புகளின் தடையை நீக்கி அவர்களுக்கென காரியாலயம் அமைத்து அவர்களை அழைக்கும் இந்த அரசாங்கம் மலையக சமூகத்தையும் தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் கடந்த 200 வருடங்களாக தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு டொலர் வருமானம் பெற்றுக்கொடுத்து வரும் மலையக சமூகத்தையும் தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ள தயங்கக்கூடாது. இவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்வதுடன் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் இந்த அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

நாடு முடக்கப்பட்டிருந்தபோது பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தி வழமைபோல் நடைபெற்றதன் மூலம் அந்நிய செலாவணி வருமானம் உறுதி செய்யப்பட்டது. எனினும் தோட்டத் தொழிலாளர்களை இரண்டாம் பிரஜைகளாகவே பார்க்கும் மனப்பான்மை அப்படியேதான் நீடிக்கிறது. ஏனையோருக்கு போலல்லாது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரம் சம்பளம் அதிகரிக்கப்படுவதில்லை. தோட்டத் தொழிலாளர் சமூகத்தை எந்த அரசாங்கம்

**நூரளையூரான் ...✍**

ஆட்சிக்கு வந்தாலும் இவர்களின் வாழ்வாதாரத்தைப் பற்றி சிந்திப்பதில்லை.

மலையக பெருந்தோட்ட சமூகத்தை இந்த நாட்டில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் உழைக்கும் இயந்திரமாகவும் தேர்தல்களில் வாக்களிக்கும் இயந்திரமாகவும் பயன்படுத்துகிறார்களே தவிர அவர்களை மனிதர்களாக மதிப்பதில்லை. எனவே மலையக சமூகத்தை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டு அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி முடித்தார் ராஜாராம்.

அடுத்ததாக, நாம் சந்தித்தது இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவத்தை.

அண்மையில் நாவலப்பிட்டி பிரதேசத்தில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகள் எவரும் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்கவில்லை என்று கவலை வெளியிட்டார்.

எமது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்பொழுது அதிகாரத்தில் உள்ளவர்கள் பொறுப்புடன் செயல்பட்டு எமது மக்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தத்தால் நாவலப்பிட்டி பிரதேச தோட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானதோடு உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. இந்த மக்களை மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் நேரில் சென்று பார்வையிடாமல் நாட்டு மக்களைப் பற்றியும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு வரும் சீனா கப்பலைப்பற்றியும் பேசிவருகிறார்கள். இதனை பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

மேலும் ஆயிரம் ரூபா சம்பள விவகாரத்தில் முதலாளிமார் சம்மேளனம் தாக்கல் செய்த வழக்கில் தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்துள்ளது. இனிமேலாவது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் தொழில் உரிமையைப்பற்றி தோட்ட நிர்வாகங்களிடம் தொழிற்சங்கங்கள் பேசுவதற்கான உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இன்று இந்த நாட்டில் என்றுமில்லாதவாறு வாழ்க்கைச் செலவு தொழிலாளர்களின் வாழ்க்கையை கடுமையாகப் பாதித்துள்ளது. கோதுமை மாவை அதிகம் உபயோகிக்கும் இச் சமூகம் கிலோ மாவின் விலை 350 என உயர்த்தப்பட்டுள்ளதால் அவர்களின் வாழ்க்கை மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. எனவே தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அவர்களின் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கேற்ப சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கத் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவிற்காக பயன்படுத்தப்படும் கோதுமை மாவை மானிய விலையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து தோட்டங்களிலும் கூட்டுறவு சங்க கடைகள் அதைத்து மானிய விலையில் மண்ணெண்ணெய் மற்றும் கோதுமை மா வழங்குவதுடன் உணவுப் பொருட்களையும் நியாய விலையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகரங்களில் சதொச நிறுவனம் மூலம் நியாய விலையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்வது போல தோட்டப் பகுதியில் கூட்டுறவு சங்கக்கடைகள் அமைத்து தொழிலாளர்களுக்கு நியாய விலையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் வகையில் தோட்டங்களில் கூட்டுறவு சங்க கடைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு ஒரு தலைமைத்துவம் இல்லாத வேளையில் துணிந்து நாட்டின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனைத்து கட்சி தலைமைகளும் ஆதரவு வழங்கி அவர் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம்.

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்கத்திற்கான கதிரைகள் வழங்கல் மற்றும் நிறுவுதல்

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 2714/2021**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூட கட்டிடத்திற்கு அரங்கத்திற்கான கதிரைகள் வழங்கல் மற்றும் நிறுவுவதற்காக** தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.09.05** ஆம் திகதியிலிருந்து **2022.09.26** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.12,500/- கட்டணத்துடன் **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலானை** எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் **2022.09.05 முதல் 2022.09.26** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **0900 மணி முதல் 1500 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி - 0710219449, தொலைநகல் - 011-2632430).**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2022.09.27 ஆம் திகதி** மு.ப.10.00 மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் 011-2632430, **directorlogistics@kdu.ac.lk,** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம். **விலைமனுக் கோரல்)**

தவிசாளர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலானை, இலங்கை.





Become a globally recognised finance professional with ACCA.

ACCA + BSc (Hons) Degree in Applied Accounting within two and a half years.

Special offer for A/L students!

Make use of this great opportunity and expand your career mobility. Call 0112424801 / 0773874247 or email info@lk.accaglobal.com for more details.

ACCA Sri Lanka, Block A, 18 Floor, 33, Parkland, Park street, Colombo 2.
www.accaglobal.com

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

நேர்மையாக உழைக்கும் வெளிநாட்டுப் பணத்தை நேர்மையான முறையில் இலங்கைக்கு அனுப்பும் உங்களுக்கு

பல நன்மைகள்!



வெளிநாடுகளுக்குச் சென்று நேர்மையாக உழைக்கும் வெளிநாட்டுப் பணத்தை வங்கியொன்றினூடாக சட்டபூர்வமாக அனுப்பும் உங்கள் வாழ்வை வளமாக்க இப்போது பல நன்மைகள்

- மின்சாரத்தால் இயங்கும் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம்
- ஓய்வூதிய கொடுப்பனவு
- எதிர்காலத்தில் குறைந்த வட்டிக்கு வீட்டுக் கடன்
- எதிர்காலத்தில் தீர்வையில்லாது பொருட்களை கொள்வனவு செய்ய 6,550 அமெ. டொலர்கள் வரையான கொடுப்பனவு

நீங்கள் கடினமாக உழைக்கும் பணத்தை சட்டபூர்வமாக இலங்கைக்கு அனுப்பி நீங்களும் இந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
இல: 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல
தொலைபேசி: +94 112 879900-02, +94 112 880500
தொலைநகல்: +94 112 879903 | மின்னஞ்சல்: infor_center@slbfe.lk
உடனடி அழைப்பு: 1989

## அரசு செலவீனங்களுக்கும் நஷ்டத்துக்கும்... (12ஆம் பக்கத் தொடர்)

மேலும் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறவும் திட்டம் (voluntary retirement scheme – VRS) இருப்பதாகவும் தெரிகிறது. இதன்மூலம் அரசு துறையில் உள்ள பதின்மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள்ன் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் குறியாக உள்ளமை தெரிகிறது.

அரச ஊழியர்கள் பலர் சும்மா இருந்து சம்பளம் பெறுகிறார்கள் என்ற அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுகளையும் இதனுடன் பொருத்திப் பார்க்க வேண்:டும். 2025 ஆண்்டளவில் வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்ப நிலுவையை மிகைநிலைக்கு மாற்ற விரும்புவதாக வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் வரவு செலவுத்திட்டக் குறைநிலையினை முகாமை செய்யக்கூடிய ஒரு மட்டத்திற்கு குறைக்குமாறும் அரசிறை சிக்கனத் தன்மையைப் (fiscal austerity) பேணுமாறும் அறிவுறுத்தும்.

எனவே அரச செலவினங்களைக் குறைப்பது ஒரு முக்கிய குறிக்கோளாகக் கூறப்பட்டுள்ளது. மூலதனச் செலவினங்களைப் பிற்போட்டு நடைமுறைச் செலவினங்களில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்படும் நிலையில் உள்ள 61 ஆயிரம் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் நான்கு மாத காலப்பகுதிக்கு உதவு தொகை வழங்கப்படும் என்றும் சமுர்த்தி உதவிபெறும் 1.7 மில்லியன் குடு்ம்பங்களுக்கு 7500 வரையிலான உதவு தொகைகள் வழங்கப்படுமெனவும் சமுர்த்திக்காக விண்ணப்பித்துள்ள 726 ஆயிரம் குடும்பங்களுக்கு 5000 ரூபா வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற சில சலுகைகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தாலும் மக்களின் வருவாய் வழிகளைப் பலப்படுத்தும் முன்மொழிவுகளைப் பெருமளவில் காணமுடியவில்லை மீன்பிடித் தொழிலுக்கு மண்ணெண்ணெய் மானியம் அமெரிக்க நிதி உதவியில் விவசாயிகளுக்கு இரசாயன உரம் போன்ற இனிப்புகள் ஆங்காங்கே தூவப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

பணத்தை அச்சிடுவதன் மூலமே அரச ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட செலவுகளை நிதிப்படுத்த வேண்டியுள்ளதென அரசாங்கம் முன்னர் கூறியது. இப்போது வரியதிகரிப்பு மூலம் செலவுகளை நிதிப்படுத்த முனைவது வெளிப்படையாகத் தெரிகிறது. அரசாங்கத்தின் கட்டற்ற பண அச்சடிப்பு இன்றைய தாவிச் செல்லும் பணவீக்கத்திற்கு (galloping inflation) வகைகூறவேண்டிய காரணிகளில் முதன்மையானதாகும்.

பணவீக்கத்திற்கு எதிர்வினையாக வட்டிவீதங்களை அதிகரிக்கும் நடவடிக்கையும் உச்சத்திற்கு வந்துவிட்ட நிலையில் மேற்கொண்டு வட்டிவீதங்களை அதிகரிப்பது நிதித்துறையின் முறிவுக்கு இட்டுச் செல்லும் அபாயம் நிலவும் நிலையில் மாற்றுவழிகளை தேடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

செலவினக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் நட்டத்தில் இயங்கும் அரசதுறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதும் ஏற்கெனவே வரவு செலவுத்திட்டத்தின் கணிசமான நிதியை கபளீகரம் செய்யும் மிகப்பெரிய நட்்டத்தில் இயங்கும் மூன்று நிறுவனங்களையும் கையாள்வதும் இப்போதுள்ள பிரதான சவால் எனத் தெரிகிறது. இரண்டு அரச வங்கிகளின் மூலதனத் தேவைப்பாட்டின் பொருட்டு அவற்றின் பங்குகளை வைப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்கவும் முன்மொழிவுகள் காணப்படுகின்றன. சுருங்கக்கூறின் இது சர்வதேச நாணய நிதியத்தின் விதந்துரைப்புகளைப் பிரதிபலிக்கும் ஒரு வரவு செலவுத்திட்ட முன்மொழிவாகவும் பார்க்கப்பட முடியும்.

## பொருளாதார... (06ஆம் பக்கத் தொடர்)

அதேபோல, அரசாங்க அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்கும் போது அவற்றை அரசியல்வாதிகள் செவிமடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நலந்தலால் வீரசிங்ஹ வலியுறுத்தியிருந்தார்.

இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன் ஊடாக கடந்த வருடத்தில் செலவீனத்தை 2 பில்லியன் ரூபாவரையிலும், இந்த வருடத்தில் 1.3 பில்லியன் ரூபாவரை குறைக்க முடிந்திருப்பதாகவும், இதன் ஊடாக மருந்து, எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடிந்துள்ளதாகவும் அவர் விபரித்தார்.

விசேடமாக தற்பொழுது அரசாங்கத்தின் வருமானம் 1.2 பில்லியன் ரூபாவாக மாத்திரம் காணப்படுவதுடன், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக அரசாங்கத்தின் செலவீனங்களைக் குறைக்க முடிந்தால் அரசாங்கத்தின் வருமானத்தில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதும் அவருடைய கருத்தாக இருந்தது.


தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







COMMERCIAL LAND FOR SALE
COLOMBO
4 ACRES BARE LAND FOR SALE
IDEAL FOR FACTORY / WAREHOUSE / APARTMENT COMPLEX OR ANY OTHER COMMERCIAL PROJECT.
1.7KM TO HIGHWAY ENTRANCE, 6 KM FROM COLOMBO PORT CITY, 30KM TO AIRPORT (35 MIN)
RS. 6 MN PER PERCH (NEGO)
+94 777 258 280
NO BROKERS, AGENTS PLEASE




# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெருமையை அனுபவிக்கவும்.

### உத்தியோகத்தர்களை அனுமதித்தல் 2022 / 2023

பட்டப் படிப்பு பயிலிளவல்களை ஆட்சேர்ப்பதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப் பாடநெறிகள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானை

| பட்டப் பாடநெறி | காலம் | பாலினம் |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கை | | |
| தந்திரோபாய கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| மருத்துவ பீடம் | | |
| மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சையியல் மாணி பட்டம் | 05 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| பொறியியல் பீடம் | | |
| பொறியியல் விஞ்ஞான மாணி பட்டம் (விசேடம்) CIVIL / MECHANICAL / ELECTRICAL & ELECTRONIC / ELECTRONIC & TELECOMMUNICATION / MARINE / AERONAUTICAL / MECHATRONIC / BIO-MEDICAL / NAVAL ARCHITECTURE & MARINE / BUILDING SERVICE ENGINEERING | 04 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| முகாமைத்துவ சமூக விஞ்ஞான மற்றும் மனிதவியல் பீடம் | | |
| விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| சமூக விஞ்ஞானங்களில் விஞ்ஞானமாணி பட்டம் | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| பிற மொழிகளைப் பேசுவோருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் இளங்கலைப்பட்டம் (TESOL) | 03 ஆண்டுகள் | ஆண்/பெண் பயிலிளவல் |
| கணனி பீடம் | | |
| மென்பொருள் பொறியியல்மாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| தொழிநுட்ப பீடம் | | |
| பொறியியல் கட்டுமான தொழிநுட்ப பட்டம் (சிறப்பு) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| குற்றவியல் நீதி பீடம் | | |
| விஞ்ஞானமாணி பொலிஸ் பட்டம் (சிறப்பு) | 03 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| விஞ்ஞானமாணி குற்றவியல் பட்டம் (சிறப்பு) | 03 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |

பட்டப் பாடநெறிகள் தெற்கு வளாகம் - சூரியவெவ

| பட்டப் பாடநெறி | காலம் | பாலினம் |
|---|---|---|
| நிர்மாண சூழல் மற்றும் வெளி விஞ்ஞான பீடம் | | |
| கட்டிடக்கலை விஞ்ஞானமாணி பட்டம் | 05 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| அளவையியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) (ACCREDITED BY IQSSL) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| கணிய அளவையியல் விஞ்ஞானமாணி பட்டம் (விசேடம்) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| கணனி பீடம் | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் (CSSL FULLY ACCREDITED) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |
| தொழிநுட்ப பீடம் | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பட்டம் (சிறப்பு) | 04 ஆண்டுகள் | ஆண் பயிலிளவல் |

**கொடுப்பனவுகள்**

மாணவர் பயிலிளவல் உத்தியோகத்தர்கள் / மாணவர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.45,000/- சம்பளம் வழங்கப்படும். மேலதிகமாக பின்வரும் வசதிகளும் இலவசமாக வழங்கப்படும்.

அ. உணவும் தங்குமிட வசதியும்
ஆ. சீருடை
இ. இணை சேவைகள்
ஈ. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
உ. மருத்துவ வசதிகள்

**தேவையான தகைமைகள்**

Cambridge / Edexel மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

- விண்ணப்பதாரர்
  - I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
  - II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  - III. க.பொ.த.(உ.த) பொதுப் பரீட்சையில் சித்தியினைப் பெற்றிருத்தல். (குறைந்தபட்சம் 30 புள்ளிகள்)
  - IV. இலங்கை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகைமையினைக் கொண்டிருத்தல்.
  - V. மணமாகாதவராக இருத்தல் வேண்டும்.
  - VI. க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் (C) சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது கேம்பிரிஜ் / எடெக்சல் அல்லது அதற்கு சமனான ஏதேனும் வெளிநாட்டு தகைமையினை கொண்டிருத்தல். TESOL ஏற்றுக்கொள்ளப்படும்.
  - VII. க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் (B) சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது கேம்பிரிஜ் / எடெக்சல் அல்லது அதற்கு சமனான ஏதேனும் வெளிநாட்டு தகைமையினை கொண்டிருத்தல். TESOL ஏற்றுக்கொள்ளப்படும்.
- பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த உடல்கட்டமைப்பு அளவுகோல்களை (அறிந்து கொள்வதற்கு இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும். www.kdu.ac.lk

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை**

Online விண்ணப்பம் http://enlistment.kdu.ac.lk/cadet22/

- www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் சென்று நிகழ்நிலை (online) மூலம் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பத்தாரிகள் தாம் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பட்டப்பாடநெறிக்கும் தலா ரூ.1,500/- மீளச் செலுத்தப்படாத கட்டணமாக நிகழ்நிலையில் (online) மூலம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக :- மூன்று பட்டப்பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரி ரூ.4,500/- செலுத்த வேண்டும்.

**முக்கியமானது**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022 செப்டெம்பர் 26

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்கள் பற்றிய தீர்மானம் முற்றுமுழுதாக பல்கலைக்கழகத்திற்கு உரியது ஆகும்.
- கொத்தலாவல பல்கலைக்கழகம் அனுமதிக்க படும் முன்னர் இலங்கை குடியரசுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் பிணை ஒன்றிலும் ஒப்பமிடல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பு பாடங்களை முடிப்பதற்கு முன்னும் பின்னும் அந்தந்த இராணுவ கல்விக் கூடங்களில் இராணுவ பயிற்சியை பூர்த்தி செய்ய வேண்டும்.
- வெற்றிகரமாக பட்டப் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி கெடட் உத்தியோகத்தர்கள் தரை / கடல் / வான் படையின் நிரந்தர படையணியின் உத்தியோகத்தர் ஒருவராக கட்டாய சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
- MBBS பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்த பட்டதாரி மாணவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் பரிசோதகர் நிலையில் அதிகாரியாக கட்டாய காலத்திற்கு சேவையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அங்கீகாரம்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) - இலங்கை
உறுப்புரிமை
பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக சங்கம் - ஐக்கிய இராச்சியம்
சர்வதேச பல்கலைக்கழக சங்கம்
World directory of Medical School இன் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும் : www.kdu.ac.lk

தொலைபேசி : +94 112635039, 112632028 நீட்டிப்பு . 459, 460
மின்னஞ்சல் : arenlist@kdu.ac.lk
பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, 10390, இலங்கை.

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## வாழ்வின் மாற்றத்திற்கான கற்றல் அனுபவத்தினை பெற்றிட



## தினவரவு மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் 2022/2023 (முழுநேரம்)

மேற்படி பல்கழைக்கழகத்தில் கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி பட்டப்படிப்பை தொடர்வதற்கு பொருத்தமான தகைமையுடைய பரீட்சாத்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பட்டப்படிப்பு கற்கை நெறி | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்** | | |
| தாதிய விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (கட்டண/கட்டணமின்றி) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் |
| இயன் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கதிர் வீச்சியியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| கதிர் வீச்சு சிகிச்சை விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| மருந்தகவியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| பொறியியல் தொழிநுட்ப நிர்மாண பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் மற்றும் தொழிநுட்பம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பொறியியல் தொழிநுட்ப கட்டிட சேவைகள் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் மற்றும் தொழிநுட்பம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பொறியியல் தொழிநுட்ப உயிரியல் கருவி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் மற்றும் தொழிநுட்பம் நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| **குற்றவியல் நீதி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி குற்றவியல் பட்டம் (சிறப்பு) | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் கணிதம் அல்லது கலைப் பிரிவு |

### கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானை வளாகத்தில் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள்

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **பொறியியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம் (சிறப்பு) (Aeronautical, Biomedical, Civil, Electrical & Electronic, Electronic & Telecommunication, Mechanical, Mechatronic, Naval Architecture & Marine, Building Services Engineering) (Pathway programme [2+2] with the University of Massey, New Zealand for Bachelor of Engineering (Hons) Degree Majoring in Electronics and Computer Engineering or Mechatronic Engineering) | 04 வருடங்கள் | கணிதம் |
| **சட்டப்பீடம்** | | |
| சட்டமாணிப்பட்டம் (L.L.B) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம் |
| **முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிதவியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பவியல் பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் |
| விஞ்ஞானமாணி முறைசார் செயற்பாட்டு வழங்கல் முகாமைத்துவ பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/ கணிதம்/வணிகம் |
| விஞ்ஞானமாணி சமூக விஞ்ஞானப் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் தொடர்பாடல் பிரயோகப்பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல்/கணிதம் /வணிகம்/ தொழிநுட்பம் அல்லது *கலை பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| பிற மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி கணனி பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| விஞ்ஞானமாணி மென்பொருள் பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| விஞ்ஞானமாணி கணனி பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் மற்றும் வணிகப்பகுப்பாய்வு (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் |

### சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **சூழலியல் மற்றும் விண்வெளி அறிவியல் பீடம்** | | |
| வாஸ்த்து விஞ்ஞானமாணி பட்டம் | 05 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் கணிதம் அல்லது கலைப் பிரிவு |
| விஞ்ஞானமாணி அளவியல் விஞ்ஞான பட்டம் (சிறப்பு) (ACCREDITED BY IQSSL) | 04 வருடங்கள் | கணிதம் |
| விஞ்ஞானமாணி மதிப்பீட்டு ஆய்வு பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பப் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பப் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| விஞ்ஞானமாணி தகவல் முறைமையியல் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |

* 2020,2021 இல் க.பொ.த உயர்தரத்தில் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
* 2021,2022 இல் கேம்பிரிஜ் / எடெக்சல் உயர்தரத்தில் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

சாதாரண Z புள்ளி (Z Score) 1.8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட பொறியியல் விஞ்ஞானமாணி, வாஸ்து விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழிநுட்ப பட்டப் படிப்பு கற்கை நெறிகள் வழங்கப்படும். நிபந்தனைகளுக்கு உட்பட்டது

* தெற்கு வளாகம் சூரியவெவயில் பதிவாகும் மாணவ மாணவியர்களுக்கான குறைந்த செலவிலான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**மடிக்கணனிக்கான வவுச்சர்** (பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும்)

**i5 LKR 125,000 | i7 LKR 175,000** நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**கற்கைநெறி கட்டணங்களுக்கான வங்கிக் கடன் வசதிகள் செய்து தரப்படும்.**

உங்களது தகைமைகளை பரீட்சிப்பதற்கும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு **www.kdu.ac.lk** எனும் இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்

பரீட்சாத்திகள் ஒன்லைன் (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க பிரவேசியுங்கள் - www.kdu.ac.lk

2022.09.30 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலான, 10390, இலங்கை.

தொ.பே: +94 112635039, 112632028 நீட்டிப்பு: 459, 460 | மின்னஞ்சல்: kdudayscholar@kdu.ac.lk


# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 I E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டி நகரிற்கு அருகில் ஹொடேல் F/ L/ 11 லைசன் உள்ள 10 அறை க்கு மேல் தற்போது நடத்திச் செல்ல ப்படும் A/ C, கராஜ், பொருட்களுடன் வீடு கு ண்டசாலை திகன வீதிக்கு முகப்பாக தற்போது சில கட்டிடங்கள் உள்ளன. மிகப் பெறுமதியான 80 பேர்ச் இடைக்கால பயிருடன் காணி உண்டு. 1 பேர்ச் 12 இலட்சம், தனியார் வைத்தியசாலை, வயோதிபர் , இல்லம், டியூஷன் இற்கு, களஞ்சியத்திற்கு, மொன்டிசூரிக்கு பொ ருத்தமானது. விற்ப னைக்கு அல்லது குத்த கைக்கு வங்கிக் கடன் உண்டு/ இல்லை. 077 728214 7 050902

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

0705577283 கம்பஹா நகரில் அமைந்துள்ள மரக்கறி விற்பனை நிலையத்தில் வேலை செய்ய ஆண்கள் தேவை. 051271

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

அனுபவமுள்ள பெண் தையல்காரர்களிற்கு உடனடி வேலை வாய்ப்புக்களுண்டு, அனுபவத்தின் அ டிப்படையில் சம்பளம் வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகொள்ளவும் 0766353391 050886

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் தேவை. 35 வருட பாவனையாளர் நம்பிக்கையை வென்ற நெட்கோ நிறுவனத்திற்கு சாரதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். களுத்துறை, பாணந்துறை, இரத்மலானை, தெஹிவளை, நீ ர்கொழும்பு, வென்னப்புவ அருகில் தேவை. ரூ. 45000/ கூடுதல் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அழையுங்கள் 0 777 263954, 076 7639155 விண்ணப்பத்தை எமக்கு அ னுப்புங்கள். முகவரி இல. 29/ 5, 4ஆம் ஒ ழுங்கை, இ ரத்மலானை. 046457

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கிருளபனை மாடி வீடொன்றில் தங்கி சிறிய கு டும்பமொன்றிற்கு வீட்டு வேலைகள் மற்றும் சமையல் வேலைகளில் அனுபவமுள்ள பெண்ணொருவர் தேவை. 0777 313478 051414

பணிப்பெண்கள். வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்கு கீழே அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம். வேலை நிபந்தனைகள் உண்டு. தொடர்பு முகவரி 75/ 1, W.A. சில்வா மாவத்தை , கொழும்பு 6. தொலைபேசி 2591169 . 0 777 452447, 0 755 091379. 047049

80 வயதி ற்கு மேற்பட்ட முதியவ ர் ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபமு ள்ள 40 வயதிற்குக் குறைந்த பெண் ஒருவர் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். ஆங்கிலத்தில் உரையாடல் கட்டாயமாகும். அழைக்கவும். 0705 363099. 048347

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

உணவகத்திற்கு (கிரிபத்கொட) ரைஸ் அன் கறி கொத்து ரொட்டி சைனீஸ், அப்பம், ஹெல்ப ர் ஊழியர்கள் தேவை. (சம்பளம் 2000 3000) 076 3755457, 075 3448844. 051468




தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65


### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

இரத்தினபுரி கலவான பிரதான வீதி அருகில், கறுவா, தேயிலை , தென்னை தோட்டத்திற்கு தொழிலாளர்கள் தேவை. தினமும் வேலை. மின், நீ ர் வசதியுடன் தொழிலாளர் வீ டு உண்டு. 075917 0 798. 051250

### 325 தொழில்துறை பொது

சைனீஸ் கட்டர்களில் தாள் வெட்டுவதற்கு ஏனைய வேலைகளுக்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. 076 5310353. 051462

டயர் க ழற்றுதல் மற்றும் பொருத்துதல் பற்றிய சிறந் த அனுபவமுள்ள ஊழியர்கள் உடன் தேவை. (கொழும்புக்கு அருகில் மிகவும் பொருத்தமானது. தொ.பே. 077 3667462. 049992

புறக் கோட்டையிலுள்ள அச்சுக் கடதாசி விற்பனைசாலைக்கு திருமணமாகாத இளைஞர்கள் தேவை. அச்சகம் அல்லது காகித சாப்பு ஒன்றில் சேவை அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். அழைக்கவும். 0777313478 051409

0 7 0 5 5 7 7 2 8 3 கம்பஹா, மற்றும் நு கே கொ ட வி ல் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களில் சேவையா ற்றுவதற்கு இளம் ஆண்கள் தேவை. (சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பது பயனளிக்கும்.) 051272

## வியாபாரம்

### 406 தளபாடங்கள் விற்பனைக்கு

3' நீளமும் 2 1/2' அகலமுமுடைய Fold ing tableம் TV standerம் Buffle set உடன் 2 speaker வைக்கக்கூடியதும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 0777 642868, 076 6036528. 050976

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 6 வெள்ளவத்தை, பெண் பாதுகாப்பு ஊழியர்களுள்ள தொடர்மாடி, அறைகள், இணை க்கப்பட்ட குளியலறை ள், உணவு அறை, ச மையலறை, குக்கர். துணி கழுவும் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி. 75/1, W.A. சில்வா மாவத்தை. தொலைபேசி 011 2591169, 07 5 5091379, 07 77 452447. 047089

பிரத்தியே க குளியலறையுடன் அறை வாடகைக்கு . மெஸஞ்சர் வீதி, ஆமர் வீதிக்கு அப்பால். தொலைபேசி 0 7 7 7 268 8 35, 0 1 1 2399631. 051465

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

நாவல கொஸ்வத்த, இல. 17 சுவர்ணதிசி பிளேஸ் 08 பேர்ச் வெற்றுக் காணி ஒரு பேர்ச்சின் பெறுமதி ரூ. 5 மில்லியன் ( ரூ. 50 லட்சம்) 077 3039343. 049194

பத்த ரமுல்ல (48 P - 7.8 Mn. PP) மற்றும் பன்னிப்பிட்டிய (40 P - 2Mn. PP) ஆகிய இடங்களில் இரண்டு காணிகள் விற்பனைக்கு உள்ளன. தரகர்கள் இல்லை. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0777664048. 049921

கொழும்பு 10 ஆனந்த கல்லூரி பின்புற மா க 1.85P வீடு விற்பனைக்கு. 12M 077 4927947. 050503



### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

சிறிய இரண்டு கட்டிடங்களுடன் 74 பேர்ச் காணியொன்று பியகம வீதி, வர்த்தக வலயத்திற்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விலை 55 மில்லியன். விலை பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம். முகவரி இல. 401/30, சமுர்த்தி மாவத்தை, ெ ஹ ய் யன் து டு வ . தொ.பே. இல . 077 3704368 சேனாதீர (கணக்கா ய்வா ளர்). 050878

ஹெந்தளை வத்தளை 8.3 பேர்ச் கிராண்ட்சிட்டி மத்தெகொட வீதிக்கு அப்பால் சிறந்த குடியிறுப்புப் பிரதேசம். தெளிவான உறுதி உடன் விற்பனை. 072 9428120. 050630

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கடுகஸ்தொட்ட நகர மத்தியில் கடுகஸ்தொட்ட அரச வைத்தியசாலையின் பின்பக்கம் கண்டி நகர சபை எல்லையில் அமைந்துள்ள சிறந்த 48 பேர்ச் வயல்காணி விற்பனைக்கு. சிக்கலற்ற உறுதி. மூன்று சுற்று மின்சாரம் மற்றும் குழாய் நீர் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் காணி பயிரிடப்பட்டுள்ளது. ஒரு பேர்ச் ரூ. 530,000 தொடர்புகள் (071 7090665, 0812 05 4495) 050665

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

பாத்திய மாவத்த சரனங்கர வீதி வெள்ளவத்த 02 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. அழையுங்கள்' 076 8865094. 051244

பிட்டகோட்டே, ஆனந்த பாலிகா மாவத்தையில் சகல வசதிகளுடனான பெரிய வீட்டின் தரை மாடி வாடகைக்கு. 3 படுக்கையறைகள், பெரிய மண்டபம், பென்றி, சாப்பாட்டு அறை, குளியலறை, கார் நிறுத்துமிடம், அழகான பெரிய தோட்டம். கொழும்புக்கு அருகில். 5 10 நிமிட ஓட்டம். 20 அடி அகலமான வீதி, அமைதியான சூழல் மற்றும் குடியிருப்புப் பிரதேசம். மற்றும் சிறந்த அயலவர்கள். தயவு செய்து தரகர்கள் வேண்டாம். சகல விசாரணைகளுக்கும் அழையுங்கள்: 0776058268. 049697

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகள்

அழகிய முஸ்லிம் மணமகளுக்கு தகுந்த வரனை (மாப்பிள்ளை) பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். 081 2304109, 0775141889, 074 3310540 B186192

முவர், மலே பெற்றோர் தமது மகளுக்கு, பொருத்தமான உதவியாளரைத் தேடுகின்றனர். 5 அடி 1 அங்குலம், வயது 45, திரு மணமாகி 3 மாதத்தில் சட்டப்படி பிரிந்துள்ளனர். சீதனமாக வீடு கொடுக்கப்படும். பிள்ளைகள் இல்லை. 0332282861/ 0766257300 B186072


தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இடைக்கால வரவு செலவு நிதியறிக்கை :

# அரசு செலவீனங்களுக்கும் நஷ்டத்துக்கும் கடிவாளமிடும் ஒரு முயற்சி

**இலங்கையில் கடந்த 30ஆந் திகதி அடுத்த நிதியாண்டு தொடங்கும் வரைக்குமான எஞ்சியுள்ள காலப் பகுதிக்கான இடைக்காலக் கணக்கறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான முன்மொழிவுகளை உற்று நோக்குமிடத்து இதனை அரசாங்கத்தின் வருமான அதிகரிப்பை நோக்காகக் கொண்ட ஒரு வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக நோக்கலாம்.**

ஏற்கெனவே அரசாங்கம் அறிவித்துள்ள வரி அதிகரிப்புகள் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ள நிலையில் ஏற்கெனவே 8 வீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருந்த பெறுமதி சேர்வரி என்று அழைக்கப்படுகின்ற வரி 15 சதவீதம் வரை செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் உயர்த்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கடுகதியில் பொருட்களின் சேவைகளின் விலையதிகரிக்கப்பட்ட பட்டியல்கள் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதையும் காணமுடிகிறது. பொதுசனம் செலுத்துவதையும் காணமுடிகிறது. மறுபுறம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து வருமான வரிவீதங்கள் உயர்த்தப்படுவதோடு' வரிவிலக்களிக்கப்பட்ட வருமானத்தின் எல்லை வருடத்திற்கு 12 இலட்சம் வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வரிசெலுத்தும் வருமானப்பிரிவில் உள்ளவர்கள் இருபுறமும் இடிவாங்கி தமது வருமானத்தில் பெரியதொரு தொகையை வரியாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். குறிப்பாக வரிசெலுத்தும் அளவு வருமானம் ஈட்டும் வேலை செய்வோரில் கணிசமான எண்ணிக்கையினர் மிகக்குறைந்த வருமானத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் நிலைக்கு தள்ளப்படுவர். காரணம் தொழில்புரிவதன் மூலம் வரிசெலுத்துமளவு வருமானம் (employment income earners) ஈட்டுவோரில் பலர் கடனாளிகளாக உள்ளனர்.

வீட்டுக்கடன், வாகனக் கடன் என்று அவர்தம் மாதாந்த வருவாயில் கணிசமான தொகையை கடன் மீளச் செலுத்தலுக்காக செலுத்திய நிலையில் வரி அதிகரிப்பும் இணைந்து அவர்களின் உண்மையான மாதாந்த வருவாயை மிகக் கீழ்மட்டத்திற்கு தள்ளிவிடும் நிலையும் உருவாகலாம். வருமானத்துடன் ஒருவரது கடன் சுமை மற்றும் ஏனைய பொறுப்புகள் என்பவற்றையும் கவனத்திற்கொண்டு வரிவிதிக்கும் நடைமுறை இலங்கையில் இல்லாத நிலையில் இது மிகப் பெரும் சுமையை ஏற்படுத்தலாம்.



பெறுமதி சேர்வரி, வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது அறவிடப்படும் வரி மற்றும் தொழில்புரிவோர் மீது விதிக்கப்படும் வரி என்பனவே இலங்கை அரசாங்கங்களின் விருப்பத்தெரிவாக உள்ளன. முக்கிய காரணம் இவற்றை அறவிடுவது இலகுவாக இருப்பதாகும். இந்த வரிச் சீர்திருத்தங்கள் மூலம் அதிக வருவாயைத் திரட்டலாம் என்று அரசு நம்புகிறது. காரணம், இவை நெகிழ்ச்சியற்ற வரிகளாகும். ஒரு பொருளை அல்லது சேவையை நுகரும்போதே பெறுமதி சேர்வரி அறவிடப்பட்டு விடுகிறது.

ஒரு பொருள் நாட்டுக்குள் பிரவேசிக்கும் போதே இறக்குமதி வரி அறவிடப்பட்டு விடுகிறது. ஒருவரது சம்பளப் பட்டியலிலிருந்து நேரடியாக தனிநபர் வருமான வரி அறவிடப்பட்டு விடுகிறது. அவற்றைத் தவிர்ப்பது கடினம். அவை அரசாங்கத்திற்கான திடமான வருவாயைப் பெற்றுத்தரும் மூலங்களாகும்.

> **வீட்டுக்கடன், வாகனக் கடன் என்று அவர் தம் மாதாந்த வருவாயில் கணிசமான தொகையை கடன் மீளச் செலுத்தலுக்காக செலுத்திய நிலையில் வரி அதிகரிப்பும் இணைந்து அவர்களின் உண்மையான மாதாந்த வருவாயை மிகக் கீழ்–மட்டத்திற்கு தள்ளிவிடும் நிலையும் உருவாகலாம்**

2018இல் பதவியிலிருந்த அரசாங்கம் இந்த வரிவீதங்களையே அறவிட்டதாகவும் அந்த வரிவீதங்களுக்கே மீளத் திரும்பியுள்ளதாகவும் பொதுமக்களுக்கு ஆறுதல் சொல்லப்படுகிறது. ஆனால் 2018 இல் இலங்கை இருந்த பொருளாதார சூழலில் இப்போது இல்லை. பொருளாதார வளர்ச்சி இல்லை. நாட்டில் பொருட்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்கிறது. எரிபொருள், உணவு, எரிவாயு, மின்சாரக்கட்டணம், நீர்க்கட்டணம் என்று சகலதும் அதிகரித்துள்ள நிலையில் ரூபாவின் உள்நாட்டுப் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் பணரீதியிலான பெயரளவு சம்பளங்களிலும் கூலிகளிலும் (nominal wages and salaries) எவ்வித அதிகரிப்பும் இக்காலப்பகுதியில் ஏற்படாத நிலையில் மக்களின் மெய் வருமானம் (real income) எனப்படும் கொள்வனவுச் சக்தி மிகச் சடுதியான வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில் பொருளாதாரம் சாதாரண நிலையில் இயங்கியபோது அறவிட்ட வரி வீதங்களுக்கு உடனடியாகப் பின்னோக்கித் தாவுவது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். அரசாங்கத்தின் வருவாயை அதிகரிப்பது அவசியம் என்றபோதிலும் வரி அதிகரிப்புகளை படிப்படியாக கால இடைவெளி விட்டு செய்திருக்க வேண்டும்.

இப்போது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்தவே மக்கள் அல்லல் படும் அவலநிலையில் தற்போது நடைமுறைக்கு வந்துள்ள மற்றும் வர இருக்கும் வரி அதிகரிப்புகள் அரசாங்கத்தின் அரசியல் எதிர்காலத்தை மிக மோசமாகப் பாதிக்கும். தேர்தல் ஒன்று வரும்போது அதன் விளைவுகள் தெரியவரும். இவ்வரி அதிகரிப்புகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளின் முன்கூட்டிய பிரதிபலிப்பு என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மறுபுறம் அரச செலவினங்களை கட்டுப்படுத்த வேண்டிய பரிதாப நிலையும் அரசாங்கத்திற்கு உள்ளது. விரலுக்கு மீறிய வீக்கமாக வீங்கிப்போயுள்ள அரசாங்கத்தின் பருமன் அரச வருவாயின் மிகப்பெரிய பகுதியினை அரச ஊழியர்களுக்கான சம்பளமாகவும் ஓய்வூதியமாகவும் வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்'திற்கு இட்டுச் சென்றுள்ளது.

இதனால் முன்னைய வரவு செலவுத்திட்டத்தில் அதிகரிக்கபட்ட அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை உடனடியாக 60 வயதாகக் குறைக்கபட்டுள்ளது அதுமட்டுமன்றி ஏற்கெனவே அரச ஊழியர்கள் 5 வருட காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறையில் நிபந்தனையுடன் வெளிநாடு செல்லவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

> **பணவீக்கத்திற்கு எதிர்வினையாக வட்டி வீதங்களை அதிகரிக்கும் நடவடிக்கையும் உச்–சத்திற்கு வந்துவிட்ட நிலையில் மேற்கொண்டு வட்டிவீதங்களை அதிகரிப்பது நிதித்துறையின் முறிவுக்கு இட்டுச் செல்லும் அபாயம் நிலவும் நிலையில் மாற்றுவழிகளை தேடிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது**

# உய்கூர் முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான முறையில் காவலில் உள்ள உய்குர் முஸ்லீம் மற்றும் ஜின்ஜியாங் பிராந்தியத்திலுள்ள பிற முஸ்லீம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மூலம் சீனா மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்திருக்கலாம் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவரது பதவிக்காலத்தை நிறைவு செய்யும் சந்தர்ப்பத்தில் சீனா தொடர்பான அறிக்கையை பச்சலெட் அம்மையார் வெளியிட்டுள்ளார். அதேநேரம் அவரது சீன விஜயம் மேற்குலக அரசியல் தலைவர்களாலும் இராஜதந்திரிகளாலும் அதிகம் விமர்சனத்திற்கு உள்ளாகியதுடன் அவரது இரண்டாவது பதவிக் காலத்தை சாத்தியமற்ற நிலைக்குள் தள்ளியுள்ளதாக தெரியவருகிறது. மேலும் அவரது தற்போதைய அறிக்கை கூட சீனா மீது ஒரு மென்மையான போக்கினையே வெளிப்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.**

கடந்த மே மாதம் சீனாவுக்கு விஜயம் செய்த போது பெற்றுக் கொண்ட ஆய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய அறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரியவருகிறது. தீவிரவாதத்திற்கு எதிரான உத்தி என்ற அடிப்படையில் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் கடுமையான மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளதாக அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கையில் உய்குர் மற்றும் முஸ்லிம்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்கள் மீதான குற்றங்கள் மனித இனத்திற்கு எதிரான சர்வதேசக் குற்றங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் அலுவலகம் அறிக்கையிட்டுள்ளது. சிறைச்சாலைகளில் மற்றும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து உய்குர் மற்றும் முஸ்லிம்களை விடுவிக்க அனைத்து நடவடிக்கைகளையும் சீன அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. மனித உரிமைப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. அப்பிராந்தியத்தில் 2017 முதல் உய்குர் முஸ்லிம்கள் மீது குடும்ப கட்டுப்பாட்டை வலுக்கட்டாயமாக சீன அரசாங்கம் அமுல்படுத்தி வருவதாக நம்பகமான அறிக்கை உள்ளதாக மனித உரிமைப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு பச்சலெட் அம்மையாரின் அறிக்கை அமைந்திருந்தாலும் சீனா மீதான குற்றச்சாட்டை முழுமைப்படுத்த போதிய ஆதாரங்களை மனித உரிமைப் பேரவை கொண்டிருக்கவில்லை என்பது அதன் அறிக்கையில் தெளிவாகிறது. குற்றச்சாட்டையும் பலமாக வைக்காத நிலையைக் காணமுடிகிறது. மறுபக்கத்தில் மேற்குலக நாடுகளின் மனித உரிமை மீறல்கள் எவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையால் கைவிடப்பட்டுள்ளது என்பதும் முதன்மைப்படுத்த வேண்டிய கேள்வியாகும். அமெரிக்கா கறுப்பர்கள் மீது நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் தென் அமெரிக்க கண்டத்திலும் நிகழ்த்திவரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களின் பலவீனங்களும் எவ்வாறு கையாளப்படுகிறது என்பது பிரதான விடயமாகும். அவ்வாறே இலங்கை போன்று உலகில் சிறுபான்மைத் தேசியங்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் மனித உரிமைப் பேரவையால் கண்டு கொள்ளப்படாமலும் நாடுகளில் தங்கியிருப்பதுவும் பாரிய அரசியலாக்குவதையும் அவதானிக்க முடிகிறது. சீனா மீதான மனித உரிமைப் பேரவையின் கவனம் முதன்மையடைவதற்கான காரணங்களை தேடுவது அவசியமானது.

முதலாவது, மனித உரிமை என்பது கோட்பாட்டுத் தளத்திலேயே கட்டமைக்கப்பட்டுள்ளதே அன்றி நடைமுறைசார் பெறுமானத்தை கொண்டதாக அமையவில்லை. சீனா மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து வல்லரசுகளாலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அதிலும் இஸ்லாமியர் மீதான மேற்குலகத்தின் மனித உரிமை மீறல்கள் அளவிட முடியாதது. அதனை பயங்கரவாதமாக வடிவமைத்து அதன் மீது அரசியல் செய்யும் உலகத்தைக் கொண்ட நாடுகளாக வல்லரசுகள் காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையும் வல்லரசுகளது பிடிக்குள்ளேயே இயங்குகின்றன. வல்லரசு நாடுகளது நலன்களை நிறைவு செய்வதற்கான அமைப்பாகவே மனித உரிமைப் பேரவை காணப்படுகிறது. போர்களை தூண்டும் நாடுகளே பின்னர் மனித உரிமைகளின் பெயரால் அந்த நாடுகள் மீது தலையீடுகளை செய்கின்றன.



இரண்டாவது, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை புரியும் நாடுள் அனைத்துமே உலக அரசியலை ஆதிக்கம் செய்கின்றன. அதில் ஏற்பட்ட போட்டித் தன்மைக்குள்ளேயே மேற்கும் சீனாவும் மோதுகின்றன. திமென் சதுக்கத்தில் சீனா மேற்கொண்ட நடவடிக்கையை கண்டும்காணாது இருந்த மேற்கு தற்போது உய்குர் முஸ்லிம்களைப் பற்றிய கரிசனையை அதிகம் முதன்மைப் படுத்துவது தனது நலனுக்கானதே அன்றி உய்குர் முஸ்லிம்களுக்கானதல்ல. உலகம் முழுவதும் இஸ்லாமியருக்கு எதிரான மனித உரிமை மீறல்களை பிரயோகித்து விட்டு சீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கு மட்டும் பாதுகாப்பளிக்க மேற்கு முயலுகிறது என்பதை நியாயமாகக் கொள்ள முடியாதுள்ளது. அதில் அமெரிக்க, மேற்கு எதிர் சீனப் போட்டியே அடிப்படையானதாக அமைந்துள்ளது. மேற்கு தனது போட்டியில் சீனாவிடம் தோற்றுவிடக் கூடாது என்பதற்கான அணுகுமுறைகளாகவே தெரிகிறது.

மூன்றாவது, சீனா, தைவான் மோதல் தீவிரத் தன்மையை எட்டியுள்ளதுடன் அதில் அமெரிக்காவின் தலையீடு அதீதமாக மாறியுள்ளது. சீனாவை மனித உரிமை சார்ந்து கட்டுப்படுத்துவதன் மூலம் தைவான் மீதான போரை மட்டுப்படுத்தவும் அதனை ஒரு எல்லை மீறலாக காண்பிக்கவும் மேற்கு முனைகிறது. அதற்கான நகர்வுகளையே மனித உரிமைப் பேரவை மூலம் சாத்தியப்படுத்த அமெரிக்கா திட்டமிடுகிறது. இதன் மூலம் சீனா ஒரு உரிமை மீறலைக் கொண்ட நாடாகவும் ஆக்கிரமிப்பு நாடாகவும் உலகளாவிய தளத்தில் கட்டமைக்க விரும்புகிறது.

நான்காவது, இவ்வாறு மனித உரிமை மீறலை மேற்கொள்ளும் சீனாவை வடிவமைப்பதன் மூலம் உலகத் தளத்தில் பலவீனப்படுத்துவதுடன் உலகத்திற்கு தலைமை தாங்கும் திறனற்ற நாடு என்பதை ஏனைய நாடுகளுக்கு தெரியப்படுத்த மேற்கு முனைகிறது. மேற்கினால் கட்டமைக்கப்பட்ட மனித உரிமைகளும் மனிதாபிமானச் சட்டங்களும் சர்வதேச மட்டத்திலான சமவாயங்களும் வாய்ப்பானவை என்பதை காட்டுவதன் மூலம் மேற்குலகத்தின் ஆளுகை உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. அதனை தொடரவும் அதற்கு மாறான சக்திகளது எழுச்சியை முடிவுக்கு கொண்டுவரவும் அமெரிக்கா சார்ந்த மேற்குலகம் முனைகிறது.

ஐந்தாவது, சீனாவின் மனித உரிமை மீறலுக்கான அடிப்படையை கொடுத்ததில் மேற்குலகத்திற்கு அதிக பங்குண்டு என்பது மறுக்க முடியாதது. மேற்குலகத்தின முஸ்லிம்கள் மீதான அணுகுமுறையையே சீனா நிகழ்த்துகிறது. ஏறக்குறைய முஸ்லிம்கள் மீதான மேற்கின் அணுகுமுறைக்கும் சீனாவின் அணுகுமுறையும் அதிக வேறுபாடு இருப்பதாக தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக இஸ்லாத்துக்கு எதிரான உலகத்திற்கு தலைமைதாங்குவதற்கு போட்டி நிலவுவதாகவே தெரிகிறது. சீனாவுக்கும் மேற்குலகத்திற்குமான போட்டியின் பிரதிபலிப்பே உய்குர் முஸ்லிம்களது மனித உரிமை மீறல் பற்றிய உரையாடலாகும்.

எனவே உலக நாடுகளின் பொருளாதார தேவைக்கு முன்னால் மனித உரிமை சாத்தியமற்றதாகவே தெரிகிறது. அதிலும் சீனா பொருளாதாரத்திற்கே முன்னுரிமை வழங்குகிறதே அன்றி மனித உரிமைகளுக்கல்ல என்பதும் மேற்கு மனித உரிமையை முன்னிறுத்திக் கொண்டு பொருளாதாரத் தேவையை அடைகிறது என்பதும் இயல்பான அரசியலாகவே உள்ளது. அவற்றுக்காக சீனாவின் மனித உரிமை மீறல்களையோ அல்லது மனித இனத்திற்கு எதிரான குற்றங்களையோ நியாயப்படுத்த முடியாது. சீன அரசாங்கத்தின் ஆணுகுமுறைகள் எதுவும் உலத்திற்கோ சீனாவுக்கோ புதியதல்ல. சிறுபான்மைத் தேசியங்களின் இருப்புக்கே ஆபத்தான அரசியலாக உள்ளது. தீபெத்திய வரலாறும் உய்குர் இனத்தின் வரலாறும் ஒரே இயல்பைக் கொண்'டதாகவே தெரிகிறது. சீனாவில் வாழும் உய்குர் முஸ்லீம்களது நிலையும் தீபெத்தியர் போன்று அமைவதற்கு வாய்ப்பு அதிகமானதாகும்.

**156ஆவது பொலிஸ் தினம் நேற்றாகும் அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

### 156 வது பொலிஸ் தினம்

# பொலிஸ் சேவை கடந்து வந்த பாதை...

இலங்கையில் பொலிஸ் சேவையானது இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் பழமையான வரலாற்றைக் கொண்டது. இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக ஜீ. டப்ள்யு. ஆர். கெம்பல் 1866 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ஆம் திகதி அரசியலமைப்பு ரீதியாக பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியையே பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட தினமாகக் கருதி 156வது பொலிஸ் தினமாக இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றது.

வரலாற்று ரீதியான பிரதிபலிப்பும் நிறுவன வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகும். சிறந்த நன்மதிப்பு மற்றும் பொது மக்களின் வளர்ச்சிக்காக உறுதுணையாக நிற்கும் பொலிஸ் சேவையானது பொலிஸ் வரலாற்று தகவல்களை கட்டியெழுப்புவதில் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இச் சேவையானது வரலாற்று ரீதியாக ஆராயப்பட வேண்டும் என்பதுடன், வெறும் வரலாற்றுப் பதிவை மாத்திரம் செயல்படுத்துவதற்காக மாத்திரமல்லாது குறைபாடுகளை அடையாளம் காண்பதற்காகவும், எதிர்காலத்தை அமைத்து கொள்வதற்காகவும், கடந்தகால ஆய்வுகளுக்கும் உதவியாகவும் இருக்கின்றது.

கடலோரப்பகுதிகளை ஒல்லாந்தர்கள் ஆக்கிரமித்தபோது 1650 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு நகர சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி கொழும்பு நகரில் வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக, இரவு நேரங்களில் நகரத்தை பாதுகாப்பதற்காக நான்கு சிப்பாய்களை அமர்த்தியமை இலங்கை பொலிஸ் சேவையின் தோற்றத்திற்கான ஆதாரங்களில் ஒன்றாக பிரதிபலிக்கின்றது.

கொழும்பு நகரத்தில் பொலிஸ் சேவைக்காக ராணுவ சிப்பாய்களும், கோட்டை பிரதேசத்தில் ஒல்லாந்த சிப்பாய்களும், புறக்கோட்டை பிரதேசத்தில் மலாய் இனத்தவர்களின் பொலிஸ் கூலி சிப்பாய்களும் கடந்த காலத்தில் பொலிஸ் சேவையில் ஈடுபட்டனர்.

1806 ஆம் ஆண்டளவில் ஆங்கில இனத்தவர்களால் கொழும்பு நகரத்துக்கு வெளியே பொலிஸ் சேவையை புரிவதற்காக கட்டளை சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் 1833 வது ஆண்டளவில் அரசின் கொடுப்பனவுடன் பொலிஸ் சேவையை ஆரம்பித்தனர். கொழும்புக்கான பொலிஸ் அதிகாரியாக தோமஸ் நியமிக்கப்பட்டார். அப்போது கொழும்பு நகரில் உள்ள 39000 மக்களுக்கு பொலிஸ் சேவையை புரிவதற்காக 165 பேர் கொண்ட பொலிஸ் குழுவொன்றை கடமையில் ஈடுபடுத்தினார்கள்.

1843 ஆம் ஆண்டில், அக் காலத்தில் அமுலில் இருந்த பொலிஸ் கட்டளைச் சட்டத்தை ரத்து செய்து நாடு முழுவதும் சகல நகரங்களுக்கும் பொலிஸ் நிலையங்களை நிறுவுவதற்காக ஆளுனருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1843 ஆம் ஆண்டு பொலிஸ் பரிசோதகர் தரத்தை அறிமுகப்படுத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததுடன், பொலிஸ் உதவியாளர் பதவியை ரத்து செய்து பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியை அறிமுகப்படுத்தினர். 1863 ஆம் ஆண்டின் இறுதியில் 48 பொலிஸ் நிலையங்களை நிறுவப்பட்டதுடன், 1867 ஆம் ஆண்டின் போது மருதானையில் முஸ்லீம் பள்ளிக்கு அருகாமையில் பொலிஸ் தலைமையம் ஸ்தாபிக்கப்பட்டது. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பதாக இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக சேர் ரிட்சட் அலுவிகாரை 1947 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவர் இந் நாட்டின் 11 வது பொலிஸ் மா அதிபராவார்.

1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்த பின்னர் இந் நாட்டில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களினால் எளிமையான முறையில் இப் பொலிஸ் திணைக்களத்தை மாற்றியமைத்ததுடன் நாடு பூராகவும் பொலிஸ் நிலையங்களை அதிகரித்து அதன் கடமைகளை வெவ்வேறு வழிகளில் ஆரம்பித்தனர்.

பொறுப்புள்ள அரசாங்கத்தினால் பொது மக்களின் சகல பொறுப்புகளையும் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பிரதான நிறுவனங்களில் பொலிஸ் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. அதனால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் ஏற்படும் தடைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளில் மக்கள் பொலிசாரிடமிருந்து விலகிச் செல்வது வழக்கமானதாகியது. ஆனாலும் பொலிஸ் சேவையின் போது மக்களின் தொடர்புகள் மிகவும் முக்கியமானதாகும்.

அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல போராட்டங்கள், கலவரங்களுக்கு நேரடியாக முகம் கொடுப்பது பொலிசாராகும்.

1971 ஆம் ஆண்டு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் அரசவிரோத கிளர்ச்சியாளர்களினால் பொலிசாருக்கே முதலாவதாக தாக்குதல் நடாத்தப்பட்டது. இராணுவ பண்புகள் இல்லாமல் உருவாக்கப்பட்ட பொலிசார் துப்பாக்கியேந்தியவாறு கடமைகள் மேற்கொள்ள வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டமைக்கு இவ்வாறானவை காரணங்களாகும். எல்.ரீ.ரீ.ஈ யுத்தகாலத்தில் அது தீவிரமாக இருந்தது. தற்போதைய காலத்தில் ஏற்பட்ட போராட்டத்தினால் மீண்டும் ஒருமுறை இவ்வாறான சந்தர்ப்பத்தை காணமுடிந்தது.

புதிய பொலிஸ் நிலையங்கள் ஆரம்பித்தல்.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரத்ன பொலிஸ் துறையை மறுசீரமைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அதன்படி பொலிஸ் நிருவாகத்தில் புதிய கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய கட்டமைப்பின்படி 45 பிரதேச பொலிஸ் பிரிவுகள் மற்றும் 77 செயல்பாட்டு பொலிஸ் பிரிவுகளின் கடமைகளுக்காக தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 107000 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.






### குற்றப் புலனாய்வுத் திணைக்களம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை 05 பிரிவுகளாக பிரித்து சேவையை விரிவுப்படுத்தியுள்ளது. அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பணிப்பாளர்கள் ஐவரின் கீழ் விசாரணை கோப்புகள் மற்றும் விசாரணை செய்யப்படும் முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி புதிய பிரிவுகளின் மூலம் விசாரணை செய்யப்படும். அவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட பிரிவுகளின் பெயர்கள்.

- **சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் சொத்து தொடர்பான குற்ற விசாரணை பிரிவு**
- **கணனி குற்றவியல் விசாரணை பிரிவு**
- **நிதி மற்றும் வணிக குற்றப் பிரிவு**
- **மனித கடத்தல், கடலாசார் குற்ற விசாரணை பிரிவு**
- **மனித படுகொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்ற விசாரணை பிரிவு**

எனப் பெயரிடப்பட்டுள்ளது.

### மனித வள முகாமைத்துவ பிரிவு

பெண் உத்தியோகத்தர்களை சமமாக மதித்தல், ஆண் பெண் சமூகத்தவர்களை சமமாக பேணுவதன் ஊடாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி பதவிகள், பிரிவுக்கு பொறுப்பான மற்றும் பிராந்தியங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களாக ஆக்குவதற்கான சந்தர்ப்பங்களை



வழங்கியது வரலாற்றில் முதலாவது தடவையாக பெண் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுளளதுடன், அவர்கள் பொலிஸ் மா அதிபர் வரை செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. தற்போது இலங்கை பொலிசில் 04 பெண் பிரதி பொலிஸ் மா அதிபர்களும், 04 பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும், 13 பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களும், 1149 பரிசோதகர்கள் தரத்திலான பெண் உத்தியோகத்தர்களும், 9464 பெண் பொலிஸ் சாஜன்ட் மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் தரத்திலான உத்தியோகத்தர்கள் அடங்கிய பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடு பூராகவும் சகல பிரதேசத்திலும் ஆண் உத்தியோகத்தர்களுக்கு நிகராக வியக்கதக்க வகையில் பொலிஸ் கடமைகளை முன்னெடுக்கின்றார்கள். பெண் உத்தியோகத்தர்களுக்கு சிறந்த மனநிலைமையில் கடமையாற்றுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு, மேலதிக வசதிகள்செய்து தரப்பட்டுள்ளன. நாடு பூராகவும் உள்ளடக்கியவாறு தற்போது நடைமுறையில் உள்ள 605 பொலிஸ் நிலையங்களில் குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் நிறுவப்பட்டுள்ளதுடன் 45 பிரிவுகளுக்கு பொறுப்பான குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது. விசாரணை பிராந்தியம் மற்றும் தடுப்புப் பிராந்தியங்களாக இப் பணியகம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பிரதி பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு

நீண்ட காலமாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் கிடைக்காதமைக்கு தீர்வாக பதவி உயர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி , 2019 ஜுலை மாதம் 01 ஆம் திகதி, 2020 பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதிகளில் பல்வேறு பதவிகளை பிரதிநிதித்துவப்படுத்தி பொலிஸ் சேவையில் 31541 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் 927 உதவிச் சேவையினர்களுக்கும் 490 விஷேட அதிரடிப்படையினர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

### குற்றங்கள் பதிவாதல் மற்றும் தீர்த்தல்

2018 ஆம் ஆண்டில் 36354 குற்றங்கள் பதிவாகியதுடன் அவற்றில் 28246 குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வருடத்தில் 78 வீதமான குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் 34578 பெருங் குற்றங்கள் பதிவாகியதுடன் அவற்றில் 25611 குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வருடத்தில் 74 வீதமான குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 31098 பெருங் குற்றங்கள் பதிவாகியதுடன் அவற்றில் 24412 குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வருடத்தில் 79 வீதமான குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் 35412 பெருங் குற்றங்கள் பதிவாகியதுடன் அவற்றில் 28122 குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வருடத்தில் 79 வீதமான குற்றங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

(17ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸ் ஊடகப் பிரிவு

# தேசிய நெருக்கடிக்கு தேசிய இடர் நீக்க வேலைத்திட்டமே தற்போதைய தேவை



நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஐ.எம்.எவ்வின் நிதி உதவி உதவும். இதற்கு ஐ.எம். எவ் உத்தியோகத்தர் மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த ஆறு மாதத்தில் முதற்கட்டமாக கடனுதவி – நிதி கிடைத்து விடும். நான்கு ஆண்டுகளுக்கு இந்த நிதி உதவி தொடரும். ஆகவே இனிப் பிரச்சினை இல்லை என்ற எண்ணத்தோடுதான் பெரும்பாலானவர்கள் உள்ளனர்.

இதுவரையிலும் நாடுகளிடம் கடன் பட்டு வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு இன்னொரு கடனைப்படுவதில் எந்தப் பிரச்சினையுமில்லை. கடன் வாங்கிக் கலகலப்பாகக் கல்யாணம் செய்வதைப்போலவே நாம் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டோம். இதனால் எந்தக் கடனும் நமக்குப் பிரச்சினையாகப் படுவதில்லை.

ஆனால், இந்தக் கடன் சாதாரணமானதல்ல. நாடுகளின் கடனிலாவது, அந்த நாடுகளின் அரசியல் தலைமைகள், ஆட்சிக் கொள்கைகளுக்கு அமைய விலக்களிப்பதாகவோ வட்டிக் குறைப்புச்செய்வதாகவோ இருக்க வாய்ப்புண்டு. இது நிதி நிறுவனக் கடன். ஆகவேதான் கடனைத் தருவதற்கு முன்பே நிபந்தனை விதிக்கப்படுகிறது. நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால்தான் கடன். அதுவும் தவணை அடிப்படையில். ஆகவே இந்தக் கடனோடு விளையாட முடியாது. கழுத்தில் சுருக்குத்தான் விழும்.

அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

ஆம், அந்தக் கேள்வி உங்களுக்கானதே.

முதலில் இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு மிகப் பெரிய தேசிய நெருக்கடி என்பதை நாம் புரிந்து (உணர்ந்து) கொள்ள வேண்டும். இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திருக்காத ஒன்று. "நாம் இப்பொழுது வங்குரோத்து நிலையில் இருக்கிறோம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகவே கூறியுள்ளதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். உண்மையும் அதுதான். ஆகவேதான் உலகம் முழுவதிலும் நாம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்த வேண்டியேற்பட்டுள்ளது.

ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் மிகச்செழிப்பாக இருந்த நாடு. அதனுடைய அந்நியச் செலாவணி பிற நாடுகளுக்கு உதவும் நிலையில் தாராளமாக இருந்தது. குறிப்பாக ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளின் பொருளாதார நிலையை விட இலங்கை பல படிகளில் மேலே நின்றது. இவ்வளவுக்கும் அது 400 ஆண்டுகளுக்கும் அதிககாலம் அந்நியரின் பிடியின் கீழிருந்த காலமாகும். அப்படியிருந்தும் பொருளாதார வளம் மேலோங்கியிருந்தது.

அதற்குப் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த நம்மவர்கள் இன்றைய வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்து விட்டுள்ளார்கள். கடன் சுமையில் நாடு திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு இன்னும் கடன்பொறிக்குள்ளேதான் நாட்டைக் கொண்டு போவதற்கு முயற்சிக்கிறார்கள். கேட்டால், வேறு வழியில்லை என்று ஒற்றைச்சொல்லில் கதையை முடித்து விடப்பார்க்கிறார்கள்.

ஆனால், நாடு மிகப் பெரிய தேசிய நெருக்கடிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. முக்கியமாக இரண்டு நெருக்கடிகளால் (பிரச்சினைகளால்). ஒன்று பொருளாதார நெருக்கடி. அடுத்தது இனப்பிரச்சினை.

இந்த இரண்டுமே ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. ஒன்றை விட்டு ஒன்றைச் சீர் செய்ய முடியாது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு போரும் அதற்கான செலவும் ஒரு காரணம் என்றால், நாட்டில் பிளவுண்ட சமூக நிலை தொடர்வது இன்னொரு காரணம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பது எளிய உண்மை. ஆனால், இந்த எளிய உண்மை இனவாதத்தினால் புறக்கணிக்கப்பட்டு, நான்காகத் துண்டுபட்டால் உண்டு வாழ்வு என்று செயற்பட்டதன் விளைவே இன்றைய நெருக்கடியாகும்.

தேசிய நெருக்கடி என்பது அனைவரையும் பாதிக்கும் ஒன்றாகும். இனம், மதம், பிரதேசம், சாதி, பால், வயது என எந்த வேறுபாடுகளையும் அது பார்க்காது. ஆகவே அவ்வாறான தேசிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்கேற்பும் அவசியமானது. இல்லையென்றால் அந்த நெருக்கடியைக் கடக்கவோ முறியடிக்கவோ முடியாது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, மிகப் பாரிய சிக்கலை உண்டாக்கியுள்ள ஒன்று. நாளாந்த உணவுப் பொருட்களுக்கே பல லட்சக்கணக்கான மக்களைச் சிரமப்பட வைத்துள்ளது. பல தொழில்துறைகள் படுத்து விட்டன. விலை வாசியும் மின்சாரம், நீர் போன்றவற்றின் பாவனைக் கட்டணங்களும் மிக உச்சத்துக்கு ஏறியுள்ளன. மருந்துப் பொருட்களுக்கு மிகப் பெரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நலத்திட்டங்கள் அனைத்தும் படுத்துக் கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாகி விட்டது. வசதிகளைக் குறைக்குமாறு அரசு மக்களுக்கு ஆணையிடும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது. தேவையற்ற செலவீனங்களைக் குறையுங்கள் என்று ஜனாதிபதி கெஞ்சுகிறார். அடுத்த ஆண்டைக் கடப்பது கடினமானது என்று அரசாங்கம் மக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இப்படியெல்லாம் இருந்தாலும் சனங்கள் இன்னும் வழமையைப் போலவே வாழ முற்படுகிறார்கள். பொருட்களை வாங்கிச் சேகரிக்க முற்படுகிறார்களே தவிர, புதிய சூழலை உருவாக்க முயற்சிக்கவில்லை. எந்தச் செலவீனத்தையும் குறைத்ததாகக் காணவில்லை. நிலைமையைக் கருத்திற் கொண்டு வாழ்க்கை முறையில் மாற்றத்தைச் செய்வதற்கான எந்த அடையாளமும் தெரியவேயில்லை. வருமானத்தைக் கூட்டுவதற்கான வழிகளையும் காணவில்லை. இதுதான் ஆகப் பெரிய பிரச்சினை. செலவு வரவரக் கூடிச் செல்கிறது. அதேவேளை வருமானமோ வரவரக் குறைந்து கொண்டு போகிறது. அதிலும் விவசாயம், மீன்பிடி போன்ற தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் பாடு மிகச் சிக்கலானது. அவர்கள் தொழிலைச் செய்வதற்கான அடிப்படை ஆதாரங்களே இல்லை என்ற நிலையில் அவர்களால் எப்படித் தொழிலைச் செய்ய முடியும்? ஆகவே அவ்வாறான குடும்பங்களின் பொருளாதாரம் படு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஒருவேளை உணவுக்கே சிரமப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்து விட்டது என்கிறது ஒரு புள்ளி விவரம்.

இந்த நிலையில் நாம் நிச்சயமாக ஒரு மாற்றுப் பொருளாதார முறைமைக்கும் மாற்று வாழ்க்கை முறைக்கும் செல்ல வேண்டும். இது ஒரு பண்பாடாக வளர்த்தெடுக்கப்படுவது அவசியம். எதுவும் பழக்கப்பட்டால் சரியாகி விடும் என்பார்கள். மனிதனே ஒரு பழக்கத்திற்கு இசைவான பிராணிதான். இதுவரையான வாழ்க்கை முறையை விட்டு புதிய வாழ்க்கை முறைக்குப் பழகினோம் என்றால் பாதிப்பிரச்சினையை எளிதாகக் கடந்து விட முடியும்.

முக்கியமாக சுய உற்பத்தி சார்ந்த உணவு தொடக்கம் பாவனைப்பொருட்கள் வரையில் நாமே தயாரிக்க வேண்டும், உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வோடு அனைவரும் வேலை செய்ய வேண்டும். இதற்கும் பிரச்சினை உண்டென்பது உண்மை. குறிப்பாக "உற்பத்தித்துக்குத் தேவையான மின்சாரம், எரிபொருள் போன்றவை சீரில்லாதிருக்கும்போது எப்படி உற்பத்தியில் ஈடுபட முடியும்?" என்று யாரும் கேட்கலாம்.

நெருக்கடி என்றாலே அப்படித்தான். சிக்கலும் சிரமங்களும் அதிகமாக இருக்கும். அதற்குத்தான் இப்பொழுது பெறப்படுகின்ற கடனை எப்படி முகாமைத்துவம் செய்வது என்பதைக் குறித்த கரிசனை வேண்டும் என்கிறோம். உற்பத்தித்துறைக்கும் சுற்றுலா போன்ற வருவாய்த்துறைக்கும் கூடுதல் முக்கியத்துவத்தை அளிப்பதன் மூலமாக இதைச் சரிசெய்து கொள்ள முடியும்.

இளைய தலைமுறையினர் இதில் அதிகமான பங்களிப்பைச் செய்வது அவசியம். அவர்கள் புதிதாக – வித்தியாசமாகச் சிந்திக்கக் கூடியவர்கள். இலகு தன்மைகளை உண்டாக்கும் ஆற்றலுடையவர்கள். ஆகவே "நாட்டை நாம் மீட்டெடுப்போம். ஒரு புதிய யுகத்தைப் படைப்போம்" என்று அவர்கள்செயலில் இறங்க வேண்டும். இதற்கு இளைய தலைமுறையை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டம் அவசியம். தீர்மானங்களை எடுக்கின்ற இடங்களிலும் அவர்களுக்கான இடம் அளிக்கப்படுவது அவசியம்.

அவர்களுக்கான வாய்ப்புகளை – வசதிகளை தாராளமாக அளிக்க வேண்டும். அவர்கள் நினைத்தால் இந்த நாட்டை மிகக் குறுகிய காலத்தில், மிகச் சிறப்பான முறையில் மீட்டெடுப்பார்கள். அத்தகைய ஆற்றல் இளைய தலைமுறையினரிடத்தில் உண்டு. உலகிலே உற்பத்தித் துறையில் ஈடுபடுகின்றவர்களில் 80 வீதமானோர் இளையோரே. ஆகவே இந்த உலகத்தை இயங்க வைப்பது இளைய தலைமுறையினரே. அவர்களை நாம் சரியாக ஏற்றுக் கொண்டால் அவர்கள் நாட்டை வளர்த்தெடுப்பார்கள்.

இப்பொழுது 25 வயதுக்குட்பட்ட இளைஞர் – யுவதிகளில் பெரும்பாலானோர் எந்தத் தொழிலும் இல்லாமல், உயர் கல்வியைத் தொடராமல் சும்மாவே உள்ளனர். அவர்களுடைய கைகளில் செல்ஃபோனும் தலைக்குள்ளே யுரியுப் காட்சிகளுமே நிறைந்துள்ளன. இதற்கு அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் படிக்கின்ற காலத்திலேயே வேலையைச் செய்யக் கூடிய ஏற்பாடு நாட்டில் இருக்க வேண்டும்.

இன்று பல லட்சம் பேருக்கு வேலையே இல்லை. வேலையில்லாத பட்டதாரிகளை வைத்திருக்கும் நாடு அல்லவா நமது! வேலையில்லாத இளையோரையும் அப்படித்தான் வைத்திருக்க முயற்சிக்கும். பழக்க தோசம் அப்படி.

ஆனால், அதற்கு இனிச் சாத்தியமே இல்லை. இனி ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். முன்பை விட இரண்டு மடங்கு, பல மடங்கு உழைக்க வேண்டும். வருவாயைப் பெருக்க வேண்டும். இதை ஒரு அவசரகால நிலையாக அரசாங்கம் பிரகடனப்படுத்துவது அவசியம். அரச உத்தியோகத்தர்களின் பணித் தன்மை தொடர்பாகவும் பணி நேரம் தொடர்பாகவும் புதிய முறையில் சிந்திக்க வேண்டும். அனைவரும் ஒரு குறுகிய காலத்திற்காவது பொருளாதார மேம்பாட்டுக்குப் பங்களிக்க வேண்டும் என்ற கட்டாய நிலை கொண்டுவரப்படுவது அவசியம். சில நாடுகளில் இருக்குமே, கட்டாய இராணுவப் பயிற்சி. அதைப் போல, இங்கே கட்டாயப் பொருளாதார மீட்சித்திட்டத்தில் பங்கேற்பு என்ற திட்டத்தைக் கொண்டு வருவது அவசியம்.

ஏனென்றால் ஏற்கனவே நாம் வாங்கியது கடன். வாங்கிக் கொண்டிருப்பதும் கடன். வாங்கப் போவதும் கடன். ஆகவே இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். கொடுத்தே ஆக வேண்டும். தப்ப முடியாது. இல்லையென்றால் தேவையில்லாத பிரச்சினைகள் எல்லாம் வரும். மேலும் பல தடைகளையும் இறுக்கங்களையும் நாம் சந்திக்க வேண்டியிருக்கும். அது நம்முடைய எதிர்காலத்தையே இல்லாதொழித்து விடும். இப்போதைய நிலையை விட மோசமான நிலையை உண்டாக்கும் என்ற புரிதல் – எச்சரிக்கை வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியொரு ஆளாக நின்று பதவிகளை எடுத்துக் கொண்டவர், ஏற்றிருப்பவர். இன்று அரசியற் சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் நின்று நாட்டை நிர்வகிக்கிறார். இந்த இடத்தில் அவர் மேலும் சில விடயங்களைக் குறித்துத் துணிவாகவும் சரியாகவும் சிந்திக்க வேண்டும். அது காலத்தின், களத்தின் அவசியமாகும். அப்படிச் செய்தால் உண்மையில் அவர் வரலாற்றுத் தலைவராக காலத்தினால் நினைவு கொள்ளப்படுவார்.

தேசிய பொருளாதாரக் கொள்கையை அவர் சிறப்பான முறையில் உருவாக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்ற ஊழல், இனமுரண், அரசியல் முரண்பாடுகள், பொருத்தமற்ற பொருளாதாரத் திட்டங்கள் போன்றவற்றைக் கடக்கக் கூடிய அடிப்படைகளை உருவாக்க வேண்டும். அவரால் இவற்றைச் செய்ய முடியும். அதைச் செய்யக் கூடிய காலமும் இதுதான். இந்த நெருக்கடியின்போதுதான் ஏனைய பிரச்சினைகளுக்கான மருத்துவத்தையும் செய்யக் கூடியதாக இருக்கும்.

இளைய தலைமுறையினரை அவர் அரவணைத்துக் கொள்வது அவசியம். அவர்களுக்கான அங்கீகாரத்தையும் இடத்தையும் அவர் சரியாக வழங்கினால் மாற்றங்களை இலகுவாக எட்ட முடியும்.

இப்பொழுது பாராளுமன்றத்தைப் பார்த்தீர்கள் என்றால் புரியும். அத்தனை தலைகளும் கிழடு தட்டியவை. ஊழல், இனவாதம், பொறுப்பின்மை போன்றவற்றின் திரண்ட வடிவமாக இருப்பவை. ஆனால், இதைப்பற்றிப் பொருட்படுத்தாமல், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அரசுப்பணிகளில் இருந்து ஓய்வு என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அந்த அறிவிப்புச் சரியானதே. அதே அறிவிப்பு நம்முடைய அரசியல் தலைமைகளுக்கும் பொருந்தக் கூடியதாக இருந்தால் சிறப்பு. கழிவுகளைக் கையில் வைத்துக்கொண்டு, உருப்படியாக எந்தப் புதிய நன்மைகளையும் செய்ய முடியாது.

தேசிய நெருக்கடிக்கு தேசிய இடர் நீக்க வேலைத்திட்டம் அவசியம். அதையே நாடும் நாமும் வேண்டி நிற்கிறோம். எல்லோரும் திடமாக எண்ணிக் கொண்டால், ஐந்து ஆண்டுகளில் இலங்கையை மிகப் பெரிய பொருளாதார வளமுடைய நாடாக வளர்த்தெடுத்து விட முடியும். அதை நோக்கிப் பயணிப்பதைப்பற்றிச் சிந்திப்போம்.

கருணாகரன் ...




## மீண்டும் வருவாயா

தரு. தங்கம்
ரக்குவானை

உன் பார்வை கடிந்து தின்னும்...
உன் அன்பால் உறுகிப் போனேன்
தூக்கமின்றி தவிக்கும்
என் இரவுகள்...
உன் நினைவுகள்
என் மனதில் ஊரிப் போனதால்
தேங்கிக் கிடக்கின்றேன்
தெரு ஓரம் நான்...
மீண்டும் வருவாயா...



## அதிசய தீபமான நீ

விவேகவெளி தமிழேந்திரன்
(வெல்லபதியான்)
பாண்டிருப்பு

பழுதுண்டு செல்லுதே
பருவ காலம்
பாழா(க்)கிக் கொல்லுதே உம்
பருவ ஜாலம்

பள்ளி செல்லும் உனக்கேன்
இந்தக்கோலம்...?
தலைமுடியேன் இந்த நீளம்...?

போதையின் பாதையில்
புத்தி கெட்டுப் போகாதே
புகைத்தல் பழக்கத்தை
துளியும் நாடாதே!

கல்வியையே நாடு
செல்வம் அதையே தேடு
கல்லூரியில் தினமும் துலங்கு
கலங்கரை விளக்காய் விளங்கு!

துலங்க வேண்டிய நீ...
தூரதரிசனம் வேண்டிய நீ...
அகிலம் வலம்வர வேண்டிய நீ...
அதிசய தீபமான நீ...

கலங்க வைத்து
அறிவார்ந்த சமூகத்திலிருந்து
ஒதுங்கிச் செல்லலாமோ...?
சமூகத்தைச் சாக்கடையாய்
ஆக்கலாமோ...?

ஓ...
அறிவு மழையும்
அன்பு மழையும்
பொழிய வேண்டும்
உன்னால் தான்...!
அகிலம் செழிக்க
வேண்டும் நின்னால் தான்...!

ஆம்...
முகவரியை எழுது
புதிய மாணவனென்று...!
வாழட்டும் இனிப் புதிய
தலைமுறையொன்று...!!



## வெற்றிப்படிகளை பற்றிடு

ஏரூர் றமீஸ்
ஏறாவூர்

அனுபவத்தினை ஆசானாக்கி
அறிவைத் தீட்டிட
ஆதவனோடு துயிலெழுந்து
மேதினில் உழைத்திடு

கற்கால மனிதனை
கடும் தேடல்தான்
காலம் தாண்டியும்
ஞாலத்தை ஆளுது

வீழ்ந்தாலும் எழுந்திட
விடாமுயற்சியே துணையாக
விண்ணையும் ஆண்டிட
விரிந்திரிக்குதே விஞ்ஞானம்

வலிகளை வென்று
சிலைகளாய் நின்றவர்கள்
தடைகளைய் நிறைகளாக்கி
நிலைகளை உயர்த்தியவர்கள்

புதைத்தாலும் முளைத்திடு
எரித்தாலும் உயிர்தெழு
சந்தர்ப்பங்களை சாதகமாக்கி
சரித்திரம் படைத்திடு

திசையெல்லாம் திறந்திருக்கு
சிந்தையை விரித்திடு
சிந்திடும் வியர்வையில்
சிகரங்கள் பற்றிடலாம்



## ஒரு தாயின் சுமை

வட்டகொடை
முருகையா தவமணிதேவி

தாயே உன்
சுமைகள் தான் எத்தனை எத்தனையோ
தேய்பிறை நிலவென
தேய்ந்து விட்ட உன்
தோள்கள் தாங்கும்
சுமைகள் தான் எத்தனையெத்தனை
ஒரு புறம் கொழுந்து
நிறையை கூடையை
மறு கையில் உன்
வருகைக்காய்
காத்து கிடக்கும் மழலைச்
செல்வத்தை
இரண்டுமே
கனக்க வில்லை என்கிறது உன்
புன்னகை சிந்தும்
பூமுகம்
இது கடவுள்
வகுத்து தந்த
வாழ்க்கை
என்கிறாயோ!
வசந்த காலம்
என்றோ ஒரு நாள்
வரத்தான்
போகின்றது
மரிக் கொழுந்து வாசம்
வீசத்தான் போகிறது, என்ன!



## ஆனந்தம்

பசறையூர்
மல்லிகா பத்மநாதன்

பகலவனின் கதிர்கண்டு
பட்சிகட்கு ஆனந்தம்
பதியவனின் அருள் கண்டு
பக்தர்களுக்கு ஆனந்தம்
தாயவள் பாசம் காட்ட
சேய்க்கு மிக ஆனந்தம்
சேற்றுவயல் எழில் கண்ட
உழவர்க்கெல்லாம் ஆனந்தம்
காயெல்லாம் கனியாக
கண்ட உயிர்கட்கு ஆனந்தம்
காசினியில் நலம் சேர்ந்தால்
எல்லோர்க்கும் ஆனந்தம்



## உன்விழி வழியே

இணுவில் வாகீசன்

நீல வானில்
அந்திசாயும் நேரம்
வந்த நிலவாய்
சாலையோரம்
நீலப்பட்டு உடுத்தி
கோலவிழிகள்
அழைத்துச் செல்கின்றது
பயணங்கள் தொடர்கின்றது
உன்னாலே எல்லாம் அன்பே

## இசைக்கதிரை வாழ்க்கை

நுஸ்ரத் மஹ்ரூப்ஃ
மாதம்பை

காலங்கள் மாறலாம்
காட்சிகள் மாறலாம்
கதாபாத்திரங்களும் மாறலாம்

ஏனெனில்
இங்கே எல்லோருக்கும்
இசைக் கதிரை வாழ்வுதான்

நேற்றைய பணக்காரன்
இன்றைய பரதேசி
நேற்றைய பரதேசி
இன்றைய பணக்காரன்

நிரந்தரமும்
நிச்சயமும்
நீள்வரியா
நீண்டு செல்லும்

கை கூப்பி வணங்கியவர்களும்
கை கட்டி மதித்தவர்களும்
கரம் தட்டி சிரித்து
கை கழுவிடும் நாள் வரலாம்

கண்ணீரைக் கண்டிராத கண்கள்
கண்ணீரோடு காலம் கடத்தலாம்
காயங்களும் கஷ்டப்படுத்தலாம்

கருணையற்ற கண்களை உன்
கண்களால் நீ காணலாம்

உள் நெஞ்சில் சுமந்த
உறவுகள் உதறித் தள்ளி
உனை உதாசீனப்படுத்தலாம்

பசித்த வயிற்றோடு
படுத்துறங்கிட நேரலாம்
தலையணை இன்றி
கை மடித்து துயின்றிட நேரலாம்

புலக்காட்சிகளாய் காண்பது
புரண்டு புரண்டு மாறலாம்
புகழின் உச்சி சென்றும்
இழிவே மிச்சம் என்றாகலாம்

கால ஓட்டம் மாறுவதுபோல்
கண் இமைக்கும் நேரத்தில்
கதாபாத்திரங்களும் மாறலாம்

ஏனெனில்
இங்கே எல்லோருக்கும்
இசைக் கதிரை வாழ்வுதான்





## கோடை

ஷஹீ ஸாதிக்

சொட்டும் ஒட்டாத ஈரம்
தட்டினால் துகளாகிடுமோ?
வறண்டு குத்தும் சுவர்க்காடு!
மறந்தும் இது தூறாது போலும்,

ஆழத்தினின்று கைந்நீட்டி
ஈரம் கக்க ,
ஆற்றூற்றும் வரண்டு போன
பாதாள பாலை.

கீழ்நோக்கி கிழட்டு மண்ணில்
வீழ்ந்த்தெழும்ப
மழைக்கோர்வை விலைகேற்க!

அன்றொரு நாள் நனைந்த
நிலமின்றும் மனதில் ஈரத்தின்
சாரல்...!

மீண்டும் நனையும் பேராசை,
தீண்டா மழையின் திமிர்ப்பாஷை!
மாண்ட உயிரிதன் வலி இங்கு
தீராப்பிணி இவன் கானாளோ?



## ஆனந்தமாய் வாழ்ந்திட வழியவை

அன்ஷியா

எதிர்பார்ப்புகளை குறைத்தால்
ஏமாற்றமின்றி வாழலாம்

ஏக்கங்களை குறைத்தால்
எளிமையாக வாழலாம்

அதீத பேச்சை குறைத்தால்
அமைதியாக வாழலாம்

அரட்டைகளை குறைத்தால்
ஆபத்தின்றி வாழலாம்

தலைக்கனத்தை குறைத்தால்
தாழ்ந்திடாது வாழலாம்

சினம் குறைத்தால்
சிரிப்போடு வாழலாம்

பொய்களை குறைத்தால்
பொழிவாய் வாழலாம்

எதிலும் அளவாக இருந்தால்
ஆனந்தமாய் வாழலாம்...

## அலைபேசியும் தொலைந்த தூக்கமும்

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்

இரவைப் பகலாக்கி
உறவுகளைத் துண்டித்து
நாளுமிங்கே
உறவாகிப் போனதே
அலைபேசி...

வீட்டிற்குள் மௌனம்
ஆளுக்கொரு மூலையில்
அலைபேசியோடு
ஆனந்தக் களிப்பு...

மாணவர்களின் கைகளிலும்
மாட்சி பெறுவதால்
ஆட்சியாகிப் போனது
அலைபேசியே...

பயணத்தின் போதும்
அலைபேசியால்
விபத்துக்கள் நிறைந்து
இழப்புக்களே
அதிகமாகிப் போகின்றது...

உணவில் நாட்டமின்மை
உறவில் பாசமின்மை
தனிமையில் சிரித்து
தகாத உறவில்
நாட்டம் கொள்வதில்
முக்கிய பங்கு
அலைபேசிக்கே...

அலைபேசியின்
ஆதிக்கத்தால்
தொலைந்து போனது
தூக்கமட்டுமல்ல
எதிர்காலமும்தான்..!



## கவிஞர்கள் கவனத்துக்கு...

கவிதை மஞ்சரிக்கு கவிதைகள் அனுப்பும் வாசகர்கள் தயவு செய்து 15 - 18 வரிகளுக்கு மேற்படாமல் தமது கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். பொருட்சுவை, சொற் சிக்கனம், கருப் பொருளை நெற்றியடியாக சொல்லுதல், ஆற்றோட்டமான நடை என்பன கவிதைக்கான அடிப்படை இலக்கணம், ஒரு விஷயத்தை சுருக்கமாக, நறுக்கென சொல்வதே கவிதை.

வளவளவென நீண்டு செல்லும், பொருளற்ற கவிதைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஒரு கவிதையின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது. இளங்கவிஞர்கள் புதிய உத்திகளை பயன்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் கவி பழகும் இளங் கவிஞர்களுக்கான நடை முற்றமே கவிதை மஞ்சரி.

\- ஆசிரியர்

வ.சக்திவேல்,
சுமித்தி தங்கராசா

# வரிவிதிப்புகள் இல்லத்தரசிகளுக்கு அதிக கடன் சுமையை ஏற்படுத்தும்

இடைக்கால வரவு–செலவுத் திட்டம் பற்றி சமூகத்தின் பலதரப்–பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்–பட்ட கருத்துக்களின் தொகுப்பு....

**சீ.வி.கே. சிவஞானம்**
**வடமாகாண சபை**
**அவைத் தலைவர்**


சி.வி.கே

அரச உத்தியோகத்தர்கள் 60 வயதில் ஓய்வூதியம் பெற வேண்டும் என்ற திட்டத்தை பொருளாதார ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் மனித வள ரீதியாக பார்க்கின்ற பொழுதும் அரசியலுக்கு அப்பாற்பட்டு முன்னாள் அரச அதிகாரி என்ற ரீதியில் வரவேற்கின்றேன். தொழில்நுட்ப ரீதியானவர்களை தவிர, ஏனையோர் ஓய்வுபெற வேண்டும் என்பதும் முன்பே இருந்த நிலை... அதை அரசியல் காரணங்களுக்காக மாற்றிக் கொண்டார்கள். சிலருடைய செயல்களால் தன்மையினால் பதவியுயர்வுகள் தடுக்கப்படுகின்றன. அவை நிறுத்தப்பட வேண்டும்.. தனிப்பட்ட ரீதியில் மிகவும் வரவேற்கிறேன். பொது சேவைக்கு நல்லதொரு விடயம்.

அதேவேளை, இந்த வரவுசெலவு திட்டத்தில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. குறிப்பாக, துன்பப்படுகின்ற மக்களுக்கு மூச்சு விடக் கூடிய நிவாரணத்தைக் கொண்டிருக்கவில்லை இந்த வரவுசெலவு திட்டம்.

ஆனால் சில சில திட்டங்கள் முன்னேற்றமாக இருந்தாலும், எந்தளவிற்கு நிறைவேற்றப்படுமென்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

ஆகவே, மக்கள் சார்ந்து, அவர்களுக்கு எந்தவிதத்திலும் நிவாரணம் அளிக்கக்கூடிய எந்த ஏற்பாடும் இந்த இடைக்கால வரவு செலவு திட்டத்தில் இல்லை. சில சில முன்னேற்றகரமான சிந்தனைகள் இழையோடினாலும் கூட, அவை எந்தளவிற்கு நிறைவேற்றப்படும் என்ற கேள்விக்குறியும் இருக்கிறது.


பெ. முத்துலிங்கம்

பெரியளவில் வரவேற்க கூடியதாக இல்லை. கஷ்டப்படுகின்ற, துன்பப்படுகின்ற மக்களுக்கு நிவாரணமாக அமையாத இந்த வரவு செலவு திட்டத்தை ஏற்கக்கூடியதாக என்னால் பார்க்க முடியவில்லை.

ஏற்கனவே வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை அதுவே எமது நிலையான முடிவு.

நாடு தற்போது முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரு வாய்ப்பை இந்த வரவு செலவுத் திட்டம் தந்திருப்பதாகத் தெரிகின்ற போதிலும், அதிகரிக்கப்பட்டுள்ள வற் வரியானது, மேலோட்டமாகப் பார்க்கும்போது, வர்த்தக நிறுவனங்களையும், அல்லது நேரடி வரி செலத்துபவர்களுக்கான வரியைத் தருவதாகத்தான் தெரிகின்றது. ஆனாலும் வற் வரி மறைமுகமாக கீழ் மட்ட மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாக இருக்கும்.

வற் வரியை அதிகரிக்கும்போது அதன் சுமை நுகர்வோர் மத்தியிலேயே தாக்கம் செலுத்தும். இதில் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள். நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிக்கும், அதேவேளை உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும். இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

எனவே மேலோட்டமாகப் பார்த்தால் நாட்டிலுள்ள கடன் சுமையைத் தீர்ப்பதற்கு, வரியைப் பெற்று, ஒரு சுமுக நிலையை ஏற்படுத்துவதாக இருந்தாலும்கூட அது பெரும்பாலும் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டில் உற்பத்திகளும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், பெரிதும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களை இது பாதிக்கும். எனகண்டி சமூகஅபிவிருத்திநிறுவனத்தின் பணிப்பாளரும் சமூக ஆய்வு எழுத்தாளருமான பெரியசாமி முத்துலிங்கம் தெரிவிக்கிறார்.

இதன் தாக்கம் உடனடியாக தெரியாமல் போனாலும் காலப்போக்கில் நமது இளைஞர்கள் எதிர்காலம் மற்றும் அவர்களின் உள்ளீட்டு வீதங்கள் குறையக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம். இதனால் எதிர்கால உள்நாட்டு முதலீடுகள் குறையும் சாத்தியக் கூறுகள் அதிகம். இதில் முற்றிலும் உடன்பாடு இல்லை, வளர்ந்து வரும் நாடான இலங்கையில் இதுபோன்ற நடவடிக்கைகள் இளைஞர்களை மேலும் வரிச்சுமைக்குள்ளாக்கும். எனமட்டக்களப்பைச் சேர்ந்த சமூகசேவையாளரும், பஃவ்ரல் அமைப்பு திட்ட முகாமையாளருமான பிரசன்யா பாக்கியசெல்வம் தெரிவிக்கின்றார்.


பிரசன்யா


ஷர்மிளா

பெண்களுக்கு பொருளாதார விமோசனமளிக்கும் வரவு செலவுத் திட்டமாக அமைவதுதான் நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யும். நாட்டில் பாதிப்பங்கிற்கு மேற்பட்டோர் பெண்களாக இருக்கும் நிலையில் எந்தவொரு செயற்றிட்டமும் பெண்களை கருத்திற் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும்.

அதனால் இடைக்காலத்துக்குரியதாக இருந்தாலும் நிரந்தரமானதாக இருந்தாலும் பெண்களுக்கு பொருளாதார விமோசனமளிக்கும் வரவு செலவுத் திட்டமாக அமைவதுதான் நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யும்.

மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரிந்து நாட்டுக்கு அந்நிய செலவாணியை அனுப்பும் பெண்கள், தேயிலை இறப்பர், கொக்கோ, கோப்பி, உட்பட ஏற்றுமதிப் பயிர்கள் தோட்டத் துறையில் பணிபுரியும் பெண்கள், ஆடைத் தொழில்துறையில் பணிபுரியும் பெண்கள் உட்பட நாட்டின் பொருளாதாரத்துக்கான முதுகெலும்பாக பல துறைகளில் பெண்கள் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள்.

எனவே, இத்தகைய பெண் தொழிலாளர், படையினருக்கு விமோசனமளிக்கும் வரவு செலவுத் திட்டமே நாட்டுக்கு நல்லதைத் தேடித் தரும். வரிகளை அதிகரிப்பதன் மூலம் பெண்களின் வாழ்க்கைச் சுமையே அதிகரிக்கும். அது ஒட்டு மொத்த சமூகத்தையும் பாதிக்கும். என சமூக செயற்பாட்டாளர் ஹபீப் முஹம்மது பாத்திமா சர்மிலா தெரிவிக்கின்றார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து ஆட்சியாளர்களினதும், அரசியல் தலைவர்களினதும், ஸ்திரமற்ற போக்கே காரணமாகும்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் அதிகளவு நிலப்பரப்பரப்பு, கடல்வளம், வனவளம் என அதிகவளங்கள் கொண்டதாக அமைந்துள்ளது. இது தமிழர்களுடைய பூர்வீகம் என்பதனால் தான் கடந்த காலங்களில் அரசாங்கங்கள் பாரிய அளவில் அபிவிருத்திகளைச் செய்திருக்கவில்லை.ஓரளவுக்கேனும் செயற்பட்ட காகித ஆலை, சிமெந்து தொழிற்சாலை, ஓட்டுத்தொழிற்சாலை, கரும்புத் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டு அதற்கு ஈடான பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதற்கு அன்னியச் செலவாணி அதிகளவு தேவைப்பட்டது. ஆனாலும் இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகையால் சுற்றுலாத்துறையை ஈர்க்க முடிந்திருந்தது. ஆனாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட செலவுகளுக்கு அதிகளவு கடன்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு தற்போது தற்சார்பு பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டியுள்ளது.


சிவயோகநாதன்

இந்த நிலையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் வரவேற்றகத்தக்கதாக இருந்தாலும், அது நாட்டின் பொருளாதாரத்தில் இன்னும் தாக்கம் செலுத்தும். நாட்டில் உற்பத்தியை பெருக்க வேண்டும், சந்தை வாய்ப்பை மேம்படுத்த வேண்டும்.

எனவே கிராமப்புற உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும். இதற்கு இந்த வரவு செலவுத்திட்டம் உறுதுணையாக இருக்க வேண்டும், எனசிவில் செயற்பாட்டாளரான எஸ்.சிவயோகநாதன் கூறுகின்றார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டே நலன்புரி சேவை வழங்கும் நாடாகவே தன்னை நிலை நிறுத்திக் வந்துள்ளது. அதனால் நாடும் மக்களும் வெளிநாடுகளிடமிருந்தும் சர்வதேச கொடையாளி நிறுவனங்களிடமிருந்தும் எப்பொழுதும் எதிர்பார்ப்பவர்களாகவும் கையேந்துபவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர்.

அப்படிப்பட்ட ஒரு நிலையும் சீரான முகாமைத்துவம் இல்லாததும் ஊழலுமே தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தோற்றுவாயாக உள்ளன. அரசுகளின் கொள்கையற்ற தன்மை நாட்டையும், நாட்டு மக்களையும் இந்தளவுக்கு அதல பாதாள பொருளாதார வங்குறோத்து நிலைமைக்குள் தள்ளியுள்ளது.


ஹூசைன்

அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அடிமட்ட மக்களே தொடர்ந்து பாதிக்கப்படும் நிலை உள்ளது. மண்ணெண்ணெய் விலையேற்றமானது அடிமட்ட மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுள்ளது. குடிசைக் கைத்தொழில் செய்வோர் மலையக தோட்டத் தொழிலாள மக்கள், மீனவர்கள், விவசாயிகள் எல்லோரையும் மண்ணெண்ணெய் விலையேற்றம் முற்றாகப் பாதித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் மண்ணெண்ணெய் விலையேற்றத்தால் பாதிக்கப்பட்ட அடிமட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக இருந்திருக்க வேண்டும்.

நாட்டினதும் நாட்டு மக்களினதும் வருமானம் குறைவாகவும் செலவுத் தொகை பன்மடங்கு அதிகரித்ததாகவும் உள்ள நிலையில்,பொருளாதார அபிவிருத்தியை நாடும் நாட்டு மக்களும் எவ்வாறு அடைந்து கொள்ளப்போகின்றோம் என்பதே விடை காண முடியாத கேள்வியாகவுள்ளது.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக, பொருளாதார நெருக்கடியில் உள்ள மக்கள் நிவாரணங்களை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு அடிமட்ட மக்களையே மேலும் மேலும் பாதிப்படைய வைத்துள்ளது. மக்கள் நொந்து போயுள்ளார்கள். மக்கள் மேலும் மேலும் கஷ்டத்துடனேயே காலம் கழிக்க வேண்டியுள்ளது.

எந்த அரசாங்கம் வந்தாலும் ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்காத வரை இந்த நாட்டுக்கு எந்த விமோசனமும் இருக்காது. என சமூக ஆய்வாளர் ஹூஸைன் தெரிவிக்கின்றார்.

மக்களின் கருத்துக்கள் இவ்வாறு அமைகின்ற போது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செலவேண்டியதும், நாட்டு மக்கள் வாழ்க்கைச் சுமையை தாங்க முடியாமல் இன்னல்களுக் குட்படுத்துவதை குறைக்க வேண்டியதும், அரசின் தலையாய கடமையாகும்.

எனவே இது ஒரு இடைக்கால வரவு செலவுத்திட்டமாக அமைந்தாலும், மக்களைப் பாதிக்காத வகையில் அவற்றை நடைமுறைப் படுத்தி அதன் பலன்களை மக்கள் அனுபவிக்கின்றபோதுதான் அதனை உச்சப் பயன்களை மக்கள் பெறுவார்கள்.




கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலய பாடசாலை மாணவர்களின் போஷாக்கை கருத்தில்கொண்டு கனடா பெற்றேன் லான்ட் மீடியா ஊழியர்களின் நிதி பங்களிப்பின் கீழ் யாழ். மாநகர சபை உறுப்பினர் கலாநிதி நா தனேந்திரன் யோசப் மணிவண்ணன் குழுவினர் உலர் உணவுபொதிகளை அதிபரிடம் அண்மையில் கையளித்தபோது... ( படம்: வேலணை குறூப் நிருபர் )



ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போர முன்னாள் தலைவருமான என்.எம்.அமீனின் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வரின் ஐந்தாவது நினைவு தினம் கொழும்பு 08 இல் எல்விடிகல அடுக்குமாடி தொடரில் நடைபெற்ற போது இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் ஐந்தாவது நினைவு மலரை யாழ். எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பாலுக்கு கையளிக்கும் போது எடுத்த படம்.

## விமர்சன அரங்கு

*பிரமிளா பிரதீபனின் விரும்பித் தொலையுமொரு காடு (சிறுகதைத் தொகுப்பு) விமர்சன அரங்கு இன்று (04) பிற்பகல் 4.00 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில் நடைபெறுகிறது.*

*'ஞானம்' ஆசிரியர் தி. ஞானசேகரன் தலைமையில் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையாற்றுகிறார் குந்தவி ஸ்ரீகாந்த். கவிஞரும் கல்விப் பணிப்பாளருமான சு. முரளிதரன் 'கதைகளும் குறியீட்டுக் கதைகளும்' எனும் தலைப்பிலும், எழுத்தாளரும் தகவம் செயலாளருமான வசந்தி தயாபரன் 'சிறுகதைகளின் அக உளவியல்' எனும் தலைப்பிலும், இலக்கிய செயற்பாட்டாளர் சேவுகன் இராஜேந்திரன் 'மொழி அழகியல்' எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். ஏற்புரையும் நன்றியுரையையும் எழுத்தாளர் பிரமிளா பிரதீபன் ஆற்றுகின்றனர்.*

## இலங்கை நிலவரம் குறித்து அண்ணாமலையுடன் சதீஷ்குமார் பேச்சு




*இலங்கை தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு மற்றும் மலையக மக்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு பாரதிய ஜனதா கட்சி என்றுமே துணை நிற்கும். அத்துடன் மலையக மக்களின் அவசர பயன்பாட்டுக்காக சில மாதங்களுக்கு தேவையான ஒரு தொகை கோதுமை அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பாஜகவின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை, அவரை இந்தியாவில் சந்தித்து உரையாடிய மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சிவலிங்கம் சதீஷ்குமாரிடம் தெரிவித்துள்ளார்.*

*இலங்கை மக்களின் நுகர்வு தேவைக்காக சராரியாக மாதாந்தம் சுமார் ஐம்பதாயிரம் மெட்ரிக்டொன் கோதுமை மா தேவைப்படுவதாக தெரியவருகிறது.*

*மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ் குமார் சிவலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை (செப் 1) பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கே. அண்ணாமலையை சென்னையிலுள்ள பாஜக தலைமையகத்தில் வைத்து சந்தித்துள்ளார்.*

*இலங்கைத் தமிழரின் அபிலாசைகளுகேற்ப சிறுபான்மை மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு மற்றும் மலையக மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு தொடர்ந்தும் கவனம் செலுத்துமென அண்ணாமலை தெரிவித்துள்ளார்.*

*இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு உதவிகளை வழங்கிவரும் மத்திய அரசு அடுத்த இரண்டு வாரங்களில் மலையக மக்களின் அவசர பயன் பாட்டுக்காக பெருந்தொகை கோதுமை மா, மருந்து பொருட்கள் மற்றும் பசளை வகைகளையும் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், மலையக மக்கள் மீது விசேட கரிசனையுடன் உள்ளதாகவும் பாஜக தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*அண்மையில் இதொகா தலைவர்களான ஜீவன் தொண்டமான், செந்தில் தொண்டமான் ஆகியோர் அண்ணாமலயை சந்தித்துள்ளதுடன் மலையகம் மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் அவர் விஜயம் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

## சிகிரியாவின் அழகை இனி... (04 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் 2000 ரூபாய் அனுமதி பத்திரமுடைய ஒருவருக்கு வரிசையில் நிறகாமல் கோபுரத்தின் உச்சிக்கு செல்ல முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அந்த அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும் வெளிநாட்டவர்களுக்கான அனுமதி பத்திரத்தின் விலை 20 டொலராகும்.

வங்கிகள், சிற்றூண்டி சாலைகள் உள்ளிட்ட விழா மண்டபங்களுடன் கூடிய சேவைகள் வழங்கும் பகுதிகள் திறக்கப் படவுள்ளன. சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் நபர்களின் அனுமதிக் கட்டணம் அந்த சேவையை வழங்கும் இடங்களில் நிறைவு செய்யப் படும். எதிர்வரும் மாதங்களில் அனுமதி பத்திரத்துக்கு பதிலாக QR குறியீட்டையும் அறிமுகப்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'கொழும்பு வானத்துக்கு கீழ்'என பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த அழகான இடம் கொழும்பு வானத்துக்கு மேலே இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் .

தாமரை கோபுரம் மூன்று முக்கிய பகுதிகளை கொண்டது. கோபுரத்தின் அடிப் பாகம் கோபுரத்தின் நடுப்பாகம் கோபுர குகை மற்றும் அண்டனா உடன் கூடிய கோபுர தூண் அமைக்கப்பட்டுள்ள பகுதி. கோபுரத்தூணின் மொட்டாக காட்சியளிக்கும் பகுதி நில மட்டத்திலிருந்து 244 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அனடனாவுடன் கூடிய தூண் 103 மீட்டர் உயரமாகும். மொத்தமாக தூணின் உயரம் 351 மீட்டராகும். முக்கிய சமையலறை மற்றும் சேவைப் பிரிவுகள் மூன்று மாடிகளை கொண்டதாக அமைந்துள்ளன. மூன்று மாடிகளுக்கு மேல் உள்ள திறந்த பிரதேசத்தில் மத்திய பகுதியாகக் கொண்ட கோபுரத்தின் தாமரை தண்டு பகுதி பச்சை நிறத்தால் ஆனது . கோபுரத்தின் நடுப்பகுதி ஏழு அடுக்குகளால் ஆனது.

முதலாவது இரண்டாவது மாடிகள் தேசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணை குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பகுதியாகும். முதல் மாடியில் எதிர்காலத்தில் புதிய உற்பத்திகளுக்கான மத்திய நிலையம், நவீன தொழில்நுட்ப அனுபவத்தை பெற்றுத் தரும் 9D திரையரங்குகள், டிஜிட்டல் கலை அருங்காட்சியகம், டிஜிட்டல் வங்கி சேவை தொகுதி, சிற்றுண்டிச் சாலை என்பவற்றைக் கொண்டிருக்கும். அந்தப் பிரதேசத்தின் அளவு 1760 கன மீட்டர் ஆகும். இரண்டாவது மாடியில் கண்காட்சி கூடம் ,இரண்டு விழா மண்டபங்கள், விழாக்களுக்கான ஒத்திகை பகுதி, காரியாலய பிரதேசம் , இரண்டு சிறிய சந்திப்பு அறைகள் மற்றும் கருத்தரங்கு மண்டபங்களும் காணப்படும்அதன் விஸ்தீரணம் 2485 கன மீட்டர் ஆகும். மூன்றாவது மாடியில் ஓய்வு அறையுடன் கூடிய மண்டபம் அமைந்துள்ளது.

நாலாவது மாடியில் தாமரை மொட்டுக்களின் வடிவத்திலான மின்சார குமிழ்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விழா மண்டபத்துக்கான தனியான பாதை உண்டு. அங்கு நடைபெறும் விழாக்களில் பங்கு பெறுபவர்களுக்காக அனுமதி பத்திரம் தேவை இல்லை.

வங்கி, விழா மண்டபங்கள் ,சிற்றுண்டிச் சாலை, காரியாலயங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் வருமானத்தை பெற்றுக் கொள்ள கொழும்பு தாமரைத் தடாக தனியார் நிறுவனம் எதிர்பார்க்கின்றது .ெ வருமானம் ஈட்டவெதற்கான தொலை த்தொடர்பு வசதியை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக அன்டனாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாமரைக் கோபுரத்தின் பச்சைநிற தண்டுப் பகுதியை விளம்பரங்களுக்காக பெற்றுக் கொடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது மாடியில் தாமரைக் கோபுரத்துக்கே உரிய சுழலும் சிற்றூண்டிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அது இதுவரை காலமும் எமக்கு கனவாக இருந்த அனுபவமாகும். ஒன்றரை மணித்தியாலத்தில் 360 பாகையில் மொத்த காட்சிகளையும் சுற்றிய படியே பார்க்க முடியும்.

ஆறாவது மாடியில் முற்றிலுமாக சொகுசு வீடுகள் உள்ளன அவற்றில் ஆறு வீடுகள் அதிசொகுசு வீடுகளாகும்.

ஏழாவது மாடியில் கொழும்பு வானத்தின் கீழ் திறந்த கண்காணிப்பு மண்டப தூணில் பிரவேசிக்கும் வசதிகளை வழங்கும் எட்டு மின்தூக்கிகள் செயல்படுகின்றன. அவை உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய அதிவேக மின் தூக்கிகள் ஆகும் மின்சாரம் துண்டிக்கப்படும் போது தானியங்கி மூலம் செயல்படுவதற்காக சக்தி வாய்ந்த மின் பிறப்பாக்கிகள் மின் தூக்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் களியாட்டங்களுக்காக இடங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அதன் மூலம் வருமானத்தை பெறுவதற்கும் தேவையான நடிக்கை எடுக்கப்படுகின்றது. இப்பூமியில் வாழ்வது இலகுவான விடயம் அல்ல இந்த பாரிய கோபுரம் இந்த பூமிக்கு பாரமில்லாமல் பூமியில் வாழும் உயிர்களுக்கு நிழல் தரும் நல்ல சகுனத்தை காண்கின்றேன்.

பிரச்சினையின் பங்குதாரர்கள் அல்லாமல் தீர்வு காண பிரார்த்திக்கும் எண்ணமே முக்கியமானது. எவ்வேளையிலும் உலகை உன்னத இடத்துக்கு கொண்டு வந்தது நல்ல பிரார்த்தனைகள் தான்.



# படித்ததும் பகர்வதும் 110

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### உன்னை அறிந்தால். ..!

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான ஆற்றல்களையும் திறமைகளையும் கொண்டிருக்கின்றனர். 'எந்தவொரு ஆற்றலும் இல்லாத எவரையும் இறைவன் உலகில் படைக்கவில்லை' என்றால் அதனை எவராலும் மறுக்க முடியாது. உடல் உறுப்புக்களில் குறைப்பாடு உள்ளவர்களும் கூட, வேறு சில விடயங்களில் விஷேட ஆற்றல் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். கண்பார்வையற்ற சிலர், கேட்பதில் கூர்மையுள்ளவர்களாகவும், கேட்பதை மனதில் நன்கு பதிவு செய்து கொள்ளக் கூடியவர்களாகவும், சிறந்த பாடகர்களாகவும் இருப்பதை உதாரணமாகக் கொள்ளலாம்.



ஒவ்வொருவரும் தத்தமது விஷேட ஆற்றல்களை சரியாக இனங்கண்டு அவற்றை விருத்தி செய்து கொள்வதோடு தமது ஆற்றல்களுக்கு பொருத்தமான தொழில்களில் ஈடுபடுவதே சிறந்த வெற்றிகளுக்கும், உயர்ந்த அடைவுகளுக்கும், உயர்வடைவதற்கும் வழிவகுக்கும். இதனோடு ஒவ்வொருவரும் தத்தமது சுய விருப்பத்துக்கும் உரிய இடமளித்தல் வேண்டும்.

இவற்றுக்கு மாற்றமாக தமக்கு விருப்பமில்லாத, தமது ஆற்றலுக்கும் விருப்பத்துக்கும் பொருத்தமில்லாத தொழில்களிலும், விடயங்களிலும் ஈடுபடுவது பெரும்பாலும் வெற்றியளிக்காது என்பதை கண்கூடாக காண முடியும். பெற்றோரின், நண்பர்களின் அல்லது மேலும் சில நபர்களின் வற்புறுத்தல்களுக்கு இணங்கி தமது விருப்பத்துக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமில்லாத விடயங்களில் ஈடுபடுவோர் முடிவில் கைசேதப்படுவதில் பிரயோசனம் இல்லை.

இவற்றின் அடிப்படையில்தான் மாணவர்கள் தமது உயர் கல்வியை தேர்ந்தெடுக்கும் போது, பெற்றோரினதும் மற்றோரினதும் விருப்பத்துக்காக அன்றி மாணவர்களின் விருப்பத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு செயல்படுவோரே மன நிறைவாக வாழ்வதுடன், வாழ்க்கையில் உயர்ந்த வெற்றி இலக்குகளை அடைகின்றனர்.

'நண்பா! நீ உன்னை சரியாக அறிந்தால்தான் உலகத்தில் எத்தகைய சவால்களையும் சமாளித்து, உன் முன்னேற்றப் பாதையில் இருக்கும் எல்லாவித முட்டுக் கட்டைகளையும் தகர்த்தெரிந்து, வெற்றி இலக்குகளை அடைந்திட முடியும். உன் ஆற்றல்களை அதிகரித்து அதிசய சாதனைகளை செய்திட இயலுமாகும். இதனை கருத்தில் கொள்ளத் தவறாதே!'

இத்தகைய விடயங்களை நன்கு விளங்கி, தன்னை அறிந்து, புரிந்து, உணர்ந்து, தெரிந்து தமக்கு பொருத்தமான, தமக்கு விருப்பமான தமது ஆற்றல்களினாலும் திறமைகளினாலும் உயர் வெற்றிகளை பெறக்கூடிய விடயங்களிலும் தொழில்களிலும் ஈடுபட முயற்சிப்பதே புத்திசாலித்தனமாகும்.

## நெஞ்சுக்கு நீதி

உனக்குள்உன்னையேஉய்த்தறியத்தேடு
உணர்வாய்உன் பலம் உயர் அறிவோடு
தனக்குள் தகிக்கின்றவெறியுணர்வோடு
திறமை காட்டியே வெற்றி நடை போடு!

## நூலகத்துக்கு ஒரு நூல்

### 'ஞானம்' அருள்வாக்கி சிறப்பிதழ்



இலங்கையில் 23 வருடங்களாக தொடர்ச்சியாக, சிறப்பாக வெளிவரும் கலை இலக்கிய சஞ்சிகை 'ஞானம்'. ஞானம் சஞ்சிகை அவ்வப்போது மிகச் சிறப்பான முறையில் பல்வேறு தலைப்புகளில் சிறப்பிதழ்களை வெளியிட்டு வருகிறது. இத்தகைய சிறப்பிதழ்கள் அனைத்தும் மிகக் காத்திரமானவையாகவும், மிகவும் பயன்பாடுமிக்கவையாகவும், பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துக் கருவூலங்களாகவும், இருப்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது.

'ஞானம்' சஞ்சிகை தனது 217 ஆவது இதழை ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் கொடுமுடி 'வித்துவதீபம்' அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நூற்றாண்டுச் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ள மிகச்சிறந்த இஸ்லாமிய இலக்கிய ஆளுமை அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். இவரைப்பற்றி அதிகம் பேசப்பட்ட போதும் அவர் பற்றிய விடயங்களும் அவரது படைப்புகளும் முழுமையாக எழுத்துருவில் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை என்பதே உண்மை. இன்றைய காலகட்டத்தில், இந்த குறையை பெருமளவில் நிவர்த்திப்பதற்கான பெரும் முயற்சியாக இச்சிறப்பிதழ் அமைந்துள்ளது.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் புலவர் பற்றி, "வித்துவ தீபம்" பட்டம், வழங்கிய அசனாலெப்பை, முஸ்லிம் பாதுகாவலன் வாழ்த்துக்கவி, அருள்வாக்கியின் வரிகளில் அறிஞர் சித்திலெப்பை, அமிழ்தக்கவி, அப்துல் காதிர் புலவர் நிகழ்த்திய தீபசித்தி, சித்திரக்கவிப் புலவர், தினகரன் பத்திரிக்கையில் (1965), மலையகம் தந்த வித்துவதீபம், சந்தத் திருப்புகழ் பாடிய 'புலவர்மலை'க் கோமான், அட்டாவதானி அப்துல் காதிர், வெண்பா வேந்து, அருள்வாக்கிக்கு முத்திரை" எனும் பல தலைப்புகளில் அருள்வாக்கியின் வாழ்க்கை வரலாறு பற்றிய விடயங்கள் இதில் தரப்பட்டுள்ளன.

அருள்வாக்கியின் நூல்கள் பல இச்சிறப்பிதழில் முழுமையாக இடம்பெறச் செய்யப்பட்டுள்ளமை விசேடமாகும். சில நூல்கள் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ள அதேவேளை இன்னும் சில நூல்கள் "ஸ்கேன்" (Scan) செய்து உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த வகையில், "பிரபந்தப் புஞ்சம் (அடைக்கலமாலை, முனாஜாத்து, எண்கலை வண்ணம், வன்மெல்லிசை வண்ணம், கண்டிப் பதிற்றுப்பத்தந்தாதி, அருண்மணி மாலை), சந்தத் திருப்புகழ், காட்டுபாவா சாகிபு கும்மி, வழிநடை பயித்துமாலை, காரணப் பிள்ளைத்தமிழ், தன்பீஹுல் முரீதீன்" எனும் நூல்களை முழுமையாக வாசகர்கள் வாசிக்கக்கூடிய வாய்ப்பை இந்த சிறப்பிதழ் வழங்கியுள்ளது.

அருள்வாக்கி பற்றி பிறர் கூறிய கூற்றுக்கள் பல பக்கங்களில் கட்டமிட்டு சிறப்பாக, தனித்துவமாக இடம்பெறச் செய்யப்பட்டுள்ளமை இதன் சிறப்பை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. 'ஞானம்' சஞ்சிகையின் 2018 ஜுன் மாத இதழாக இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ள போதிலும், பக்கங்கள் 292ல் பெரும்பாலான பக்கங்களில் அருள்வாக்கி பற்றிய விடயங்களே நிறைந்து காணப்படுகின்றன. எனவே இதனை ஒரு சஞ்சிகையின் சிறப்பிதழாக அன்றி, அருள்வாக்கி பற்றிய ஒரு தனி நூலாக கணிக்க முடியும். இந்நூல் தமிழ் வாசகர்களை கொண்ட எல்லா நூல் நிலையங்களிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய 'தனிநூல்' என்று உறுதியாகக் கூறலாம்.

நூல்: 'ஞானம்' அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் சிறப்பிதழ், ஆசிரியர்: தி. ஞானசேகரன், பக்கங்கள்: 292, விலை: ரூபா. 500/= தொடர்புகளுக்கு: 0112586013, 0777306506



திரு வி. என். மதிஅழகன், எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூலான "சொல்லும் செய்திகள்" பற்றி கடந்த 2022 ஆகஸ்ட் 21ம் திகதிய எமது பத்தியில் எழுதியிருந்தோம். ஆனாலும் பக்க வடிவமைப்பில் ஏற்பட்ட தவறின் காரணமாக நூலின் படத்துக்குப் பதிலாக வேறொரு படம் பிரசுரமாகியுள்ளது. இத்தவறுக்கு வருந்துகிறோம். சரியான படத்தை இங்கே பிரசுரித்துள்ளோம்.

## பேசும் கவிதை சிறைச்சாலைக்காக

இழந்த உயிர்களோ கணக்கில்லை
இருமிச் சாவதில் சிறப்பில்லை
இன்னும் என்னடா விளையாட்டு
எதிரி நரம்பிலே கொடியேற்று.
வீரத்தைக் குண்டுகள் துளைக்காது
வீரனைச் சரித்திரம் புதைக்காது
நாட்டை நினைக்கும் நெஞ்சங்கள்
வாடகை மூச்சில் வாழாது.!

- கவிஞர் அறிவுமதி

## சிந்தனை செய் மனமே

### சிறைக் கைதிகளின் சித்தி




2021ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி, பலர் சித்தியடைந்து மகிச்ழ்சியிலும், சிலர் சித்தியடையாடத் தவறி கவலையிலும் உள்ள இந்த நேரத்தில் பொதுவாக சகலரும் மகிழத்தக்க ஒரு விடயம் நிகழ்ந்துள்ளது.

கல்வி கற்க வயது, வசதி, இடம், சூழல், நிலைமை எதுவுமே பொருட்டல்ல என்பதை நரூபித்து, இவ்வருட உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பல சிறைக்கைதிகள் சித்தியடைந்துள்ளனர்.

சிறைச்சாலைகள் திணைக்களம் ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் திணைக்களத்துடன் இணைந்து தகுதியான சிறைக் கைதிகள் உயர்கல்வியைத் தொடர வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. அதற்கமைய, கொழும்பு மெகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று கைதிகள் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர்.

அதில், முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான, 38 வயதுடைய கைதியொருவர், அவர் தோற்றிய புவியியல், இந்து நாகரிகப் பாடங்களில் "C " சித்திகளையும், தமிழ் மொழியில் S சித்தியையும் பெற்றுள்ளார். அதைப்போல் வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 46 வயதுடைய கைதியொருவர், சிங்களம், பௌத்தம், அரசறிவியல் பாடங்களில் S சித்திகளைப் பெற்றுள்ளார். இதேபோன்று வெலிக்கடை சிறையிலுள்ள மற்றுமொரு கைதியும் உயர்தரத்தில் சித்தியடைந்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார். சிறைக் கைதிகளின் இவ் உயர்தரப் பரீட்சை சித்தி பலருக்கும் சிறந்த முன்மாதிரி என்றால் மிகையல்ல.

## தகவல் களஞ்சியம்

### இலங்கையில் மின்சார முச்சக்கர வண்டிகள்

மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டிகள் வெகு விரைவில் இலங்கையில் பாவனைக்கு வரவுள்ளன. அண்மையில் அமெரிக்காவுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை இதற்கு வழி செய்கிறது. இதன்கீழ் இலங்கையில் எரிபொருளில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றும் செயல் திட்டமொன்று வெகு விரைவில் அமுல் செய்யப் படவுள்ளது.



அமெரிக்க அரசாங்கம், அதன் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரகமான 'யூசேய்ட்' (USAID) ஊடாக, இலங்கையில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு 'சுத்தமான எரிசக்தி' திட்டத்தை விரைவுபடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் ஆகியோர் முன்னிலையில் இது தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் போன்ற நிலையான எரிசக்தி சேமிப்புத் திட்டங்கள் அனைத்து இலங்கையர்களுக்கும் பசுமையான எதிர்காலத்தை உருவாக்க உதவுகின்றன என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங் இந்த நிகழ்வின்போது கூறியுள்ளார்.

இந்த கூட்டு ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையின் மிகப்பெரிய வாகன நிறுவனமான 'டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி', எரிபொருளில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றி விற்பனை செய்யவுள்ளது. இவற்றுக்கு விற்பனைக்குப் பிந்திய சேவைகளையும் நாடளாவிய ரீதியில் உள்ள தமது சேவை மையங்கள் மூலம் வழங்கவுள்ளது.

இலங்கையில் முச்சக்கர வண்டித் தொழிற்துறை 500,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு நிலையான வேலைவாய்ப்பை உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

1961ம் ஆண்டு முதல் USAID, இலங்கையில் பொருளாதார மேம்பாடு, தொழில் முனைவு, பெண்கள் வலுவூட்டல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்கு இரண்டு பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக (இலங்கை ரூபாவில் 700 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகம்) வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# ஒருவரிடம் இயல்பாக உருவாகும் ஒருவகை மனநிலையே தலைமைப்பண்பு



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 22

கே. பத்மானந்தன்



தலைவர்கள் எப்போதும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள். அவர்கள் பேசுவதைவிட எப்போதும் செயல்கள் செய்வதிலேயே கவனமாக இருக்கிறார்கள் . இன்னொரு விதமாகச் சொல்வதானால் அவர்களின் வார்த்தைகளை விட அவர்களின் செயல்கள் சத்தமாகப் பேசுகின்றன. அவர்களின் செயல்கள் எல்லா இடங்களிலும் நேர்மறை ஆற்றலைப் பரப்பி, அவர்களைப் போல் அல்லது அவர்களை விடச் சிறப்பாக இருக்க வேண்டும் என்று ஏனையவர்களைக் கனவு காணத்தூண்டுகின்றன. இத்தூண்டல் காரணமாக ஏனையவர்கள் தலைவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கற்றுக்கொள்ளவும் தமக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவும் ஊக்கம் பெறுகிறார்கள். இத்தகைய தலைமைப்பண்பு உடைய முகாமையாளர்கள் மற்றவர்களுக்கு தங்கள் சொந்த ஆற்றலை வளர்க்கவும், அவர்களின் வெளியீடுகளை அதிகரிக்கவும் உதவுகிறார்கள். இதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார் .

**"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அறிவினையும் மாண்டது அமைச்சு" (குறள் 631)**

அதாவது முகாமையாளரின் பங்கு என்பது தனது நிறுவனத்தில் உள்ள கருவிகள், நேரம், செயல்பாட்டு உத்திகள் மற்றும் செயல் வகை ஆகியவற்றை நன்மை தரும் பொருட்டு அல்லது லாபம் தரும் பொருட்டு மேம்படுத்துவதாகும் என்கிறார் திருவள்ளுவர். செய்யப்படும் செயல், அதற்கு வேண்டிய கருவி, அதற்கு ஏற்ற காலம், அதனைச் செய்யும் முறை, ஆகிய இவைகளைப் பொருத்தமாகத் திட்டமிட வல்லவராக முகாமையாளர் இருக்க வேண்டும் அப்போதுதான் அவற்றை மேம்படுத்தமுடியும். இங்கு கருவி என்று திருவள்ளுவர் கூறியதில் மனிதவளமும் அதாவது பணியாளர்களும் உள்ளடக்கம். இந்தப் பணியாளர்களைத் தூண்டி அவர்கள் தொழிலினைச் சரியான முறையில் செய்வதற்கு வேண்டிய தங்கள் திறன்களை வளர்த்து ஆற்றலை மேம்படுத்தித் தமது வெளியீடுகளை மேம்படுத்தும் வகையில் முகாமையாளரின் செயல்கள் முன்னுதாரணமாக அமையவேண்டும்.

'தலைவர்' ( Leader) என்ற வார்த்தை lead என்ற சொல்லில் இருந்து வந்ததாக மொழியியலாளர்கள் கருதுகிறார்கள். lead என்றால் பாதை, சாலை, வழி அல்லது போக்கு என்று பொருள்படும்.

எனவே தலைவர் என்பவர் பாதை ஒன்றைக் கண்டுபிடிப்பவர் அல்லது பாதை ஒன்றை உருவாக்கி பயணத்தை ஒழுங்குபடுத்தி அல்லது வடிவமைத்து தன்னைப் பின்தொடருபவர்களுக்கு வழிகாட்டி அவர்கள் இலகுவாகப் பயணம் மேற்கொள்ள வழி சமைக்கிறார் என்று பொருள் கொள்ளலாம்.

எனவே ஒரு மக்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்க விரும்புபவர் அந்த மக்கள் கூட்டம் மேற்கொண்டு பயணிப்பதற்கான பாதையை வகுப்பவராக அந்தப் பயணத்திகு வேண்டிய உத்திகளை உருவாக்குபவராக இருந்தால் மட்டுமே அவரினால் தலைமை தாங்க முடியும்.



ஒரு முகாமையாளரிடம் இருக்கவேண்டிய இந்தத் தலைமைப் பண்பை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகிறார் .

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு" (குறள் 385)**

ஒரு நிறுவனம் இயங்குவதற்கான வளங்களை, உத்திகளை, பாதைகளை ஆக்குதலும், அதன்மூலம் வருவாய் பெறக்கூடிய இலக்குகளை அடைதலும், அவ்வாறு ஈட்டிய பொருட்களைப் பாதுகாத்தலும், அப்பொருட்களை வகைப்படுத்தி வழங்குவதுமான பணிகளை முகாமையாளர் செய்ய வேண்டும் என்பது திருவள்ளுவரின் எதிர்பார்ப்பாகும். சுருக்கமாக ஒரு முகாமையாளரின் செயல் என்பது ஆக்குதல் ( இயற்றல் ), தொகுத்தல் (ஈட்டல்) , காத்தல், அவற்றை பங்கீடு செய்தல் என்ற நாற்பெரும் தலைமைப் பணிகள் கொண்டதாக அமையும் என்று திருவள்ளுவர் இங்கு விளக்குகிறார்.

இந்தக் குறளினை இன்னும் நுணுகி நோக்கினால் ஒரு அரசின் வரவுசெலவு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையை இது கூறுவதைக் காணலாம்.

'அரச நிதி' என்று பொதுவாக இன்றைய பொருளியல் நிபுணர்கள் கூறும் வருவாய்த்துறையின் (Revenue) பகுதிகளான வருவாய்க்கான வழிவகைகளை இயற்றல், அதன்மூலம் வருவாய்களை ஈட்டல், ஈட்டப்படும் வருவாய்களைக் காத்தல், அரசின் செலவுகளை வகுத்தல் என்பவையே இங்கு குறிக்கப்படுகின்றன. இவைதான் பொது வருமானம் (Public Revenue) நிதி நிருவாகம் (Financial administration) பொதுச் செலவீடு (Public Expenditure) என நிதியிய முகாமைத்துவத்தில் அறியப்படுகின்றன.

தலைமைப்பண்பு என்பது ஒருவரிடம் இயல்பாக உருவாகும் அல்லது உருவாக்கப்படக் கூடிய ஒருவகை மனநிலை.

ஒருவரிடம் இருக்கும் கல்வித் தகமைகளோ அல்லது அவரிடம் இருக்கும் செல்வங்களோ அல்லது அவரிடம் இருக்கும் பதவி வழி அதிகாரங்களோ அவரை ஒரு தலைவராக ஆக்கமுடியாது . சில நெறிமுறைகளை , கொள்கைகளை , மதிப்புகளை, நடைமுறைகளை உருவாக்கி அவற்றைப் பின்பற்றுவதன் மூலமே அவரினால் தலைவராக இருக்கமுடியும் .

இத்தகைய தலைமைப் பண்புகளை ஒருவர் தான் வாழும் உலகினைத் தனது அனுபவத்தினூடாக உணர்ந்து கொள்வதன்மூலம் சிறப்பாகப் பெற முடியும் .இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாகக் கூறுகிறார் .

**"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்". (குறள்637)**

ஒரு முகாமையாளர் என்பவர் நூலறிவின் மூலம் ஒரு செயலைச் செய்யும் வகைகளை அறிந்திருந்த போதிலும் உலகத்தின் இயற்கையைத்தன்மையை அதன் போக்கை தனது அனுபவத்தினூடாக அறிந்து உலகோடு பொருந்திப்போகுமாறு செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . இன்னும் கூறப்போவதானால் நிறுவனத்தை முகாமை செய்யும்போது முன்பே ஒரு நிறுவனத்தை எவ்வாறு முகாமை செய்யலாம் என எழுதி வைக்கப்பட்ட நூற்கல்வி மூலம் நிறுவனத்தை எவ்வாறு முகாமை செய்யலாம் என்று அறிந்தாலும் அன்று இருக்கின்ற உலக நடையினை அறிந்து அவ்வக் காலத்திற்குரிய உலக இயற்கைக்கு , நடைமுறைக்கு ஏற்பவே முகாமையாளர் செயற்படுதல் வேண்டும்.

அப்போதுதான் அவரினால் சிறந்த தலைவராக இருக்க முடியும் என்பது திருவள்ளுவரின் எண்ணம் .காலத்துக் காலம், நாட்டுக்கு நாடு பற்பல நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் மாறுவதால் ஒரு முகாமையாளர் இவ்வாறு ஏற்படும் மாற்றங்களை விளக்கிக்கொண்டு தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும் .

பல முகாமையாளர்களுக்கு நிறைய புத்தக அறிவு மற்றும் நிறைந்த திறன்கள் இருந்த போதிலும் அவர்களுக்கு உலகத்தினை அதன் நடைமுறைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றலும் அனுபவமும் இல்லாமல் இருப்பதனால் அவர்கள் தமது நிறுவனத்திற்கு தலைமை தாங்க இயலாதவர்களாக இருக்கிறார்கள் .அவர்களின் கற்றறிந்த கல்வியினால் எந்த உதவியினையும் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள் .இதனையே ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். ஈற்றில் இவர்கள் தமது தன்னம்பிக்கையை இழந்து தன்னைப் பின்பற்றுபவர்களையும் தன்னம்பிக்கையை இழக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறார்கள் . உலக இயங்கியலைப் புரிந்துகொண்டு எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை நம்பிக்கையோடு எதிர்கொண்டு இயங்குவதற்கு ஏற்றமாதிரியான விருப்பத்திற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கும் தலைமைப் பண்பினை முகாமையாளர்கள் கொண்டிருக்க வேண்டும் .இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார் .

**"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்" (குறள் 625)**

அதாவது முகாமையாளர் ஒருவர் தொடர்ச்சியான சோதனைகளை எவ்வளவு சந்தித்தாலும், அவர் வலிமையான நம்பிக்கையை கொண்டவராக இருந்தால் அவர் சந்திக்கும் சோதனைகள் மறைந்துவிடும். சில சமயங்களில் துன்பம் அடுத்து அடுத்து ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும். அப்படித் துன்பம் பட்டாளமாக 'அடுக்கி வரினும்' மனம் அழியாதவனை ஊக்கம் குலையாதவனை அடைந்த துன்பம் தான் துயரடையும் என்று கூறுகிறார் திரு வள்ளுவர். எவ்வளவு துன்பங்கள் எதிர்ப்பட்டாலும் அவை கலங்கா நெஞ்சுடையார் முன் காயப்பட்டு அகலும். எனவே நிறுவனத்தில் அலை அலையாக இடர்கள் வந்தாலும் தனது முயற்சியில் அழுந்தக் காலூன்றி நிற்கின்ற முகாமயாளர் என்பவர் வந்த துன்பம் 'இவரைத் துன்புறுத்தித் துவளச் செய்யமுடியவில்லையே' என்று துன்பப்பட்டோடும்படி செய்து, தனது செயல்களை நிறைவேற்றுவார்.

இக் காரணங்களால் தலைமை தாங்க நினைக்கும் ஒரு முகாமையாளர் தனது இயங்கு களத்தில் உள்ள பாடங்களைப் பற்றிய முழுமையான அறிவையும் தொடர்புடைய திறன்களில் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதால், அவர் அறிவு இயக்கவியலை அறிந்தவராகவும் உணர்திறன் உடையவராகவும் இருக்க வேண்டும் என்பதோடு அவரது உலக இயங்கியலையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். சூழ்நிலை அறிவும், சமகாலத் திறன்களும் இல்லாத பட்சத்தில், அவருக்குக் கீழ் உள்ளவர்களால் அவர் ஓரங்கட்டப்படுவார் என்கிறார் திருவள்ளுவர் .

(தொடரும்)

## நான்கு நூற்றாண்டுகால... (04 ஆம் பக்கத் தொடர்)

இன்று எமது நாட்டில் காணப்படுவதும் 1948 இல் ஐக்கிய தேசியக் கட்சி உருவாகிய போது காணப்பட்ட அரசியல் சூழ்நிலையின் மற்றுமொரு பக்கமாகும். அன்று ஜனநாயக அரசியல் சுதந்திரத்தை வெற்றி பெறுவதற்கு அனைவரும் இணைய வேண்டியிருந்தது. இன்றும் நிலைமை அவ்வாறேயுள்ளது.

இன்று நாட்டில் பொருளாதார சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளும் போராட்டமே காணப்படுகிறது. அதற்காக இன்று ஐக்கிய தேசிய கட்சி தலைமை வகிக்கின்றது. பிரதான பங்காளி கட்சியான பொதுஜன எக்சத் பெரமுனவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சில தலைவர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் சிலரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் அரசுடன் முன்னணியில் இருப்பது புதிய பயணத்தை ஆரம்பிப்பதற்காகும். அதற்கு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பும் அவசியமாகும். அது நாட்டுக்காக செய்யும் பெரும் பணியாகும். இந்நாட்டில் உண்மையான சரித்திரம் பற்றிய அறிவில்லாத வெற்று மனிதர்கள் இந்நாட்டில் 75 வருட காலத்தில் இடம்பெற்ற அழிவு பற்றி புலம்புகின்றார்கள். இது தற்போதைய நிலைமையை மூடி மறைக்கும் செயலாகும். சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் நாட்டிற்கு சாபக்கேடு என்றால் 74 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த ஏகாதிபத்திய ஆட்சி செழிப்பான காலம் போன்றது என்ற அர்த்தமாகும். ஆனால் சுதந்திரத்துக்கு முன் சுமார் 400 வருடங்கள் இந்நாட்டில் இடம் பெற்ற காலனித்துவ செயல்பாடுகளினால் தான் ஒரு தேசமாக எனது நாட்டின் வீழ்ச்சி ஆரம்பமானது என்பதை மறைக்கின்றனர். அத்துடன் அது பற்றி கருதுவதுமில்லை.ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் தேசிய தலைவர்களுக்கு மரண தண்டனை விதித்தல், சொத்துக்களை அரசுடமையாக்கல், சிறையில் அடைத்தல், நாடு கடத்தல் என்பன போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. சில நாட்களிலேயே 1948 மாத்தளை புரட்சியின் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தேரர்களின் விகாரைகளில் காணப்பட்ட புனித பேழைகளையும் வெள்ளையர்கள் ஏலமிட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டதாக இந்த 74 வருட சாபக்கேட்டை எழுதுபவர்கள், கதைப்பவர்கள் அறியாதிருக்கிறார்கள் என்பது எமக்கு புரிகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை அமைத்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் விவசாயிகளை பலப்படுத்தல், புத்த மதத்தை மற்றும் புத்தசாசனத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகளை செயல்படுத்தியது உண்மையாகும். இன்று எமது கட்சி 76 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டை நடத்துவது நாடு பெரும் பொருளாதார பிரச்சினையில் மூழ்கியுள்ள சந்தர்ப்பத்திலாகும். அதிலிருந்து நாட்டையும் இனத்தையும் மீட்பது காலத்தின் அவசியமாகும். அதனை நாம் நன்றாக புரிந்து கொண்டுள்ளோம். யாரும் எம்மை வெறுப்பவர்களாக, கோபம் கொள்பவர்களாக, எம்மை தோல்வியடைய செய்ப நடவடிக்கை எடுப்பவர்களாக எண்ணாமல் இந்த பிரச்சனையிலிருந்து வெளிவர முயற்சிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் பேதமின்றி மீண்டும் இணைவோம். புதிய இலங்கையை உருவாக்குவோம்.

1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் எமது கட்சிக்கு இந்த நாட்டை ஆள்வதற்கான பூரணமான அதிகாரம் கிடைக்கவில்லை. அரசியலமைப்பு அதிகாரம் பல சந்தர்ப்பங்களில் கிடைத்தாலும் நிறைவேற்று அதிகாரம் எமக்கு எதிரானவர்களுக்கோ

எமக்கு துரோகம் செய்தவர்களுக்கோ தான் கிடைத்தது. 28 வருட காலமாக நிறைவேற்று அதிகாரம் அற்ற நாம் ஒரு கட்சியாக நடவடிக்கையில் ஈடுபட்டோம். இன்று எமது கட்சியின் தலைவருக்கு நிறைவேற்று அதிகாரம் கிடைத்துள்ளது. இந்நாட்டில் எந்த ஒரு ஆட்சியாளருக்கும் கிடைக்காத நிறைவேற்று அரச அதிகாரம், அதிகார பரிமாற்றத்தில் கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் செயல்படும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பு என்னவென்றால் ,கட்சியைப் பற்றி இல்லாமல் தமது தாய் நாட்டை மக்களைப் பற்றி எண்ணுவதாகும். அவ்வாறில்லாவிட்டால் எம் அனைவருக்கும் மீண்டும் ஏழ்மையின் பிடியில் சிக்கி அழிந்துள்ள நாட்டிலேயே வாழ நேரிடும். அதிலிருந்து நாட்டை மீட்கும் பாரிய பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளது. இரவின் இருட்டான வேளை இரவு 11 மணி தொடக்கம் 12 மணி வரையான காலமாகும். அக்காலம் கடந்து போனவுடன் மெல்ல மெல்ல அதிகாலை வேலை உதயமாகும். அதன் பின்னர் பூரணமான சூரிய ஒளியால் உலகம் மிளிரும். இன்று நாம் ஒரு நாடாக இருண்ட யுகத்தை கடக்கின்றோம். இதனை பொறுமையுடன் மற்றும் பொறுப்புடனும் திட்டமிட்டும் கடந்து சென்றால் ஒளி நிறைந்த அதிகாலையை அடையாலாம். அதற்காக அனைவரும் இணைய வேண்டும். அதனை நிறைவேற்ற ஐக்கிய தேசிய கட்சி என்னும் சூரிய ஒளியால் முடியும்.

## பொலிஸ் சேவை கடந்து வந்த... (13ஆம் பக்கத் தொடர்)

**வாகன கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு**

வாகன கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பை மேற் கொள்ளும் பொலிசார் கடமையின் போது மக்களின் எதிர்ப்புக்கு உள்ளகின்றனர். நாளுக்கு நாள் அதிகரிக்கும் வாகனங்களினால் ஏற்படுகின்ற வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் தேவை ஏற்படுகின்றது. தவறுகள் மற்றும் வாகன விபத்தினை கட்டுப்படுத்துவதற்கு மோட்டார் வாகன சட்டத்தின் அடிப்படையில் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் குற்றம் இழைக்கப்பட்டவர்களுக்காக தடைவிதித்தல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் அரசுக்கு பெருந் தொகையான நிதி அறவிடப்படுகின்றது. போதை பொருள் பாவனை செய்யும் மக்களை விட போதை பொருள் விற்பனை செய்யும் நபர்களை கைது செய்வதே அதிகளவில் பதிவாகியுள்ளது. அதற்கு காரணம் இன்னும் நமது நாட்டில் ஹெரோயின், மொப்பின், ஐஸ் போன்ற போதை பொருட்களை பாவித்து போதையிலிருக்கும் நபர்களை கைது செய்வதற்கு நிரந்தர தீர்வு மற்றும் சட்டமின்மையாகும். வருடமொன்றுக்கு பொலிசாரால் செய்யப்படும் கடமை மூலம் அரசுக்கு நிதி சேகரித்து வழங்கப்படுகின்றது.

**16. குருநாகல்**

சமுத்ர புத்தக நிலையம், 10, புத்தளம் வீதி, குருணாகல்.
சமுத்ர புத்தக நிலையம், 8/2, மிகுந்து மாவத்தை, குருணாகல்.
சமுத்ர புக் கியூரியோ, இல 25/27, புத்தள வீதி, குருணாகல்.
சமுத்ர புத்தக நிலையம், இல 04, ராஜபில மாவத்தை, குருணாகல்.
சமுத்ர கொன்சோல்டேட்டட் (பிவிடி), 5, ஸவுத் சேர்குளர் வீதி, குருணாகல்.
காரீஸ் புத்தக நிலையம், 577, மீகஹகொட்டுவ, குளியாபிட்டிய.
சரசவி பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ், 24, தம்புள்ள வீதி, குருணாகல்.
ரிச்சர்ட் டிரேடிங் கொம்பனி (பிரைவேற்) லிமி., 64, பரகும்பா வீதி, குருணாகல்.
சரசவி மார்கெட்டிங் என்டர்பிரைஸ், 135, கொழும்பு வீதி, குருணாகல்.
சத்துரங்க புத்தக நிலையம், இல. 60, குருணாகல் வீதி, பன்னல.
மிகிர புத்தக நிலையம், 41, சிலாப வீதி, வாரியபொல.
ரிடர்ஸ் புத்தக நிலையம், பஸ் நிலையத்திற்கு முன்னால், 184A, குருணாகல் வீதி, நாரம்மல
சமாதி புத்தக நிலையம், 7-8, புதிய பஸ் நிலையம், கல்கமுவ.
யச இசுறு டிரேட் சென்டர் புத்தக நிலையம், இல. 39, குளியாபிட்டிய வீதி, நாரம்மல.
பவித்ரா பொத்ஹல, பிரதான வீதி, மஹவ.
சம்பத் புத்தக நிலையம், 49, கொழும்பு வீதி, குருநாகல்.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேற்) லிமி., இல. 56, கொழும்பு வீதி, குருநாகல்.
ஹன்சித்த புத்தக நிலையம், இல. 43/1, குருணாகல் வீதி, வாரியபொல.
எம்.டீ.குணசேன & (பிறைவட்)லிமி, இல 67, கொழும்பு வீதி, குருணாகல்.
குமுடித்த புத்தக நிலையம், 101/ C, புத்தளம் வீதி, நிக்கவரட்டிய.
ஹர்ச பிரிய புத்தக நிலையம், நீர்கொழும்பு வீதி, மாக்கந்துர, கொனவில
சஞ்சீவ கொமியுனிகேசன் அன்ட் புத்தக நிலையம், இல 36, புதிய பஸ் நிலையம், குளியாபிட்டிய
மின்சர பொத் மெதுர, இல 7, ஆனந்த மாவத்த, குளியாபிட்டிய
சம்பத் புத்தக நிலையம், இல 24, கண்டி வீதி, குருணாகல்.
சமகி புத்தக நிலையம், பிரதான நகரச் சந்தி, கலிகமுவ.

**17. அனுராதபுரம்**

குணசேகர அன்ட் கோ, 234, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அனுராதபுரம்.
புத்திக புத்தக நிலையம், 282, பிரதான வீதி, பேங் பிளேஸ், அனுராதபுரம்.
சஞ்ஜீவ பாமஸி அன்ட் புக் ஷொப், இல. 136, பிரதான வீதி, கெக்கிராவ.
முத்துகுட பேப்பர் கோணர் அன்ட் பிரின்டர்ஸ், நியு டவுண், தம்புத்தேகம.
முத்துகுட பேப்பர் கோணர், இல.34, கெகிராவ வீதி, எப்பாவெல.
பேண்டா ஹவுஸ், தலாவ வீதி, எப்பாவல
சமுத்ர கொன்சோல்டேட்டட் (பிவிடி), 56/248, நியு பஸ் நிலையம், அனுராதபுரம்.

**18. பொலன்னறுவை**

தீபானி புத்தகசாலை, 70, பொதுச் சந்தை, ஹிங்குரக்கொடை.
நியு தீபானி புத்தகசாலை, 125, டீ.எஸ். சேனநாயக்க வீதி, ஹிங்குரக்கொடை.
புவச புக் மெதுர, வைத்தியசாலை சந்தி, பொலன்னறுவை.
பேப்பர் லைட் புத்தக நிலையம், ஆஸ்பத்திரி வீதி, மெதிரிகிரிய.
பிரியங்கர புத்தக நிலையம், 09, பிரதான வீதி, கதுறுவல.
பிரசாட் புத்தகசாலை மற்றும் டிரேடர்ஸ், பாடசாலை சந்தி, மெதிரிகிரிய
நியு தீபானி புத்தகசாலை, தபால் மாவத்த, ஹிங்குரக்கொடை.
புவச புக் மெதுர், 27, பிரதான வீதி, கதுறுவல.

**19. பதுளை**

ஜான்ஸ் புத்தக நிலையம், 89, லோவர் வீதி, பதுளை.
ஈ.எம்.ஜீ. கருணாரத்ன புத்தக நிலையம், 58, தர்மவிஜய மாவத்தை, பண்டாரவெல.
இசுறு பெயார், 80, நுவரெலியா வீதி, வெலிமட.
மகிந்தாஸ் புத்தக நிலையம், இல.50, 52, பஸார் வீதி, பதுளை.
ரிஷானா பட மாளிகை, 394, பிரதான வீதி, பஸ்ஸர.
ஸ்ரீ மங்கள பப்ளிஷர்ஸ், 16, தர்மவிஜய மாவத்த, பண்டாரவல.
விக்ரிக் மல்டி சொப் (பிரைவேற்) லிமி., இல.04, புத்த மாந்திர் வீதி, வெலிமட.
செனல்ரெட் புத்தகசாலை,இல.06, பதுளை வீதி, மகியங்கனய
விஜயவிக்ரம புத்தகசாலை இல 38, பதுளை வீதி, வெலிமட

**20. மொனராகலை**

மைசன் டிரேட் சென்டர், 26, பிரதான வீதி, மொனராகலை.
ஏ.டீ.எஸ். ஏஜென்சீஸ், இல. 14, பிரதான வீதி, பிபில.
தரிந்து கிப்ட் சென்டர், 65, திஸ்ஸ வீதி, வெல்லவாய.
சுமதுர புத்தக நிலையம், 22, பொத்துவில் வீதி, மொனராகலை.
சீ.ஜி.எம். பொத் மெதுர, 69, பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால், வெல்லவாய.
சுகத புத்தகசாலை, திஸ்ஸ வீதி, வெல்லவாய.

**21. கேகாலை**

ஸ்ரீலங்கா புத்தக நிலையம், 89, நீதிமன்ற சந்தி, கேகாலை.
தர்மவர்தன புத்தக நிலையம், பஸ் தரிப்பு, இல. 1, கீழ்த்தளம், அங்குறுவெல, றுவன்வெல.
லங்கா புத்தக நிலையம், இல. 122, பிரதான வீதி, வறக்காபொல.
A J கொமியுனிகேசன் அன்ட் புத்தகசாலை, 21A, நீதிமன்ற வீதி, மாவனெல்ல.
ஜயந்தி புத்தக நிலையம், இல. 132, பிரதான வீதி, மாவனெல்ல.
கல்யானி புத்தக நிலையம், இல.44, பிரதான வீதி, ருவன்வெல்ல.
லங்கா புத்தக நிலையம், 50/10B, அங்குருவெல்ல வீதி, வரகாபொல
கங்கா புத்தக நிலையம், 121, கொழும்பு வீதி, வரகாபொல.

**22. இரத்தினபுரி**

கருணாரத்ன பிரதர்ஸ், 16, தேவாலய வீதி, இரத்தினபுரி.
ஜினசிறி டிரேட் சென்டர், 96, பிரதான வீதி, பலாங்கொட.
சுமனகிரி டிரேட் சென்டர், பிரதான வீதி, எம்பிலிப்பிட்டிய.
சிங்கா பொத்மெதுர, பஸ் நிலையம், குருவிட்ட.
பத்மசிரி சுபர் சிட்டி, 54, மத்துகம வீதி, மனான, களவான.
FUS புத்தக நிலையம் & கொமினியுகேசன், 79/G, பிரதான வீதி, பெல்மடுல்ல.
சமனல கொமினியுகேசன் அன்ட் புத்தக நிலையம், இல 52, பிரதான வீதி, டொரன்கொட, கிரிஎல்ல.
சரசவி புத்தக நிலையம் (பிரைவேட்) லிமி., இல. 23/1, செனவிரத்ன கட்டிடம், முதலாம் மாடி, கொழும்பு வீதி, இரத்தினபுரி.
சுபசேகர ஸ்டோர்ஸ், 168A, பிரதான வீதி, கஹவத்த.
புத்திக ஏஜென்சீஸ் (பிரைவேட்) லிமி., இல.24, பஸ் நிலைய வீதி, இரத்தினபுரி.
சிஹின புத்தக நிலையம், பஸ் நிலைய வீதி, குருவிட்ட

**23. கிளிநொச்சி**

அறிவுநதி புத்தக நிலையம், இல 06, கண்கபுரம் வீதி, கிளிநொச்சி

**20, வாட் பிளேஸ்,**
**கொழும்பு 07.**
**04.09.2022**

## மக்கள் இன்று தேர்தலை... (03ஆம் பக்கத் தொடர்)

**கே: இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து கவலைகளை எழுப்பியுள்ளதுடன், அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடும் நபர்களை கைது செய்து தடுத்து வைக்க அதன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ளது. நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துவதால் மக்களின் போராட்டம் நடத்தும் உரிமை பறிக்கப்படும் என நான் நினைக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது அரசாங்கத்திற்கு எதிரான திட்டங்கள், பயங்கரவாத செயல்கள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களை கையாள்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்தி பொதுமக்களின் போராட்டங்களை ஒடுக்குவது ஏற்புடையதல்ல. நான் அறிந்த வரையில் நாட்டில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை.

**கே: தற்போது இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. மேலும் பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளில் ஐந்தாவது இடத்தில் உள்ளோம். நிலைமையைத் தீர்க்க என்ன திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

பதில்: உணவுப் பணவீக்கத்தில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறோம். நாடு இவ்வாறானதொரு நெருக்கடியான சூழலை எதிர்கொள்ளும் போது அதற்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் கைகோர்த்து ஆதரவு வழங்க வேண்டும். இது அதிகாரத்தைப் பிடிப்பதற்கோ அல்லது ஒருவரையொருவர் குறைகளைக் கண்டுபிடிப்பதற்கோ தலைவர்களாக மாறுவதற்கான நேரம் அல்ல. தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டத்தை வகுக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும். அதுவே அனைத்து அரசியல்வாதிகளின் பொறுப்பு.

**கே: நாட்டில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை அகற்ற 21ஆவது திருத்தம் உதவும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை தொடர்பில் பாரிய பிரச்சினை எதுவும் இல்லை. தற்போதைய அரசாங்கத்திற்குப் பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்கள் இல்லை என்றால், அங்கு அரசியல் ஸ்திரமின்மைதான் நிலவுகிறது. இன்னும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் பாராளுமன்றத்திற்கு வெளியே மக்கள் போராட்டம் நடத்தப்படுகிறது. அதைத்தான் நாம் உடனடியாக நிவர்த்தி செய்து சரி செய்ய வேண்டும். மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதும், அவர்களின் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் அரசின் பொறுப்பு என்று நான் நினைக்கிறேன். விவசாயத்துறை அமைச்சர் என்ற முறையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண என்னால் முடிந்த அளவு முயற்சி செய்து வருகிறேன்.

விவசாயிகளுக்கு உரம் வழங்குவதே விவசாயத் துறையில் பெரும் பிரச்சினையாக இருந்தது. அதே போன்று நெல் சாகுபடியை மேற்கொள்ள விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்க வேண்டும். இந்த இரண்டு தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். யால பருவத்திற்குத் தேவையான உரங்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, மகாபருவத்திற்கான உரத் தேவையும் நிவர்த்தி செய்யப்படும். அப்போது விவசாயிகள் சந்திக்கும் பிரச்சினைகளை ஓரளவுக்கு தீர்த்து வைக்க முடியும்.

**கே: ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வேறு சில பிரிவினர் பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்குப் பதிலாக தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண வழியில்லை என்று கருதுகின்றனர். உங்கள் பார்வையை விரிவுபடுத்த விரும்புகிறீர்களா?**

பதில்: உண்மையில், நாங்கள் தேர்தலுக்குச் செல்லும் போது இந்தப் பிரச்சினை எப்படித் தீர்க்கப்படும் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களின் ஒரே நோக்கம் எப்படி அதிகாரத்தை உறுதிப்படுத்துவது என்பதுதான். நாட்டை மேலும் சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். இந்தக் கட்சிகள் எதுவுமே ஒரு தேர்தலில் குறைந்தபட்சம் 100 உறுப்பினர்களை யாவது பெற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. எனவே, தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மையைக் கூட பெற முடியாத ஸ்திரமற்ற அரசாங்கம் உருவாகி, அது நாட்டில் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

இத்தருணத்தில் மக்கள் தேர்தலை கோருகிறார்களா? இல்லை, தற்போது நிலவும் சூழ்நிலையால் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே தங்களின் எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும். தேர்தலில் போட்டியிடப் போவது யார்? சில அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகள் தேர்தலை நடத்த நினைத்தால், இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்த மக்கள் குரல் எழுப்பியுள்ளார்களா? அது அப்படியல்ல. தேர்தலை நடத்த பெரும் தொகையை செலவிட வேண்டியுள்ளது. மேலும், அரசு திட்டமிட்டுள்ள அனைத்து வேலைகளையும் ஒத்திவைத்து தேர்தலை நடத்துவதற்கு அதிக நேரம் செலவிட வேண்டியுள்ளது. எனவே, இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்துவது எந்தப் பலன்களையும் தரப் போவதில்லை. ஒருவேளை, சில அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத்தில் தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளும் முயற்சியாக இருக்கலாம்.

---

### எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி

# கேள்வி அறிவித்தல்

எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான கீழ்க்காணும் மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் மற்றும் முகவரி | தொ.பே. இலக்கம் | பிரிவு | துறை இலக்கம் | மர வகை | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கிறீன்வத்த பூண்டுலோய | 051 4925006 | கீழ் | VP 36 | கிராண்டிஸ் ரொபுஸ்டா | 196 |
| மெதகும்புறவத்த வட்டகொட | 051 4925019 | தெற்கு | 2A 28 | கிராண்டிஸ் ரொபுஸ்டா | 118 |
| | | | 1B | | 84 |
| | | | 4 | | 104 |
| | | புதிய மத்திய | 6A | கிராண்டிஸ் | 65 |
| | | கீழ் | 4 | | 48 |
| பர்லன்ட்ஸ் வத்த பூண்டுலோயா | 051 4925011 | ஹெரோ கீழ் | 10 | கிராண்டிஸ் தொபுஸ்டா | 64 |
| | | | 7 | | 167 |

சகல கேள்வி விண்ணப்பங்களும் முறையாக தயாரிக்கப்பட்டு உறையில் இட்டு பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மரங்களுக்கான விலைமனுக் கோரல்' என்று குறிப்பிட்டு பிரதம நிறைவேற்று அதிகாரி எல்பிட்டிய பெருந்தோட்ட கம்பனி 9ஆம் மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம், இல. 01, இல. 305, வொக்ஷோல் வீதி, கொழும்பு -02 என்ற முகவரிக்கு 2022 செப்டம்பர் 30ம் திகதி பிற்பகல் 4.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் 2022 செப்டம்பர் 30 வரை வாரத்தின் வேலை நாட்களில் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தவிர்ந்து) காலை 8.30 முதல் 4.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 1000/- ரூபா ஆயிரம்) பிணைத் தொகை மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 100,000/- (ரூபா ஒரு லட்சம்) பிணையை சகல பிரிவு மரங்களுக்கும் வைத்து சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த மரங்களைப் பரீட்சித்தல் வாரத்தின் வேலை நாட்களில் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினம் தவிர்த்து) காலை 8.30 முதல் 4.00 வரை குறித்த தோட்டத்தின் உதவி பொது முகாமையாளர்/ முகாமையாளரின் அனுமதியின் கீழ் இடம் பெறலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் மேற்படி முகவரியில் குறிப்பிடப்படும் தலைமையகத்திற்கு குறித்த தினத்திற்கு முன் அனுப்பலாம்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை எல்பிட்டிய பெருந்தோட்ட கம்பனிக்கு உரியது.

**பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி,**
**09ஆம் மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம் இல. 01,**
**இல. 305, வொக்ஷோல் வீதி, கொழும்பு -02.**
**தொ.பே. 011-4693000.**

---

### கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கல்லூரி
### மற்றும்
### ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கணினிப் பீடம்

UCSC

## தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பதாரிகளின் தெரிவுக்கான உளச்சார்புப் பரீட்சை [096T/ 096C] - கல்வியாண்டு – 2021 – 2022

2021ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கை நெறிகளுக்கான அனுமதி" கல்வியாண்டு 2021/ 2022" என்ற கைநூலின் பிரிவு 1.2 மற்றும் பிரிவு 2.2.8.26 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு [096T/ 096C] விண்ணப்பதாரிகளின் தெரிவுக்கான உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியினால் நடாத்தப்படுகிறது.

கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட தகைமை பெறுவதற்கு உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவது ஒரு முன்தேவையாகும்.

ஆகையால், 2021/ 2022 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியில் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடத்தில் தகவல் முறைமைகள் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு பரிசீலிக்கப்படுவதற்கான தமது விருப்பத் தெரிவுகளைக் குறிப்பிட்டு, உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து, தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

**உளச்சார்புப் பரீட்சை ஆங்கில மொழியில் மட்டுமே நடாத்தப்படும் என்பதைத் தயவு செய்து குறித்துக்கொள்க.**

**முக்கியமான திகதிகள்**

| | |
|---|---|
| விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி | : 13 செப்டெம்பர் 2022 |
| அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும் திகதி | : 27 செப்டெம்பர் - 02 ஒக்டோபர் 2022 |
| உளச்சார்புப் பரீட்சைத் திகதி மற்றும் நேரம் | : 02 ஒக்டோபர் 2022, மு.ப. 10.00 - நண்பகல் 12.00 |
| பரீட்சை இடம் | : கொழும்பு |

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறை:**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப் படிவத்தை 13.09.2022 அன்று அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்ய வேண்டும். உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான ஒரே வழி கீழே உள்ள இணைப்பின் மூலம் மட்டுமே என்பதை தயவு செய்து குறித்துக் கொள்க.
   https://ucsc.cmb.ac.lk/istest/
   **குறிப்பு:** நீங்களாகத் தயாரிக்கும் அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. ரூ. 2,000/- கொண்ட உளச்சார்புப் பரீட்சைக் கட்டணம் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையில் உள்ள UCSC கணக்கு இலக்கம் 086-1-001-2-1190316க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தி செலுத்தப்பட வேண்டும்:
   - அ. இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட இணைப்பிலுள்ள (online) விண்ணப்பப் படிவத்தில் உள்ள வழிமுறைகளின்படி உங்கள் கடன்/ பற்று அட்டையைப் பயன்படுத்தி கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும்.
   - ஆ. இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப் படிவத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படும் பணக் கொடுப்பனவு பற்றுச்சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் ஏதாவது கிளையில் கட்டணத்தை (ரூ. 2,000/-) வைப்பிலிடுக.
   - இ. இணைய வங்கி (online banking) வசதியைப் பயன்படுத்தி, கட்டணத்தை (ரூ. 2,000/-) UCSC கணக்கு இலக்கத்திற்கு கைமாற்றுக.
   - ஈ. இணைய வங்கி பரிவர்த்தனை அல்லது வங்கி பரிவர்த்தனையின் போது வங்கியால் வழங்கப்பட்ட கொடுப்பனவு பற்றுச்சீட்டு, படிவத்தில் உள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவத்தின் தொடர்புடைய பகுதியில் பதிவேற்றப்பட வேண்டும்.
   - உ. காசோலைகள் அல்லது பணக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
   - ஊ. ATM இயந்திரங்கள் மூலமான கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்புகள்:**

I. உளச்சார்புப் பரீட்சைக்கான அவசியமான அனுமதித் தேவைகளைத் திருப்திப்படுத்தும் பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

II. அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டிருக்காத விண்ணப்பதாரிகளுக்கு எதுவித அறிவித்தலும் செய்யப்பட மாட்டாது என்பதுடன், கட்டணமும் மீளளிக்கப்படமாட்டாது.

III. பின்வரும் காரணங்களினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்:
   - அ. பரீட்சார்த்தி ஒருவர் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்சத் தகைமைகளைக் கொண்டிராதிருத்தல்.
   - ஆ. விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்படாதிருத்தல்.

IV. அனுமதி அட்டை 27ஆம் திகதி செப்டெம்பர் 2022 (செவ்வாய்க்கிழமையிலிருந்து) இலிருந்து https://ucsc.cmb.ac.lk/istest/ என்ற விண்ணப்ப இணைப்பில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, அதை வெள்ளை A4 தாளில் மின் அச்சு (Printout) பிரதி எடுக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள். பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமர்வதற்கு முன்னர் அனுமதி அட்டையினை சான்றொப்பம் செய்தல் முக்கியமானதாகும். அனுமதி அட்டைகள் தபால் மூலம் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் அனுப்பப்பட மாட்டாது என்பதைக் தயவு செய்து குறித்துக்கொள்க.

V. சித்தி பெற்றவர்களின் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதுடன், கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியினதும் (www.ucsc.cmb.ac.lk) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினதும் (https://www.sjp.ac.lk/) இணையத் தளங்களிலும் பிரசுரிக்கப்படும்.

VI. உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதால் மட்டும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரியும் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கணினிப் பீடமும் வழங்கும் தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிப்பதற்கான உரித்தினைக் கொண்டிருக்க முடியாது. விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) வழங்கப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்கான அனுமதி - கல்வியாண்டு 2021/2022" என்ற கையேட்டில் உள்ள விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்து, நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர்.

உளச்சார்புப் பரீட்சைகளின் நிபந்தனைகள் தொடர்பான மேலதிக தகவலுக்கு தயவு செய்து பின்வரும் இணைப்பினைப் பார்வையிடுக:
https://ucsc.cmb.ac.lk/istest/ - இணைய பதிவுப் படிவம்

விண்ணப்ப நடைமுறை அத்துடன்/ அல்லது உளச்சார்புப் பரீட்சை ஆகியன தொடர்பான விசாரணைகள் கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரியின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பரீட்சைகள் மற்றும் பதிவுகள் என்பவருக்கு மின்னஞ்சல் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி - sarexam@ucsc.cmb.ac.lk**
**பணிப்பாளர்**
**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி**
**ஓகஸ்ட் 2022**

---

### சுகாதார அமைச்சு
### இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு – (IFB)
## சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் – (ICB)

**கேள்வி இல: SPMC/03/2022 - 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

## மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP (Compacted) | 27,000.00 | 40,000.00 |
| 2 | Ascorbic Acid BP | 7,000.00 | 4,000.00 |
| 3 | Atorvastatin Calcium IP | 2,000.00 | 15,000.00 |
| 4 | Carbamazepine BP | 3,000.00 | 15,000.00 |
| 5 | Cetirizine Dihydrochloride BP | 200.00 | 1,000.00 |
| 6 | Ciprofloxacin Hydrochloride USP/ NF | 3,000.00 | 6,000.00 |
| 7 | Cloxacillin Sodium BP | 9,000.00 | 20,000.00 |
| 8 | Diltiazem Hydrochloride USP | 1,000.00 | 6,000.00 |
| 9 | Famotidine USP | 1,500.00 | 6,000.00 |
| 10 | Flucloxacillin Sodium BP | 9,000.00 | 22,000.00 |
| 11 | Folic Acid BP | 100.00 | 2,000.00 |
| 12 | Frusemide BP | 1,500.00 | 5,000.00 |
| 13 | Gabapentin USP | 1,000.00 | 4,000.00 |
| 14 | Gliclazide BP | 10,000.00 | 40,000.00 |
| 15 | Losartan Potassium BP | 7,000.00 | 25,000.00 |
| 16 | Metformin Hydrochloride BP | 27,000.00 | 10,000.00 |
| 17 | Metronidazole USP | 2,000.00 | 2,500.00 |
| 18 | Phenoxymethylpenicillin Potassium (Compacted) BP | 5,000.00 | 14,000.00 |
| 19 | Prednisolone BP | 400.00 | 14,000.00 |
| 20 | Propranolol Hydrochloride BP | 800.00 | 2,500.00 |
| 21 | Salbutamol Sulphate BP | 300.00 | 4,000.00 |
| 22 | Sulfamethoxazole BP | 1,500.00 | 2,500.00 |
| 23 | Spironolactone USP | 300.00 | 6,000.00 |
| 24 | Theophylline Anhydrous USP/BP | 1,500.00 | 4,000.00 |
| 25 | Trifluoperazine Hydrochloride BP | 75.00 | 4,000.00 |
| 26 | Trimethoprim BP | 300.00 | 1,000.00 |
| 27 | Verapamil Hydrochloride BP | 500.00 | 4,000.00 |
| 28 | Ammonio methacrylate Copolymer (Type B) USNF | 1,500.00 | 7,000.00 |
| 29 | Calcium Sulphate Dihydrate BP | 600.00 | 500.00 |
| 30 | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP | 4,000.00 | 1,000.00 |
| 31 | Colloidal Silicon Dioxide USP/USNF | 1,080.00 | 2,500.00 |
| 32 | DC Lactose (Lactose Anhydrous USNF/ USP) | 9,000.00 | 4,000.00 |
| 33 | Hydroxypropyl Cellulose-L JP | 1,000.00 | 4,000.00 |
| 34 | Hydroxypropyl methylcellulose (Hypromellose) USP | 1,500.00 | 2,000.00 |
| 35 | Lactose Monohydrate BP /USP (100Mesh) | 2,500.00 | 1,000.00 |
| 36 | Lactose Monohydrate BP /USP (200 Mesh) | 100,000.00 | 22,000.00 |
| 37 | Magnesium Stearate BP | 2,000.00 | 1,000.00 |
| 38 | Maize Starch BP | 45,000.00 | 4,000.00 |
| 39 | Microcrystalline Cellulose USNF/ BP | 12,000.00 | 4,000.00 |
| 40 | Micro crystalline Cellulose USNF/ PH EUR/JP (PH 200 LM) | 6,000.00 | 4,000.00 |
| 41 | Maleic Acid BP | 100.00 | 500.00 |
| 42 | Polyethylene glycol USP/ NF | 700.00 | 1,000.00 |
| 42 | Povidone K-30 USP/ BP | 1,500.00 | 2,500.00 |
| 44 | Pre-gelatinized Maize Starch | 3,000.00 | 500.00 |
| 45 | Purified Talc BP | 8,000.00 | 1,000.00 |
| 46 | Saccharin Sodium BP | 200.00 | 500.00 |
| 47 | Sodium Citrate BP | 700.00 | 500.00 |
| 48 | Sodium lauryl Sulphate BP/USP | 50.00 | 500.00 |
| 49 | Sodium Starch Glycolate BP/USNF | 7,000.00 | 4,000.00 |
| 50 | Stearic Acid BP (Grade 50) | 300.00 | 500.00 |
| 51 | Titanium Dioxide BP | 800.00 | 500.00 |
| 52 | Zinc Stearate BP/USP | 300.00 | 500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ்காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2022 செப்டெம்பர் 01ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 11ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
   இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   மீள் செலுத்தப்படாத மேல் கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்துதல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)
   ''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)
   வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் பெறுமதி/பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**

**தொலைபேசி இல. : (00)94-11-2635353/(00)94-11-2637574/(00)-94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk**
**இணையத்தளம் : www.spmclanka.lk**
**தொலைநகல் இல. : (00) 94-11-2634771, 2626621**



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 21

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# கிழக்கிலங்கைப் பிரதேசத்தைக் களமாக கொண்ட வ. அ. இராசரத்தினம்

"ஆரம்ப காலந்தொட்டே ஈழத்துத் தமிழ் நாவலுக்குக் கிழக்கிலங்கை தன் பணியைச் செய்து வந்துள்ள பொழுதும் அப்பிரதேசத்தைக் களமாகக் கொண்ட நாவல்கள் 1955வரை எழுந்ததாகத் தெரியவில்லை. மூதூரைச் சார்ந்த வ. அ. இராசரத்தினம் 1955இல் ஈழகேசரியில் எழுதிய கொழுகொம்பு நாவலே இவ்வகையில் முதலாவதாகக் கிடைக்கிறது" என குறிப்பிட்டுள்ளார் ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் என்ற ஆய்வு நூலை எழுதிய கலாநிதி நா. சுப்பிரமணியம் (பக்கம் : 154) கொழுகொம்பு நாவலின் கதையம்சம் பின்வருமாறு அமைந்துள்ளது:

மூதூர் அம்பலவாணரின் மகனான நடராஜன் என்னும் கொழுகொம்பும் முறைப் பெண்ணான கனகம் என்னும் இளங்கொடியும் தூய அன்புகொண்டு ஒன்றையொன்று தழுவத் துடித்த போது, ஒரு சிறு சம்பவத்தினால் இரு குடும்பத் தலைவர்களது நான்| முளைத்தெழுந்து, அந்தஸ்துப் போராட்டத்தை உண்டாக்கிப் பிளவை ஏற்படுத்துகிறது. பிளவைப் பெரிதாக்கும் திருப்பணி|யில் ஈடுபட்ட கிராமத் தொண்டர் சிலரால் அது பெரும் பிளவாகிக் காதலர்களைப் பிரித்து விடுகிறது. நடராஜன் தன் சமூகக் கண்காணாத இடத்திலே காதல்வாழ்வு வாழக் கனகத்தை அழைத்தபோது தமிழ்க்குலப் பெண்மை அவளைத் தடுக்கிறது. சந்தர்ப்பமும் அவன் மனதிற் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. ஆதனால் தன்னையும் ஊரையும் உறவையும் வெறுத்துவிட்ட அவன் மலைநாட்டுத் தோட்டமொன்றில் புகலடைந்து அங்கே துணையற்று வாடுங் கொடியாகக் கிடந்த பிலோமினாவுக்குக் கொழுகொம்பு ஆகிறான். அத்தளர்கொடி தான்படரும் அக்கொழுகொம்பு காலாகாலமாகப் பிறிதொரு இளங்கொடிக்குச் சொந்தமானது என அறிகிறது. கொழுகொம்பை உரிய இளங்கொடிக்கே சேர்த்துவிட எண்ணிய பிலோமினா மனநிறைவுடன் தியாகத்தீயிற் குதிக்கிறாள் இதுவே விளக்கமான கதைக்கரு

கதை மகாவலியின் அரவணைப்பிலே வளங்கொழிக்கும் மூதூரிலே பிறந்து, கல்முனையையும் கொழும்பையுந் தொட்டு மலைநாடு சென்று முடிகிறது. இப்பகைப் புலங்கள் கதையைச் சுவை குன்றாமல் நடத்திச் செல்கின்றன. இப்பகைப்புலங்களிலே அடக்கமும் அதனோடு அறிவை வென்று மேலோங்கும் உணர்ச்சித்துடிப்பும் காதலும் அதனோடு பிறர் துயர்கண்டு இரங்கும் பண்பும் ஆகிய இவைகள் கொண்டு உருவான நடராஜன், அவன்மீது காதல் கொண்டு வாடித்தளர்ந்த போதும் பண்பு தவறாத கனகம், அந்தஸ்து ஆசையும் பிள்ளைப் பாசமும் போட்டியிட, சிலசமயம் நிமிர்ந்தும் சிலசமயம் தளர்ந்தும் நடக்கும் அம்பலவாணர் அவரோடு போட்டியிடும் கனகத்தின் தந்தை கந்தையாபிள்ளை, இருவருக்கும் பகைமையூட்டி வேடிக்கை பார்க்கும் பெருந்தொண்டர்| சண்முகம்பிள்ளை தியாகச்சுடரான பிலோமினா, இன்னும் பலர் உலாவிக் கதையை வளர்க்கினறனர். அவர்களது பார்வையிலே, பேச்சிலே செயலிலே நடத்தையிலே உணர்ச்சி இழையோடிக் கதைக்கு உயிர்க்களை ஊட்டுகின்றது (அணிந்துரையில் சு.வே.)

05.06.1925இல் வஸ்தியாம்பிள்ளை அந்தோனியாதம்பதிக்கு மகனாகப் பிறந்த வ.அ., தாமரைவில் உள்ள றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்விகற்றவர். 1946இல் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சியைப் பெற்றவர். 1952இல் மேரிலில்லி திரேசா என்பவரைத் திருமணம் புரிந்தார்.

இவர், சிறுகதை கவிதை, நாவல் மொழி பெயர்ப்பு, விமர்சனம், கட்டுரை ஆகிய துறைகளில் தடம் பதித்தவர்.

"நான் மூதூர் மண்ணின் மகன் என்ற உணர்வே என் எழுத்துக்களின் அடிநாதம் இம்மண்ணின் வனப்பையும் வளத்தையும் நேசிப்பதே என் யோகம். இம்மண்ணின் மக்களது வாழ்வை இலக்கியமாக்குவதே என் நோன்பு நான் எழுத ஆரம்பித்த நாட்களிலிருந்தே இத்தத்துவத்தை இயற்றிவருகிறேன் என்று குறிபிடும் வ. அ இராசரத்தினத்தின் முதலாவது சிறுகதை மழையால் இழந்த காதல்| 1948ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் வெளிவந்தது. இருப்பினும் இவரது அனேகமான படைப்புகள் ஈழகேசரியிலேயே வெளியாகின.

ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதியொன்று வெளியிடும் யாவரும் எந்தச் சிறுகதையை விட்டுவிட்டாலும் இவரது தோணி சிறுகதையை விட்டுவிட்டால் அது பூரணமாகாது என்று குறிப்பிடுள்ளார் பிரபல விமர்சகர் கனக செந்திநாதன்.

மேலும் ஈழத்துச் சிறுகதையின் மூலவர் என்றும் வானா ஆனாவால் என் இலக்கியக் குருநாதர் என்றும் போற்றப்படும் இலங்கையர்கோன் தோணி சிறுகதையை வாசித்துவிட்டு "ராசா நீர் என்னை வென்று விட்டீர்" என வெகுவாகப் பாரராட்டியது, தோணி சிறுகதைத் தொகுப்பக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்ததைவிட தமிழ்ஒளி என்று பட்டமளித்த கௌரவித்ததைவிட மிக மேலான மகிழ்ச்சியைத்தந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் வ. அ.





இவரது பவள விழா மூதூரில் 5.08.2000 அன்று இடம்பெற்றது. ஈழத்து நவீன இலக்கியவாதியொருவருக்கு எடுக்கப்பட்ட முதலாவது பவளவிழா என்ற சிறப்பினை அவ்விழா பெற்றுக்கொண்டது. அதற்கு முன்னர் பவளவிழா வயதினை எய்திய எவரும் விழாக்கொண்டாடியதாக வரலாறில்லை.

வ.அ.வின் பவளவிழாவில் சிறப்பு அதிதியாக கலந்து உரையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரிடம் ஒரு விரிவான நேர்காணலைப் பெற்றுவிடவேண்டும் என்ற எண்ணமே எனது மனதில் மேலோங்கியிருந்தது.

விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில் 'இலக்கியப் பூந்துணர்| என்ற சிறப்புமலரும் வெளியிடப்பட்டது. மக்கள் கூட்டம் கலைந்து மதியத்தின்பின் வ.அ.வுடன் சாவதானமாக அமர்ந்து நான்கு மணிநேரம் கலந்துரையாடினேன்.

'ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் ஒருவரான இலங்கையர்கோனை நீங்கள் குருவாக வரித்துக்கொண்டீர்கள். எப்படி அது சாத்தியமானது" என உரையாடலைத் தொடங்கினேன்.

'இலங்கையர்கோன் மூதூரில் டி.ஆர்.ஓ.வாக இருந்த காலத்தில் தினமும் இரவு நேரங்களில் அவரிடம் சென்று உரையாடுவேன். அவர் ஒரு பாலபண்டிதர். அவர் எனக்குச் சொன்ன முக்கியமான அறிவுரை, 'ஆனந்தவிகடன், கல்கியை மட்டும் படித்து விட்டு சிறுகதை எழுதக்கூடாது. பழந்தமிழ் இலக்கியங்களைக் கட்டாயம் படிக்கவேண்டும். படித்துவிட்டுத்தான் புது இலக்கியம் சிருஷ்டிக்கவேண்டும். ஐங்குறுநூறில் உள்ள ஐந்நூறு பாடல்களும் ஐந்நூறு சிறுகதைகள். இலங்கையர்கோன் அவர்களின் முதற் குரு உபதேசமே இதுதான்!" என்றார்.

உலகத்தரமான புகழ்பெற்ற அவரது தோணி சிறுகதை தோன்றிய பின்னணி பற்றிக் கேட்டபொழுது, 'நான் கடலோரத்தில் பிறந்தவன். எனது முன்னோர் திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையில் வத்தை ஓடியவர்கள். சிறுவயதில் மத்தியானம் பாடசாலை முடிந்தபின் நானும் எனது மைத்துனனும் கடற்கரைக்கு வந்துவிடுவோம் மூன்று மணிபோல திருகோணமலையிலிருந்து மூதூரை நோக்கி வத்தைகள் வரும் அவைகளில் ஒரு சாண் அளவில் பாய்மரம் தெரியும்போதே நானும் எனது மைத்துனன் செல்லனும் அது எங்களுடைய அப்பாவின் வத்தை, இது மாமாவின் வத்தை என்றெல்லாம் கண்டு பிடித்துவிடுவோம். வத்தைகள் வரும். அதிகமான நேரங்களில் நாங்கள் கடற்கரையிலேதான் தங்குவோம். கடற்கரையில் பிறந்த நான், கடற்கரையை அனுபவித்த நான் கடலோரக்கதைகளை எழுதும்போது அதிக கலைத்துவம் மிளிர்கிறது. மூதூரை பற்றிக் கதைகள் வந்த அளவுக்கு இலங்கையில் வேறெந்த ஊரைப்பற்றியும் அத்தனை கதைகள் வெளிவரவில்லை." என்றார்

வ.அ. மொறட்டுவாவில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் பிரெஞ்சு, ஆங்கில, ரஷ்ய மொழிகளிலான முப்பது மொழிபெயர்ப்புக் கதைகளை எழுதியுள்ளார். அதுபற்றிக் கேட்டபோது, 'இந்த மொழிபெயர்ப்புகள் என்னை வாசிக்கத் தூண்டின. உலக இலக்கியங்களை எனக்குத் தெரியப்படுத்தின. இப்படித்தான் நானும் எழுதவேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்தின" என்றார்.

இவரது நூல்களாக, துறைக்காரன் (நாவல்) கொழுகொம்பு (நாவல்) கிரௌஞ்சப் பறவைகள் (நாவல்) ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (குறுநாவல்) ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது(நாவல்) தோணி (சிறுகதைத் தொகுதி) பூவரசம்பூ (மொழிபெயர்ப்புக் கவிதை) மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (சரித்திரம்), திருக்கரசைப்புராணம் இலக்கிய நினைவுகள் (நினைவுக் கட்டுரைகள்,) என்பன வெளிவந்துள்ளன.



இவர் ஈழநாகன், கீழைக்கரை தேநேயப் பாவாணன், வியாகேச தேசிகர் ஆகிய புனை பெயர்களில் எழுதியுள்ளார்

இவரது தோணி (சிறுகதைத் தொகுதி), மண்ணிற் சமைந்த மனிதர்கள் (நாவல்) ஆகியன இலங்கை தேசிய சாகித்திய விருது பெற்றவை.

தோணி சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் வ.அ. பின்வருமாறு எழுதியுள்ளார். "தேசிய இலக்கியம், மண்வளம், யதார்த்தம். என்ற கோஷங்களை முற்போக்கு எழுத்தாளர்கள் எழுப்புவதற்கு முன்னரே அக்கோஷங்களுக்கு இலக்கணமான கதைகளை நான் எழுதினேன். எந்தக் கோஷத்தினரோடும் 'எடுபட நான் விரும்பவில்லை. ஏனென்றால் என்னை ஈழத்துப் பூதந்தேவனாரின் தம்பி என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்|

வ.அ. இராசரத்தினம் 22.02.2001 அன்று அமரரானார்.

---





## இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

# இனியவனே என்று பாடி வந்தேன்!

ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

படத்தைப் பிடித்துக் கொண்டு,

அவர்கள் இருவரும் போகப் போகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்ட கீதா,

பரபரப்படைந்தாள்.

"ஏய்... வெண்பா அங்க பாருடீ உன்னோட படத்த புடிச்சிட்டு அவன் போகப் போறான். வாங்கடி போய் அவனுகல புடிப்போம்!" என்று சொல்லிய படியே, விரைந்து முன்னால் ஓடினாள் கீதா.

அவனைப் பின் தொடர்ந்து ராமவும், வெண்பாவும் சென்றார்கள். கெமராவை எடுத்து பைக்குள் போட்டுக்கொண்டு நிமிர்ந்த போது

கீதா,

ஆடிப்போன ஜீவகன்.

பிரேமின் அருகில் ஓடிச் சென்றான்.

"பிரேம் பெரிய பிரச்சினையாப் போயிடும் போலிருக்கே... அவங்க அந்த பிளிம் கார்ட்ட கேக்குறாங்கடா...!"

"போடா முட்டாள்... பிளிம் கார்ட்ட எப்படிடா அவங்க கிட்ட குடுக்குறது. கவர் பண்ணிய புரோகிறாம் எல்லாம் அதுலதானே இருக்கு!"

"அப்படி சொன்னா எப்படிடா நீதான் இந்த ஆபத்துல இருந்து என்னைய காப்பாத்தனும்... இல்லைன்னா அந்த மூனு பேரும் என்னைய ஒரு வழிபண்ணிடுவாங்க

பிரேமைப் பார்த்தான் ஜீவகன்.

"ஜீவா, நீ இப்போது ஒரு வேலை செய்ய வேண்டும்!" சுற்றிலும் பார்த்தா படியே கேட்டான் பிரேம்.

"சொல்லுடா... என்ன வேண்டுமானாலும் செய்றேன்!" மகிழ்ச்சியுடன் சொன்னான் ஜீவகன்.

"ம்... நீ நல்லா ஓடுவியா?"

"என்னது...! ஓடுறதா ...?"

புருவங்களுக்குள் வில்லைத் திணித்தான் ஜீவகன்.

"ஆமாடா...இப்ப நான் ஒன்னு..... ரெண்டு... மூனுன்னு சொல்லக்குள்ள நான் ஓட ஆரம்பிப்பேன்

முன்னால் நின்ற வெண்பாவைப் பார்த்தான்.

"என்ன... கூட்டாளி ஓடிட்ரா..?" ரமாதான் கேட்டாள்.

அதற்கு பதில் ஏதும் சொல்லாமல்,

தரையையே பார்ததுக் கொண்டிருந்தான் ஜீவகன்.

"ம்... இப்போது எருமை மாட்டைப்போல் தலைகுனிந்து நிற்பதில் எந்த பயனும் இல்ல... இனியாவது இந்த மாதிரியான காரியங்களைச் செய்யும் போது கொஞ்சம் யோசிச்சி செய்யுங்க... வாடி வெண்பா போகலாம்! முன்னால் நடந்தாள்



## 05 உள்ளம் கவர்ந்தவள் பெயரை அறிந்தது காதல் மனம்; உவகையில் பூத்தது ஒரு நந்தவனம்

ரமா,

வெண்பா மூவரும்

அவன் எதிரில் வந்து நின்றதும்,

படாரென்று எழுந்து நின்றான் ஜீவகன்!

"என்ன... ரோட்டில போற பொண்ணுகளோட போட்டோவ எடுக்கிறதுதான் உங்களோட வேலையா?" மிரட்டல் தொனியில் கேட்டாள் கீதா.

"ம்... இல்ல மிஸ் அது தவறுதலாக நடந்த ஒரு சம்பவம்!" தாழ்ந்த குரலில் சொன்னாள் ஜீவகன்.

"ஓ... அப்படியா... அப்ப சரி ரமா நீ போய் அவன் கிட்ட பிளிம் கார்ட்ட வாங்கிட்டு வா...!" என்றாள் கீதா.

கடா!"

"இத குடுத்துட்டு நான் எப்படிடா வேலைக்கு போறது?"

"அப்படீன்னா... இப்ப என்னடா செய்றது...?"

"இவர்கள் இருவரது மந்திர ஆலோசனையைப் பார்த்தும்,

அந்த மூவருக்கும் பற்றிக் கொண்டுவந்தது.

"இந்தா பாருங்க மிஸ்டர்... இப்ப நீங்க அந்த பிளிம் கார்ட்டைத் தரப் போறீங்க இல்லையா?" கீதா தான் கத்தினாள்!

"இருங்க... இருங்க... அவசரப் படாம இருங்க... தந்துடுறோம்...!" என்று சொல்லியபடியே,

நீயும் என் பின்னால் ஓடிவா...!"

"டேய்... உனக்கு பைத்தியமாடா!"

'ஒன்னு... ரெண்டு... மூனு...!"

என்று சொல்லி விட்டு,

விரைந்து ஓடினான்.

திக்பிரமை பிடித்தவன்போல்,

அவன் ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரேம் ஓடுவதையே பார்த்த அந்த மூவரும்.

விரைந்து ஜீவகனின் முன்னால் வந்து நின்றார்கள்.

அவர் முகங்களில்,

கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

அவன்,

அப்பாவித்தனமாக,

கீதா.

அவள் பின்னால்,

வெண்பாவும் ரமாவும் நடந்தார்கள்.

வெண்பா

வாவ்!

தன் மனம் கவர்ந்தவளின் பெயர்,

வெண்பா என்று தெரிந்துகொண்டதும்..

பனிப்பூக்கள்,

அவன் இதயத்தில் பந்தாட்டம் போட்டது!

★★★

விரைந்து ஓடிவந்த பிரேம்,

நேராக வீட்டுக்குப் போகாமல்,

மன்சின் நானாவின் கடைக்குள் போய் புகுந்தான்.

வியர்க்க விறுவிறுக்க தனது கடைக்குள் நுழைந்த பிரேமைப் பார்த்து விட்டு,

சிரித்தபடியே வெளியே வந்த மன்சில் நானா.

"என்ன பிரேம் இது யாராவது பைத்தியக்காரன் உன்னை துரத்திக்கிட்டு வாரானா!"

"பைத்தினக்காரன்னா பரவாயில்லையே மன்சில் நானா... ஆனா இது மூனுகரும்புலிகள்!" "என்னது கரும்புலிகளா...?"

"ஆமாம் கரும்புலிகள் தான் ... ம் நீங்க... என்னோட கூட்டாளிய பார்த்தீங்களா மன்சில் நானா.

"உன்... கூட்டாளின்னா யாரு... சிவாவா... தம்பி வாடா?"

இல்ல... இல்ல என்னோட வீட்டுல தங்கி இருக்கிறானே அவன்...!"

"ஓ... அந்த சோனகிரியா... சரியாக

"எங்கடா போன..?" என்று கேட்டபடியே,

அவன் அருகில் ஓடிவந்தான் பிரேம்.

"ம்... நானாடா போனேன்?"

"சரி... சரிடா... நான்தான் போனேன்.

"ஒன்றாகவே போய் இப்படி ஆபத்துல மாட்டிட்டு ஓடுறது சரியில்லடா!"

"சரி... சரி... தப்பு என் மேலதான்.. ஆனா நீ கொஞ்சம் யோசிச்சிப் பாறேன்... அந்த மூனு பேரும் வந்த வேகத்துல என்னோட கெமராவ தூக்கி நெலத்துல அடிச்சிருந்தா என் நெலம என்னாகி இருக்கும்?"

"ம்... லல்டே கபால் தான்!"

"என்மேல உனக்கு கோபமாடா...?"

"இல்லடா நான் எதுக்கு கோபப்பட்டப்போறேன்!'

"ம்... அப்ப உஜார்தானே..! தான்!"

ரெண்டு மணிக்கு கொலன்னாவ பஸ்தரிப்பு நிலையத்துல நின்னு கிட்டிருந்ததை நான் பார்த்தேன்!'

"ஐயோ... அதில்ல மன்சில் நானா... இப்ப பார்த்தீங்களா?"

"இப்பயா... இப்ப நான் பார்த்திருந்தா நீயும் பார்த்திருப்பியேடா...!"

"ஐயோ கொல்லாதீங்க மனிசில் நானா... சும்மா பைலா அடிக்காம் பார்த்தா பார்த்தேன்னு சொல்லுங்க... இல்லாட்டி இல்லேன்னு சொல்லுங்க...!" என்று சொல்லிய படியே,

வெளியே வந்தான் பிரேம்! அதே நேரம்,

விரைவாக வந்து கொண்டிருந்தான் ஜீவகன்.

ஆமா... ஆமா உஜார்

"சரி.... சரி... வா போவோம் அம்மா பார்த்திட்டு இருப்பாங்க...!"

அவர்கள் இருவரும்,

தோளில் கை போட்டபடியே நடந்து செல்வதை,

வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார் மன்சில நானா.

அவர்கள் இருவரும்,

வீட்டுக்கு வரும் போது, தோட்டத்தைக் கூட்டிக் கொண்டிருந்தால் பார்வதி.

அவர்களுக்காக,

அங்கே ஒரு வெடிகுண்டு காத்திருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது.

(இனியவன் வருவான்)

40

# கொழும்பின் கதை



என். சரவணன்

# கொழும்பு வணிக மையமான வரலாறு

அனுராதபுரம் சகாப்தத்தில் இருந்து கண்டி இராச்சியம் வரையான நகரங்களைப் பற்றி நாம் ஆய்வு செய்யும் போது கொழும்பு அவற்றை மேவி ஈற்றில் தலைநகராக ஆனதன் அடிப்படையை நாம் விளங்கிக் கொள்வது அவசியம்.

இலங்கை ஒரு தீவு என்கிற வகையில் சூழ இந்து சமுத்திரக் கடலால் சூழப்பட்டது. இலங்கைக்குஉ தூர தேசங்களில் இருந்து வந்தவர்கள் எல்லோருக்கும் தற்செயலாக கரையொதுங்கியவர்களும், தாண்டிச் செல்லும் போது இடைதரித்து நின்றவர்களும் தான் அதிகம். அப்படித்தான் இலங்கையின் வாசனைத் திரவியங்களையும், முத்து, யானைத்தந்தம் போன்றவற்றாலும் ஈர்க்கப்பட்டு வியாபாரத்துக்காகவும் வந்து சென்றவர்களாக மாறினார். காலப்போக்கில் வியாபார சக்திகள் ஏகபோகத்தைக் கைப்பற்ற தங்களுக்குள் போட்டிபோட்டு ஒருவரை ஒருவர் சண்டையிட்டு விரட்டி விட்டு, மொத்தமாக சுரண்டுவதற்காக முழுத்தீவையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அரபுக் காரர்களாக இருந்தாலும், நாடுகாண் பயணிகள், யாத்திரிகள், வணிகர்கள், மிஷனரிகள் மட்டுமன்றி பிற்காலத்தில் ஆக்கிரமிப்பாளர்களும் கூட பெரும்பாலும் மேற்கு திசையில் இருந்து வந்தவர்கள் தான். அப்படி வந்தவர்களுக்கு கிட்டிய இயற்கைத் துறைமுகமாக அமைந்திருந்தது தான்




கபூர் கட்டடம்

கொழும்பு. காலனித்துவத்துக்கு முன் கொழும்பின் வழியாகத்தான் முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வணிகத்தை மேற்கொண்டு வந்தார்கள். துறைமுகம் தான் கொழும்பை ஒரு வணிக மையமாக ஆக்கியது. அந்த வணிகத்துக்காகத் தான் போர்த்துகேயர் தமது பிரதான கோட்டையை கொழும்பில் அமைத்துக் கொண்டார்கள். அந்த கோட்டையின் விரிவாக்கமும், உட்கட்டமைப்பு பரவலாக்கமும் தான் கொழும்பை நிலையான தலைநகராக ஆக்கியது.

முஸ்லிம் வர்த்தகர்களிடம் இருந்த ஏகபோகத்தை போர்த்துகேயர் வன்முறையால் தான் பறித்தெடுத்தார்கள். கொழும்பு கோட்டையை சுற்றி பரவலான முஸ்லிம் குடியிருப்புகளின் உருவாக்கம் ஐந்து நூற்றாண்டுகளுக்கும் முந்தியது என்பதை இத்தால் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வாசனைத் திரவியங்கள், முத்து, கனிம பொருட்கள் மட்டுமன்றி யானைகளைக் கூட இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்தனர். இலங்கை யானைகளுக்கு அப்போதே பெரும் கிராக்கி இருந்தது. இலங்கையில் யானைகளின் பெருக்கம் அன்றும் அதிகமாக இருந்தது. கொழும்பில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருந்ததையும், அவற்றை பிடித்து அடைப்பதற்கென்று கையாண்ட வழிமுறைகள் பற்றி ஜான் பிராண்டசின் ஓவியங்களும் நமக்கு நிறையவே விளக்குகின்றன.

டச்சுக் காலத்தில் இலங்கை வந்த ஹேர்பொட் (Herport) விளக்கும்போது "அரசர் மாளிகையைச் சுற்றி நூற்றுக்கணக்கான யானைகள் இருந்தன. அவை அரசர் வரும்போது எப்பொழுதும் முழங்கால் மடித்து மரியாதை செய்வதை காண முடிந்தது. இரவு நேரக் காவலர்களைப் போல வீதிகளில் செல்லும்போது அவற்றிடம் அகப்பட்டால் அந்தோகதிதான்." என்கிறார்.

கொழும்பில் இருந்து முதற்தடவை போர்த்துக்கலுக்கு திரும்பிச் சென்ற கப்பலில் யானைக்குட்டிகள் இரண்டு இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. 1820 ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இங்கிலாந்தை நோக்கிச் சென்ற கப்பல் பெரும் புயலுக்குள் மாட்டிக்கொண்டது பற்றி அக்கப்பலின் கப்டன் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் இப்படி குறிப்பிடுகிறார்.

"புயல் வந்த போதெல்லாம் கப்பலில் ஒரு பலமான தூணில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த யானைகள் இரண்டும் புயலில் கப்பல் தூக்கி, தூக்கி, பெரும் ஆட்டம் கண்டபோதெல்லாம் அவை இரண்டும் சாதுரியமாக இயங்கின. கப்பல் ஒரு பக்கம் கீழ் நோக்கிச் செல்லும் போது அவை உயரத்துக்கு போவதும், கப்பல் உயரத்துக்கு போகும் போது அவை கீழ் நோக்கி கால்களை கொண்டு சென்று சமநிலைப் படுத்தவும் செய்தன. புயல் இருந்த காலம் முழுவதும் அவை நின்றுகொண்டு தான் இருந்தன. அதனால் உப்புத் தண்ணீரும், உப்புக்காட்டரும் அவற்றின் தோலில் படிந்து அவை வெள்ளை யானைகளாக தோற்றமளித்தன." என்கிறார்.

பிரிட்டிஷ் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை வந்த ஆரம்பக் காலத்தில் 1808இல் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு இது. ரிக்ஸ் டொலரில் (1 ரிக்ஸ் டொலர் = 1 சிலிங்கும் 9 பென்சும்)

முத்துக்கள் 771,507
கருவாப்பட்டை 705,800
மது 496,440
பாக்கு 183,988
கயிறு 93,260
தேங்காய் 55,000
கோப்பி 52,000
மிளகு 27,960
கொப்பரா 23,500
வெட்டிய பாக்கு 37,720

கொழும்பு நகரம் நவீன வர்த்தக நகரமாக வளர்த்தெடுக்கப்பட்டது பிரிட்டிஷ் ஆட்சியில் தான். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் W.சி.கிப்சன் என்ற பெயரில் ஒரு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் கிளை காலியிலும் இருந்தது. எப்.பி. மாண்டேக்கர் என்பவர் பிரின்ஸ் வீதியில் 5ஆம் இலக்கத்தில் 1817 ஆண்டு நவம்பர் 04 அன்று ஒரு பொருட்கள் விற்கும் ஒரு கடையைத் திறந்தார். தோமஸ் ஹொாக் என்பவர் 1831 ஆண்டு டிசம்பர் 31 அன்று வெளியான வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் ஒரு விளம்பரத்தை அறிவித்து 1832 ஆண்டு ஜனவரி 16 அன்றிலிருந்து சதாம் வீதியில் இல 9 ஆம் கட்டிடத்தில் தரகுக்கு பொருட்களை கொடுக்கும் ஒரு கடையை ஆரம்பிப்பதாக நகரவாசிகளுக்கு அறிவித்தார். 1816 ஆம் ஆண்டு கடிகாரத் திருத்துனர் ஒருவர் கொழும்பில் ஒரு கடையை ஆரம்பித்தார். இந்தத் தகவல்களை கொழும்பு நகர சபையின் நூற்றாண்டு விழா மலரில் வெளியிட்டிருக்கிறார்கள்.

1836 இருந்து 1841 வரையான காலப்பகுதிக்குள் கொழும்பில் வசித்தவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்பட்ட அரச காணிகள் பற்றிய விபரம் இது.

| ...ள்வனவு செய்தோர் | ஏக்கரில் |
|---|---|
| ...ஐநர் ஜே.ஏ.ஸ்டுவர்ட் மெக்கன்சி | 2264 |
| ...டயணிகள் கட்டளை அதிகாரி ஜோன் வில்சன் | 2391 |
| ...னித்துவ செயலாளர் ஆர்.ஆர்புட்நொட் | 855 |
| ...வி காலனித்துவ செயலாளர் ஜோர்ஜ் டர்னர், கர்னல் ...ன்ட்சே | 1583 |
| ...ாண்ட் மற்றும் பொய்ட் கம்பனி | 1097 |
| ...வி அரசாங்க அதிபர் ஈ.ஆர்.பவர் | 558 |
| ...கிலாந்து சபை பாதிரியார் பி.எச்.எஸ்.கிளெனி | 1970 |
| ...ட்டன் மரே | 575 |
| ...ன்லி, வோசன் கம்பனி | 2000 |
| ...பாலட் கம்பனி | 1500 |
| ...ள்யு.ஏ.எவிசன், ஆர்.ஜெபர்சன் | 919 |
| ...ட்டன் பி. டிபாக், ஜே.டபிள்யு.டெல்கெட் | 749 |
| ...ர்.க்ரோவ் அண்ட் கம்பனி | 6552 |
| ...வலன்ஸ் | 698 |
| ...ள்யு விண்டோல் | 3123 |
| ... அண்ட் கம்பனி | 3123 |

இலங்கை வர்த்தக சபை 1839 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

1825 இல் இருந்து பிரித்தானிய ஸ்டேர்லின் பவுன் இலங்கையின் நாணயமானது. பின்னர் இலங்கை ரிக்ஸ் டொலர் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் பிரித்தானிய நாணயத்துக்குப் பதிலாக ரூபா, சதம் என்பன 1872 ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அறிமுகமானது. தேயிலை ஏல விற்பனை 1883ஆம் ஆண்டில் ஆரம்பமானது, கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கம் 1894ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1901 ஆம் ஆண்டு தேயிலை ஒரு றாத்தலின் சாதாரண விலை 31 சதத்திலிருந்து 35 வரை இருந்தது. அதுபோல 1909 ஆம் ஆண்டு 270 டன் இறப்பர் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செயப்பட்டிருகிறது.

ஜோர்ஜ் ஸ்டுவேர்ட் (George Steuart) மூலம் ஜோர்ஜ் ஸ்டீவர்ட் எண்ட் கம்பனியின் (George Steuart & Co) இராணி வீதியில் இலக்கம் 14ஆம் கட்டிடத் தொகுதியில் 1844இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தரகு முகவர்களாகவும் மற்றும் பொது வர்த்தக வணிகர்களாகவும் அவர்கள் ஈடுபட்டார்கள்.

கார்கில்ஸ் நிறுவனமும் 1844 ஆண்டு கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கொழும்பில் வில்லியம் வில்னே (William Wilne) என்பவரால் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியொருவருக்குச் சொந்தமாக இருந்த கட்டிடத்தை வாங்கி அங்கே அந்த நிறுவனம் தொழிற்படத் தொடங்கியது. பின்னர் இந்த நிறுவனம் பெருத்த இலாபம் சம்பாதிக்கும் நிறுவனமாக வளர்ச்சி பெற்றதும் D.S.கார்கிலால் 1902 ஆம் ஆண்டு தற்போதைய கார்கில்ஸ் கட்டிடம் கட்டப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் சூயஸ் கால்வாயும் திறக்கப்பட்டிருந்ததால் கீழைத்தேயத்துக்கான வணிகப் போக்குவரத்து துரிதமாக வளர்ச்சியுற்றது. எனவே முதற் தடவையாக மின்குமிழ்களும், ஹைட்ராலிக் லிஃப்ட்டும் இந்த கார்கில்ஸ்ஸில் நிறுவப்பட்டது.

W.C.Brodie என்பவரால் Brodie Bogue & Company என்ற பெயரில் சதாம் வீதியில் 26ஆம் இலக்க கட்டிடத்தில் 1846 ஆண்டு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமானது. பின்னர் அது Brodie & Co என்று பெயர் மாற்றப்பட்டது.

ஏற்றுமதி இறக்குமதி வியாபார நிறுவனமாக கார்சன் என்ட் கொம்பனி (Carson & co) 1857 ஆம் ஆண்டு ஆர்.பி.கார்சனால் ஆரம்பிக்கப்பட்டது. மிகப் பெரிய அளவில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் களஞ்சிய சாலை கொம்பனி வீதியில் கிவ் மாவத்தையில் அமைந்திருந்தது.




சதாம் வீதி

நகை, அணிகலன்களை விற்பனை செய்யும் முதல் நிறுவனமாக மகான் மார்க்கர் ( Othman Lebbe Macan Maker) நிறுவனத்தைக் குறிப்பிடலாம். 1860 ஆம் ஆண்டு காலியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல் வளாகத்தில் தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

கொழும்பு பிரின்ஸ் வீதியில் எய்ட்கென் ஸ்பென்ஸ் (Aitken Spence) நிறுவனம் 1870ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவர்கள் கப்பல் போக்குவரத்து முகவர் நிறுவனமாகவும், ஏற்றுமதி இறக்குமதி யோடு விற்பனையிலும் ஈடுபட்டார்கள். இவர்களுக்கு காலியிலும் கிளை இருந்தது

Philip Freudenberg என்பவரால் 1873 ஆண்டு ஜுலை மாதம் ப்ரேடன்பேர்க் என்ட் கம்பனி ( Freudenberg & co) உருவாக்கப்பட்டது. இலங்கைக்கு அவர் கோப்பி வர்த்தகம் செய்வதற்காகத் தான் வந்தார். சூயல் கால்வாய் திறக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கையிலிருந்து கோப்பியை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வது அவரின் வர்த்தக இலக்காக இருந்தது. ஆனால் இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை அழிந்து போனதால் அவர் வேறு வியாபார நடவடிக்கைகளில் இறங்கினார். அவருக்கு ஹல்டோர்ப் பகுதியில் பெரிய எண்ணெய் ஆலை இருந்தது.



மகாவம்சத்தை மொழிபெயர்த்த பேராசிரியர் கைகர் குறிப்பிடும் போது ப்ரேடன்பேர்க் இலங்கைக்கான ஜெர்மன் தூதுவராக இருந்தாரென்றும் அவர் கொழும்பு வணிகர்கள் மத்தியில் பிரசித்தி பெற்றவராக இருந்தாரென்றும் குறிப்பிடுகிறார். ஜெர்மனியில் இருந்து இலங்கை வருபவர்கள் கொழும்பு கறுவாத் தோட்டப் பகுதியில் அவருக்கு இருந்த சொகுசு மாளிகைக்கு விருந்துக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

கலம்பு கொமர்ஷல் கம்பனி ( Colombo Commercial Co. Ltd) 1876 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அந்நிறுவனம் தேயிலை ஏற்றுமதி செய்யும் பெரிய நிறுவனமாக இயங்கியது.

ஜார்ஜ் பார்க்லே லீச்மேன் (George Barclay Leechman) என்பவரால் 1866இல் ஆரம்பிக்கப்பட்ட லீச்மன் என்ட் கம்பனியும் தேயிலை ஏற்றுமதி நிறுவனமாக இயங்கியது.

இங்கிலாந்து சபையைச் சேர்ந்த ஆயரின் செயலாளராக இலங்கையை வந்தடைந்த ஹென்றி டபிள்யூ கேவ் (Henry W Cave) 1876 ஆம் ஆண்டு சதாம் வீதியில் புதிய தொழிலொன்றை ஆரம்பித்தார். அதாவது வணிக ரீதியில் நூல்களை இறக்குமதி செய்வது, நூல்களை பதிப்பித்து வெளியிடுவது, படங்களை சட்டகம் இட்டு கொடுப்பது போன்றவற்றை மேற்கொள்ளத் தொடங்கினார். அந்தத் தொழில் மிகவும் வெற்றிகரமாக முன்னேறியதால் சதாம் வீதியில் ஒரு அழகான கட்டிடத்தையும் அவர் கட்டினார். இரண்டு மாடியைக் கொண்ட 400 அடி அகலமான கட்டிடம் அது. கொழும்பு துறைமுகத்தை நோக்கியபடி அந்த கட்டிடத்தின் ஒரு பகுதி அமைந்திருந்தது.

வழிகாட்டி நூல்களின் முன்னோடியான அவரால் வெளியிடப்பட்ட பல நூல்கள் சிறந்த புகைப்படங்களுடன் வெளிவந்தன. இலங்கையைப் பற்றி உலகமெங்கும் வெளிக்காட்டிய நூல்கள் அவை. அது மட்டுமன்றி அந்த நூல்கள் இலங்கையின் அமைப்பைப் பற்றி மட்டுமல்ல இலங்கையின் அரிய வரலாற்றுத் தகவல்களையும் எடுத்துச் சொல்லும் நூல்களாக அமைந்தன. இன்று நாம் காணும் இலங்கை பற்றிய 19ஆம் நூற்றாண்டு காலப் படங்கள் பல அவரால் வெளிக்கொணரப் பட்டவை. "இலங்கையின் சிதைந்துபோன நகரங்கள்" ( The Ruined Cities of Ceylon) "வெப்பவலய விவசாயி (The Tropical Agriculturist), இலங்கை அரச இரயில் வண்டிச் சேவை (The Ceylon Government Railway) "பிக்சர்ஸ்க் சிலோன்" (Picturesque Ceylon) போன்ற நூல்கள் மிகவும் பிரசித்தம் பெற்றவை. அது மட்டுமன்றி 1906 ஆம் ஆண்டு அவரால் எழுதப்பட்ட 550 பக்கங்களைக் கொண்ட "The Book of Ceylon" என்கிற நூல் பல உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு பிரயாணப்பட காரணமாக இருந்த நூல். நூறாண்டுக்கு முன்னரே அதன் விலை 22.50 ரூபாய். அப்படியென்றால் அன்றே அந்த நூலின் வணிகப் பெறுமதி எத்தகையதாக இருந்திருக்கிறது என்பதை உங்களால் கணிக்க முடியும்.

R.A.போசன்கெட் என்பவர் சதாம் வீதியில் இலக்கம் 17இல் ஆரம்பித்த போசன்கெட் என்ட் கம்பனியானது அன்று மிகவும் பிரபலமான ஜோர்ஜ் வோல் நிறுவனத்தின் பல பங்குகளைக் கொள்வனவு செய்தது. தேயிலை கோப்பி, கொக்கோ, ஏலக்காய் போன்ற தோட்டப் பயிர்களை ஏற்றுமதி செய்தது இந்த நிறுவனம்.

ஜேம்ஸ் விட்டல் (James Whittal) என்பவரால் 1880இல் விட்டல் என்ட் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனம் தோட்டத்துறையில் அதிக முதலீடுகளை செய்திருந்தது.

பிரபலமான ஈ. பி.கிரீசி நிறுவனம் ( E.B. Creasy) கொழும்பில் 1882 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கோட்டையில் பேலி வீதியில் இலக்கம் 12 இல் ஆரம்பிக்கப்பட்ட வணிக தரகு முகவர் வியாபாரத்தை ஆரம்பித்த இவர்கள் கப்பல் சரக்குகளை ஏற்றி இறக்குவது, மட்டுமன்றி தோட்டத் துறையிலும் முதலிட்டு இருந்தார்கள். வியாபார விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள்.

1842 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தடைந்த ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜோன் வாக்கரால் வாக்கர் நிறுவனம் (Walker sons & Co) 1854 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1870 ஆம் ஆண்டு பதுளையிலும் ஹல்துமுல்ல போன்ற பகுதிகளில் 1873 ஆண்டிலும் பின்னர் பண்டாரவளையிலும் தோட்ட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் 1880 ஆம் ஆண்டு அதன் பிரதான காரியாலயம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டது.

***கொழும்பு; வணிக மையமாக மாறிய கதை அதன் வரலாற்றோடு மட்டுமல்ல அதன் தோற்றத்திலும், அமைப்பிலும், பண்பாட்டிலும் ஏற்படுத்திய மாற்றத்துக்கு வழிகோலியதையும் நாம் உணர முடியும்.***

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முன்னாள் அதிபர் ஹாஜியானி நாகூர் உம்மா காதர்

மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 6 ஆம் திகதி (06.09.2022) செவ்வாய் இரவு 8 15. ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியின் அதிதியாக ஹாஜியானி நாகூர் உம்மா காதர் கலந்துகொள்கிறார்.



இவர், கொழும்பு மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும், கொழும்பு 10, ஸ்ரீசங்கராஜ மாவத்தை அல்ஹிதாயா முஸ்லிம் மஹா வித்தியாலயத்திலும் நீண்டகாலமாக அதிபராக பணியாற்றி கொழும்பு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றினார்.

1975 தொட்டு 1993 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான, மாதர் மஜ்லிஸ் நெஞ்சோடு நெஞ்சம், நிகழ்ச்சிக்கு, கூடுதலான ஆக்கங்கள் எழுதியதோடு குரலும் கொடுத்துள்ளார்.

வர்த்தக சேவை பூவும் பொட்டும் மங்கையர் நிகழ்ச்சிக்கும், அதிகமான ஆக்கங்கள் எழுதிய இவர், இலங்கை தொலைக் காட்சியிலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

தேசபிமானி, கல்வித்தீபம், இல்முல் ஐன் போன்ற பட்டங்களை பெற்றுக்கொண்ட இவருக்கு கல்வி அமைச்சினால் சிறந்த அதிபருக்கான விருதும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவரிடம் கல்வி கற்ற நூற்றுக்கணக்கான மாணவர்கள், இன்று இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உயர் பதவிகள் வகித்து வருகின்றமை கல்வி வளர்ச்சிக்காக இவர் வழங்கிய இவரது பங்களிப்புகளுக்கு சாட்சி கூறுகின்றன.

முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்து வழங்கும் இந்த நிகழ்ச்சியை எம். எஸ். எம். ஜின்னா தொகுத்தளிக்கிறார்.


















பைந்தமிழ் கவிமலர் சங்கத்தின் (சென்னை) உலக சாதனை நூல்கள் வெளியீட்டு திட்டத்தில் பிரசுரிக்கப்பட்ட நூல்களில் ஒன்றான,கவிஞர் பூனாகல நித்தியஜோதியின் 'ஈரவிழியில் மறையாத சோகம்' அறிமுகவிழா கடந்த 20ஆம் திகதியன்று பண்டாரவளை தமிழ்மத்திய கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பட்டதாரிகள் ஒன்றிய வெளியீடான இந்த நூலின் அறிமுகவிழாவில்பேராதனை பல்கலை கழத்தின் பேராசிரியர் விஜயசந்திரன், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியின் அதிபர், ஊவா இலக்கியப்பேரவையின் தலைவர்அருண் தியாகலிங்கம், திருமதி சுகந்தினி, இந்து கலாசார உத்தியோகஸ்தர் சுஜிதா, மணிக்கூ கவி ஓட்டமாவடி நஸீரா ஆப்தீன்,விமர்சகர் அமீன், பண்டாரவளை நகரபிதா உட்பட ஏராளமான இலக்கிய ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 27

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 | | 09 |
| 10 | | | 11 | 12 | |
| 13 | | 14 | 15 | | 16 |
| 17 | 18 | 19 | | 20 | 21 |
| | | 22 | 23 | 24 | |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(01) தொடர்ச்சியாக மழை பெய்கின்ற காலப்பகுதியைக் குறிக்கும் சொல்.

(03) உள்ளத்திலும், உடலிலும் துணிச்சல் இல்லாத ஒருவரைக் குறிக்கின்ற பொதுப்பாற் சொல்.

(05) சிற்பிகளின் கைவண்ணத்தில் உருவாகும் கலைப்படைப்பு இது. (தலைகீழான சொல்)

(11) இரப்போருக்கு இல்லையென்று கூறாது வாரி வழங்கிய மன்னன் இவன். இந்தியாவின் பறம்பு நாட்டை ஆட்சி செய்த மன்னன். (தலைகீழான சொல்)

(14) கடலோரம் ஓயாமல் எப்போதும் அடித்துக் கொண்டேயிருக்கும்.(தலைகீழான சொல்)

(17) மரங்கள் அடர்ந்த இடம். ஏராளமான சீவராசிகளின் வசிப்பிடம். (தலைகீழான சொல்)

(20) காடுகளில் வாழும் அப்பாவியான மிருகம். எமது நாட்டில் வாழும் இம்மிருகம் உடலெங்கும் வெண்ணிறப் புள்ளிகளும், கிளைகள் கொண்ட நீண்ட கொம்பும் உடையது. (தலைகீழான சொல்)

(22) எமது நாட்டில் விளைகின்ற வாசனைத் திரவியங்களில் இதுவும் ஒன்று.

### மேலிருந்து கீழ்

(01) கனிகளிலே சிறந்ததென இலக்கியங்களில் போற்றப்படுகின்ற பழம்.

(02) குதிரையைக் குறிக்கின்ற சொல். (தலைகீழான சொல்)

(04) உலகம் செழிக்க வேண்டுமானால் இது அவசியம். ஆனால் அதிகமாகி விட்டால் இயற்கை அனர்த்தமாகி, அழிவுகள் ஏற்பட்டு விடும். (தலைகீழான சொல்)

(08) எமது நாட்டு மக்களின் பிரதான உணவு சோறு ஆகும். சோறு சமைக்க வேண்டுமானால் முதலில் தேவையானது இது. (தலைகீழான சொல்)

(14) மனதை வருத்தும் உணர்வு. உள்ளத்தில் இருந்து இதனை விரட்டிவிட வேண்டும். இல்லையேல் வாட்டிக் கொண்டேயிருக்கும். (தலைகீழான சொல்)

(16) அந்திப் பொழுதை இவ்வாறும் கூறலாம். (தலைகீழான சொல்)

(20) வானத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 26

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) மேளம் (04) வால் (09) மன்னன் (13) அழகு (16) மிடி (18) வலை (23) கம்பன்

**மேலிருந்து கீழ்**

(01) மேடை (03) அன்னம் (04) மின்னல் (09) மழலை (13) குவளை (17) கரடி (20) பசு

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 25

### பாராட்டு பெறுவோர்

1. **ச. சஞ்ஜனா,**
தரம் 12 (கலை),
மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்,
வந்தாறுமூலை.
2. **அஹமட் ராஜிட் வாஹிட்,**
தரம் 12, ப/அல் அதான் தேசிய பாடசாலை,
பதுளை.
3. **எம்.ஏ. ஆயிஷா ஸைனப்,**
தரம் 11B,
மே/மா/மது/வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி.,
வெலிப்பன்னை.
4. **ஸீனத் தஹானி சாட்,**
தரம் 10B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
தென்னக்கும்புர,
கண்டி.
5. **நவேந்திரன் பவேந்தினி,**
தரம் 09M, கமு/கமு பற்றிமா தேசிய பாடசாலை,
கல்முனை.
6. **எம். ,ம்சாட்,**
தரம் 09, கொ/டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி,
கொழும்பு 07.
7. **தமீம் உஸ்மான் ஹாமித்,**
தரம் 06, அக்/அல் முனவறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 18.
8. **எம்.எம்.எம். அஜ்மல்,**
தரம் 06, மா/சாஹிரா தேசியக்கல்லூரி,
மாத்தளை.
9. **எம்.எச்.எப். எஸால் அஷ்ஷாஹ்,**
தரம் 05A, தி.அந் நஹார் மகளிர் ம.வி.,
மூதூர்.
10. **எம்.ஏ.எம். யூனுஸ்,**
தரம் 06A, மாறை/அறபா தேசிய பாடசாலை,
வெலிகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 27
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**ஈதல்: இசைபட வாழ்தல்: அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

**தெளிவுரை :**
வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப் புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

# பால் பொங்குவது ஏன்?



தண்ணீரைப் போல பால் என்பது ஒரு எளிய திரவம் கிடையாது. பாலில் நீர், கொழுப்பு, புரதம், கார்போஹைதரேட் மற்றும் தாதுப்பொருட்கள் உள்ளன.

பாலைக் கொதிக்க வைக்கும்போது தனது கொதிநிலையை அடையும் நீர், கொதித்து நீராவியாக மாறுகிறது. அதே நேரத்தில் கொழுப்பு, புரதம் போன்றவை தனியாகப் பிரிந்து பாலின் மேல்புறத்தில் ஆடையாகப் படர்கின்றன. அந்த நேரத்தில் நீராவி மேல் நோக்கி ஆவியாகச் செல்கிறது. ஆனால் அந்த நீராவியை மேலே செல்லவிடாமல் பாலில் படர்ந்துள்ள பாலாடை தடுக்கிறது. அப்போது அந்த ஆடையைத் தள்ளிக் கொண்டு நீராவி மேலெழும்பிவரும். இதைத் தான் பால் பொங்குகின்றது என்கிறோம்.

பால் பொங்கும்போது அடுப்பை குறைப்பது மற்றும் கரண்டியால் கலக்குவது ஏன்?

அடுப்பின் வெப்பத்தைக் குறைத்தல், பாலில் உள்ள நீருக்குக் கிடைக்கும் வெப்பத்தின் அளவு குறையும். இதனால் பாலில் உள்ள நீர் கொதிநிலையை எட்டும் வேகமும் குறையும். அதேபோல பாலைக் கரண்டியால் கலக்கும்போது பாலின்மேல் படர்ந்திருக்கும் பாலாடை உடைக்கப்பட்டு, நீராவி மேலே செல்வதற்கான தடை நீக்கப்படும். தடையின்றி நீராவி மேலே செல்வதால் பால் பொங்குவதும் நின்றுவிடும்.

**சுஜானி திருஆலன்,**
வவுனியா.



இவ்வார மழலை

கேஷ்னாஶ்ரீ

மோகன்குமார் / ராதிகா,
லுணுகலை, பதுளை.

## தெரிந்து கொள்வோம்..!

- பழமரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது தோடம் மரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடர்ந்து அது விளைச்சல் தரும்.
- ஒரு தர்பூசணி பழம் இருந்தால் அதிலிருந்து 5 லட்சம் தர்பூசணி பழங்களை உற்பத்தி செய்துவிடலாம்.
- மனித உடல்களில் சுமார் 6 கோடியே 50 இலட்சம் செல்கள் இருக்கின்றன.
- பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலோமிடோமொனாஸ் எனும் ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.
- பச்சோந்தியின் நாக்கு தன் உடலின் நீளத்தை இரண்டு மங்கு அதிகமாக இருக்கும்.
- நாக்கை நீட்டமுடியாத ஒரே விலங்கு முதலையாகும்.
- நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்கு சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.
- ஒரு புள்ளி அளவு இடத்தை 70,000 அமியாக்களால் நிரப்ப முடியும்.
- தரையில் முதுகு படும்படி உறங்கும் ஒரே உயிரினம் மனிதன்.
- முன்னால் பின்னால் பக்கவாட்டில் என அனைத்து பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை தேன்சிட்டு.
- தேன்சிட்டு, மரங்கொத்தி போன்ற பறவைகளுக்கு நடக்க தெரியாது.
- மனித உடலில் மட்டும் 17,000 வகை நுண்கிருமிகள் வாழ்கின்றன.
- புற்றுநோய் உட்பட எந்த நோயுமே வராத ஒரே உயிரினம் சுறாமீன்.
- நீந்துவதை நிறுத்தினால் உடனே இறந்துவிடும் ஒரே மீன் சுறாமீன்.
- தயிராக மாற்றமுடியாத ஒரே பால் ஒட்டகப் பால்.
- ஒட்டகத்தை விட அதிக நாட்கள் தண்ணீரின்றி வாழும் ஒரு உயிரினம் கங்காரு எலி.
- துருவக் கரடிகள் அனைத்துமே இடது கை பழக்கம் உடையவை.

**திலானுஷா பெரியசாமி,**
நன்றி : கல்வித்தளம்

## நாடுகளும் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| அங்கோலா | - | லுவாண்டா |
| அமெரிக்கா | - | வாஷிங்டன் |
| அயர்லாந்து | - | டப்ளின் |
| அவுஸ்திரேலியா | - | கான்பெரா |
| அல்பேனியா | - | திரானா |
| ஆர்மேனியா | - | ஏராவன் |
| ஆஸ்த்திரியா | - | வியன்னா |
| இத்தாலி | - | ரோம் |
| இஸ்ரேல் | - | ஜெருஸலேம் |
| ஈக்குவடோர் | - | குவைட்டோ ஈக்குவடோரியல் |
| கயானா | - | மலாபோ |
| ஈரான் | - | தெஹ்ரான் |
| ஈராக் | - | பக்தாத் |
| உகண்டா | - | கம்போலா |
| உக்ரைன் | - | கீவ் |
| உருகுவே | - | மொன்ரவ்டியோ |
| ஓமான் | - | மஸ்கட் |
| எஸ்டோனியா | - | தாலின் |
| எரித்ரியா | - | அஸ்மரா |
| ஐஸ்லாந்து | - | ரெய்யாவிக் |
| கட்டார் | - | டோஹா |
| கமரூன் | - | யாவூன்டே |
| காம்பியா | - | பஞ்சுல் |
| இந்தோனேசியா | - | ஜகார்த்தா |
| எத்தியோப்பியா | - | அடிஸ்அபாபா |
| ஐவரிகோஸ்ட் | - | அபிட்ஜான் |
| ஓமான் | - | மஸ்கட் |
| கம்போடியா | - | நாம்பென் |

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.

## நல்ல பிள்ளை!

காலையிலே எழும்படா
காலைக்கடன் முடியடா
வேளையோடு பள்ளி சென்று
விரும்பி கற்றுக் கொள்ளடா!

பெற்றோர் சொல்லைக் கேளடா
பெரியோர் சொல்லும் மதியடா
உற்றோர் மற்றோர் யாரையும்
உறவாய் எண்ணி வாழடா!

பேதம் சேதம் ஆக்குமே
பேரை நன்றாய் தாக்குமே
வாதமின்றி வாழ்ந்து வரின்
வாழ்வில் செழுமை பூக்குமே!

நல்ல பிள்ளை ஆகிடு
நால்வர் போற்ற வாழ்ந்திடு
நாளை உலகம் பேரும் சொல்ல
நடந்து புகழை சேர்த்திடு...!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்






**கவிமன்யு ஜுஹான்,**
Cantabury, UK.



**ஆர். பிரசாந்தன்,**
தரம் 11, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**ஜி. கிஷான்,**
தரம் 11, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**என். ரனுக்ஷியா,**
தரம் 06, கே/கா/ தெஹி/கதிரேசன் மத்திய கல்லூரி,
தெரணியகலை.















ஹட்டன் கல்வி வலயத்தின் ஆக்ரோயா தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா, புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு என்பன அண்மையில் பாடசாலையின் அதிபர் திருமதி சசிகலா ராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பழைய மாணவர்களினால் பாடசாலைக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் கொமர்சல் வங்கியின் அனுசரணையில் அமைக்கப்பட்ட புதிய தொழில்நுட்ப ஆய்வு கூடமும் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் அனுசரணையில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் கல்வி வலய பணிப்பாளரும் மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளருமான திருமதி. சத்தியேந்திரா ஹட்டன் கொமர்சல் வங்கியின் முகாமையாளர் கமல், டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு



# தடுமாற்றமும் பலம் தரலாம்!

ஆப்கானிஸ்தானிடம் முதல் இரண்டு ஓவர்களில் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தபோது மத்திய வரிசை வீரர்கள் கரைசேர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அவர்களும் கைவிட்டார்கள்.

கடைசியில் இலங்கை அணி 105 ஓட்டங்களுக்கு சுருண்டபோது 100ஐ தாண்டிவிட்டோம் பந்துவீச்சாளர்கள் சமாளிப்பார்கள் என்று கனவு கண்டோம். ஆனால் துடுப்பாட்ட வீரர்களே பரவாயில்லை என்பது போல் ஆப்கான் வீரர்கள் கண்டமேனிக்கு விளாச அந்த அணி 9.5 ஓவர்களை மிச்சம் வைத்து வெற்றி பெற்றது.

இலங்கை அணிக்கு அடுத்து பங்களாதேஷுடனான போட்டி ஆசிய கிண்ணத்தின் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறுவதற்கான நொக் அவுட் ஆட்டமாகவே மாறிவிட்டது. இதில் இலங்கை, பங்களாதேஷின் வாய்ச்சண்டை வேறு.

ஆப்கானை விட பங்களாதேஷ் தமக்கு பெரிய சவால் இல்லை என்று இலங்கை அணித் தலைவர் தசுன் சானக்க கூற, "களத்தில் பார்ப்போம்" என்று பங்களாதேஷ் சகலதுறை வீரர் மஹதி ஹசன் பதிலளித்ததோடு மோதல் முடியவில்லை. பங்களாதேஷ் பயிற்சியாளர் காலித் மஹ்மூதின் பேச்சும் இன்னும் சீண்டி விடுவது போல இருந்தது.

"அப்படியான ஒன்றை தசுன் சானக்க கூறியது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை. ஷகிப் மற்றும் முஸ்தபிசுர் தவிர பங்களாதேஷிடம் (உலகத் தரம் வாய்ந்த) பந்துவீச்சாளர்கள் இல்லை என்று அவர் கூறியதை நான் கேட்டேன். உண்மையில், இலங்கை அணியில் (உலகத் தரம் வாய்ந்த) ஒரு பந்துவீச்சாளரைக் கூட நான் காணவில்லை" என்றார் மஹ்மூத்.

இந்தப் பேச்சால் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தனவுக்கும் கோபம் வந்துவிட்டது.

"களத்தில் பந்துவீச்சாளர்கள் தமது திறமையைக் காட்டுவதற்கும் துடுப்பாட்ட வீரர்கள் தாம் யார் என்பதைக் காட்டுவதற்குமான நேரமாக இது உள்ளது" என்று மஹேல தனது ட்விட்டரில் பதிவிட்டிருந்தார்.

இலங்கை–பங்களாதேஷ் இடையிலான முறுகல் என்பது கடந்த ஒருசில ஆண்டுகளாக இருந்து வருகிறது. போட்டியில் விக்கெட்டுகளை வீழ்த்தும்போதும், வெற்றிபெறும்போதும் எதிரணியை கோபப்படுத்தும் அளவும் பங்களாதேஷ் வீரர்களின் மிகையான கொண்டாட்டம் 2018இல் இலங்கையில் நடந்த சுதந்திரக் கிண்ணப் போட்டியில் உச்சம் பெற்றது. அதுவே இரு அணிகளின் பூசலுக்கும் அடிப்படையாக இருந்தது.

குறிப்பாக நஸ்முல் இஸ்லாமின் "பாம்பு ஆட்டம்" பங்களாதேஷ் ரசிகர்களை தவிர யாருக்கும் ஒத்துப்போகவில்லை. கடைசியில் பங்களாதேஷ் அணி தோற்கும்போதெல்லாம் எதிரணிகள் பாம்பு ஆட்டம் ஆட ஆரம்பித்தன.

இந்தப் பணிப்போர் ஒருபக்கம் இருக்க இலங்கை, பங்களாதேஷ் போட்டியும் அதற்கே உரிய பரபரப்போடு நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 183 ஓட்டங்களை பெற்று வெற்றி நிச்சயம் என்று குதூகலிக்க இலங்கை அணி அதனைத் துரத்தி வெற்றிபெற்றதோடு, சாமிக்க கருணாரத்னவின் பாம்பு ஆட்டமும் நடைபெற்றது.

ஆசிய கிண்ணத் தொடரில் இலங்கை அணி தடுமாற்றத்துடனேயே சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறியது. ஆப்கானுடனான போட்டியில் இலங்கை அணியின் பலவீனம் அனைத்தும் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. பங்களாதேஷ் போட்டியில் இலங்கையின் பந்துவீச்சு வரிசை எதிரணிக்கு சவாலாக இருக்கவில்லை.

குசல் மெண்டிஸ், பெத்தும் நிசங்க, சரித்த அசலங்க, பானுக்க ராஜபக்ஷ மற்றும் தசுன் சானக்க என்று துடுப்பாட்ட வரிசை எதிரணிக்கு சவால் கொடுக்கக் கூடியதாகவே இருக்கிறது. பங்களாதேஷ் போட்டியில் அது தெளிவாகத் தெரிந்தது.

என்றாலும் துடுப்பாட்ட வரிசையில் நிலைத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை. நடந்து முடிந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிசை ஆரம்ப வீரராக களமிறக்கியபோது ஆரம்ப வீரரான தனுஷ்க குணதிலக்கவை மத்திவரிசையில் இறக்கி சோதிக்கப்பட்டது. ஆனால் இலங்கை அணியில் ஏற்கனவே மத்திய வரிசை வீரர் ஒருவராக தனஞ்சய டி சில்வா இருக்கிறார்.

ஆப்கானுடனான போட்டியில் இந்தப் பரீட்சாத்த முயற்சி தோற்றபோது பங்களாதேஷுடனான போட்டியிலாவது மாற்றங்கள் நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்டது. என்றாலும் குணதிலக்க மீண்டும் சோபிக்கத் தவறினார்.

அதேபோன்று ஆட்டத்தின் போக்கை கருத்தில் கொள்ளாமல் இடதுகை துடுப்பாட்ட வீரர் ஒருவர் ஆட்டமிழந்தால் பதிலாக இடதுகை வீரரும் வலதுகை வீரர் ஒருவர் ஆட்டமிழந்தால் வலதுகை வீரரும் களமிறக்கப்படும் போக்கும் கிரிக்கெட் உலகில் காலாவதியான போட்டித் தந்திரம். இதனை இலங்கை அணி கருத்தில் கொள்ள வேண்டும்.

என்றாலும் பந்துவீச்சில் இலங்கை அணியில் பெரிய ஓட்டை ஒன்று இருப்பது தெளிவாகத் தெரிகிறது. சுழற்பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க சமாளித்து விடுவார். ஆனால் வேகப்பந்து வீச்சில் அப்படியான ஒருவர் இல்லை.

துஷ்மன்த சமீர, கசுன் ராஜித்த, பினுர பெர்னாண்டோ, லஹிர குமார என அனைத்து முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களும் காயத்தில் உள்ளார்கள். அதிலும் மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் பந்துவீசக் கூடிய சமீர அல்லது லஹிரு குமார இருவரில் ஒருவர் அணியில் இருந்தாலேயே அணி முழுமை பெறும்.

பதிலுக்கு இலங்கை அணியில் சேர்க்கப்பட்டிருக்கும் டி20 சர்வதேச கிரிக்கெட்டுக்கு புது முகங்களான டில்ஷான் மதுஷங்க, மதீஷ பதிரன மற்றும் அசித பெர்னாண்டோ ஆகியோரை வைத்துத் தான் எதிரணியை வேகத்தில் பயம் காட்டவேண்டி இருக்கிறது.

இதில் அசித பெர்னாண்டோவுக்கு ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் ஆடிய அனுபவம் இருக்கிறது. பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் அவர் தனது 4 ஓவர்களுக்கும் 51 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தபோதும் அவரது பந்துவீச்சு பாணி நம்பிக்கை தருகிறது.

இலங்கை அணி சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறி இருக்கிறது. ஆரம்ப சுற்றில் இருந்த தடுமாற்றம் என்பது உற்சாகத்தை கொடுக்கும் ஒன்று. ஆனால் அது தனது பலவீனங்களை அறிந்து அதனை சரி செய்வதற்கான நல்ல வாய்ப்பு. இலங்கை அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டால் ஆசிய கிண்ணத்தை முத்தமிடலாம்.

## குறிப்பு

# ஐ.சி.சி விதியின் புதிய ஆட்டம்

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் நடந்த குழுநிலைப் போட்டி எதிர்பார்த்தது போல் பரபரப்பாக இருந்தது. மில்லியன் கணக்கான மக்கள் போட்டியை பார்த்திருப்பார்கள். ஆனால், சரியாக களத்தடுப்பை அமைக்கவில்லை என்று இரு அணித் தலைவர்களையும் திட்டியவர்கள் எத்தனை பேர்.

அதாவது இந்திய அணித் தலைவர் ரோஹித் ஷர்மாவாகட்டும் பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் ஆசாமாகட்டும் கடைசி ஓவர்களில் தேவையில்லாமல் ஐந்து வீரர்களை 30 யார்ட் வட்டத்திற்குள் நிறுத்தினார்கள். எனவே பௌண்டரி எல்லையில் ஐந்து வீரர்களை நிறுத்த அனுமதி இருந்தபோதும் நான்கு வீரர்களே களத்தடுப்பில் ஈடுபட்டார்கள்.



இது இரு அணிக்குமே சாதகமாகிவிட்டது. அதிலும் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித் தந்ததில் இந்தக் களத்தடுப்பு அமைப்பு உதவியதை எத்தனை பேர் அவதானித்தார்கள்.

ஏன் இரு அணித்தலைவர்களும் இப்படிச் செய்தார்கள். உண்மையில் அதனை அவர்கள் செய்யவில்லை ஐ.சி.சி விதி அதனைச் செய்ய வைத்தது.

களத்தடுப்பில் ஈடுபடும் அணி மந்தமாகக் காலத்தை கடத்தி குறிப்பிட்ட நேரத்தில் பந்து வீசி ஓவர்களை முடிக்காதது நீண்ட காலமாகவே ஐ.சி.சியுக்கு பெரும் தலையிடியான ஒன்று. அது தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடக்கம் பார்க்க வரும் ரசிகர்களையும் பாதிக்கும் என்று ஐ.சி.சி கவலைப்படுகிறது.

இந்தத் தாமதத்தை தடுக்க அணித் தலைவருக்கு அபராதம் விதித்துப்பார்த்தது, முழு அணிக்கும் அபராதம் விதித்துப் பார்த்தது, போட்டித் தடை கூட விதித்தது ஆனால் இந்தத் தாமதத்தை தடுக்க முடியவில்லை. அதனால்தான் கடந்த ஜனவரியில் தாமதமாக பந்துவீசும் அணிக்கு களத்தடுப்பில் கட்டுப்பாடு கொண்டுவரும் விதி டி20 சர்வதேச போட்டிகளில் அறிமுகம் செய்யப்பட்டது.

டி20 போட்டிகளில் ஓர் இன்னிங்ஸ் என்பது சரியாக 85 நிமிட கால எல்லைக்கு உட்பட்டது. இந்த விதிக்கப்பட்ட கால எல்லைக்கு வெளியே எந்த ஓவரேனும் வீசப்பட்டால் அப்போது 30 யார்ட் வட்டத்திற்குள் ஐந்து வீரர்களுடனே அந்த ஓவரை களத்தடுப்பில் ஈடுபடும் அணி வீச வேண்டும் என்பதே இந்த விதியாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஓகஸ்ட் 28) நடந்த போட்டியில் இந்திய அணித்தலைவர் ரோஹித் ஷர்மா நாணய சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார். பந்துவீச்சில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் இந்திய அணி 18 ஓவர்களுக்கு குறைவாகவே வீசி இருந்தது. இதனால் கடைசி இரண்டு ஓவர்களையும் இந்தியா பௌண்டரி எல்லையில் நான்கு களத்தடுப்பாளர்களுடனேயே ஆட வேண்டி ஏற்பட்டது. அந்த இரண்டு ஓவர்களிலும் இந்தியா 11 பந்துகளில் 23 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தது.

இந்தியா பதிலெடுத்தாடி பாகிஸ்தான் பந்துவீசும்போதும் இதே கதைதான். இருக்கும் பரபரப்புக்கு மத்தியில் பாபர் அஸாம் அணி மந்தமாகப் பந்துவீச அந்த அணி கடைசி மூன்று ஓவர்களிலும் 30 யார்ட் வட்டத்திற்குள் ஐந்து வீரர்களுடன் ஆட வேண்டியதாயிற்று.

இது கடைசி மூன்று ஓவர்களுக்கும் 32 ஓட்டங்களை பெற வேண்டி இருந்த இந்தியாவுக்கு சாதகமாகிவிட்டது. கடைசியில் ஹார்திக் பாண்டியா சிக்ஸர் ஒன்றை விளாசி இரண்டு பந்துகளையும் மிச்சம் வைத்து இந்தியாவின் வெற்றியை இலகுவாக்கினார்.

டி20 போட்டிகளில் கடைசி ஓவர்கள் மிகவும் தீர்க்கமானது. இந்த பரபரப்புக்கு மத்தியில் ஐ.சி.சியின் விதிகளும் விளையாடும் என்றால் அதில் இருக்கும் சாதக பாதகங்கள் பற்றியும் விவாதிக்க வேண்டி இருக்கிறது. இது போட்டியை செயற்கையாக திசைதிருப்பக் கூடியது என்று ஒரு தரப்பு கூறும் அதேநேரம் இந்த விதிதான் போட்டியை சரியாக வழி நடத்துகிறது என்று மற்றொரு தரப்பு கூறுகிறது.

இப்படித்தான் ஐ.சி.சி காலத்துக்குக் காலம் ஏகப்பட்ட புதிய விதிகளை கொண்டு வந்து பின்னர் அவைகளை விலக்கிக் கொள்கிறது. இந்த புதிய விதியின் ஆயுள் நீடிக்குமா? என்பது அது போட்டிகளில் மேலதிக தாக்கம் செலுத்துவதைப் பொறுத்தே இருக்கிறது.

# பிஃபாவுக்கு தலையாட்டுவதே நல்லது



சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் சட்டவிதி தெளிவானது. அதாவது, பிஃபா அங்கத்தவர்கள் சுய அதிகாரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். எந்த உறுப்பு நாடாக இருந்தாலும் அரசியல் அல்லது சட்டரீதியான தலையீடுகள் இருக்கக் கூடாது.

பிஃபா இந்த சட்டத்தில் கடுமையான பிடிவாதம் காட்டுகிறது. இதனை மீறிச் செல்லும் எந்த உறுப்பு நாடாக இருந்தாலும் தடை நிச்சயம். இதன் அண்மைய உதாரணம் இந்தியா. சரியாக இந்திய சுதந்திர தினத்தன்று, பேரிடியாக அகில இந்திய கால்பந்து சம்மேளனத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தில் மூன்றாம் தரப்பின் தலையீடுதான் தடைக்குக் காரணம் என்று பிஃபா நச்சென்று சுருக்கமாகச் சொல்லிவிட்டது.

அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தில் ஏகப்பட்ட குழப்பம். அதில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக தலைவராக இருப்பவர் பிரபுல் படேல். நான்கு ஆண்டுகள் கொண்ட சம்மேளனத்தின் தலைவருக்கான பதவிக் காலத்தை மூன்று தடவைகள் வகித்தவர். ஆனால் இந்திய தேசிய விளையாட்டு சட்டவிதியின்படி பார்த்தால் அவரால் அந்தப் பதவிக்கு மீண்டும் போட்டியிட முடியாது. என்றாலும் தலைவர் பதவிக்கான தேர்தலை நடத்தாமல் 2020இல் இருந்து இழுத்தடிப்புச் செய்தார்.

இதனையடுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க, உச்ச நீதிமன்றம் கால்பந்து நிர்வாகத்தை கலைத்து மூன்று பேர் கொண்ட நிர்வாகக் குழுவை அமைக்க, கடைசியில் அது பிஃபா தடை வரை சென்றுவிட்டது.

இந்திய விளையாட்டுத் துறை அமைச்சர், உச்ச நீதிமன்றம், விளையாட்டு நிர்வாகம் மன்றாடித் தான் கடைசியில் பிஃபாவிடம் இருந்து அந்தத் தடையை விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

பிஃபா இப்படித் தடை விதிப்பதும் பின்னர் விலக்கிக் கொள்வதும் தொடர்ச்சியாக நிகழும் ஒன்றாக மாறிவிட்டது.

பெனின், குவைட், நைஜீரியா, ஈராக் போன்ற நாடுகள் மீதும் கடந்த காலங்களில் இது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு, இதே விதியின் கீழ் பாகிஸ்தான் கால்பந்து சம்மேனமும் தடை செய்யப்பட்டது. 15 மாத தடைக்குப் பின்னர் கடந்த ஜூலையிலேயே அது நீக்கப்பட்டது.

இந்த சுழற்சியில் இப்போது இலங்கையின் பெயரும் அடிபட ஆரம்பித்திருக்கிறது. இலங்கை கால்பந்து நிர்வாகத்தின் பதவிக் காலம் கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி முடிவடைந்தது. அடுத்த நிர்வாகத்தை தேர்வு செய்வதற்காக வாக்கெடுப்பை நடத்துவதிலும் இழுபறி ஏற்பட்டுவிட்டது. இனி கால்பந்து சம்மேளனத்தை நிர்வகிப்பது யார் என்ற பெருத்த கேள்விக்கு பதிலில்லை. தன்னிஷ்டத்திற்கு நிர்வாகக் குழுக்களை அமைத்தால் பிஃபா கழுத்தைப் பிடித்துவிடும்.

**இலங்கை கால்பந்து நிர்வாகத்தின் பதவிக் காலம் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முடிவடைந்தது. அடுத்த நிர்வாகத்தை தேர்வு செய்வதற்காக வாக்கெடுப்பை நடத்துவதிலும் இழுபறி ஏற்பட்டுவிட்டது. இனி கால்பந்து சம்மேளனத்தை நிர்வகிப்பது யார் என்ற பெருத்த கேள்விக்கு பதிலில்லை.**

உண்மையில் ஒகஸ்ட் 31 ஆம் திகதி கால்பந்து சம்மேளத்தின் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பற்றி பேச கடந்த மே 17 ஆம் திகதி பொலன்னறுவையில் சிறப்பு பொதுக் குழு கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடானது. ஆனால் அந்தக் கூட்டத்தை நடத்த நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்ததை அடுத்தே சிக்கல் ஆரம்பித்தது. அதனால் திட்டமிட்டபடி ஒகஸ்ட் 31 ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாமல்போய்விட்டது.



இலங்கை கால்பந்து நிர்வாகம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படுகிறது. கடைசியாக 2021 ஜூலை 30 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. இதனால் கடந்த மே 31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தி நிர்வாகத்தை தேர்வு செய்யும்படி விளையாட்டு அமைச்சு அறிவுறுத்தி இருந்தது. இதற்கிடையே நாட்டில் பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பம் வேறு. எதையும் திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை என்பதற்கு இது நியாயமான சாக்காக எடுத்துக்கொள்ளலாம்.

இதனால் தேர்தல் நடத்த முடியாமல் காலாவதியான விளையாட்டு நிர்வாகங்களுக்கு மூன்று மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கு மேல் பிஃபா புதிய நிபந்தனை ஒன்றையும் விதித்தது. அதாவது பிஃபாவுக்கு இணங்கக் கூடிய இணையாகச் செல்லும் புதிய யாப்பு ஒன்றை இலங்கை கால்பந்து சம்மேளனம் தயாரித்து அதன் கீழ் தேர்தலை நடத்த வேண்டுமாம். ஆனால் தேர்லை நடத்துவதே பெரும் போராட்டமாக இருக்கும்போது புதிய யாப்பை தயாரிப்பது குதிரைக்கொம்பு.

இதுவரை இவ்வாறான ஒரு யாப்பு ஒன்றை தயாரிக்க முடியாத நிலையிலே அதன் கீழ் தேர்தலை நடத்துவதும் நிச்சயமில்லாத ஒன்றாக உள்ளது.

இவ்வாறான குழப்பமான சூழலிலேயே இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் ஓமர் ஒரு வாரத்திற்கு முன்னர் கட்டார் சென்று சர்வதேச கால்பந்து சம்மேனத் தலைவர் கினியானி இன்பென்டினோவை சந்தித்தார். இலங்கை கால்பந்து எதிர்காலம் பற்றிய தீர்மானங்கள் எடுப்பதில் இந்த சந்திப்பு முக்கியமாக இருந்தது.

குறிப்பாக இலங்கை கால்பந்து சம்மேளன தேர்தல் பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதனையொட்டியே இலங்கை கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனத்தைச் சேர்ந்த தூதுக் குழு ஒன்று இலங்கை வருகிறது.

மூன்று நாள் பயணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை (04) இலங்கை வந்த இந்தத் தூதுக் குழு முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்ளவிருக்கிறது. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகியோர் உட்பட இலங்கை கால்பந்து நிர்வாகத்தின் முக்கிய புள்ளிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாக செயற்பாடு மற்றும் தேர்தல் பற்றி இந்தத் தூதுக்குழுவின் ஆலோசனைகள் முக்கியமானதாக இருக்கும். அதேபோன்று தட்ட முடியாத அறிவுறுத்தலாகவும் அமையும்.

"ஓகஸ்ட் 31 ஆம் திகதி கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலை நடத்த முடியவில்லை. அப்படியென்றால் விளையாட்டு அமைச்சு எடுத்திருக்கும் முடிவுக்கு அமைய இலங்கை கால்பந்து சம்மேளனத் தேர்தலை விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தின் பெறுப்பில் பெற்று நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

என்றாலும் கால்பந்து நிர்வாகம் தொடர்பில் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குப் பின்னர் எடுக்கின்ற நடவடிக்கைகள் சர்வதேச கால்பந்து பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற பேச்சுவார்த்தை வரையில் ஒத்திவைத்திருக்கிறோம். அதனால் அவசர முடிவு ஒன்றுக்கு வரப்போவதில்லை" என்று விளையாட்டு பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய கூறுகிறார்.

எனவே ஓகஸ்ட் 31க்கு பின்னரான கால்பந்து நிர்வாகம் என்பது யாருக்கும் தன்னிஷ்டத்திற்கு முடிவு எடுக்க முடியாத ஒன்றாகவே இருக்கப்போகிறது. அரசியல் நிர்வாகத்தால் எடுக்கப்படும் அதிரடி முடிவுகளாகட்டும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளாகட்டும் எதுவும் பிஃபாவை திருப்திப்படுத்தப்போவதில்லை.

பிஃபாவுக்கு தலையாட்டுவதைத் தவிர இதில் வேறு தேர்வு இல்லை என்பதை இந்தியாவை பார்த்து புரிந்து கொண்டால் போதுமானது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




## மேஷம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி(28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுவது நன்மைதான். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப திடீர் திருப்பங்கள் ஏற்படும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். தொழில் கூட்டாளிகளில் ஒருவர் விலகினாலும் புதியவர்கள் வந்து இணைந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பர். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 3, அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## ரிஷபம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி(28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு 2 , 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுவதால் எதிர்பாராத வகையில் பிரச்சினைகள் உருவாகும். ஆகையால் குடும்ப பெரியவர்களை ஆலோசித்து முடிவெடுங்கள். கொடுக்கல் வாங்கல்களில் சிலருக்கு ஏமாற்றம் வந்துசேரும். தன்னிச்சையாக செயல்பட இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 28, அதிர்ஷ்ட நிறம் சிவப்பு.

## மிதுனம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறுவது யோகம் தான். இக்காலத்தில் இடமாற்றம்,வீடு மாற்றம் திருப்தி அளிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. இந்த காலகட்டத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 31, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## கடகம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி(28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. இதன் விளைவாக புத ஆதித்ய யோகம் செயல்படும். விரையாதிபதி புதன் வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியாக புதன் வருவதால் சில தடைகளும் தாமதங்களும் வந்து சேரும். ஒரு சிலருக்கு மனக்குழப்பம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 1, அதிர்ஷ்ட நிறம் சிவப்பு.

## சிம்மம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. புதன் வக்ரம் பெறுவதால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. பொருளாதார பற்றாக்குறையை அகற்ற புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினை இருந்தாலும் முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை வராது. புத ஆதித்ய யோகம் செயல்படும் இந்த நேரத்தில் வங்கிகளின் உதவி கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 2, அதிர்ஷ்ட நிறம் நீலம் .

## கன்னி

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் 12ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் புதன். அவர் கேந்திராதிபத்திய தோஷம் பெற்றவர் என்பதால் வக்ர காலத்தில் நற்பலன்கள் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். செய்தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் நிரந்தர பணி அமையும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 1, அதிர்ஷ்ட நிறம் ரோஸ் .

## துலாம்

சிம்ம ராசியில் வக்ர புதன் சஞ்சாரம் ஆவணி 12ம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. விரயாதிபதி வக்ரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியாக புதன் இருப்பதால். தர்ம காரியங்களுக்கு செலவிடுவீர்கள். பெற்றோர் வழியில் ஒத்துழைப்பு குறையும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம். பணிபுரியும் இடத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படும். அதிர்ஷ்ட திகதி 3, அதிர்ஷ்ட நிறம் சாம்பல்.

## விருச்சிகம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி(28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. அட்டமாதிபதியாக விளங்கும் புதன் வக்ரம் பெறுவது நன்மைதான். தடையாக இருந்த சில காரியங்கள் தானாக நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சில காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். பணப்புழக்கம் சரளமாகும். 11ம் இடத்திற்கும் அதிபதி புதன் என்பதால் மனம் நிம்மதி குறையும். குருவின் பார்வையால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். அதிர்ஷ்ட திகதி 31, அதிர்ஷ்ட நிறம் ஊதா.

## தனுசு

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு 9ம் இடத்தில் புதன் சூரியனுடன் இணைந்து வலுவிழக்கிறார். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற புதன் வக்ரம் பெறுவது யோகம் தான். சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். கடன் சுமை குறைய புதிய வழி பிறக்கும். அதிர்ஷ்ட திகதி ஆகஸ்ட் 30, அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## மகரம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு 8ம் இடத்தில் 6ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுகிறார். 6க்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். எதிர்பாராத நற்பலன்கள் உங்களுக்கு வரலாம். அதேநேரம் ஒன்பதுக்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் தந்தை வழி உறவில் சில பிரச்சினைகள் உருவாகும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 2, அதிஷ்ட நிறம் நீலம்.

## கும்பம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்கிரம் பெறுவதால் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் தலைதூக்கும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அண்ணன் தம்பிகள் அனுசரணை அவசியம். உத்தியோகத்தில் வீண்பழிகள் ஏற்படலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 1, அதிர்ஷ்ட நிறம் ஆரஞ்சு .

## மீனம்

சிம்ம ராசியில் வக்ர புதனின் சஞ்சாரம் ஆவணி 12ஆம் திகதி (28/08/2022) ஆரம்பமாகியுள்ளது. உங்கள் ராசிக்கு கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் புதன் என்பதால் இந்த கால கட்டத்தில் நற்பலன்கள் கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். உத்தியோக மாற்றம் பற்றி சிந்தித்தவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. வீடு மாற்றம், ஊர் மாற்றம் ஏற்படலாம். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 3, அதிர்ஷ்ட நிறம் நீலம்.

---

# மழை, வெள்ளம், அனர்த்தங்கள்...

**சமூகத்துடன் ஒன்று கலந்து இயங்கும் இரு தரப்பு என்றால் அவை வர்த்தக சமூகம் கோவில் நிர்வாகங்களும்தான். கடந்த மழை வெள்ள அனர்த்தங்களில் இரு தரப்பினரும் பெரும்பாலும் பாரா முகம் காட்டியது உறுத்தலாக இருப்பதாலேயே இந்தக் கட்டுரை'**



# மலையக வர்த்தக சமூகம் பாராமுகம் காட்டலாமா?

' நூரளை எஸ். தியாகு

இலங்கையின் பொருளாதார பின்னடைவு காரணமாக மிகவும் பாதிப்பை சந்திருக்கின்ற இந்த நாட்டு மக்கள் அதில் இருந்து எவ்வாறு மீண்டு வெளியில் வருவது என்பது தொடர்பாக சிந்தித்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அவர்களை மேலும் சிரமத்திற்கு ஆளாக்குகின்ற வகையில் காலநிலை மாற்றமும் அவர்களை வாட்டி வதைக்கின்றது.

குறிப்பாக கடந்த சில வாரங்களாக இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் மிகவும் மோசமான காலநிலையே நிலவி வருகின்றது. வெள்ள அனர்த்தம், மண்சரிவு போன்ற காரணங்களால் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு உடமைகள் சேதமடைந்த அதே சமயம் சில பகுதிகளில் மிகவும் பாரதூரமான அளவில் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

மலையக பகுதிகளில், குறிப்பாக, நாவலப்பிட்டி, ஹட்டன், நுவரெலியா பகுதிகள் மழை வெ ள்ளத்தால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன. அநேகமான மக்களுடைய வீடுகள் முழுமையாக சேதமடைந்திருந்தன.

ஒரு சில வீடுகளில் எந்தவிதமான பொருட்களையும் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது. உயிர் தப்பினால் போதும் என்ற மன நிலையுடன் மக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்காக கோயில்களிலும் பாடசாலைகளிலும் சனசமூக நிலையங்களிலும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு தஞ்சமடைய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது.

இவ்வாறு தஞசமடைந்தவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் இருந்தாலும் இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதனை சரியாக நடைமுறைபடுத்த முடியாத ஒரு நிலைமையே உள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்து அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு யாருடையது ?

இலங்கையர்கள் என்ற வகையில் அனைத்திற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்க்கும் மனநிலை நம் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது. எங்களுடைய அரசாங்கம், நாங்கள் வாக்களித்தவர்கள் என்றெல்லாம் நாம் கதை பேசிக்கொண்டிருப்போம். அவர்கள் செய்ய வேண்டும் இவர்கள் செய்ய வேண்டும் என்று விவாதிப்போம்.

ஆனால் நாம் ஒரு முறையேனும் சிந்திக்க முனைவதில்லை. என்னால் என்ன செய்ய முடியும் என்று சிலர் தங்களுடைய உழைப்பை கொடுக்கலாம். ஒரு சிலர் தங்களுடைய செல்வத்தையும், வசதியையும் கொடுத்து உதவி செய்யலாம். அல்லது வேறு ஏதாவது ஒரு வழியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவலாம்.

அப்படி உதவி செய்பவர்கள் இருக்கவே செய்கிறார்கள். முற்றாக இல்லை என்று சொல்லி விட முடியாது. ஆனால் இது போதுமானதா? யார் இந்த உதவிகளை செய்தார்கள் யார் ஒன்றுமே செய்யவில்லை என்ற கேள்வி எம் முன்னே நிற்கின்றது.

இக்கட்டான நேரங்களில் யார் உதவக் கூடும் என்றால் எப்போதும் அது வர்த்தக சமூகமாகத்தான் செல்வந்தர்களாகத்தான் இருக்க முடியும்.

எனவே இந்த விடயத்தில் எங்களுடைய வர்த்தக சமூகத்தை சேர்ந்தவர்கள் எத்தனை பேர் முன்நின்று உதவிகளை செய்தார்கள் என்பது ஒரு கேள்விக்குறியே! உதவி செய்தவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் உதவி செய்யாதவர்களே அதிகம் என்பதுதான் எமது கவலை.

மலையக வர்த்தக சமூகம் இதே மலையக மக்களிடமிருந்துதான் வருமானத்தைத் தேடுகிறது. எனவே கஷ்டம் என வரும் போது அம் மக்களுக்கு உதவ அவர்கள் கடமைப்பட்டவர்கள். எனவே தான் இந்த மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம். கொரோனா தொற்றின் பொழுது எத்தனையோ கோடீஸ்வரர்கள் யாருமே பக்கத்தில் போக முடியாத நிலையில், தங்களுடைய குடும்பம், ஜாதி, சமய, சடங்குகள் எதனையுமே நிறைவேற்ற முடியாமல் வெறுமனே புதைக்கப்பட்டார்கள் என்பதை அறிவோம்.

ஒரே குழியில் பணக்காரனும் கோடீஸ்வரனும் பரம ஏழையும் புதைக்கப்பட்ட சம்பவங்களை நாம் நேரில் பார்த்தோம். இதற்கு முன்பு சுனாமி ஏற்பட்ட பொழுதும் இதே நிலையே ஏற்பட்டது. இவற்றை பார்த்தும் நாம் இன்னும் எங்களுடைய மன நிலையை மாற்றிக் கொள்ளாவிட்டால் நாம் மனிதர்களாக வாழ தகுதியற்றவர்களே!

ஓடி ஓடி உழைக்கின்றார்கள். பணத்தை தவிர ஒரு சிலருக்கு வேறு எதுவுமே ஞாபகத்தில் வருவதில்லை. காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்கு செல்வது வரை பணம் தனது வியாபாரத்தை பார்ப்பதும் தவிர வேறெந்த ஏனைய எந்த ஒரு விடயத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. எதனையும் அனுபவிப்பதும் இல்லை.

ஒவ்வொருவரும் ஒரு விடயத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய பகுதியில் ஒரு அனர்த்தமோ அல்லது ஏதோ ஒரு பிரச்சினையோ மக்களுக்கு எற்பட்டால்

**மலையக வர்த்தக சமூகம் இதே மலையக மக்களிடமிருந்துதான் வருமானத்தைத் தேடுகிறது. எனவே கஷ்டம் என வரும்போது அம் மக்களுக்கு உதவ அவர்கள் கடமைப்பட்டவர்கள். எனவே தான் இந்த மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம். கொரோனா தொற்றின் பொழுது எத்தனையோ கோடீஸ்வரர்கள் யாருமே பக்கத்தில் போக முடியாத நிலையில், தங்களுடைய குடும்பம், ஜாதி, சமய, சடங்குகள் எதனையுமே நிறைவேற்ற முடியாமல் வெறுமனே புதைக்கப்பட்டார்கள் என்பதை அறிவோம்.**

முதலில் சென்று பார்க்க வேண்டியவர்கள் அந்த பகுதியில் வசிப்பவர்களே! குறிப்பாக இளைஞர் யுவதிகள். ஆனால் இவர்களிடம் பொருளாதார ரீதியாக உதவி செய்ய முடியாது. தங்களுடைய உழைப்பையே வழங்கலாம்.

பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டியவர்கள் வர்த்தகர்களே. நீங்கள் செய்கின்ற அனைத்து உதவிகளும் உங்கள் பகுதியில் இருக்கின்ற மக்களிடம் இருந்து இலாபமாக நீங்கள் பெற்றுக் கொண்டவையே. அதனை அவர்களுக்காக செய்தால் நிச்சயமாக இது திரும்பி உங்களிடமே வரும். எதை நீ கொடுக்கின்றாயோ அதுவே உனக்கு திரும்ப கிடைக்கும் என்பது அருள் வாக்கு மட்டுமல்ல, உண்மையும் கூட!

எனவே வர்த்தகர்கள் இந்த விடயத்தில் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என்பதே இந்த எழுத்தின் எதிர்பார்ப்பு வேறு எதுவும் கிடையாது.

அதே நேரத்தில் இன்னும் ஒரு விடயத்தையும் இங்கு கூற வேண்டும். ஆலயங்களின் நிர்வாகிகளுக்கும் பாரிய ஒரு பொறுப்பு இருக்கின்றது. தங்களுடைய பகுதி மக்களை பாதுகாக்க வேண்டியது அவர்களின் கடமை. கடவுள் மீது பொறுப்பை போட்டுவிட்டு சும்மா இருந்துவிட முடியாது.

பல ஆலயங்களில் நிர்வாக சபை நிதியில் கோடிக்கணக்கான ரூபாய்கள் சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது. இதனால் யாருக்கு என்ன நன்மை என்பது புரியவில்லை. ஆலய நிர்வாகங்கள் திருவிழா செய்வதும் பூஜைகள் செய்வதும் மாத்திரமே தங்களுடைய செயற்பாடுகள் என்றால் அது தவறான ஒரு புரிதலாகவே இருக்கும்.

ஏனெனில் ஒரு சமூகத்தின் முன்னேற்றம், அதன் நன்மை தீமைகள், கஷ்ட நஷ்டங்கள் அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக தங்களுடைய சமூகத்தின் கல்வியை மனதில் கொள்ள வேண்டும். அப்படி செய்கின்ற ஆலயங்களும் இல்லாமல் இல்லை. ஆனால் அவை எண்ணிக்கையில் மிகவும் குறைவு.

பல ஆலயங்களில் நிதி அறிக்கைகளே இல்லை. ஒரே பொருளாளர் பல வருடங்களாக பதவியில் இருக்கின்றார். அவர்கள் இருப்பதில் தவறு இல்லை. ஆனால் அவர்கள் நேர்மையானவர்களா என்ற கேள்வி பலருக்கும் எழுகின்றது. எனவே இந்த இரண்டு தரப்பினரும் சிந்தியுங்கள்.

வாய் திறந்து பசி என்று கேட்காதவன் இறைவன். ஆனால் வாய் திறந்து பசி என்று கேட்கின்றவன் மனிதன். அந்த மனிதனின் பசியை உங்களால் ஆற்ற முடியுமானால் நிச்சயமாக அந்த இறைவனும் உங்களை ஆசீர்வதிப்பான். சிந்திப்போம் செயல்படுவோம்.

இன்னும் ஒரு விஷயம். எதிர்வரும் நவம்பரின் பின்னர் நாட்டின் பொருளாதார கஷ்டநிலை மேலும் உக்கிரமடையலாம் என அரசே கூறி வருகிறது.

அரிசி, மா விலை மேலும் அதிகரிக்கலாம் அல்லது தட்டுப்பாடு எழலாம். இவை பங்கீட்டு முறைக்கு செல்லவும் கூடும் இவ்வாறான நெருக்கடி நிலை குறைந்த வருமானம் பெறுபவர்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் பெரிதும் பாதிக்கும் என்பதை உணர முடிகிறது.

1974ஆம் ஆண்டில் பஞ்ச நிலை தோன்றி தொழிலாளர்கள் வீதிக்கு வந்தபோது வர்த்தக மற்றும் ஆலய சமூகங்கள் பாராமுகமாக இருந்து விட்டதைப் போன்று இம்முறையும் இருந்து விடலாகாது என்பதை முன் கூட்டியே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வீடுகளுக்கு குரியர் சேவைகளை வழங்கல்

### விலைமனு இலக்கம்: SMIB/TD/2022/08/001

வீடுகளுக்கு குரியர் சேவைகளை வழங்குவதற்காக முன்னனி சேவை வழங்குநர்களிடமிருந்து அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (SMIB) பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் : 2022 செப்டம்பர் 23
விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் : 2022 செப்டம்பர் 28

மீளளிக்கப்படாத கட்டணமான இலங்கை ரூபா 2500.00 இற்கான தொகையைச் செலுத்தி கொழும்பு 3, காலி வீதி, இலக்கம் 269 அரச ஈட்டு முதலீட்டு வங்கி, 4ஆம் மாடியிலுள்ள மனித வளங்கள் மற்றும் விநியோகப் பிரிவின் பிரதான முகாமையாளரிடம் இதற்கான முழுமையான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாடு தழுவிய ரீதியில் ஒப்படைப்பு அலகுகளைக் கொண்டுள்ள வீடுகளுக்கான குரியர் சேவைகளை வங்கி அல்லது நிகரான நிறுவனங்களுக்கு வழங்குவதில் குறைந்தபட்சம் (03) முன்றாண்டு கால அனுபவமுள்ள சேவை வழங்குநர்களுக்கு இதற்கான விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.

கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 269, அரச ஈட்டு முதலீட்டு வங்கி. 4ஆம் மாடியிலுள்ள மனித வளங்கள் மற்றும் விநியோகப் பிரிவின் பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் இதற்கான விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

மனித வளங்கள் மற்றும் விநியோகப் பிரிவின் பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விலைமனுப்படிவங்கள் கண்டிப்பாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கமைவாகப் பூரணப்படுத்தப்பட்டு மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்த விதமான காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலை மனுக்களையும் நிராகரிக்கும் மற்றும் அதன் பகுதியொன்றை ஏற்றுக் கொள்ளும் உரிமையை அரச ஈட்டு முதலீட்டு வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

இப்பெறுகை தொடர்பான மேலதிக தகவல்களை வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 வரை பிரதான முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் விநியோகம்) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொ. பே. இல. 011 7722879/ 011-7722876

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு -03.**




Uva Wellassa University

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
## மாணவர் அனுமதிகள்
## கல்வியாண்டு – 2021/2022

### உளச்சார்புப் பரீட்சை

பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவின், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி 2021/2022 கையேட்டின் பிரிவு 1.2 இன்படி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2021/2022 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தகமைகள் கொண்டுள்ளவர்களிடமிருந்து மேற்படி கல்வியாண்டிற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு பின்வரும் பட்டப்பயில் நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழிநுட்பம்
- முயற்ச்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

விண்ணப்பித்த கற்கை நெறிக்கேற்ப உளச்சார்பினை பரீட்சிப்பதற்காக இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

ஒவ்வொரு கற்கை நெறிக்குமான குறைந்தபட்ச தகமைகள் 2021/2022 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக பட்டப்பயில் நெறிகளுக்காக அனுமதிக் கையேட்டின் (க.பொ.த. (உ/த) 2021 பரீட்சையை அடிப்படையாக கொண்டது) 2.2.8.14, 2.2.8.17, 2.2.8.15 மற்றும் 2.2.8.20 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் **2022 செப்டம்பர் 20 அன்று அல்லது அதற்கு முன்னர்** ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் (https://www.aptitude.uwu.ac.lk/) இணையவழி (online) ஊடாக தங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை நீங்கள் பதிவேற்ற வேண்டியது கட்டாயமாகும்:

✓ ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுளை கிளையின் கணக்கிலக்கம்: 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையின் ஒரு பரீட்சைத் தாளுக்கு ரூபா. 750/- வீதப்படி வைப்பு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டு. (தயவுசெய்து பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளவும்). இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. [உ+ம்: நீங்கள் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை எழுத விரும்பினால், கட்டணம் ரூபா 1,500/- (2 x 750/-) செலுத்த வேண்டும்]

உளச்சார்புப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியானவர்களுக்கு மின்னஞ்ச முறை மூலம் அனுப்பப்படும்.

எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சை விண்ணப்பங்களையும் அதனுடன் தொடர்புடைய பரீட்சைக் கட்டணத்துடன் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும்

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சாத்தியின் முன்னுரிமை ஒழுங்கிற்கு அமையவே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்பு பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. உங்களுக்கு மிகவும் வசதியான பரீட்சை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

| பரீட்சை நிலையம் | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| மட்டக்களப்பு | 07 |

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்த பரீட்சை நிலையங்களை சில நேரங்களில் ஒதுக்க முடியாமல் போனால், அதற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**
**30 ஆகஸ்ட் 2022**

தொலைபேசி: 055-2226622/ 055-3561752
தொலைநகல்: 055-2226633
வெப்தளம்: www.uwu.ac.lk

# பெறுகை அறிவித்தல்
# இலங்கை இராணுவம்

### இலங்கை இராணுவத்திற்கு இராணுவ அடையாள அட்டைகளை அச்சிடுவதற்காக கார்ட்கள் / மூலப் பொருட்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல் - 2022ஆம் வருடம்

01. 2022ஆம் வருடத்தினுள் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சகல பொருட்களும் இலங்கை இராணுவத்தின் ராகம அடிப்படை யுத்தோபகரண களஞ்சியசாலைக்கு போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. இதில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 1000 மணித்தியாலம் முதல் பிற்பகல் 1500 மணித்தியாலம் வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள யுத்தோபகரண சேவை பணிப்பாளர் சபையிடமிருந்து அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்தில் (இராணுவ அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கான கார்ட்கள் / மூலப்பொருட்கள்) விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' கேள்வி இலக்கம் (DOS/2022/31/29) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | DOS/2022/31/29 | MIFARE CARD | 50000 | எண்ணிக்கை | 2022-09-07 முதல் 2022-09-23 வரை | 2022-09-26 மு.ப. 11.00 மணிக்கு | 15,000.00 |
| | | POLYGUARD OVERLAMINATION FOR FARGO HDP 8500 | 200 | எண்ணிக்கை | | | |
| | | RETRANSFER FILM FOR FARGO HDP 8500 | 67 | எண்ணிக்கை | | | |
| | | COLOUR RIBBON FOR FARGO HDP 8500 | 100 | எண்ணிக்கை | | | |
| | | CLEANING KIT FOR FARGO HDP 8500 | 4 | எண்ணிக்கை | | | |

2. குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் மற்றும் சர்வதேச போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைவதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**யுத்த உபகரண முதன்மை கட்டளைப் பிரிவு,**
**இராணுவ முகாம், செலிங்கோ கட்டிடம்,**
**இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்த.**

4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரரால் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.
6. விலைக்கோரல் ஆவணங்களுடன் வெட் பதிவிலக்கத்தை வெளிப்படுத்துதல் கட்டாயமாகும். விலைமனுதாரர் வெட் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் அதை உறுதி செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் தேவைப்பாட்டை வழங்காத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.
8. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வழங்குநர்களால் 1,000,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதிக்கு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது விலைக்கோரல் பெறுமதியின் 763,000.00 ரூபா விலைக்கோரல் பிணை முறியொன்றை இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது இலங்கைக் காப்புறுதிச் சபையினால் அவ்வாறான பிணை முறியை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்று விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 011-2987528, 011-2987537 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் தனியார் பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் 2022/2023

### ஒபக்பந்த இலக்கம்: SU/GA/GS3/2022

1. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2022/2023ஆம் ஆண்டில் தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்பொழுது அழைக்கின்றார்.
2. உத்தேச சேவைக்காலம் 365 நாட்களாகும்
3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் கீழ் இவ்விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படும்.
4. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தனியார் பாதுகாப்புச் சேவையை ஒரு வருடத்திற்கு வழங்குவதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்கள் பாதுகாப்பு அமைச்சில் உரிமம் (License) பெற்றிருத்தல் வேண்டும்.
5. இதற்காக ஆர்வமும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்கள், மேலதிக தகவல்களை இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் நிருவாகப் பிரிவின் பிரதிப் பதிவாளரிடம் தொ.பே. இல. 045-2280027 மூலம் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் 2022.09.05 முதல் 2022.09.23 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை எந்தவொரு வேலை நாட்களிலும் பின்வரும் முகவரியில் விலைமனுப்படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022.09.05 முதல் 2022.09.23 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வார வேலை நாட்களில் இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் எழுத்துருவ விண்ணப்பமொன்றைக் கீழ்க்காணப்படும் முகவரியில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத கட்டணமான இருபதாயிரம் ரூபாவை (ரூ. 20,000.00)ச் செலுத்தி இதற்கான முழுமையான விலைமனுப்படிவத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
   கொடுப்பனவு பல்கலைக்கழக சிறாப்பருக்கு காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2022.09.14 அன்று பி.ப. 1.00 இற்கு பல்கலைக்கழக உபவேந்தரின் அலுவலக சபை அறையில் இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். அவ்வேளையில் அனைத்து விலைமனுதாரர்களும்/ விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
8. 2022.09.26 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரிக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்டு விலைமனுக்களை அடக்கியுள்ள உறைகளின் இடது பக்க மேல் மூலையில், 'இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2022/2023ஆம் ஆண்டில் தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்கல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக கீழ்க்காணப்படும் முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனு திறக்கப்படும்.
9. திணைக்களப் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.
10. விலைமனுச் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து 119 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகுதல் வேண்டும்.
11. விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணையமொன்று அனைத்து விலைமனுக்களுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்டுள்ள முகவரிகள்:**
விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்தல், விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்

**பிரதிப் பதிவாளர்/நிருவாகம்,**
**நிருவாகப் பிரிவு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**தபால் பெட்டி இல. 02, பெலிஹுலோயா.**

**விலைமனுத் திறத்தல்களிற்காக:**
**பதிவாளர் அலுவலகம்,**
**இலங்கை சப்ரகமுவ பல்லைக்கழகம்,**
**த.பெ. இல. 02, பெலிஹுல்ஓயா.**

**தலைவர்/திணைக்களப் பெறுகைக்குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓயா.**

# களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# பல்கலைக்கழகப் பிரவேசம் - 2021/2022

## தகுதிகாண் பரீட்சை

1. **நிதியியல் பொறியியலிலான வணிக முகாமைத்துவ இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**
2. **திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**
3. **முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT)/ தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**
4. **பேச்சு மற்றும் செவிப்புலன் கற்கையிலான விஞ்ஞானமாணி விசேட பட்டக் கற்கை நெறி**
5. **மொழிபெயர்ப்புக் கல்வி கலை இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**
6. **விளையாட்டுத்துறைக் கல்வி விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை றெநி**

களனி பல்கலைக்கழகத்தில் மேற்படி பட்டக் கற்கை நெறிகளுக்காக 2021/2022 கல்வி வருடத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சகல அபேட்சகர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பக் கற்கை நெறிப் பிரவேசம், கையேட்டில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் மேற்படி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்கள் மட்டும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**(1) நிதியியல் பொறியியலிலான வணிக முகாமைத்துவ இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**

(அ) 2021ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் பொருளியல், கணக்கியல் மற்றும் கீழே தரப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திற்கு ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

- வியாபாரக் கல்வி
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- வியாபார புள்ளிவிபரவியல்
- விவசாய விஞ்ஞானம்
- புவியியல்
- இணைந்த கணிதம்
- வரலாறு
- அரசறிவியல்
- பௌதிகவியல்
- தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான ரீதியான முறை

தகுதிகாண் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் கணித்தல், ஆங்கிலத் தேர்ச்சி, பொது அறிவு மற்றும் பகுப்பாய்வு ஆற்றல் தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். **தகுதிகாண் பரீட்சை ஆங்கில மொழிமூலத்தில் நடாத்தப்படும்.**

**(2) திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**

(அ) 2021ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண் பரீட்சை பிரதான இரு பகுதிகளின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**01. எழுத்து மூலப் பரீட்சை**

எழுத்து மூல தகுதிகாண் பரீட்சையில் சினிமா மற்றும் தொலைக்காட்சி பாடம், பொது அறிவு மற்றும் வடிவமைப்பு தொடர்பான தேர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சிங்கள மொழி மூலம் பரீட்சை இடம்பெறும்.

**02. வாய்மூலப் பரீட்சை**

எழுத்துமூலப் பரீட்சையில் அதிகூடிய திறமையைக் காட்டிய அபேட்சகர்களுக்கிடையில் சினிமா மற்றும் தொலைக்காட்சி துறையில் உள்ள விருப்பம் மற்றும் செயல்முறையில் அவர்களிடமுள்ள வெளிப்படுத்தும் திறமை தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த பரீட்சையை பல்கலைக்கழகத்திற்கு வருகை தருவதன் மூலம் அல்லது நிகழ்நிலை முறை ஊடாக நடாத்தப்படும்.

**(3) முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT)/ தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**

(1) 2021ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் உயர் கணிதம், இணைந்த கணிதம், கணிதம் மற்றும் பௌதிகவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி (C) சகிதம்

(அ) க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் உயிரிணக்கவியல் பாடப்பரப்பில் அல்லது பௌதிகவியல் பாடப்பரப்பில் தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

(ஆ) உயிரிணக்கவியல் பாடப்பரப்பில் அல்லது பௌதிகவியல் பாடப்பரப்பில் இரண்டு பாடங்கள் மற்றும் தகவல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பும் விண்ணப்பப் படிவத்தில் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT) / தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறியில் அதிகூடிய திறமையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும். **பரீட்சை ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும்.**

**(4) பேச்சு மற்றும் செவிப்புலன் கற்கையிலான விஞ்ஞானமாணி (விசேட) பட்டக் கற்கை நெறி**

(1) 2021ஆம் வருடத்தின் க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் உயிரிணக்கவியல் பாடப்பரப்பு, பௌதிகவியல் பாடப்பரப்பு அல்லது இலங்கை பல்கலைக்கழக பிரவேசக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கலை பாடப்பரப்பில் அனுமதிக்கப்பட்ட ஏதாவது மூன்று பாடத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் இந்தக் கற்கை நெறியின் விசேட விடயத்துறையானது பேச்சு மற்றும் மொழி சிகிச்சை மற்றும் செவிப்புலனாகும். க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் பௌதிகவியல் பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் மட்டுமே செவிப்புலன் விசேட கற்கைநெறியைக் கற்கலாம்.

(2) இந்த தகுதிகாண் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

**(5) மொழிபெயர்ப்புக் கல்வி கலை இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி**

(1) 2021ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடையப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) இந்தப் பரீட்சையில் நோக்கம் அபேட்சகரின் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். அதனால் இந்த தகுதிகாண் பரீட்சை சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

**(6) விளையாட்டுத்துறைக் கல்வி விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை றெநி**

(1) 2021ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) தகுதிகாண் பரீட்சை பிரதான இரு பகுதிகளின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**(அ) எழுத்து மூலப் பரீட்சை**

எழுத்து மூல தகுதிகாண் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் கணித்தல், விளையாட்டுத்துறை பொது அறிவு மற்றும் பகுப்பாய்வு ஆற்றல் தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். தகுதிகாண் பரீட்சை ஆங்கில மொழிமூலத்தில் நடாத்தப்படும்.

**(ஆ) செயல்முறை மற்றும் நேர்முகப் பரீட்சை**

இந்தப் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் செயல்முறைத் தகுதி, விளையாட்டுத் திறன் மற்றும் திறமைகளை மதிப்பிடுவதாகும். செயல்முறைப் பரீட்சையில் அபேட்சகர்களின் செயல்முறை தகுதியை மதிப்பிடுதல் மற்றும் நேர்முகப் பரீட்சையில் அபேட்சர்களின் மாகாண, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகப் பெற்றுள்ள விளையாட்டுத் திறமைகளை உறுதி செய்து கொள்ளல் மற்றும் மதிப்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

1. விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் அபேட்சகர்கள் மக்கள் வங்கியின் களனி கிளையில் 055-1001-30667553 எனும் கணக்கிலக்கத்திற்கு 1200.00 ரூபா வரவாகும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மென் பிரதியுடன் (Soft copy/Scan Image) நிகழ்நிலை (online) முறை ஊடாக மட்டும் இங்கு காட்டப்பட்டுள்ள குறிப்பீட்டிலக்கம் (https://aptitude.kln.ac.lk) ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் போது செயல்நிலையிலுள்ள மின்னஞ்சல் முகவரியை (e-mail) பயன்படுத்துதல் கட்டாயமாகும். பற்றுச்சீட்டை நிரப்ப வேண்டிய விதம் கீழே தரப்பட்டுள்ளது

.




2. மேற்படி (1) இலக்கத்திற்குப் புறம்பாக நிகழ்நிலை கொடுப்பனவு முறையாக (online payment) கடன் அட்டை (Credit Card) அல்லது பற்று அட்டை (Debit Card) என்பவற்றைப் பயன்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சையானது பரீட்சை நிலையங்களில் பொதுவாக நடாத்தப்படுவதுடன் இறுதியில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களின் அச்சுப் பிரதி மற்றும் வங்கிப் பற்றுச்சீட்டை பரீட்சை நடைபெறும் தினத்தில் கட்டாயம் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் பரீட்சை நிலையத்திற்கு எதிரில் உள்ள கருமபீடத்தில் அதை ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறல்லாமல் பரீட்சைக்குத் தோற்றினால் பெறுபேறுகள் வழங்கப்பட மாட்டாது. மேற்படி ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் தமது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வேறுபாடுகள் ஏற்பட்டால் அந்தப் பெயர்களில் குறிப்பிடப்படும் நபர் ஒருவர்தான் என்பதை உறுதி செய்யும் சத்தியக் கடதாசி ஒன்றை இயைபுடைய கருமபீடத்திற்கு மேற்படி ஆவணங்களில் சகிதம் ஒப்படைத்தல் வேண்டும். உங்களுக்கு தபால் மூலம் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்காது என்பதால் உங்களது மின்னஞ்சல் முகவரிக்கு (e-mail) மட்டுமே அனுப்பப்படும் என்பதுடன் அதன் அச்சுப் பிரதியொன்றை நீங்கள் பரீட்சைக்கு வரும்போது கொண்டு வருதல் வேண்டும்.

இந்த தகுதிகாண் பரீட்சைக்கு உங்களது பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினத்தில் பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரே நீங்கள் இயைபுடைய பரீட்சை நிலையத்திற்கு சமுகம் தந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் 2022 செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதியாகும். மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்: 011-2903112/114

**பதிவாளர்,**

**களனிப் பல்கலைக்கழகம், களனி.**

2022 செப்டெம்பர் 02.

# பொறி



(கடந்தவாரத் தொடர்)

தம்பிமுத்துச் சம்மாட்டியார் அவர்களின் 'நிலை'யை முற்றாகப் புரிந்து கொண்டதுபோலவே, தான் 'திட்டமிட்டு' வந்த காரியத்தில் 'கரிசனை'யாக இருந்தார்.

அவரை மீறி வந்த சிரிப்பை அவர் அடக்கிக்கொண்டே மெதுவாகக் கோயில் படிக்கட்டுகளால் இறங்கி நின்று ஒரே வாக்கில் அவர்களை நோக்கி நடந்தார்.

இதன் மூலம் 'சம்மாட்டியின் மானத்தை வாங்கி, அவருக்குச் செம்மையான சாட்டையடி' கொடுத்து விட்டதாக அவர்கள் தங்களுக்குள் திடும்பிலும் புளுகத்திலும் திளைத்துக் கொண்டிருந்தார்கள்.

'எங்கள் கட்டுமரம் உடையவில்லை சம்மாட்டியின் கற்பாறைதான் நொறுங்கிவிட்டது' என்று 'நக்கல்' அடித்த ஒரு தீவிர இளம் பொடியனை தம்பிமுத்துச் சம்மாட்டியார் சாடையாக நோட்டம் விட, அதனையடுத்து, இன்னோர் அதி தீவிர இளவட்டங்கள், 'பாத்தியளா, இப்ப மலை சரிந்ததா?' என்று கேலி' பண்ணியதையும் நுணுக்கமாகக் கவனித்துக் கொண்டார்.

ஒரு கணப் பொழுதுக்குள் நிகழ்ந்த இந்த 'வேடிக்கை'யில் அவர்கள் தமக்குள் நல்ல 'குஷி' யடித்தார்கள் என்றே சம்மாட்டிக்குத் தோன்றிற்று.

இதையெல்லாம் தம்பிமுத்துச் சம்மாட்டியர் 'பெரிதுபடுத்தாதவர்போல், ஒரு பச்சைக் குழந்தை மாதிரிச் சிரித்துக்கொண்டு, சுவக்கீன் கிழவனையே நாறல் மீனைப் பார்க்கிற கள்ளப் பூனையாட்டம் 'நுணுக்க'மாகப் பார்த்தார். கண்களைப் பொதுவாகச் சுழற்றிக் கொண்டு சொல்கின்றார்:

'நீங்கள் என்னோட பறையாட்டியும் எனக்கு உங்கட பிரச்சினை வடிவாகத் தெரியும். அதக்காகத்தான் நீங்கள் வர முந்தி நான் உங்களிட்ட வந்தனான்;'

அனைவர் முகங்களிலும் வியப்புக் குறி படர்ந்தது.

'இப்படி ஒரு 'நல்ல மனுஷனை' என்ன கோதாரியெண்டு எதிர்க்கிறது?' என்ற முக பாவம் அவர்களில் தேங்கியிருப்பதை உணர்ந்த சம்மாட்டி உற்சாகத்துடன் மேலும் கூறுகின்றார்:

'இப்ப, உந்த இயந்திரப் படகுகள் நங்கூரம் போட்ட துறைமுகத்துக்குப் பக்கமாக நான் ஒரு தர்மசத்திரம் ஏழை மீன் பிடித் தொழிலாளர், இளம் பிள்ளையள் தங்கியிருந்து உண்ண, உடுக்க, உறங்க கோயிலின் பேரால் ஒரு மடம் கட்டப்போறன். அதில எனக்குள்ள உரிமையும் சமத்துவமும் உங்களுக்கும் உண்டு. ஆனபடியால், ஊர் மக்கள் சேர்ந்து இந்த 'நற்கிருத்தியங்'களில் பங்கு கொண்டு நெடுகலும் ஒற்றுமையாக இருப்போம். நாளைக்கு ஊர் கூடி ஆசாரஞ்செய்ய வாருங்கோ'

'பெரும் பணக்காரன்' என்ற கர்வமோ, பத்துப் பதினைந்து இயந்திரப் படகுகளைச் சொந்தமாக வைத்தப் பெருந்தொழில் நடத்துகிற ஒரு 'முதலாளி' என்ற அகந்தையோ கொள்ளாமல், தாங்கள் நேரடிப் போராட்டத்திற்குத் தயார் பண்ணியதையும் பெரிதுபடுத்தாமல், பெருந் 'தயாளகுணத்தோடு தம்பிமுத்துச் சம்மாட்டியார் தங்களைப் பெரிதாக மதித்து'த் தங்களோடு 'மிகச் சாதாரணமாக' நின்று – அதுவும் தர்மக் கிருத்தியம், உரிமை, ஒற்றுமை, சமத்துவம், ஆசாரம் பற்றியெல்லாம் சொன்ன பண்பினைக் கவனித்தபோது, சுவக்கீன் கிழவன் என்ன, இளைஞர்களுக்கே முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டியில் 'இரக்கம் பச்சாத்தாபம் கருணை' மேலோங்கிற்று.

குமுறிய கடல் அறையடித்து ஓய்ந்தமாதிரி அவர்கள் சற்றுவேளை மௌனித்து நின்றார்கள்.

அவர்களின் மன நிலையைத் தம்பிமுத்துச் சம்மாட்டி கசடற உணர்ந்து கொண்டதால் அவர் குதூகலமாகச் சிரித்துக்கொண்டு, மறுபாட்டமும் மிக ஆசாரமாகவே சொல்கின்றார்:

'மறந்து போகாமல் ஒற்றுமையாய் எல்லாரும் எனது வாடிக்கும் வந்து. கோயில் விருந்து சாப்பிட்டு, தர்மக் கிருத்தியத்தில் பங்கு பற்றிவிட்டுத் திரும்புங்கோ'

'ஓம், கட்டாயம் வரகிறோம்' என்று வாய் திறந்து அவர்கள் சொன்னபோதும், ஏக முகப்பிரியமான ஆமோதிப்பு அவர்கள் முகங்களில் தேங்கியிருப்பதை முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டி தெளிவாகக் கண்டு கொண்டார்.

'இந்தப் பொறி ஒன்றே பொடியனைப் பிடிக்கப் போதும்' என்றெழுந்த தனது அக்களிப்பான காந்த முகத்தைக் கூட அவர் காட்டிக்கொள்ளாமல் சாதுபோல் சாதுர்யமாக நின்றார்.

தொழிலாளர்கள் உருவி எடுத்த 'போராட்டம்' என்ற வாளை, தான் கொண்டு வந்த 'நற்கிருத்தியம்' என்னும் உறைக்குள்ளே அடக்கிவிட்டதான பெருமிதம் பிரவாகித்து அவர் இதயத்தில் பொங்கியபோதும், அவர் அதனைக் கொஞ்சமும் காட்டிக்கொள்ளாமல் ஒரு பரம ஏழைபோல் வீதியில் நின்று கோயில் விறாந்தையைப் பக்கத்துக்குச் சைகை காட்டினார்.

ஏலவே வந்து சம்மாட்டியை அங்கே இறக்கிவிட்டு நின்ற அதே கார், அவர்தம் அந்த ஒரு சிறு கை அசைப்போடு அவர் முன்னே வந்து 'கிரீச்'சிட்டது.

அவரோ மிக மெதுவாக ஏறிக் குந்தினார்.

மின்னல் மாதிரி அவரின் புதுத்துறை முக வாடிக்குக் கார் விரைந்து கொண்டிருந்தது.

அவர் திட்டத்தினபடி அடுத்தநாள் அவரின் இயந்திரப் படகுகள் நங்கூரம் போட்ட புதிய துறைமுகத்துக்கும், பெரும் தொழில் வளர்ச்சிக்கும், கருமம் கொடுக்க எழுந்தருளிய சத்திரக் கட்டிடத்திற்கான அத்திவாரம் போடுவதற்கு அந்த ஊர்த் தொழிலாளர்களும், இளைஞர்களும், பெண்களும், குஞ்சு குருமான்களுமாக சுவக்கீன் கிழவன் தலைமையில் 'சிரமதானம்' செய்ய மிக ஒற்றுமையாகப் புறப்பட்டுப் போனார்கள்.

இருந்தும் என்ன...?

என்றும் அந்தக கடல் குமுறிக் கொந்தளிப்பது போலவே, அன்றுள்ள அப்பத்துக்காக இன்றும் அவர்களின் வயிறுகள் கொதித்துக்கொண்டேயிருக்கின்றன.

இன்னும் விடியவில்லை.

சுவக்கீன் கிழவன் ஒருநாள் முழுதும் கடலில் அலைந்து வலைவீசி இரண்டு கயல்மீன் குஞ்சுகளோடு கரையேறிக் குடிசைக்கு வந்துகொண்டிருந்தார்.

அப்போது கோடையிடி மாதிரிக் கிழவனைக் 'கிடுக்'காட்டியபடி, வீதியில் உறுமிக்கொண்டு, முதலாளி தம்பிமுத்துச் சம்மாட்டியின் கார், அவர் தம் மாடி வீட்டை நோக்கி விரைந்துகொண்டிருந்தது.

கிழவன் விலகி நின்று ஏக்கத்தோடு, சமுத்திரத்தை ஏறு கண் வைத்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். தம்பிமுத்துச் சம்மாட்டியாரின் இயந்திரப் படகுகள் ஆழ்கடலைக் கிழித்துக்கொண்டு, உறுமி இரைந்து வந்துகொண்டிருக்கின்றன.

ஊர்த் தொழிலாளர்களின் கட்டுமரங்கள், கட்டறுந்து அலைகடலில் மிதந்து, தத்தளித்துக் கொண்டிருந்தன.

'சம்மாட்டி எங்கட போராட்டத்தைத் திசை திருப்பி ஏமாத்திப் போட்டான். கடைசிவரை இனி விடப்படாது.

சுவக்கீன் கிழவன் கரையில் இழுத்துப் போட்ட ஆமைபோல் பெருமூச்சு விட்டு நடந்தார்.

அவர் நடையில் ஓர் புதிய வேகம் காட்டியது.



எஸ் அகஸ்தியர் ...

# தொலைந்த வாழ்க்கை

இரவெல்லாம் துங்காமால் அழுது கொண்டேயிருப்பாள். ஏனோ அவளை ஆறுதல்ப் படுத்த அவளிடம் இருந்த ஒரே நம்பிக்கை அவளது ஒரு வயது நிரம்பிய கைக்குழந்தை தான் உயிராக இருந்தது.

ஒரு ஆழ்ந்த சோகம் அவளை வாட்டிவதக்கிக் கொண்டிருந்தது. பதினெட்டு வயது நிரம்பிய அவளது உள்ளம் தேக்கு மரக்காடு பற்றி எரிவததைப் போல அமைதியிழந்து இருந்தது.

திக்கு திசை தெரியாதவளாய் தனித்து விடப்பட்ட ஆட்டுக் குட்டியைப் போல ஏதோவொரு கோணத்தில் திசை மாறிப் போனது அவளது வாழ்க்கை. பாவம் அவளுக்கு கொழுந்து பறிக்கவும் தெரியவில்லை. இரண்டு நாள் கூட அவளால் வேலையை செய்ய முடியவில்லை பக்கத்துவீட்டு சரசு அக்காவுடன் தேயிலை மலைக்கு ஒரு படங்கு சாக்கினை உடம்பில் சுற்றி முதுகில் ஒரு கடினமான பையினையும் மாட்டிக்கொண்டு மலையில் ஏறிய அவளால் ஒரு நிதானத்தில் இருக்க முடியவில்லை . 'புள்ள காம்பராவில்' விட்டு வந்த குழந்தையின் எண்ணங்களே அவளைச் சுற்றி வந்தன. சரசு அக்காவிடம் அவளின் ஆழ்மனம் பல நூறு கேள்விகளை கேட்டுக்கொண்டேயிருந்தது.

எப்படியோ முதல் நாள் கடந்துவிட்டது. ஆனால் அடுத்த நாள் தேநீர் நேரத்தில் குழந்தைய ஒரு தடவை பார்த்துட்டு வாரேன் என்று பதட்டத்தில் ஓடியவள் ஒரு பாறையில் தடுக்கி விழுந்தாள். பயம் அவளின் கண்ணை மறைத்தது. கையில் இருந்த கொஞ்ச பணமும் கரைந்தது. குழந்தையின் பட்டினியை போக்கிக்கொள்வதற்கு வேறுவழியில்லை வேலைக்கு போகவேண்டிய கட்டாயம்.

பக்கத்து வீட்டு சரசக்காவின் வீட்டுக்காரர் ஒரு ஏஜென்சியில் வேலை என்பதால் இவளுக்கும் ஒரு வேலையை பார்க்க சொன்னாள். ஏனோ அவ்வளவு பழக்கமில்லாத இந்த சரசு அக்கா தான் சோறு பொங்கினால் அவளுக்கும் சேர்த்துக்கொடுப்பாள். துணி துவைப்பதற்கும் அவள் சரசு அக்காவிடம் தான் பாதி சன்லைட் சோப் வாங்கினாள். அவளுக்கும் ஓர் அக்காவின் ஆறுதல் கிடைத்தது. ஆனாலும் பொம்மைக்காக பறிதவிக்கும் சிறுபிள்ளையின் மனம்போல் அவளின் மனம் வாடியது.

எப்படியோ ஒரு வழியாய் ஓய்வு பெற்ற அதிபரின் வீட்டில் வேலை கிடைத்தது. புது இடம் புதுவேலை என்பதால் முதல் நாள் கைக்குழந்தையுடன் சென்று தயங்கி தயங்கி நின்றாள். ஆனால் கொஞ்ச நேரத்திலேயே அந்த முன்னாள் அதிபரின் மகள்வழி பேரப்பிள்ளைகள் அவளை சுற்றி ஓடி விளையாடியது. அது அவளுக்கு சிறு அமைதியை கொடுத்தது. வாடி அம்மா இங்க எல்லா வேலயும் நீயும் நானும் தா செய்யனும் நா எல்லாத்தையும் சொல்லித் தாரேன் முதலே ராஜன்கிட்ட சொன்னது போல அன்னன்னக்கி சம்பளம் கொடுத்துர் ரேன் மா" என்றார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவள் கண் முன்னே அவளின் குழந்தை இருந்ததால் வேலையை நிம்மதியாகத் தொடங்கினாள்.

தான் உண்டு தன் வேலை உண்டு என இருப்பாள். துணி எல்லாம் துவைத்து காயப்போடுவாள். சமையலுக்கும் உதவியாக நிற்பாள். வீட்டை சுத்தம் செய்வாள் மார்கெட்டுக்கு வீட்டுக்கார அம்மாவுடன் சென்று மரக்கறிகளையெல்லாம் வாங்கி வருவாள். வீட்டுக்கார அம்மாவின் பேரப்பிள்ளைகளை கிளாஸிற்கு கூட்டி சென்று வருவாள். இருந்தாலும் அவள் வருத்தம் தோய்ந்த முகத்துடனேயே எப்போதும் காட்சி தருவாள். வேலை செய்து கொண்டிருக்கும் போது அழுவாள்.



அப்படித்தான் ஒரு நாள் தண்ணீர் சுட வைத்து கொண்டிருந்த போது ஏதோ ஒரு யோசனையில் முழ்கிவிட்டாள் நல்ல நேரம் கிச்சனில் இருந்து வந்த புகையினால் எல்லோரும் பதறி ஓடி வந்து அடுப்பை அணைத்தனர். நலலைவேளை ஒரு நொடிப்பொழுது தாமதித்திருந்தால் பற்றியிருக்கும்.

ஏனோ அவளை யாரும் எதுவும் சொல்லவில்லை பார்த்து பத்திரமாக வேலை செய்யம்மா என்றனர். அவளின் அந்த நிலையைப் பற்றி வேலைக்கு சேர்த்த ராஜா கூறியிருக்க வேண்டும். அன்றும் அப்படித்தான் அம்மா அம்மா 'இந்தாடியம்மா' என்று ஒரு குரல். கனவிலிருந்து சட்டென்று விழித்தது போல அவள் திடிக்கிட்டு பார்த்தாள்.

சிங்கிலிருந்து நீர் வழிந்தோடி கிச்சன் முழுவதும் நீர். அவளோ பாத்திரம் கழுவ வந்து அப்படியே நின்று கொண்டிருந்தாள். அன்றிலிருந்து அவளை எந்த வேலைக்கும் தனியான விடுவதில்லை அக்குடும்பத்தினர். பகல் வேளையில் அங்குதான் அவளுக்கு சாப்பாடு.

டீ குடிக்கும் போது அவளுக்கும் நீயும் நீரை சுடவைத்து ஊற்றிக் கொள் அம்மா என்றாலும் அவள் தன்னுடைய குழந்தைக்குத்தான் பால் ஊற்றி கொடுப்பாள்.

இங்கு வந்ததற்கு பிறகுதான் குழந்தையின் உடலில் நல்ல முன்னேற்றம்.

அவள் வீட்டில் யாரிடமும் அவ்வளவாக பேசமாட்டாள. இரவு வேலை முடிந்து போகும் போதும் சம்பளப் பணத்தை வாங்கிக் கொண்டு கையெடுத்து கும்பிட்டு தான் செல்வாள். தனியாக குழந்தையையும் வைத்துக்கொண்டு அவள் படும் அவஸ்தையை பார்த்து அவர்களும் வருத்தம் அடைந்தனர்.

அன்று ஏனோ தெரியவில்லை காலையிலிருந்து அவள் வேலைக்கு வரவில்லை அடுத்த நாள்வந்த அவளிடம் 'ஏனம்மா நேற்று எங்கே போயிருந்தாய்? வீட்டில் சின்னவனின் பிறந்தநாள் இந்தாடியம்மா உனக்கும் ஒரு புடவை எடுத்தேன் வாங்கிக்கொள் என்றார் எஜமானியம்மா. அவளின் மனமோ அதை வாங்கிக்கொள்ள விரும்பவில்லை வேண்டாமென தலையசைத்தாள்.

வீட்டுக்கார அம்மாவின் பேரப்பிள்ளைகள் கூட அவளின் குழந்தையுடன் ஒரு சகோதரனைப்போல ஆசையாய் தம்மிடமிருந்த விளையாட்டுப் பொருட்களையெல்லாம் காட்டி விளையாடிக்கொண்டிருந்தன. ஒரு அந்திப் பொழுதினில் வேலையெல்லாம் முடித்துவிட்டு அவள் செல்லும் வழியில் ஒரு கார் வீட்டை நோக்கி வந்தது.

வந்தவர் ஒரு பொலிஸ் அதிகாரி முன்னாள் அதிபரின் நண்பனும் நெருங்கிய உறவினரும் ஆவார். அப்போதுதான் நேற்று அந்த பெண்ணை சிறைச்சாலையில் பார்த்தது ஞாபகம் வந்தது.

'அங்கு அவனை பார்க்கத்தான் அவள் வந்தாள்' என்றதும் யார் அவன் என்றனர். அவன் கைதி ராஜ் எப்ப பார்த்தாலும் அடிதடி. போன கிழமைக்கூட அங்கு ஏதோ தகராறு அவன் அடித்த அடியில் நாலைந்து பேர் வைத்தியசாலைளில். அவனுக்கு கோவம் வந்தால் கண்மூடித்தடிமாக நடந்துகொள்வான். இப்பொழுது தனிச் சிறைச்சாரையில் அடைத்து வைத்துள்ளனர். அவனொன்றும் அதற்கெல்லாம் புது ஆளல்ல மாசத்தில் பாதி நாள் அவனுக்கு அங்கேயே கழிந்து விடும் என்றார். ஆனால் முன்னெல்லாம் வயது போன மூதாட்டிதான் இவனை கால் கடுக்க வெளியில் நின்று பார்த்து செல்வார். இப்போதோ அந்த குழந்தையை தூக்கிக் கொண்டு வந்து இவள்தான் பார்த்துச் செல்கிறாள்.

அது சரி அவள் வாங்கி வந்த வரம் அவளின் தலையெழுத்து அவனையெல்லாம் நம்பி இப்படிஇயாரு வாழ்க்கை தேவைதானா? என்றார்.

சரி நீங்களாவது அடைக்கலம் கொடுத்தீங்க என்று ஆறுதல் பட்டார். இரவு வானில் நட்சத்திரங்களுக்கு மத்தியில் தனித்துவிடப் பட்ட பிரகாசமான நிலவைப்போல அவளின் மனம் அவனைச் சுற்றி சுற்றி வருவதை பாவம் யாரும் அறிந்திருக்கவில்லை.. அவளும் அந்த குழந்தையை தோளில் சுமந்து அந்த நிலவொளியில் நடந்து தனிமையில் செல்கிறாள்.

பசறையூர் சீரா ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 38




திரு/திருமதி.செல்வி .......................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி .......................................

திகதி ..................... கையொப்பம் .....................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 38
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 38

**இடமிருந்து வலம்**

(01) மகன்
(04) இறைநியதி.
(06) இரண்டு.
(07) இதுவும் ஒரு நடனம்.
(08) முன்பிருந்த வீதிப் போக்குவரத்து கணிப்பீடு.
(09) போர்.
(10) வசந்தகாலம்.
(11) இது ஒரு தானியவகை.
(14) பொதுநல தேவைக்காக அரசு வசூலிக்கும் கட்டணம். (திரும்பியுள்ளது)
(15) முக்கனிகளுள் ஒன்று சிதறிக்கிடக்கிறது
(18) வெல்லம் வகையைச் சேர்ந்தது. (குழம்பியுள்ளது)
(20) தேசம்.
(21) நிலத்தின் கீழ் வைத்திருப்பதாகச் சொல்லப்படும் பழங்கால பொக்கிஷங்கள். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) நூதனம்.
(02) ஓர் இசைக்கருவி.
(03) கொடையாளி குழம்பிவிட்டார்.
(04) அழும்போது மூச்சுத் தடையினால் ஏற்படும் மெல்லிய ஒலி.
(05) பிறரை மதிக்காத போக்கு.
(07) மகாபாரதக் கதையில் வரும் பாத்திரங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
(10) கண்ணை இது பாதுகாக்கிறது.
(11) வேண்டுகோள்.
(12) இதுவும் ஒரு தானியம்.
(13) இலங்கைக்கு இப்படியும் ஒரு பெயருண்டு. (குழம்பியுள்ளது)
(15) நெஞ்சுப்பகுதி.
(16) சூரியனின் ஆதிக்க நேரம் இது.
(17) தன்மை இடத்து பன்மைச் சொல். (தலைகீழ்)
(19) தோலுக்கு கீழ் எலும்பைச் சுற்றியுள்ள மென்மையான பகுதி.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 37

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) நிரபராதி (04) விதை (06) சுய
(07) கடினம் (10) வால் (11) புனிதம்
(12) சடை (13) அவா (15) மாளிகை
(17) நாள் (20) மாமா (22) குதிரை
(24) உறுதுணை (25) முனை

**மேலிருந்து கீழ்**

(01) நிதானம் (02) பட்டினி (03) திரி
(04) விசுவாசம் (05) தையல் (08) கதகளி
(09) அம்பு (14) வாள் (15) மாரி
(16) கைமாறு (18) நாகு (19) முதிரை
(21) மாது (23) தினை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 36

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். நாகராஜா,**
மத்திய வீதி,
காரைதீவு 02.

**2. ரஞ்சிதம் குணசேகரன்,**
வன்னியா வீதி,
களுதாவளை மத்தி,
களுதாவளை.

**3. உசாந்தனி,**
இல: 24/2, உடுப்பிட்டிய ,
உக்குவளை.

**4. U. ஆனிஷா,**
15, சிறிமல்வத்த வீதி,
மடவளை பஸார்,
கண்டி.

**5. எம்.சி.எப். சிம்லா,**
2B, ஸ்டேசன் வீதி,
மருகோன, உக்குவளை.

**6. சி. லவனார்த்தன்,**
241/15,
ரொக்ஹில்,
பதுளை.

**7. ஆர்.எம். முஆத்,**
இல. 115, அன்னல் வீதி,
மாஞ்சோலைச்சேனை,
கிண்ணியா 03.

**8. எம்.எச்.எப். எசால் ஆசாத்,**
மர்க்கஸ் வீதி,
மூதூர் 05.

**9. எம்.ஏ. நஜிமுதீன்,**
155, அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று 19.

**10. வினோமதிவதனி,**
லுணுகலை பஸார்,
லுணுகலை.

**11. எஸ். விஷாஹினி,**
91/1, மெயின் வீதி,
கொழும்பு 11.

**12. இல்யாஸ் தாஸிம்,**
இல. 23ஏ, இப்றாஹிம் வீதி,
தொட்டவத்தை,பாணந்துறை.

**13. பி. மகேந்திரன்,**
கிளனமேறா டிவிசன்,
தலவாக்கலை.

**14. ரஞ்சனி நிரஞ்சன்,**
இல : 155/1/1, காலி வீதி,
தெஹிவளை.

**15. வி. கனகரத்தினம்,**
சுதந்திரபுரம், உடையார்கட்டு,
முல்லைத்தீவு.

★ ★ ★

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 செப்டெம்பர் 4 ஞாயிற்றுக்கிழமை

# எரிட்ரிய நாட்டுப் புரளிக்கு மவுசு அதிகம்

ஆபிரிக்க நாடான எரிட்ரியாவில் ஒவ்வொரு ஆணும் இரு பெண்களை திருமணம் புரிவது கட்டாயமாம். அப்படி செய்யாவிட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படுமாம்.

இந்த செய்த அவ்வப்போது சமூக ஊடகத்தில் வலம் வந்துவிட்டுப் போகும். சில பிரதான ஊடகங்கள் கூட செய்தியின் சுவாரஸ்யத்தை கருதி அதன் உண்மைத் தன்மையைக் கூட பார்க்காமல் வெளியிடுகின்றன.

உண்மையில் இந்தச் செய்தி புளித்துப்போன ஆதிப் பழைய புரளி. முதலில் 2016 ஆம் ஆண்டு இந்த புரளி இணைதளத்தில் பரபரப்பாக வெளியானது. உண்மை, பொய் பற்றி கவலை இல்லாத சில ஊடகங்களும் இதனை வெளியிட்டன.

இதன் பூர்வீகத்தை தேடிச் சென்றால்,





'கிரேசி மண்டே' என்ற கென்யாவின் நையாண்டி பத்தி ஒன்றிலேயே இந்த செய்தி முதல் முறையாக வெளியானது. இந்தக் கதை சமூக ஊடகத்தில் பல நாட்கள் டிரெண்ட் ஆனது.

பொறுக்க முடியாத பட்சத்தில் எரிட்ரிய அரசு 2016 ஆம் ஆண்டே இதற்கு பதிலளித்து விட்டது. "கட்டாய பலதார மணம் குறித்த முஃப்தியின் மத ஆணை பற்றிய இந்த நகைப்புக்குரிய, இட்டுக் கட்டப்பட்ட மற்றும் அற்பமான கதையை கிளிப்பிள்ளை போல ஊடகங்கள் வெளியிடுகின்றன" என்று எரிட்ரியாவின் தகவல் தொடர்பு அமைச்சர் யெமானே ஜி மெஸ்கல் தனது ட்விட்டரில் குறிப்பிட்டிருந்தார்.




"(எரிட்ரிய தலைநகர்) அஸ்மாராவில் இருக்கும் பைத்தியக்காரனுக்கும் இந்தச் செய்தி பொய் என்பது தெரியும்" என்கிறார் எரிட்ரிய அரச அதிகாரி ஒருவர்.

உண்மையில் எரிட்ரிய தண்டனைச் சட்டத்தில் பலதாரத் திருமணம் என்பது சட்டவிரோதமானது. இந்த பொதுப் புத்தியே அடிக்கடி ட்ரெண்டாகும் இந்த செய்தி புரளி என்பதை புரிந்துகொள்ளப் போதுமானது.

என்றாலும் இந்தக் கட்டாய பலதார திருமணம் பற்றிய புரளி எரிட்ரியாவுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல, மேலும் குறைந்தது மூன்று நாடுகளை வைத்தும் இதே செய்தி இதற்கு முன் பரவியிருக்கிறது.

இது ஆரம்பத்தில் ஈராக்கிலேயே தொடங்கியது. உத்தியோகபூர் ஆவணம் போன்ற ஒன்று போலியாக தயாரிக்கப்பட்டு 2016 ஜனவரியில் வெளியானது. அந்த ஆவணத்திலும் இதே அறிக்கை தான், அதாவது ஆண்கள் இரு பெண்களை திருமணம் புரிவது கட்டாயமாம். அதற்கு வியாக்கியானங்கள் வேறு, அதாவது அண்மைய போர்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாம்.

இந்தப் புரளியில் தண்டனை அதிகம். இரண்டு பெண்களை திருமணம் புரியாதவர்களுக்கு மரண தண்டனை என்று இருந்தது. பின்னர் இந்தப் புரளி சூடான் நாட்டுக்குப் பரவியது. பின்னர் அது சவூதி அரேபியாவை தொற்றியது.

இந்த செய்தி வட்ஸ்அப், பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்களில் தீ போல் பரவுகிறது. அதனை ஒட்டி கருத்துகள், நையாண்டிகள், மீம்கள், நகைச் சுவைகளுக்கும் பஞ்சமில்லை. இரு பெண்களை திருமணம் புரிவதற்கு வெளிநாட்டு ஆண்கள் எரிட்ரியாவை நோக்கி ஓட்டம்பிடிப்பது போன்ற படங்கள் இதில் பிரபலமானவை.

இந்தப் புரளி இன்னும் முடிந்தபாடில்லை. அண்மையில் கூட இதே செய்தி மீண்டும் ட்ரெண்ட் ஆகி இருக்கிறது. எதிர் காலத்திலும் இது சுற்றிச் சுற்றி வரும். இதனை நம்புபவர்கள் இருக்கும் வரை இவ்வாறான செய்திகளுக்கான மவுசு குறையாது.

# திரைப்படத்திற்காக இது தேவையா?



ஷம்சுத்தீன் இப்ராஹிம் என்றால் யாருக்கும் தெரியாது, ஆனால் ஷாம் என்றால் திரைப்பட உலகில் பிரபலமானவர். 12பி, லேசா லேசா, இயற்கை போன்ற படங்களில் நடித்தவர்.

2013 ஆம் ஆண்டு அவர் பிரதான கதாபாத்திரத்தில் நடித்து வெளியான திரைப்படம் 6. அந்தத் திரைப்படம் பெரிதாக வரவேற்புப் பெறவில்லை. ஆனால், ஷாம் அந்தத் திரைப்படத்திற்காக தனது உயிரையே பணயம் வைத்து நடித்திருக்கிறார். தனது கதாபாத்திரத்தின் தோற்றத்திற்காக ஒருநாள் இரண்டு நாள் அல்ல கிட்டத்தட்ட பத்து நாட்கள் உறங்காமல் இருந்திருக்கிறார்.

"தனது வாழ்வில் ஏதோ ஒன்றை தேடும் ராம் என்ற கதாபாத்திரத்தில் நான் நடித்தேன். அவர் ஓய்வற்றவராகவும் பெரும் புதிர் ஒன்றை விடுவிப்பவராகவும் இருந்தார். அவரது வாழ்வின் மூன்று கட்டங்களை காட்டுவதாக திரைப்படம் இருந்தது. அதன் கடைசிக் கட்டம் திரைப்படத்தின் இறுதியில் வருகிறது. அதற்காக என்னை பலவீனமாகக் காட்டிக்கொள்ள வேண்டி இருந்தது.



உடல் எடையை கிட்டத்தட்ட 17 கிலோ குறைத்துக்கொண்டேன், முடி மற்றும் தாடியை வளர்த்தேன். இது எல்லோரும் செய்கின்ற வேலை. அடுத்தவர்கள் செய்ததை விடவும் எனது கதாபாத்திரம் வேறுபட்டு தோற்றம் தர விரும்பினேன்.

நான் 10 நாட்கள் உறங்காமல் இருந்தேன். பின்னர் திரைப்படத்தின் இறுதி காட்சிக்காக நான் படப்பிடிப்புக்கு சென்றிருந்தபோது இயக்குனர் மற்றும் ஒளிப்பதிவாளர் என்னைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள். எனது கண்கள் வீங்கி இருந்தன. அது குறைந்தது ஐந்து நாட்கள் வரை வற்றவில்லை. எனது திரைப்பட வாழ்வில் இந்தத் திரைப்படம் முக்கியமானதாக இருந்ததால் இந்த ஆபத்தான செயலை செய்ய விரும்பினேன்" என்கிறார் ஷாம்.

# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!



குட்டிச்சாத்தான், மோகினி பிசாசு, மண்டையோட்டுப் பேய், காட்டேரி இப்படி தமிழில் ஏராளமான பேய்கள் உள்ளன. அம்புலிமாமா நூல்களில் வேதாளம் குறித்துப் படித்ததுபோக வருடத்துக்கு எப்படியும் பழிவாங்கும் வகையறாக்களாகப் பத்து பேய்ப்படங்கள் திரையரங்குகளை நிரப்பிவிடுகின்றன. அக்கால விட்டாலாச்சாரியார் மாயாஜாலப்படங்கள் முதல் இன்றைய கொரியஜப்பானிய பேய்ப்படங்கள் வரை தனிசந்தை மதிப்புக் கொண்டவையாக இருக்கின்றன. இடையிடையே திகிலூட்டும் நிகழ்ச்சிகள் என சிலவும் கேள்விப்படுகிறோம்.

காடுகள் மலைகளில் தனித்து விடப்பட்ட வீடுகள் கட்டிடங்கள் என சில இடங்கள் பார்ப்பதற்கே அச்சமூட்டுபவையாகவும் அமானுஷ்ய சக்திகளின் இருப்பிட ஈர்ப்பாகவும் உள்ளன.

நாம் தமிழ்ப்பட பேய்களைக் கண்டு வளர்ந்திருந்தாலும் ஆங்கிலஜப்பானிய சீனப் பேய்களுக்கும் அந்நியமானவர்கள் அல்ல.

மலேசியர்கள் கூடுதலாக இந்தோனேசிய வகை பேய்களையும் சயாம் வகை பேய்களையும் ஓரளவாவது அறிந்தே வைத்திருப்பர். எப்போதுமே உள்ளூர் பேய்களுக்குதான் கிராக்கி அதிகம். பேய்களுக்கென்று தனித்த தேச அடையாளங்கள் இல்லாமல் இருந்தால் எப்படி?

இந்நாட்டில் மலாய் சமூகம் தங்கள் நம்பிக்கைக்கு ஏகப்பட்ட பேய் வகையறாக்களைக் கொண்டுள்ளன. மலாய்க்காரர்களின் மத்தியில் பேய்க்கதைகள் மிகப்பிரபலம். அவர்கள் மத்தியில் புழங்கும் மாத, வார இதழ்களிலும் பேய்களின் அனுபவங்கள் மிக அதிகமாக இடம்பெறுகின்றன.

ஒரு காலத்தில் பேய்க்கதைகளுக்கு என்றே ஏராளமான மலாய் இதழ்கள் இருந்தன. variasari, Misteri போன்றவை சில உதாரணங்கள்.

எங்கெல்லாம் மலாய் சமுதாயம் வாழ்கிறதோ அங்கெல்லாம் நடுநிசியில் கட்டியணைத்த தலையணைகளுக்கிடையே பயம் மருள பேசிக் கொள்ளும் கதைகளில் இந்த பேய்கள் நடமாடுவது உண்டு. நாளடைவில் அதுவே அவர்கள் திரைப்படங்களிலும் அதிகம் பிரதிபலித்தது.

மலாய் மொழியில் நூசாந்தாரா (Nusantara) என்று சொல்லப்படும் மலாய் சமுதாயம் வாழும் நிலப்பரப்புகள் இப்படி நிறைய பேய்க்கதைகளைக் கொண்டுள்ளன. சில பேய்களுக்குக் குறிப்பிட்ட பெயர்கள் உள்ளன. உதாரணமாக தோயோல் (Toyol), போச்சோங் (Pocong), ஓராங் மிஞ்ஞாக் (Orang minyak), லங்சுயீர் (Langsuir), ஜெங்லோட் (Jenglot), பொந்தியானாக் (Pontianak), ஜெரங்குங் (Jerangkung) என சொல்லாம். சில பேய்களைப் பொதுவாக ஹன்த்து (Hantu) எனக் குறிப்பிட்டு அதன் பின் அது இருக்கும் இடங்களை கூறுவார்கள். ஹன்ந்து ராயா (Hantu raya), ஹன்ந்து ஆயீர் (Hantu air), ஹன்ந்து தானா (Hantu tanah), ஹன்ந்து கூபூர் (Hantu kubur), ஹன்ந்து ஜெப்பூன் (Hantu Jepun), ஹன்ந்து புக்கிட் (Hantu bukit) என இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் கெட்ட பேய்கள். நேனேக் கெபாயான் (Nenek kebayan), பூனியான் (Bunian), பாரி பாரி (Paripari) போன்ற நல்ல பேய்கள் வகையறாக்களும் உண்டு. இந்த பேய்களை நீங்கள் மலேசியா, இந்தோனேசியா தவிர்த்து வேறு எங்கே சென்றாலும் பார்க்கவோ கேள்விபடவோ முடியாது. அவற்றுக்கென்று வரையறுக்கப்பட்ட எல்லைகள் இருக்கலாமோ என்னவோ!



**இந்நாட்டில் மலாய் சமூகம் தங்கள் நம்பிக்கைக்கு ஏகப்பட்ட பேய் வகையறாக்களைக் கொண்டுள்ளன. மலாய்க்காரர்களின் மத்தியில் பேய்க்கதைகள் மிகப்பிரபலம். அவர்கள் மத்தியில் புழங்கும் மாத, வார இதழ்களிலும் பேய்களின் அனுபவங்கள் மிக அதிகமாக இடம்பெறுகின்றன.**



இவை இப்படிதான் இருக்கும் என இந்தப் பேய்களுக்கென்றே தனித் தனி தோற்ற அமைப்புகள் உண்டு. பொதுவாகவே எல்லா மலாய்க்கார அம்மாக்களும் அத்தைகளும் மிக மிக துல்லியமாக இவை இன்ன வகை பேய்கள்தான் என கூறும் போது உடலின் ரோமங்கள் என்னையறியாமல் எழும் பாருங்கள். அப்போதெல்லாம் சுற்றி முற்றி பார்த்துக்கொள்வேன். பிடரி மயிர் கூச்செரியும்.

## தோயோல்

தோயோல் என்பது மிகவும் அழகான குட்டி பேய். யாரோ ஒருவரால் அன்பாக வளர்க்கப்படும் ஒரு சின்ன சுட்டித்தனமான குட்டிச்சாத்தான். பொதுவாகவே அதற்கு ஒரு எஜமானர் இருக்க வேண்டியது அவசியம். இல்லையெனில் எப்படி நம் வீட்டுப் பிள்ளைகள் சொல் பேச்சுக் கேட்காமல் அடாவடி தனம் செய்வார்களோ அப்படித்தான் இதுவும்.

இதன் உருவ அமைப்பும் நிர்வாணமான ஒரு ஆறு ஏழு வயது சிறுவன் போல காட்சியளிக்கும். பச்சை நிறத்தில் இருக்கும் என வண்ணத்திரைப்படங்கள் வந்ததும் தெளிவுபடுத்தப்பட்டது. இதன் வேலையே திருடுவதுதான். இதன் எஜமானன் சுற்று வட்டாரத்தில் இருக்கும் வீடுகளில் புகுந்து விலையுயர்ந்த நகைகளையும் பணத்தையும் எடுத்து வருவதற்காகவே இதை வளர்ப்பதாக சொல்லப்படுகிறது.

இந்தத் தோயோலுக்குப் புனித மறை நூல்கள் தெய்வ சன்னதிகள் என்றெல்லாம் வித்தியாசம் இல்லையாம். எல்லா இடத்திலேயும் புகுந்து விளையாடுவது இதன் சிறப்பு அம்சம். இன்னொரு விஷயம் என்னவென்றால் இதைப் பரம்பரை பரம்பரையாக வைத்திருப்பார்களாம்.

ஒரு இடத்தில் தோயோல் இருக்கிறதா இல்லையா என்பதை வெகு சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்.

சாயங்கால நேரங்களில் மக்ரிப்இஷாக் தொழுகை நேரத்துக்கு அப்பால் மணி ஏழு எட்டைத் தாண்டிய பின் வீட்டின் மூலை முடுக்குகளில் கோலி குண்டு சரமாரியாக விட்டுடெறிவது போல ஓசை கேட்கும்.

பின்னர் நின்று விடும். இச்சத்தம் விட்டு விட்டு இரவு முழுவதும் கேட்கும். இப்படியே தொடர்ந்து பல நாட்களுக்குக் கேட்கும். அதைத்தொடர்ந்து சின்ன சின்ன சில்லறைகள், பொருட்கள் என ஒவ்வொன்றாகக் காணாமல் போகும்.

(தொடரும்)

# கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தின் Splendeo 22 கல்விக் கண்காட்சி















# 'ஆனந்த சுதந்திரம்' கவிதைப் போட்டியின் பரிசளிப்பு விழா













இந்தியாவின் 75 ஆவது சுதந்திர அமுதப் பெருவிழாவை முன்னிட்டு இனிய நந்தவனம் மாத இதழ், இந்திய தேசிய நெஞ்சாலை ஆணையம், திட்ட செயலாக்க அலுவலகம் திருச்சி, வாசவி கிளப் எலைட் கப்புள்ஸ் ஆகியன இணைந்து திருச்சியில் ஆனந்த சுதந்திரம் என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்காக நடத்திய கவிதைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப் பரிசளிப்பு விழாவில் கவிதை என்பது உடனடித் தெரிப்பு என்று சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பொறியியலாளர் ம.திருவள்ளுவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும்போது கவிஞர்கள் இருக்கும் இடத்தில் குதூகலமும் உற்சாகமும் இருக்க வேண்டும் ஆனந்த சுதந்திரம் என்கிற போது போர்தொடுக்க வழிகள் இல்லாமல் போராடினோம், ஆனந்த சுதந்திரத்திற்காக எங்கள் சுயநலத்தையும் சுட்டுப்பொசுக்கினோம், சுதந்திரம் கிடைத்தது அகிம்சையால் மட்டுமல்ல வலிகளாலும்தான். அமுத சுரபியைத்தான் தந்துபோனார்கள் இன்று பிச்சை பாத்திரம் அல்லவா எங்கள் கைகளில் இருக்கிறது என்று சுதந்திரம் பற்றி ஆதங்கப்படுகிறார் கவிஞர் மு.மேத்தா என்றார்.

வாழ்வின் அனுபவத்திலிருந்தே கவிதை எழுதவேண்டும் கவிதை என்பது உடனடி தெரிப்பு, சொற்களின் திருவிழா, கவிதை என்பது உணர்வுகளின் திரட்சி, சொற்களின் குவியல் ஒரே சொல்லிக் பல பொருட்களை கவிதையில் கொடுக்க வேண்டும். புதியவர்கள் கவிதை எழுத வரும்போது கொஞ்சம் சுவை, கொஞ்சம் கனவு, கொஞ்சம் கற்பனையுடன் உணர்ந்த முடியாத உணர்வுகளை ஒற்றைவரியில் உங்களால் சொல்லமுடியும் என்றால் அதுதான் கவிதை என்று திருவள்ளுவர் குறிப்பிட்டார். விஜிபி நிறுவன துணைத்தலைவர் இரா. தங்கையா தலைமையில் நடந்த இவ்விழாவில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்ட இயக்குநர் பொறியியலாளர் ப.நரசிம்மன், எஸ்.கணேஸ்ராம், ஆகியோர் சிறப்புரையாற்ற கவிஞர் கவி செல்வா, ஹாஜி முகம்மது அபுபக்கர் சித்திக், வாசவி கிளப் எலைட் கப்புள்ஸ் தலைவர் பி.தனபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முன்னதாக நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார். கவிஞர் பா.தென்றல் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். கலாநிதி வே.த.யோகநாதன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**முதலாளி:** என்னடா இது, அம்மா நான் எது சொன்னாலும் கேக்க மாட்டேங்கறாங்க?

**வேலைக்காரன்:** நீங்க பேசாம அவங்க தூங்கும்போது சொல்லிடுங்க.



**மன்னர் :** தளபதியாரே, என்ன இது போர் நடக்கும் நேரத்தில் 7 நாள் விடுப்பு வேண்டுமா ?

**மந்திரி :** ஆம் மன்னா, போர் முடிந்த அடுத்தநாளே அரண்மனைக்கு வந்து விடுவேன்.

**மன்னர் :** ??????????????



**வீட்டுக்காரி :** டெய்லி காய்கறி வாங்கறதுல கமிஷன் அடிச்சு நீ வீடே கட்டியிருக்கலாமே?

**வேலைக்காரி :** போங்கம்மா என்னை ரொம்ப புகழாதீங்க.



டாக்டர்: நம்ம ஹாஸ்பிடல் விளம்பரத்திற்க நல்ல பஞ்ச் டைலாக் சொல்லு?

நர்ஸ்: கூட்டிட்டு வாங்க தூக்கிட்டு போங்க பணம் எங்களுக்கு.. பொணம் உங்களுக்கு...



**காதலன் :** உன் காதலுக்காக என் உயிரையே கொடுப்பேன் டியர்!

**காதலி :** அதற்கு அவசியமில்ல! நம்ம லவ், என் அப்பாக்கு தெரிஞ்சா, அவரே எடுத்துடுவாரு!

**காதலன் :** ???????



**தொண்டர் :** தலைவரே வீரமுடன் வேட்டைக்கு புறப்பட்ட நீங்கள் ஏன் தலை தெறிக்க, ஓடி வருகிறீங்கள் ?

**தலைவர் :** போய்யா, போற வழியில் ஒரு நாய் துரத்திட்டு வருது.

விஜோ : எலெக்ட்ரிக் ஒயர்ல மூணு எறும்பு போச்சாம், அதில இரண்டு எறும்புக்கு ஷாக் அடிச்சு செத்துப்போச்சாம். மீதமுள்ள ஒண்ணு மட்டும் சாகலை, ஏன்?

அருண் : தெரியலையே...

விஜோ : அது கட்டை எறும்பு.

அருண் : 😟😟

**தபால்காரர்:** இந்த பார்சல குடுக்க அஞ்சு கிலோ மீட்டர் நடந்து வந்தேன் உங்க ஊருக்கு.

**வீட்டுக்காரர்:** ஏன், தபால்ல அனுப்பி இருக்கலாம்ல.?

பக்கத்து வீட்ல கோழிய கொன்னுட்டாங்க... பாவமாயிருந்துச்சு, அதை தட்டிக் கேக்கலாம்னு போனேன்... ஒரு கிண்ணத்துல குழம்பு குடுத்தாங்க, வாங்கிட்டு வந்துட்டேன்...

பிய்யாத தோசை வேணும்னு அவள்ட்ட கேட்டதும்..!அவளும் ஆசையா போட்டு தந்து..!

இப்ப பிய்க்காம திண்ணுனு *கரண்டியோட பக்கத்தில நிப்பா பாருங்க அவ தாங்க..? பொண்டாட்டி..

இப்ப என்னடா பண்ணலாம்னு தோசையவே வெறிக்க வெறிக்க பாத்துட்டு இருப்பான் பாருங்க அவன் தான் the great புருஷன்..!

கணவன் - டார்லிங் இன்னைக்கு என்ன டிபன்?

மனைவி (கோபமாக) - ஒரு கப் "விஷம்"

கணவன் - ஓகே டியர் இன்னைக்கு நான் வர லேட் ஆகும்.நீ சாப்பிட்டு தூங்கு!!

**கடை முதலாளி :** ஏண்டா அரிசி மூட்டையில இவ்ளோ அரிசி குறைஞ்சிருக்கு?

**வேலைக்காரன் :** மூட்டைக்கு அடியில் ஓட்டை விழுந்திருக்கும் முதலாளி.

**கடை முதலாளி :** அடியில ஓட்டை விழுந்தா எப்படிடா மூட்டைக்கு மேல அரிசி குறையும்?

**வேலைக்காரன்:** ...

தண்ணீருக்கும் கண்ணீருக்கும் என்ன வித்தியாசம்

தண்ணீருக்கும் கண்ணீருக்கும் ஒரு எழுத்து வித்தியாசம்

ஆளுமைகள் பிறப்பிலா வளர்ப்பிலா உருவாகின்றார்கள் என்ற வாதப் பிரதி வாதங்கள் காலங்காலமாய் இன்னும் தொடர்ந்திடும் தொடர் கதையாக...

எனினும், எம் சமூகத்தோடு ஒன்றியதாய் பல ஆளுமைகள் இலைமறை காயாக தம்மை விளம்பரப் படுத்திக் கொள்ளாது சமூகத்திற்கான தம்மாலான சேவைகளைச் செய்து காலத்தோடு கரைந்து விடுகின்றனர். என்றாலும் சமகாலத்தில் சிறந்த ஆளுமைகளில் ஒருவராக "இலங்கை பொன்மனச் செம்மல்" என அழைக்கப்படும்



***இவரைப் புகழ்வோம்***
***பாக்கள் பாடி !***

தாஜ்மஹான் இறையோனின் கிருபையால் "வாழ்நாள் சாதனையாளர்" என்ற மகுடம் சூடப்படுவார் என்பது வெள்ளிடைமலையாகும். விருதுகள் பெருமையடைந்தது அவரால் என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

அன்னாரது கலைச் சேவையும், சமூக சேவையும் இடையறாது தொடர்ந்திட இறையோனை வேண்டுகின்றேன். இவர் மன்னார் மாவட்டம் முஸ்லிம் முசலி மகா



# "இலங்கை பொன்மனச் செம்மல்" கலாபூஷணம் தாஜ்மஹானை வாழும்போதே வாழ்த்துவோம்

கலாபூஷணம் தாஜ்மஹான் அவர்களைப்பற்றி நான் அறிந்தவற்றை அவர் வாழும் காலத்திலேயே எழுதி வாழும்போதே வாழ்த்திடலாம் என்ற நன்னோக்கோடு இக் கட்டுரையை எழுதுகிறேன்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் கல்விமான்கள் என்று இன்னோரன்ன விற்பன்னர்களை தன்னகத்தே கொண்டது மன்னார் மாவட்டம். அந்த முதுசங்களில் ஒருவராக இலங்கை பொன்மனச் செம்மல் கலாபூஷணம் தாஜ்மஹா



னைக் குறிப்பிடலாம்.

கலாபூஷணம் தாஜ்மஹான் கலைத்துறையைச் சார்ந்த குடும்ப பூர்வீகத்தைக் கொண்டவர். அன்னார் எனது நீண்ட நாளைய நண்பரும், நெருங்கிய நட்புறவும் கொண்டவர்.

கொழும்பில் வளரும் இளம் கவிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகவ கவிதா வட்டத்தின் முன்னணிக் கவிஞர்களில் இவரும் ஒருவர்.

நண்பர் தாஜ்மஹான் வகவத்தின் வளர்ச்சிக்காக சலிக்காது, சளைக்காது கரம் கொடுப்பவர் என்றால் அது மிகையில்லை.

இவர் கலை இலக்கியத்துறை மட்டுமல்ல அரசியல் மற்றும் வணிக பெருமக்களோடும் நெருங்கிய தொடர்புடையவர். இதன் பலனாய் பலபேருக்கு சமாதான நீதவான் பட்டத்தினை பெற்றுக் கொடுத்தார்.

பொன்மனச் செம்மல் என்ற பட்டத்திற்கு ஏற்றாற் போல நலிந்த கலைஞர்களுக்கு அவர்களின் தேவையறிந்து இடதறியாது வலதால் வழங்கிடும் வல்லவர் இவர் (வள்ளல் இவர்) .

வாலிபம் தொட்டே கலைத்துறை மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் செயற்பட்டு வரும் கலாபூஷணம் தாஜ்மஹான் நிறைய விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்றவர். பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டு பல பட்டங்களையும் பெற்றுள்ளார்.

நானும் தாஜ்மஹானும் 2021ம் ஆண்டுக்கான கலாபூஷணம் பட்டத்தை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் பெற்றுக் கொண்டோம். கலை இலக்கிய சமூக சேவைகளில் மிளிர்ந்திடும் இவர் இயல்பிலேயே துணிவும், பணிவும் மிக்கவர்.



வகவ கவியரங்கில் என் வழி தனி வழியென கவி பாடும் இவர் சும்மா அதிருதில்ல என்றதாய் கவியரங்கை அதிர வைத்திடுவார்.

நாடக நடிகராக மட்டுமல்ல சகோதர மொழியான சிங்கள மொழி சினிமாவிலும் "கினி கந்துளு" என்ற படத்திலும் சட்டத்தரணி கதா பாத்திரத்தில் நடித்துள்ளார்.

கலையார்வமிக்க இவர் நாடகத்துறைக்கு தம்மாலான பங்களிப்பை நிறையவே செய்திருக்கின்றார். தாஜ்மஹான் இறையோனின் கிருபையால் "வாழ்நாள் சாதனையாளர்" என்ற மகுடம் சூடப்படுவார் என்பது வெள்ளிடைமலையாகும்.

அன்னாரது கலைச் சேவையும்,சமூக சேவையும் இடையறாது தொடர்ந்திட இறையோனை வேண்டுகிறேன்.

***வாதிகளும்***
***பிரதிவாதிகளும்***
***நீதி மன்றத்தில்***
***சங்கமம் !***

***இலக்கிய வாதிகளும்***
***கலைவாதிகளும்***
***தாஜ் மன்றத்தில் சங்கமம் !***

***இதயம் மகிழ்வோம்***
***பூக்கள் சூடி !***

முத்துசம் துலங்கும்
முத்துச் சிலாவத்துறையின்
முத்தான மொஹம்மத்
மீராசாகிபு, பாத்தி முத்துத்
தம்பதியினருக்கு
கடைக்குட்டி மகனாகப்
பிறந்த இவர்,
மன்னார் உப்புக்குளம்
கஸ்மீர் வீதியைப்
பிறப்பிடமாகக் கொண்ட
ரஹ்மத்துல்லா பதீலா
எனும் மங்கையைக்
கைப்பிடித்து ஐந்து
பிள்ளைகளுக்கு தந்தையான
இவர் கொழும்பில் பேரும்
புகழோடும் வாழ்கின்றார்.



வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளிடையே ஐந்தாம் ஆண்டுக்கான தமிழ் மொழி தின பேச்சுப் போட்டியிலே பேச்சாற்றல் திறன்மிக்க மாணவன் தாஜ்மஹான் முதலாம் இடத்துக்குத் தெரிவாகி முசலி மகா வித்தியாலத்துக்கு பெருமை சேர்த்தார்.

பரபரப்பான இந்தச் செய்தியை அப்போது வெளி வந்த தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து யாழ் உஸ்மானியா கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

யாழ் சர்வோதயம் அமைப்பினால் யாழ் மண்ணில் நடாத்தப்பட்ட எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் பல மாவட்டங்களிலுமிருந்தும் கலந்து கொண்ட கலைஞர்கள் மத்தியில் முதல் எம்.ஜி.ஆர் விருதினையும், கலை மாமணி பட்டத்துக்கான சான்றிதழையும், மாபெரும் சபையில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட அப்போதைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேஷநாதன், இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் எம்.நடராஜன், அமைப்பின் தலைவர் உட்பட பிரபலங்கள் பலரும் இணைந்து மாலை அணிவித்து கௌரவித்தனர். இதன் மூலம் யாழ்/ உஸ்மானியா கல்லூரிக்கும் பெருமை தேடிக் கொடுத்தார்.

இலங்கைத் திருநாட்டின் தலைநகராம் கொழும்பு மாவட்டத்தில் நடைபெற்ற பல கலை நிகழ்வுகளுக்கும் இசை நிகழ்வுகளுக்கும் தலைமையேற்று நிகழ்வுகள் வெற்றிபெறக் காரணமாய் இருதவர் தாஜ்மஹான்தான் என கிருஷ்ண கலாலயத்தின் 36வது ஆண்டு நிகழ்வின்போது அமைப்பின் தலைவர் கலைஞர் அமரர் மோகன் குமார் மேடையில் சொன்னது சான்று பகரும்.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவும் கௌரவ அதிதியாக தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவரும் சிறப்பு அதிதியாக நவோதய மக்கள் முன்னணித் தலைவர் அமரர் கிருஷ்ணாவும் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அறிவகம் அதிபர் கவிஞர் சசான்கன் சர்மாவின் ஏற்பாட்டில் பிரபல பாடகர் கவிக் கமலின் ஹென்சி இசை நிகழ்வின் போது பிரதம அதிதியாக முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேஷன், கௌரவ அதிதிகளாக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் கே. அரசரட்ணம், இலக்கியச் செம்மல் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், சிறப்பு அதிதிகளான வகவத் தலைவர் கவி மாமணி நஜ்முல் ஹுசைன், அல் ஜஸீரா பத்திரிகை பிரதம ஆசிரியர் முபாரக் அப்துல் மஜீத்,மற்றும் பிரபலங்கள் முன்னிலையில் சசாங்கன் சர்மாவின் வாழ்த்துப் பாவிலிருந்து சில வரிகளை இங்கு எழுதுவது பொருத்தமென எண்ணுகின்றேன்.



***இலங்கையில் துலங்கிடும்***
***பொன்மனச் செம்மல்!***
***துலங்கிடும் பணிதனில்***
***நவைகளைந்த பூரணன்!***
***பல சேவைக்கதிபன்***
***புன்னகை முகத்தோன்***
***புனிதன் !***
***கலைவாரிலா தனி மனிதன் !***
***கனிந்த சேவை புகழோன் !....***

மற்றும் தாஜ்மஹானின் தலைமையில் இடம்பெற்ற வசந்த கானங்கள் இசை நிகழ்வின்போது பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் மனோ கணேஷன், கௌரவ அதிதியாக பிரபல சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், சிறப்பு அதிதியாக முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் அமரர் கே.அரசரட்ணம் ஆகியோர் முன்னிலையில் பிரபல எழுத்தாளரும்,கவிஞருமான பிரேம்ராஜ் தனதினிய நண்பரின் வள்ளல் தன்மையினை வாழ்த்திப் பாடிய வாழ்த்து மடலிலிருந்து கவின்மிகு வரிகளை பதிவிடுவதில் மனம் மகிழ்கின்றேன்.

***அரவணைப்பதில்***
***அனுசரணையாய்***
***அவன் மகான் !***
***வழியின்றி தவிப்பவர்க்கு***
***உதவுவதற்கு அசரான் !***
***தனிவழி நடந்து கொடுப்பதற்கு***
***பின் வாங்கான் !***

***இங்கில்லை கலைஞர்களுக்கு***
***அவன் தாஜ்மஹான் !...***



என்றதாய் தாஜ்மஹானின் வள்ளல் தன்மையினை மேல் வரும் கவி வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

பிரபல பாடகர் பாஸிலின் தேனும் பாலும் இசை நிகழ்வுக்கு தலைமை வகித்த தாஜ்மஹானைப் பாராட்டி சந்தக் கவிஞர் கிண்ணியா அமீர் அலியின் வாழ்த்துக் கவிதையில் சில வரிகள்.

***விருதுகள் பட்டங்கள்***
***வீச்சரிவின் உச்சம் !***
***பெரிதுவப்பர் சான்றோர்***
***பெரியோன் கருதி***

***அவனீந்த பொன்மனம் !***
***அஃதொன்றின்***
***மேன்மைக்***
***கவியமுதன்***
***பெற்றவளச் சான்று !***

சந்தக் கவியின் கவி வரிகள் இலங்கை பொன்மனச் செம்மலின் திறமைகளை படம் பிடித்துக் காட்டுகிறது.

பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான மர்ஹூம் நவாஷ் அவர்களின் பாராட்டுக் கவிதை வீரகேசரி சங்கமம் பகுதியில் இவ்வாறு பிரசுரிக்கப்பட்டு இருந்ததை அவரை நினைவு படுத்து முகமாக அமையும் என நினைக்கின்றேன்.



***ஏஜ் எப்படி இருந்தாலென்ன***
***தாஜ் நீங்கள்***
***இளமையானவர்தான் !***
***பத்திரிகை பேஜ்ஜிலே***
***பேரெடுத்தவர்கள் எல்லோரும்***
***பொன்மனச் செம்மல்கள் அல்ல !***

***ஊரகெடுத்து***
***வாழ்பவர்களைவிட***
***பேரெடுத்து வாழும்***
***நீங்கள்மேல்***

***ஏரெடுத்து உழும்***
***உழவனைப் போல***
***எழுத்தெடுத்து எழுதும்***
***எங்களயெல்லாம்***
***வாழ்த்தும்***
***வளமான நெஞ்சம்***
***நீங்கள்தான் வாழ்க!***

அதேபோல் பிரபல சத்திய எழுத்தாளர் கவிஞர் எஸ்.ஐ. நாகூர்கனி நம் நாட்டிலும் ஒரு பொன்மனச் செம்மல் எனும் தலைப்பில் தினக்குரல் பத்திரிகையில் எழுதிய சில வரிகளை இங்கு பதிவு செய்ய விளைகிறேன்...

பொன்மனச் செம்மல் நாமறிந்த தாஜ்மஹான் மேடைகள் தோறும் வரவேற்புரை, சிறப்புரை, தலைமையுரை, நன்றியுரை என்று நானா வித உரைகளை நறுந்தமிழ் தேன் தடவி, ஆற்றொழுக்காக அடுக்குத் தொடர் வார்த்தைகளை சிந்தி பேசும் பேச்சாளர் என்பது ஊரறிந்த உண்மை.

அவரது பணிமனை நாடிச் செல்லும் பல்வேறு உதவிகளை



பெற்றுச் செல்லும் வலக்கை கொடுப்பதை

இடக்கை அறியக் கூடாத தர்மத்தின் தாற்பரியம் பேணி வாரி வழங்கும் இவரது வள்ளல் தனத்தைக் கண்ட அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தலைவர் டாக்டர் அன்பழகன் அவரது அமைப்பினால் இவருக்கு இலங்கை பொன்மனச் செம்மல் எனும் பட்டமளித்து கௌரவித்தது பொருத்தமே எனக் குறிப்பிட்டிருந்தார்.



ஏழை, பணக்காரன் உயர்ந்தோன் தாழ்ந்தோன், இன, மத, சாதி வேறுபாடின்றி,அனைவரோடும் அன்பொழுக பழகும் கலாபூஷணம் தாஜ்மஹானோடு நெருங்கிப் பழகிய துபாய் பெஸ்ட் தொலைக்காட்சி இயக்குநர் கலையன்பன் ரபீக் கொரோனாவினால் பீடிக்கப்பட்டு காலமான போது மனம் உருகி துயர் தாங்காது இவர் வடித்த கவிதையானது தினகரன் வார மஞ்சரியில் பிரசுரமாக, வாசித்து கண்ணீர் விட்டோர் ஏராளம்.

அவரின் கவிதையிலிருந்து

ஒரு சில வரிகளை பதிவிட எண்ணுகிறேன்.

***நீரூட்டி வளர்த்த நீலோற்பல***
***மலர்ச்செடி***
***வேரற்று,தூரற்று***
***வேறாகிப் போனதுவே !***
***வடிவிழந்து,வாசமிழந்து***
***வாழ்விழந்து,வதங்கிப்***
***போனதுவே !***
***அந்த மொட்டு மலர் விரியாமல்***
***பட்டுப் போனதுவே !***

***இவர் வடித்த தத்துவக்***
***கவிதைகள் யாவும்***
***வெகு விரைவில்***
***"தேன் கிண்ணம்" எனும்***
***தலைப்பில் வெளியிட***
***இருக்கின்றது என்ற***
***மகிழ்ச்சியோடு***
***"இலங்கை***
***பொன்மனச் செம்மல்"***
***தாஜ்மஹானை நாமும்***
***வாழ்த்துவோமே......***

கொழும்பு டவர் மண்டபத்தில் என்.எம். புரடக்சன் அமைப்பினால் நடாத்தப்பட்ட கலைஞர்களுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது நிகழ்வு பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் தலைமையில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது. பி.ப.ஆறு மணிக்கு ஆரம்பித்த இந்த நிகழ்வு இரவு 12 மணி அளவில் நிறைவு பெற்றது.

இதன்போது அமைப்பினால் இவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் அன்பளிக்கப்பட்டது. அதில் இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது...

***தலைநகரில் உள்ள கலைஞர்கள் மத்தியில்***
***தனித்துவமும் தமிழ் கவி படைப்பதில் பல தத்துவமும், தனக்கென***
***ஒரு கொள்கையும் கொண்ட***

***தாஜ்மஹான் ஐயாவே...***
***தன்னிடம் நம்பி வந்தவரை***
***தயாள குணத்துடன்***
***தன் நம்பிக்கையை***
***ஏற்படுத்தி அவர் தலை***
***நிமிர்வதைப் பார்த்து ரசிக்கும்***
***மனித நேயமுள்ள மாமனிதரே...***
***கலைக்காவலன்,கலைஞன்,***
***கவிஞன்,பேச்சாளன்,***
***என பல பட்டங்கள்***
***புகழ் மாலைகளாய்***
***உம்மை சேர்ந்தாலும்***
***எல்லாமே இறைவன்***
***எனக்குக் கொடுத்த***
***அருட்கொடைகள் என்று***
***கூறும் தன்னடக்கம் உள்ளவரே...***
***இன்றைய தினம் இந்நிகழ்வை***
***முன்னின்று நடத்தும்***
***இவ் விழாவின் தலைமை***
***நாயகனே உங்கள் பணி***
***மேன் மேலும் தொடர***
***வாழ்த்துகிறோம்***

M.N.PRODUCTION என குறிப்பிடப் பட்டிருந்தது. இவ் விழாவில் தமிழ்,சிங்களம்,ஆங்கில மொழிகளிலும் தலைமையரையாற்றி சபையோரின் கரகோஷங்களைப் பெற்றார். இதன் மூலம் தாஜ்மஹானின் கலைச்சேவையை புரிந்து கொள்ளலாம்.

கலாபூஷணம்
கவிஞர் டிவங்சோ...

தொடர்புகளுக்கு:
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எம்.எம்.முபாரக். மன்னார்.

**கேள்வி:** உலக நாயகன் கமல்ஹாசன் நடித்த சங்கர் இயக்கிய 'இந்தியன் 2' படம் என்னவாகியது? கிடப்பில் போடப்பட்டு விட்டதா.?

**பதில்:** உலக நாயகன் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான 'விக்ரம்' படத்தின் பிரமாண்டமான வசூல் வெற்றிக்குப் பிறகு, அவரது நடிப்பில் உருவாகும் படங்களுக்கு எதிர்பார்ப்பும் வரவேற்பும் அதிகரித்திருக்கிறது. இந்நிலையில் அவர் புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொள்ளாமல் அவர் நடிப்பில் தயாராகி பல்வேறு காரணங்களால் கிடப்பில் போடப்பட்டிருந்த 'இந்தியன்2' திரைப் படத்தை மீண்டும் தூசு தட்டி உருவாக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# விஜய் சேதுபதிக்கு ரூ.21 கோடி

ஜவான் படத்திற்காக விஜய் சேதுபதி ரூ.21 கோடி சம்பளம் பேசி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

விஜய்சேதுபதி இமேஜ் பார்க்காமல் வில்லனாகவும் நடித்து வருகிறார். ரஜினிகாந்தின் பேட்ட, விஜய்யின் மாஸ்டர் படங்களில் வில்லன் வேடம் ஏற்று பேசப்பட்டார். கமல்ஹாசனின் விக்ரம் படத்தில் விஜய் சேதுபதி நடித்த வில்லன் கதாபாத்திரத்துக்கு பெரிய வரவேற்பு கிடைத்தது.

தெலுங்கு படங்களிலும் வில்லனாக நடிக்கும்படி அழைப்புகள் வருகின்றன. விஜய்சேதுபதி கதாநாயகனாக நடித்த படங்களைவிட வில்லனாக நடிக்கும் படங்கள் பெரிய அளவில் வெற்றி பெறுகின்றன என்ற சென்டிமென்டும் திரையுலகில் நிலவுகிறது.

அட்லி இயக்கத்தில் ஷாருக் கான், நயன்தாரா, தீபிகா படுகோனே ஆகியோர் நடிக்கும் ஜவான் இந்தி படத்தில் வில்லனாக நடிக்கவும் விஜய் சேதுபதியை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இந்த படத்தில் அவருக்கு ரூ.21 கோடி சம்பளம் பேசி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

விஜய்சேதுபதி கதாநாயகனாக நடிப்பதற்கே ரூ.15 கோடிதான் வாங்குகிறார் என்ற நிலையில், வில்லனாக நடிக்க ரூ.21 கோடி வாங்குவது திரையுலகினர் மத்தியில் வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஜவான் படம் இந்தி மட்டுமன்றி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளிலும் வெளியாக இருப்பதால் அதிக சம்பளம் பேசி இருப்பதாக கூறப்படுகிறது.



# அஞ்சலியின் சொத்து ரூ.10 கோடி

இத்தனை ஆண்டுகள் நடித்தும் அஞ்சலியின் சொத்து ரூ.10 கோடி என்று தகவல் பரவி வருகிறது. தமிழில் 2007ல் கற்றது தமிழ் படத்தில் அறிமுகமான அஞ்சலி தொடர்ந்து நிறைய படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். தெலுங்கிலும் அதிக படங்களில் நடித்து இருக்கிறார். சில வருடங்களுக்கு முன்பு உடல் எடை அதிகமானதால் படங்கள் குறைந்தன. தற்போது பட வாய்ப்புகளை பிடிக்க கடும் உடற்பயிற்சிகள் செய்து எடையை குறைத்து இருக்கிறார். ஆனாலும் எதிர்பார்த்த படங்கள் இல்லை. இந்தநிலையில் அஞ்சலியின் சொத்து குறித்து தெலுங்கு இணைய தளங்களில் புதிய தகவல் பரவி வருகிறது. 15 ஆண்டுகளாக சினிமாவில் நீடிக்கும் அஞ்சலி நிறைய சொத்து சேர்த்து இருப்பார் என்றே பலரும் நினைத்து இருப்பார்கள். ஆனால் அதில் உண்மை இல்லை என்றும், தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து அவர் சேர்த்து வைத்துள்ள மொத்த சொத்தின் மதிப்பு வெறும் ரூ.10 கோடிதான் என்றும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஒரு படத்துக்கு ரூ.50 லட்சம் முதல் ரூ.80 லட்சம் வரை வாங்கும் அஞ்சலியால் இத்தனை காலம் சினிமாவில் இருந்தும் இவ்வளவுதான் சம்பாதிக்க முடிந்ததா? என்று ரசிகர்கள் ஆச்சரியத்தோடு வலைத்தளத்தில் பதிவுகள் வெளியிட்டு வருகிறார்கள். ஏற்கனவே சொத்து பிரச்சினையில் சென்னையில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து அஞ்சலி வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திருமண வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த மேக்னாராஜ்



தமிழில் 'காதல் சொல்ல வந்தேன்', 'உயர்திரு 420', 'நந்தா நந்திதா' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை மேக்னா ராஜ். இவர் கடந்த 2018ம் ஆண்டில் கன்னட நடிகர் சிரஞ்சீவி சர்ஜாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எதிர்பாராதவிதமாக சிரஞ்சீவி சர்ஜா கடந்த 2020ம் ஆண்டு மாரடைப்பால் மரணம் அடைந்தார். இவர்களுக்கு ராயன் என்ற மகன் இருக்கிறான். இதற்கிடையில் மேக்னாராஜ் 2வது திருமணம் செய்து கொள்ள போவதாக தகவல் வெளியானது. ஆனால் இதனை அவர் மறுத்தார். ஆனாலும் வதந்திகள் முன்பை விட வேகமாக பரவியது. இந்தநிலையில் மேக்னாராஜ் ஒரு புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். கணவர் மற்றும் மகன் பெயரை ஒன்றாக சேர்த்து அவர் தனது கையில் டாட்டூ குத்திக் கொண்டுள்ள படம் தான் அது. இதன்மூலம் கடந்த சில நாட்களாக வெளியாகி வந்த 2வது திருமணம் என்ற வதந்திகளுக்கு மேக்னா ராஜ் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

# சம்பள பிரச்சினையால் சமந்தாவுக்கு ஆப்பு



சம்பள பிரச்சினையால் பிரபல நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் படத்தில் இருந்து சமந்தா விலகி விட்டார். தமிழ் தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் சமந்தா அதிக சம்பளம் பெறும் நடிகையாக உயர்ந்துள்ளார். இந்தி படங்களில் நடிக்கவும் வாய்ப்புகள் வந்துள்ளன. தற்போது தமிழ் தெலுங்கில் தயாராகி உள்ள யசோதா சாகுந்தலம் படங்களில் நடித்து முடித்துள்ளார். இந்த படங்கள் அடுத்தடுத்து திரைக்கு வர உள்ளன. குஷி என்ற தெலுங்கு படத்திலும் நடித்து வருகிறார். இந்த நிலையில் பிரபல தெலுங்கு நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் ஜோடியாக புதிய படத்தில் நடிக்க சமந்தாவை அணுகினர். அவரும் நடிக்க ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது. படப்பிடிப்பை விரைவில் தொடங்க இருந்த நிலையில் படத்தில் இருந்து சமந்தா விலகி விட்டார்.

சமந்தாவுக்கு படக்குழுவினர் ரூ.2 கோடி சம்பளம் தர முன்வந்ததாகவும் ஆனால் அவர் தனக்கு ரூ.4 கோடி சம்பளம் வேண்டும் என்று கேட்டதாகவும் அதை கொடுக்க தயாரிப்பாளர் சம்மதிக்காததால் படத்தில் இருந்து சமந்தா விலகிவிட்டதாகவும் இணைய தளங்களில் தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே இந்த படத்தில் நடிப்பதாக இருந்த அலியாபட்டும் விலகி விட்டார்.

# அருண் விஜய் 'பார்டர்'



நடிகர் அருண் விஜய் நடித்துள்ள 'பார்டர்' திரைப்படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது

இயக்குனர் அறிவழகன் இயக்கத்தில் 'குற்றம் 23' படத்திற்கு பிறகு நடிகர் அருண் விஜய் நடித்துள்ள திரைப்படம் 'பார்டர்'. இந்த படத்தில் நடிகை ரெஜினா கசன்ட்ரா, ஸ்டெபி பட்டேல் இருவரும் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். விஜய் ராகவேந்திரா தயாரித்துள்ள இந்த படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். ராஜசேகர் ஒளிப்பதிவு செய்துள்ளார். சாபு ஜோசப் படத்தொகுப்பு செய்துள்ளார். இந்த நிலையில், 'பார்டர்' திரைப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி ஸ்பை திரில்லராக உருவாகியுள்ள இந்த திரைப்படம் வருகிற அக்டோபர் 5ம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'பகாசூரன்'



'பகாசூரன்' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

பழைய வண்ணாரப்பேட்டை படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு இயக்குனராக அறிமுகமானவர் மோகன் ஜி. அதன்பின்னர் 'திரௌபதி', 'ருத்ரதாண்டவம்' ஆகிய படங்கள் இயக்கிய மோகன் ஜி. புதிதாக இயக்கி வரும் 'பகாசூரன்' படத்தில் இயக்குனர் செல்வராகவன் கதையின் நாயகனாகவும், நட்டி நட்ராஜ், ராதாரவி ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து வருகிறார்கள் சாம் சிஎஸ் இசையமைக்கிறார். 'பகாசூரன்' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் 'பகாசூரன்' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. இதனை இயக்குனர் செல்வராகவன் தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து நமது அடுத்த தலைமுறையை பாதுகாப்போம். நீங்கள் அனைவரும் விரும்புவீர்கள் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த டீசர் தற்போது வைரலாகி வருகிறது.

# பெண் வேடத்தில் நவாசுதீன் சித்திக்

பாலிவுட்டில் கதைகளையும், கதாபாத்திரங்களையும் தேர்வு செய்து நடிக்கும் ஒரு சில நடிகர்களில், நவாசுதீன் சித்திக்கும் ஒருவர். இவர் ஒரு யதார்த்தமான நடிகரும் கூட. இவர் தமிழ் மொழியில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'பேட்ட' படத்தில் வில்லனாக நடித்திருந்தார்.

1999ம் ஆண்டு சினிமாத் துறைக்குள் நுழைந்த அவர், ஆரம்பத்தில் சிறுசிறு கதாபாத்திரங்களில் நடித்து வந்தார்.

ஒரு கட்டத்தில் வலுவான குணச்சித்திர வேடங்களும், எதிர்மறையான கதாபாத்திரங்களும் கிடைத்தன. கிடைத்த கதாபாத்திரங்களில் எல்லாம் தன்னுடைய நடிப்புத் திறமையை வெளிப்படுத்தி வந்த நவாசுதீன் சித்திக், 2012ம் ஆண்டு வெளியான 'கேங்ஸ் ஆப் வாஷிப்பூர் பார்ட் 2' படத்தில் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். 2013ம் ஆண்டு உண்மை சம்பவத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்ட 'மஞ்ஹி' திரைப் படத்திலும் நாயகனாக நடித்தார். இந்தப் படத்தில் அவரது நடிப்பு பெரிய அளவில் பேசப்பட்டது. தொடர்ந்து பல படங்களில் நாயகனாகவும், குணச்சித்திர வேடங்களிலும், வில்லனாகவும் கலவையான நடிப்புகளை கொடுத்து வந்தார்.

நவாசுதீன் சித்திக், பெண் வேடத்தில் ஒரு படத்தில் நடிப்பதாக செய்திகள் வெளியாகி வந்தன. இந்த நிலையில் சமீபத்தில் அந்தப் படத்திற்கான போஸ்டர் வெளியிடப்பட்டது. 'ஹட்டி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் தான் நவாசுதீன் சித்திக், பெண் வேடம் ஏற்றுள்ளார். இதில் பெண் தாதாவாக அவர் நடிப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. அந்தப் படத்தின் முதல் போஸ்டரில் பெண் வேடத்தில் மார்டன் உடையில் நவாசுதீன் சித்திக் அமர்ந்திருக்கும் காட்சி, ரசிகர்கள் பலரையும் வெகுவாக கவர்ந்துள்ளது. இந்தப் புகைப்படத்தை, சினிமா ரசிகர்கள் மட்டுமின்றி பலதரப்பட்ட மக்களும், சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகிறார்கள். இதனால் அந்தப் புகைப்படம் வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.



# பருகவர்ச்சியில் மாளவிகா மோகனன்



கவர்ச்சி தூக்கலான தனது புகைப்படங்களையும் சமூக வலைதளங்களில் மாளவிகா மோகனன் வெளியிட்டு வருகிறார். முன்பை விட கவர்ச்சி காட்டும் அவரது புகைப்படங்கள் தற்போது வைரலாக பரவி வருகின்றன.

ரஜினிகாந்த் நடித்த 'பேட்ட' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமான மாளவிகா மோகனன் விஜய்யுடன் 'மாஸ்டர்' படத்திலும், தனுசுக்கு ஜோடியாக 'மாறன்' படத்திலும் அடுத்தடுத்து நடித்து பிரபலமானார். ஆனாலும் அவருக்கு பட வாய்ப்புகள் எதிர்பார்த்தபடி வரவில்லை. கதைக்காக கவர்ச்சியாக நடிக்க தயார் என்று அறிவித்தபோதிலும் வாய்ப்புகள் வராததால் விரக்தியில் இருந்தார். இதையடுத்து, 'சினிமா துறையில் விரக்தி கூடாது, தொடர் முயற்சிகளே கைகொடுக்கும். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி' என நண்பர்கள் ஊக்கம் அளித்திருக்கிறார்கள். இதனால் மாளவிகா மோகனன் தனது கவனத்தை உடற்பயிற்சிகளில் செலுத்தி வருகிறார். கடுமையான உடற்பயிற்சி மூலம் தனது உடலை கட்டுக்கோப்பாக மாற்றி வருகிறார். அதேவேளை கவர்ச்சி தூக்கலான தனது புகைப்படங்களையும் அவ்வப்போது சமூக வலைதளங்களில் அவர் வெளியிட்டு வருகிறார். முன்பை விட கவர்ச்சி காட்டும் அவரது புகைப்படங்கள் தற்போது வைரலாக பரவி வருகின்றன. 'அகல உழுவதை விட ஆழ உழுவது மேல்' என்ற பழமொழியை மாளவிகா மோகனன் சரியாக பின்பற்ற தொடங்கியிருக்கிறார் என திரையுலகினர் கிசுகிசுக்கிறார்கள். எது எப்படியோ இனி வரும் காலம் மாளவிகா மோகனன் ரசிகர்களுக்கு விருந்து தான்.

# பெண்களின் மனச்சோர்வை விரட்டும் செல்லப்பிராணிகள்



செல்லப்பிராணிகள் வளர்ப்பு பலரின் மனஅழுத்தத்தை குறைப்பதாக அமைகிறது. குறிப்பாக பெண்களுக்கு செல்லப் பிராணிகளை வளர்ப்பதால் ஏராளமான நன்மைகள் உண்டாகின்றன. இது பெண்களின் ஆரோக்கியத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் எவ்வாறு மேம்படுத்துகிறது என்று பார்க்கலாம்.

**மன அழுத்த நிவாரணம்:** ஆண்களுடன் ஒப்பிடும்போது, பெண்களுக்கு மனச்சோர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் பல மடங்கு அதிகமாக இருக்கிறது. இதற்கு இன்றைய சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக, கலாசார மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன. தங்களுக்கு இருக்கும் பொறுப்புகளை சரியாக செய்வதற்காக, பெண்கள் தங்களை அறியாமல் அதிகமான அழுத்தத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இது அவர்கள் மனச்சோர்வு அடைவதற்கு வழிவகுக்கிறது. செல்லப்பிராணிகளுடன் நேரத்தை செலவிடும்போது ரத்த அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்தும் 'கார்டிசோல்' எனும் தீங்கு விளைவிக்கும் ஹார்மோன் குறைந்து, 'ஆக்சிடோசின்' எனும் மகிழ்ச்சிக்கான ஹார்மோன் அதிகமாக சுரப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே வாலை ஆட்டியபடி, ஒவ்வொரு நாளும் உங்களைச் சுற்றிவரும் வளர்ப்பு நாயுடன் சிறிது நேரம் செலவிடுங்கள்.

**உடற்பயிற்சிக்கான ஊக்கம்:** இதய நோய் மற்றும் பக்கவாதத்தால் ஒவ்வொரு ஆண்டும் பல பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். செல்லப்பிராணிகள் வளர்ப்பு, குறிப்பாக நாய்கள் வளர்ப்பது ரத்தத்தில் கொலஸ்டிரால் மற்றும் டிரை கிளிசரைடு அளவுகளைக் குறைப்பதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. காரணம், நாய்கள் தொடர்ந்து வீட்டுக்குள்ளேயே இருக்கும் குணம் கொண்டவை அல்ல. எனவே அவை அவ்வப்போது வெளியில் செல்வதற்கு உங்களை கட்டாயப்படுத்தும். இதனால் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருக்காமல், வெளியில் சென்று உலவுவதால் உடலுக்கு பயிற்சி கிடைக்கும். மேலும் இயற்கைவெளியில் சிறிது நேரம் இருப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதால் ரத்த அழுத்தம் குறையும்.

**பாச உணர்வு அதிகரிப்பு:** செல்லப்பிராணியை பராமரிப்பதும், குழந்தையைப் பராமரிப்பதும் கிட்டத்தட்ட ஒன்றாகும். செல்லப்பிராணியை வளர்க்கும் நபர்களுக்கு இயற்கையாகவே பாச உணர்வு மேலோங்கி இருக்கும். புதுமண தம்பதிகள் குழந்தை பெறுவதற்கு முன்பு, செல்லப்பிராணிகள் வளர்ப்பது, அவர்களின் பொறுப்பு, முடிவெடுக்கும் தன்மை, பராமரிக்கும் பண்புகளை அதிகரிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இது அவர்களுக்கு குழந்தை வளர்ப்பில் கைக்கொடுக்கும் என்று நம்பப்படுகிறது.

# கருமையை போக்கி கை, கால்களை பளபளக்க செய்வது எப்படி?



சிலரது முகம் பார்ப்பதற்கு பளிச் சென்று வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால், கை கால்கள் மற்றும் கழுத்து போன்றவை அதற்கு எதிர்மாறாக இருக்கும்.

காரணம் நாம் வெயிலில் அதிகமாக செல்லும் போது, நாம் ஆடை அணிந்திருக்கும் பகுதிகள் தவிர மற்ற இடங்களில் வெயில் படுவதால் கருப்பாக தெரிகிறது. ஆனால், முகத்திற்கு கிரீம், பேஷியல் என அப்ளை செய்து கொஞ்சம் வெள்ளையாக்கி விடுகிறோம். அதே, கவனத்தை கொஞ்சம் கைகளிலும் செலுத்தினால் கருப்பாக இருக்கும் கைகளை வெள்ளையாக்கி விடலாம். என்ன செய்யலாம்?



1. தயிருடன் சிறிது மஞ்சள் தூள் கலந்து, அவற்றை மாலை வேளைகளில் கைகளில் தடவி 2030 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், கைகளில் உள்ள கருமையை படிப்படியாகப் போக்கலாம்.



2. தக்காளியை வெட்டி, அதனை கருமையாக உள்ள கைகளில் தேய்த்து 1520 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி செய்வதால் அதில் உள்ள அமிலம் கைகளில் உள்ள கருமையை மறைக்கும்.



3. பாதாமை இரவில் படுக்கும் போது சிறிது பாலில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அதனை பால் ஊற்றி அரைத்து பேஸ்ட் செய்து, கைகளில் தடவி உலர வைத்து, பின் கழுவ வேண்டும். இச்செயலை தினமும் செய்து வந்தால், கைகளில் உள்ள கருமை நீங்குவதோடு, கைகளும் மென்மையாக இருக்கும்.



4. பப்பாளியில் சரும கருமையைப் போக்கும் பொருள் உள்ளது. எனவே பப்பாளியை அரைத்து அந்த பேஸ்ட்டை கைகளில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து கழுவி வர, கைகள் வெள்ளையாகும்.



5. மஞ்சள் தூளில் சரிசம அளவில் பால் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, கைகளில் தடவி உலர வைத்து கழுவினால், வெயிலால் கருமையடைந்த கைகளை வெள்ளையாக்கலாம்.

6. கற்றாழை ஜெல்லை தினமும் கைகளில் தடவி உலர வைத்து கழுவி வந்தால், கருமையைப் போக்கி கைகளின் நிறத்தை அதிகரிக்கலாம்.

# பெண்களுக்கு அழகு தரும் ஆடைகள்



பெண்கள் அணியும் ஆடைகள் அவர்களுக்கு அழகையும், தன்னம்பிக்கையையும் தரவேண்டும். ஆனால் பெண்களில் ஒருபகுதியினர் தங்கள் உடைகளில் திருப்தியடைவதில்லை. அதற்கு காரணம் அவர்களது உடல் அமைப்பு. ஒல்லியாகவோ அல்லது குண்டாகவோ இருக்கும் பெண்கள் தங்கள் உடல் அமைப்புக்கு ஏற்ற உடை எது? என்று தெரியாமல் தவித்துப்போகிறார்கள். அதிக நிறத்துடன் காட்சியளிப்பவர்களும், சுமாரான நிறத்தில் தோன்றுகிறவர்களும், தங்களுக்கு எந்த நிறத்திலான உடை பொருத்தமாக இருக்கும்? என்று குழம்புகிறார்கள். அவர்கள் குழப்பம் நீங்கி, அழகான உடைகளை தேர்ந்தெடுக்க தேவையான ஆலோசனைகள்!

★ சில பெண்களின் ஒட்டுமொத்த உடல்வாகு ஒல்லியாகத் தோன்றும். ஆனால் கால்கள் மற்றும்



சற்று தடித்த நிலையில் அமைந்திருக்கும். அப்படிப்பட்டவர்கள் லெகின்ஸ் அணிய விரும்பலாம். அவர்கள் அடர்ந்த நிறத்திலான லெகின்ஸை தேர்ந்தெடுக்கவேண்டும். சற்று குண்டான கால்களை இது ஓரளவு ஒல்லியாக காட்டும்.

இவர்கள் பொதுவாகவே உடலை இறுக்கிப்பிடிக்கும் உடைகளை தவிர்ப்பது நல்லது. சற்று கெட்டியான மெட்டீரியலில் தயார் செய்யப்பட்ட லெகின்ஸ்களை அவர்கள் தேர்ந்தெடுத்து அணிய வேண்டும். காபி பிரவுன், அடர் பச்சை, கறுப்பு, நேவி ப்ளூ, பர்பிள்.. போன்ற நிறங்கள் அவர்களுக்கு பொருத்தமானது. இளம் நிறத்திலான குர்தியை இதற்கு மேலாடையாக அணியலாம்.



# செல்ஃபி உலா


அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த எழில்மாறன் மோனாலிஷா தம்பதிகளுக்கு இனிய திருமண வாழ்த்துகள் தேற்றாத்தீவு ஸிந்தூரன்


Duwaraga


Aarthy


Abimanyu


kajal


Rajshree


sandiya


veena


சின்னஞ்சிறுசுகளின் சின்ன ஆசை


lavanya


Ramya

## - கவிஞர் நஜிமுல் ஹூசைனின் நகைச்சுவை

இறுமாப்பு பிடித்த ஒரு பணக்காரனின் மகன் ஒரு நாள் ஓர் ஒட்டகத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு பாடசாலைக்கு வந்தான். எல்லோரும் அவனை ஆச்சரியமாக பார்த்தனர். அவனைக் கண்ட பாடசாலை அதிபரும் அதிர்ச்சி அடைந்தார். அவனைப் பார்த்து அதிபர் "நீ என்ன செய்கின்றாய்? எதற்கு இந்த ஒட்டகத்தை இழுத்துக் கொண்டு இங்கே வருகிறாய்" என்று கேட்டார். "இல்லை சேர் எங்க சித்திர ஆசிரியர்தான் ஒட்டகம் கொண்டு வரச் சொன்னார்" என்று சொன்னான். அதிபருக்கு ஒன்றும் விளங்கவில்லை. உடனே சித்திர ஆசிரியரை வரச் சொன்னார். அவரிடம் " நீங்கள் தானே இவனுக்கு ஒரு ஒட்டகத்தை கொண்டு வர சொன்னீர்களாம். ஏன் எதற்காக சொன்னீர்கள் ?" என்று கோபமாக கேட்டார்.

" இல்லை சார் நான் அப்படி ஒன்றும் இவனுக்கு சொல்லவே இல்லை" என்று கூறிய சித்திர ஆசிரியர் என்ன நினைத்தாரோ தெரியாது அருகிலிருந்த சுவரில் தலையை மோதிக் கொண்டார். அதிபரை பார்த்து அவர் சொன்னார், "சேர் நான் இவனுக்கு படங்களை ஒட்ட கம் கொண்டு வா என்று தான் சொன்னேன்" என்று சொன்னார் மயங்கி கீழே விழப் போன அதிபர் அங்கே திரும்பிப் பார்த்தபோது ஒரு மாணவன் ஒரு காகத்தை பிடித்து தண்ணீர் பக்கட்டுக்குள் போட்டு அமுத்திக் கொண்டிருந்தான்.

" அடடா உனக்கு யாராவது ஆசிரியர் கா கம் கொண்டு வா என்று சொன்னார்களா ?" என்று கேட்டார்." இல்லை சார் எங்க விஞ்ஞான ஆசிரியர் எதையும் உண்மையா என்று பரீட்சித்துப் பார்க்கச் சொன்னார். எங்க தமிழாசிரியர் காகம் கரையும் என்று சொன்னார். அதுதான் சேர் காகம் கரையுமா என்று தண்ணீரில் அமுத்தி பார்க்கிறேன்" என்றார். இப்போது பாடசாலை அதிபர் மயங்கி விழுந்து விட்டார்.

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## FILL IN THE MISSING LETTERS

| | |
|---|---|
| _NT | _IRD |
| _IG | _EE |
| _ALL | _AR |
| _GG | _AN |
| _ION | _UN |
| _OOK | _ISH |
| _UCK | _TAR |
| _REE | _RAIN |

## தொடர்புபடுத்துங்கள்



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# உலக சாதனை படைத்த இரண்டரை வயது சிறுமி மின்ஹத் லமி



அம்பாரை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மருதமுனை அல் மினன் வீதியில் வசித்து வருகின்ற ஸர்ஜுன் அக்மல், பாத்திமா நுஸ்ஹா தம்பதிகளின் செல்வப் புதல்வியான மின்ஹத் லமி தனது இரண்டரை வயதில் 120 உலக நாடுகளின் தலை நகரங்களை வெறுமனே இரண்டு நிமிடத்தில் மிக வேகமா கூறி உலக சாதனை புத்தகத்தில் (international book of world record) தனது பெயரை பதிவு செய்து உலகின் 120 நாடுகளின் தலை நகரங்களை வெறும் இரண்டு நிமிடத்தில் கூறிய உலகின் முதலாவது சிறுமியாக தனது பெற்றோருக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்த்துத்துள்ளார்.

உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனை சிறுமியாக தமது இணையதளத்தில் வெளியிட்ட துடன், சென்ற வாரம் இவருக்கானா இலட்சினை,பதக்கம், மற்றும் சான்றிதழ் என்பன அனுப்பி வைக்கபட்டு கௌரவிக்கப்பட்டார் .

தனது இரண்டரை வயதில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த மின்ஹத் லமி மருதமுனை வரலாற்றில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த முதலாவது சாதனை சிறுமியாவார். இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய இச்சிறுமியை பிரதேச மக்கள் பலரும் இப்போது பாராட்டி வருகின்றார்கள்.

இவர் மருதமுனையை சேர்ந்த யூசுப் சர்ஜுன் அக்மல், வதுறுதீன் பாத்திமா நுஸ்ஹா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாக 2019ம் ஆண்டு ஜுன் மாதம் 10ம் திகதி பிறந்தவராவார். இவரது தந்தை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இன் பழைய மாணவராவார். இவரது தாய் இலங்கை தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் இறுதி வருடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இவரது தந்தை சர்ஜுன் அக்மல் குழந்தையின் திறமையையும், அதீத நினைவாற்றலை பற்றி தெரிவிக்கும் போது பிறந்த குழந்தைகளின் கைகளில் விளையாட்டு பொருட்களுக்குப் பதிலாக ஸ்மார்ட் போன்களை திணித்து மகிழும் பெற்றோர்களுக்கு மத்தியில் நான் எனது குழந்தைக்கு நிறங்கள், பழங்கள், இலக்கங்கள், வடிவங்கள், எழுத்துக்கள் மற்றும் பொது அறிவுத் தகவல்களையும், அது தொடர்பான எளிய செயல்முறைகளையும் கற்றுக் கொடுத்தது டன் குழந்தையுடன் அதிக நேரத்தை செலவிட்டு இன்று எனது குழந்தையை ஒரு சாதனை குழந்தையாக ஆக்கியுள்ளோம்.

இச்சிறுமி தனது பெற்றோர்கள் சொல்லிக் கொடுப்பதை அப்படியே செவிமடுத்து மனனம் செய்வது டன், ஞாபகத்திலும் வைத்துக்கொள் வார். இவர் எதாவது ஒரு பொருளையோ, ஒரு இடத்தையோ அவதானித்தவுடன் அது பற்றி அறிந்து கொள்ள அதிக ஆர்வம் காட்டக்கூடியவர். அதனை அறிந்து கொண்டு சில நாட்களுக்கு பின்னர் அப்பொருள் பற்றியோ அவ்விடம் பற்றியோ தானாகவே சொல்லக்கூடிய திறமை அவரிடம் உண்டு.சுற்று சூளலில் உள்ள பொருட்கள், இவருடைய புலங்களுக்கு தென்படுகின்ற எதுவாக இருந்தாலும் அது பற்றி கேட்டறிந்து கொள்வார்.

இவர் 400க்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கில கருத்தினை தெளிவாக சொல்லக்கூடிய திறமையும், தமிழ் அகரவரிசையிலுள்ள 247 எழுத்துக்களையும் மிக வேகமாக சொல்லக்கூடியவர். அத்துடன் மாதங்கள், வாரங்கள், நிறங்கள், பழங்கள், வடிவங்கள், உடல் உறுப்புகளின் பகுதிகள்,பறவைகள்,இலக்கங்கள், ஆங்கில எழுத்துக்கள் மற்றும் அதற்கான சொற்களையும் ஒழுங்கு வரிசையாகவும், வரிசை இல்லாமலும் மிக வேகமாக சொல்லக்கூடிய பல திறமைகளையும் இவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.இவை தவிர பொது அறிவு உள்ளிட்ட விடயங்கள், 100 இஸ்லாமிய கேள்விகளுக்கான பதில்கள், அத்தோடு நின்று விடாமல் தற்போது அல்குர்ஆனின் பல சூறாக்களையும் மனனம் செய்து கொண்டு வருகின்றார்.

சென்ற வருடம் AMR talk அமையத்தின் மூலம் அபார ஆற்றல் கொண்ட இரண்டு வயது குழந்தை என தேசிய ரீதியில் தெரிவு செய்யப்ப ட்டிருந்தார். அத்துடன் PSC talk வல யமைப்பு தேசிய ரீதியில் நாடாத்திய சிறுவர்களுக்கான talent show நிகழ்ச்சியில் பங்குபற்றி 450 போட்டியாளர்களுக்குள் வெற்றி பெற்று அவ்வமைப்பிடம் இருந்து பண்ணப்பரிசும்,சான்றிதழும்பெற்றுக் கொண்டார்.

இக்குழந்தை இரண்டரை வயதில் நிகழ்த்திய இச் சாதனையானது பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

இச்சிறுமி எதிர்காலத்தில் கல்வி துறையிலும், ஏனைய துறைகளிலும் மென் மேலும் பல சாதனைகளைப் பெற்று எதிர் காலத்தில் நாட்டிற்கும் தேசத்திற்கும் பெருமையை தேடித் தரக்கூடிய ஒருவராக மிளிர வேண்டும் என்று வாழ்த்தி பாரட்டுகின்றோம்.

***நன்றி ! இலங்கை முஸ்லிம்கள் வலைதளம்***

ஏ.எம் கஸ்புள்ளா ...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## மன்னார், பேசாலை சங்கவி தியேட்டர் திறப்பு விழா













# அகம் பத்து 01

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா



திணை இலக்கியத்தின் அகநிலைக் காட்சிகள் சங்கச் சான்றோரின் மொழி வரைந்த ஓவியங்கள். காதல் மாந்தரின் உள்ளத்துணர்வுகளின் இழைகள் அவிழ்ந்திருக்கும் சொற்களின் லாவண்யம் உள்ளடக்கமும் உருவமும் அவயவித்து நிற்கும் ஆதிநிலை.

பிரிவு பரிவு சுரக்கும் பாலை நிலத்து தலைமாந்தர் வாழ்வு அகநானூற்றில் அரைவாசியிடத்தைப் பிடித்து நிற்கிறது. தலைவன் பொருள் தேடி அலைவுறுகிறான். அவன் மண்தான் அகப்பாடல்களின் நிலவிடம். பெரும் பொழுதும் சிறுபொழுதும் காலமாகி நின்று அகங்களை இணைக்கின்றன. பாலை நிலம் விரிக்கும் அக் காட்சி களிற்றுயானை நிரையின் முதலடிச்சுவடு.

கூற்றுவழிப் பாடலாகத் தலைமகள் பிரிவினை ஆற்றாளாசித் தன் தோழியிடத்து தன் உணர்வுகளைச் சொல்லுகிறாள் 'பிரியலம் என்ற சொல்'' மீது படர்வுறும் காதலுணர்வுக் கவிதையின் உயிர்ப் பொருள், உரிப்பொருளாகி மாமூலர் செய்யுளில் ஒளிர்கிறது.




இயற்கையும், சுற்றுப்புறச் சூழலும் கருவாகிக் கவிக்கு முற்றுருவை வரைகின்றன.

'பிரியலம்'' என்ற சொல்லின் கதையில் தலைவிக்கு பொன் பொருள் தேடிப் பிரிகிறார் தலைவன். மீளத்திரும்புவதில் தாமதம். அவள் தனிமைத் தவிப்பில் மெலிகிறாள். தலைவனை எண்ணி வருந்துகிறாள். அவன் பிரிவெண்ணி ஐயமுறுகிறாள்.

தலைமாந்தரின் பாத்திர உள்ளுணர்வுகளைக் கருவாக் கொண்டு மாமூலர் நிரப்புகிறார். 'நிலம்பக அழல் போல் வெங்கதிர்...'' சுடும் வழிக்கொடுமை எண்ணித் தலைவி வருந்துகிறாள். கதிர் நிலம் பசுமையறக் காய்ந்ததுளு மரங்கள் வரண்டனளு நிழலுமற்றனளு சுனைகள் வற்றினளு பாறைகளில் கொதிப்புளு மூங்கில் வெடித்து நெல் சொரிந்ததுளு பாறைகளில் பொருக்குகள்ளு வெப்பத்தால் அவ்வழியில் யாவருமில்லைளு ஆறையரும் வறுமையுற்றனர்ளு பாலைவழி பொலிவற்றதுளு தலைவியின் பிரிவுத் துயர் மனமும் பாலை மனமாய்க் கொதிப்புறுகிறது.

நாருமற்ற முருங்கையில் உலர்ந்த வெள் மலர்கள் காற்று வீசவும் அவை கடலலையின் சிதறிய நீர்த்திவலைகள் போல் எங்கும் உதிர்ந்தன. தலைவியின் உதிர்நிலை மனத்தின் வெளிப்பாடு காட்சி அது.

அவள் மனம் வெம்புகிறாள்;. வெப்பு சாரத்துக்குக் காரணம், அவன் பிரியலம் பிரியவே மாட்டோமென்று அன்று சொன்னதொரு சொல்தான். என்று சொன்னான்; எங்கு சொன்னான்.

மழவர்களையோட்டிய நெடுவேள் ஆவியின் பொதிகை மலைநாட்டில் சாணைக் கல்லின் அரக்கும் கல்லும் போலவே நாமிருவரும் பிரியோம் என்று சொன்னான். இன்று சொல் பிழைத்தானென வெப்புசாரப்படுகிறாள் தலைவி.

தலைவியின் பிரிவுத் தவிப்பின் உணர்வோவியம்தான் இந்தப் பாலைப்பாடல்....

மீளத்திரும்பா நீட்சி நிலையெண்ணி அல்லலுறுகிறாள் தலைவி. அவளது மன அவஸ்தையின் வெளிப்பாடுதான் 'வண்டு படத்ததைந்த கண்ணி....'' தோழியை நோக்கிப் பேசுகிறாள் தலைவி.

பிரிவும் பிரிவு நிமித்தமுமாக விரியும் பாலையின் சொல்லூற்றுச் செய்யுள் நம் மெய்யுள் ஏற்படுத்தும் சிலிர்ப்பும் மண அதிர்வும் அதிகம்.

### பிரியலம்

*அகவிக்கிடந்தாள் மனம்*
*பிரிவு பாறையெனக் கொதித்தது*
*சிறுதுளி ஈரத்தை*
*வரண்ட சுனையாய்க் கிடந்த*
*நெஞ்சில் மீட்டெடுத்தாள்*
*பாலைப் பண்ணொரு தித்திப்பு*
*அல்லது விளரி*

*அதியகத்தின் முற்றுருவென*
*விரிகிறது பெரும் பொழுது*
*கூற்றுவழிப் பாடலொரு கணம் அலைகிறது*

*அவன் நெஞ்சுள் பொன்னொரு பிரகாசம்*
*அவள் நெஞ்சுள் துயர் ஒரு அவகாசம்*
*எனினும் ஒளிர்கிறாள் நிலத்தலைவி*

# ஔவன் கவிதை



## மௌனத்தின் சுவர்ரேகை

சாளரத்தின் வெளியே இசையின் மீதம்
மூடிய கதவிடுக்குகளில்
இருளின் பெருமூச்சு அலைகிறது
உட்சுவரெங்கும் உயிர்க்கும்
மௌனத்தின் ஓவியத்தை
அர்த்தங் கொண்டு மொழிபெயர்க்கிறது
சுவர் கடிகாரம்

யாருமில்லை உள்ளே
எல்லாமிருந்தது வெளியே

சாளரத்தின் வழியே இசையின் மீதம்
நிரம்புகிறது

மௌனத்தின் சுவர் ரேகைகளில்
நுழைகிறது இசையின் உயிர்ப்பு

இருளி முகத்தில் படிந்த
சாம்பல் நிற வானத்தில்
ஒரேயொரு ஒளிப்புள்ளியாகி இசைகிறாய்
நீ

# அகவாசி



பனுவலின் முப்பத்து மூன்றாம் பக்கத்தின் மூன்றாம் பத்தியின் பதின்மூன்றாம் வரியில் செத்துக்கிடந்தது, புள்ளியளவு ஒரு பூச்சியாய் மனசு. மூன்று நாளாய் வாசிக்கவென விரல்களில் இறுகிய பனுவலைத் தொடர முடியவில்லை. பனுவல் மேலே போக விட்டதாயுமில்லை. சொற்கள் திரும்பத்திரும்ப கன்னத்தில் அறைவதாயும், கண்ணிலிருந்து ஒழுகுவதாயும், சினத்தில் பொங்கிப் பொங்கி வெடிப்பதாயுமிருந்தன. வெடிக்கும் சொற்களை மறுபடிமறுபடி பொருத்துகிறேன். வேறு வடிவத்தில் பனுவல் உருக் கொள்கிறது.

உரு எனக்குள் வளர்கிறது. பனுவலிலிருந்து கை நழுவி விழ விரல்களில் வேறு வினைகள். வினைகளின் வியர்வையில் கரைந்து மீள்கையில், கையில் மீள்கிறது பனுவல். மீ இருளின் அமைதியில் பூத்த வாசிப்பு. வாசிக்க வாசிக்கச் செத்துக்கிடக்கிறது புள்ளியளவிலொரு பூச்சி.

றெக்களைப் பொருத்துகிறேன். மீ வாசிப்பு என்னுள் பரவுகிறது. ஆயிரம் முகங்களின் சிறகசைப்பு மனசுள் வளர்கிறது.

என் குடிசை பனுவலாகிறது. குப்பிவிளக்கு சிற்றொளி பெய்கிறது. அங்கும் ஒளியிடை என் வாசிப்பு ஊர்கிறது. குந்தியிருந்து முகங் கறுக்கும் துணையாளின் மூச்சுக் காற்றில் பனுவல் கொதிக்கிறது. வார்த்தையற்ற வார்த்தையைக் குடிசையெங்கும் பரப்புகிறாள்.

அதன் ஒளி, இருள், அதன் சாந்தம், சினம், அதன் நனவு, கனவென என் சுவாசிப்புக்குள் மிதக்கிறது வாசிப்பு. குடிசை எனும் பனுவலின் எத்தனையாம் பக்கமிது. எனக்கே புரிவதில்லை. புரிதல் என்பதும் வாசிப்பின் உச்சநிலை. அல்லது சமரசத்தின் சாந்திநிலை. கடந்து வந்த பக்கங்களின் கறுப்புக்குள் ஒரேயொரு நட்சத்திரக் குஞ்சு ஒளிந்திருக்கிறது. எனக்கு சந்தோசம். துணையாளுக்கும் சந்தோசம் தான் இருக்க வேண்டும்.

இனி வரும் பக்கங்களை (சு) வாசித்துச் செல்கையில் ஆயிரம் நட்சத்திரங்கள் பூக்கலாம். துணையாளியின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஆசைகளையும் ஆவல் பூத்த மனசையும் என் வாசிப்பு கொன்றுவிடுகிறதான துணையாளியின் நம்பிக்கை என் வாசிப்பைக் கொல்கிறது.

மூடப்படும் பனுவலுக்கு வெளியே குடிசை எனக்குள் மீள மீளப் பனுவலாகிறது. எனது வியர்வையின் வேர் எழுத்து, எழுத எழுத ஒளி பெருகுவதாய் எனக்குள்ளொரு ஒளி இருக்கிறது.

எழுத எழுத துணையாழிக்குள் இருள் பரவுகிறது, இருளை ஒளி கவ்வுகிறது, ஒளியை இருள் போத்துகிறது.

குடிசையை மொழிபெயர்த்தொரு பெருங்காவியம் எழுதுகிறான், ஒரு மாயப்புனைவாளன். அவனை வாசித்தல் தொடர்கிறது. ஐம்பத்தாறாம் பக்கத்தில் மூன்றாம் பந்தியின் இருபத்திரண்டாம் வரியில் ஒரு சொல் இருந்தது. புள்ளியளவில் ஒரு பூச்சியாய்.

அந்தச் சொல்லில் மாயப்புனைவாளன் ஒரு கணம் செத்துக் கிடந்தான். ஒரு கணம் உயிர்த்துக் கிடந்தான்.

பொன்மீரா

# நவீன ஓவியங்களில் ஒளிரும் மொழி

**மொழி எழுத்து வடிவிலானது மட்டுமல்ல, அதற்கு வேறும் பல உருவங்கள் உள்ளன. அவற்றுள் ஓவியமும் ஒரு வடிவம்தான். ஓவியமொழி தரும் உணர்வும், அதிர்வுகளும், அவாவும் கவிதைக்குச் சற்றும் குறைவற்றன. உண்மையில் ஓவியம்தான் ஆதி மொழி வடிவமாகவும் இருந்தது.**

**உலகெங்கிலுமான ஓவிய வரலாற்றைப் படிக்கையில் அதன் கனதியை அறிகிறோம். மரபோவியம், நவீன வடிவத்துக்கு வந்து சேரும் போது அது ஏற்படுத்திய வலு வலிமையானது. கோடுகளின் கிறுக்கல்கள், வர்ணங்களின் கலவைகள், கலவைகளின் குழம்பல்கள், அவிழ்ந்திருக்கும் அர்த்தங்கள் ஆயிரம். கோடுகளில் ஒளிந்திருக்கும் ஓவிய மொழி ஓவிய வாசிப்பாளனின் மீ ரசனையால் மதிப்பிடப்படுகிறது. இன்னொரு வகையில் சொல்வதெனில் ஓவியனின் தூரிகையின் உயிர்ப்பு மொழி தரும் கனதி இன்றைய நவீன ஓவிய உலகில் மறுதலிக்க முடியாதது.**



**ஓவிய மொழியைக் கையாள்தலும், அதனைப் புரிந்து கொள்ளலுமான, ஓவியன் ரசிகன் உணர்வுக் கடத்தலென்பதுதான் ஓவியத்தின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. படைப்பாளி இறந்து விட்டான் என்கிற இலக்கியக்கோட்பாடு ஓவியத்துக்கும் பொருத்தமானதேயாகும்.**

**மொழி ஒரு பண்பாட்டுக் கலாசார ஆவணமாகத் திகழ்வது போல ஓவியமும் சமூக பண்பாட்டு, அரசியல், இன, வர்க்க, நில, ஆவணமாகவும் இருக்கிறது. அதனால்தான் எல்லா சமூகங்களிலும் ஓவியம் வேர்பிடித்து நிற்கிறது. உண்மையில் அது எடுக்கும் மொழியின் வடிவம் காலம் கடந்தும் ஒளிரும் ஒரு புதுப் பிரவாகம்தான்.**

# இந்தியாவின் பிரமாண்ட இயக்குனர் ஷங்கர்



ஷங்கர் இந்திய திரைப்பட இயக்குநர் ஆவார். எஸ். பிக்சர்ஸ் என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். இவருடைய படங்கள் அவற்றின் தொழில்நுட்ப அருமை, பிரம்மாண்டம், அதிரடியான சமூக மாற்றக் கருத்துக்களுக்காகப் பேசப்படுகின்றன.

திரைப்பட இயக்குநர் ஆவதற்கு முன், எஸ்.ஏ.சந்திரசேகரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றினார்.

இவர் எஸ் பிக்சர்ஸ் என்ற திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தி வருகிறார்.

இயற்பெயர்:ஷங்கர் சண்முகம்.
பிறந்த இடம்:கும்பகோணம், தஞ்சாவூர் .

**பணியாற்றிய சில படங்கள்:**



1993.ஜென்ட்ல் மென்
1994.காதலன்
1996.இந்தியன்
1998.ஜீன்ஸ்.1999.
2000.முதல்வன்.
2001நாயக்:
(ஹிந்தி முதல்வன்)
2003.போய்ஸ்.
2005. அந்நியன்.
2007.சிவாஜி .
2010.எந்திரன்
2012.நண்பன்.
2015.ஐ
2018. 2.0
(எந்திரன் பாகம் 2)

# கிழக்கே போகும் ரயிலில் அறிமுகமான ராதிகா



ராதிகா சரத்குமார் தென்னிந்திய திரைப்பட நடிகை மற்றும் தொலைக்காட்சி நடிகை, தயாரிப்பாளர் , அரசியல்வாதி ஆவார். ராடன் மீடியா (Radaan Media Works Limited) என்ற நிறுவனத்தின் நிறுவனர் ஆவார். இதன் மூலம் பல தமிழ் திரைப்படங்கள், தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர்களை தயாரிக்கின்றார். இலங்கையில்

கொழும்பு நகரில் 1963 ஒகஸ்ட் 21 இல் நடிகர் எம். ஆர். ராதாவுக்கும், அவரின் நான்காவது மனைவி கீதாவிற்கும் பிறந்தவர் ராதிகா. நடிகை நிரோஷா. திரைப்படத் தயாரிப்பாளர் ராதா மோகன் ஆகியோருடன் உடன்பிறந்தவர்கள் ஆவர். நடிகரும் அரசியல்வாதியுமான ராதாரவி இவருடைய உடன் பிறவா சகோதரர் ஆவார்.

ராதிகா நடிகரும், அரசியல்வாதியுமான சரத்குமாரை 2001 ஆம் ஆண்டில் திருமணம் புரிந்தார். சரத்குமார் ஏற்கனவே சாயாதேவி என்ற தன் முதல் மனைவியை விவாகரத்து செய்த பின் இவரை மணந்தார். இவர்களுக்கு ராகுல் என்ற மகன் 2004 ஆம் ஆண்டில் பிறந்தார். முன்னதாக, ராதிகா இரு முறைகள் திருமணம் புரிந்து விவாகரத்துப் பெற்றவர். முதல் முறை மலையாள நடிகரும், இயக்குனருமான பிரதாப் போத்தனையும், பின்னர் இங்கிலாந்தைச் சேர்ந்த ரிச்சார்டு ஹோர்ட்டி என்பவரையும் திருமணம் புரிந்தார். ஹோர்டியுடன் இவருக்கு ரெயான் ஹோர்ட்டி என்ற பெண் குழந்தை உண்டு. 2006 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அவர் தனது கணவர் சரத்குமாருடன் அதிமுகவில் இணைந்தார். 2006 ஒக்டோபர் 18இல் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டார். 2007 முதல் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி துணைப் பொதுச்செயலாளராக உள்ளார். கிழக்கே போகும் ரயில் படத்தில் பாரதிராஜாவால் 1978இல் அறிமுகமானார். ஜெய்சங்கர் கதாநாயகனாக நடித்த "ரத்தத்தின் ரத்தமே"

திரைப்பட படப்பிடிப்பு இலங்கையில் நடைபெற்ற போதும்,நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மறைந்த பின் "சிவாஜிக்கு புகழாஞ்சலி"என்ற நிகழ்ச்சி இலங்கையில் நடைபெற்ற போதும் கொழும்புக்கு வந்தார். தமிழ்,தெலுங்கு,மலையாளம்,கன்னடம் என 300படங்களுக்கு மேலாக நடித்தவர் ராதிகா.சென்னையில் நடிகை ஸ்ரீபிரியாவின் வீட்டில் வாடகைக்கு இருந்த போது இயக்குனர் பாரதிராஜாவின் கண்ணில் பட்டுள்ளார். இவரது துறு துறு வான பேச்சும்,நடையும் கவர்ந்ததால் கிழக்கே போகும் ரயில் படத்தில் வரும் பாஞ்சாலி வேடத்திற்கு இவர்தான் பொருத்தமாக இருப்பார் என பாரதிராஜா தீர்மானித்

**இவர் நடித்த திரைப்படங்களில் சில:**

கிழக்கே போகும் ரயில்
நிறம் மாறாத பூக்கள்
ரத்தத்தின் ரத்தமே
இன்று போய் நாளை வா
போக்கிரி ராஜா
மூன்று முகம்
ரெட்டை வால் குருவி
தாவணிக் கனவுகள்
பொய் சாட்சி
நீதிபதி
நேர்மை
மணமகளே வா
நினைவுச் சின்னம்
பூந்தோட்ட காவல்காரன்
தைப் பொங்கல்
ஊர்க்காவலன்
கிழக்குச் சீமையிலே
வீரபாண்டியன்
தெற்கத்திக்கள்ளன்
சிப்பிக்குள் முத்து
நல்லவனுக்கு நல்லவன்
பேர் சொல்லும் பிள்ளை
பசும்பொன்
நானே ராஜா நானே மந்திரி
கேளடி கண்மணி
பவித்ரா
ராசய்யா
வீரத்தாலாட்டு
சூர்யவம்சம்
ஜீன்ஸ்
தாஜ்மஹால்
அமர்க்களம்
பூமகள் ஊர்வலம்
ரோஜாக்கூட்டம்
கண்ணாமூச்சி ஏனடா
பந்தயம்
சகுனி
இரண்டாம் உலகம்
அமர்க்களம்

**ராதிகா நடித்துள்ள சில தொலைக்காட்சி தொடர்கள்:**

சித்தி
அண்ணாமலை
செல்வி
அரசி
செல்லமே
வாணி ராணி
சந்திரகுமாரி
சித்தி (பருவம் 2)



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

(21ஆம் திகதிய தொடர்)



# காலனியத்திற்கு எதிரான கிரிக்கெட்டும் கிரிக்கெட் காண வந்த கடவுளும்

அவர் வந்துவிடுவதற்கான முன்னறிவிப்புகள் ஏதும் இல்லாதபோதும் விளையாட்டு ரசிகர்களால் மைதானம் நிரம்பி வழிந்தது .

அவர் வருவதுபற்றி அறிவிக்கப்பட்டிருந்தால் டிக்கெட் விற்பனை தடைபட்டிருக்கலாம் என்பதாலோ அல்லது அவர் வருவதற்கான அறிகுறிகள் தென்படாதக் காரணத்தாலோ அவர் வருகை அறிவிக்கப் படாததால் ஊரே களைக்கட்டியிருந்தது. மதிய இடைவேளை வரையிலும் வாராத கடவுள் விளையாட்டின் மும்முரத்தை அவதானித்துவிட்டு வானத்தின் மேலாக மெல்லக் கரியநிறத்து முகில்களினூடே தன்னுடைய வருகையை விளம்பரப்படுத்தத் தொடங்கியிருந்தபோது விளையாட்டில் மெய்மறந்திருந்த இரசிகர்கள் கிரிக்கட்டைத் தெய்வமாக வழிபட்டுக் கொண்டிருந்தார்கள் .

கடவுள் மெல்ல மெல்ல இறங்கிவந்து மைதானத்துக்குள் திடீரென நுழைந்தபோது விளையாட்டு வீரர்கள் நடுவர்கள் எல்லோரும் அரங்கத்தினுள்

நுழைந்து கொண்டார்கள்.

விறுவிறுப்பான போட்டியொன்றை பாதியில் இடைநிறுத்தியக் கடவுளின் வருகையால் முகம் சுழித்த இரசிகர்கள் வாங்கிய டிக்கட் பணம் வீணான வருத்தத்தில் கடவுள்மேல் ஆத்திரப்பட்டுத் திட்டினார்கள் .

ஒருசிலர் சற்று நேரத்தில் கடவுள் போய்விடுவார் மீண்டும் போட்டி ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையில் இருக்க கடவுளோ எவரையும் வெளியே செல்லவிடாதவாறு மைதானத்திற்கு வெளியிலும் வியாபித்திருந்தார்.

முடிவு என்னவாகுமோ என்ற வருத்தத்தில் இருந்த இரசிகர்களுக்கு போட்டி வெற்றித் தோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டபோது ஏமாற்றப்பட்ட மனசோடு கடவுளை கண்டிக்க வழியின்றி கடவுள் போகும்வரை நின்றிருந்து கடவுள் போனதும் கவலையோடு போகத் தொடங்கினார்கள்.

ஊரெங்கும் வியாபித்திருந்தக் கடவுள் வெளியேறிய வேளை வெளியில் வந்து தங்கள் வயல் வெளிகளை பார்த்த ஊர்க்கார உழவர்கள் சொல்லத் தொடங்கினார்கள் இம்முறை அமோக விளைச்சல் கிடைக்குமென்று விவசாயிகளைப் பார்க்கவந்தக் கடவுளை விளையாட்டு பார்க்க வந்தக் கடவுளாகக் கருதிக் கொண்டவர்கள் மட்டுமே புலம்பியிருந்தார்கள் கடவுளை மழை என்று. நண்பர் மெய்யபன் நடராஜ் நல்ல கவிஞர். மரபு கவிதை, இன்றைய, நவீன கவிதை எழுதுவதில் வல்லவர். அவர் முகநூலில் எழுதிய ' கிரிக்கெட் காண வந்த கடவுள் கவிதை இதுவரை காலம் தமிழில் படித்த கிரிக்கெட் பற்றிய கவிதைகளில் வித்தியமானது. இக்கவிதையை நான் பின்காலனிய தமிழக் கவிதையாகவே பார்க்கிறேன்.

காலனியம் புகுத்திய விளையாட்டாக கிரிகெட் விளங்கர விவசாயம் என்பதை கீழைத்தேய சமூகத்தின் ஒரு குறியீடாகவே நான் பார்க்கிறேன். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் விருத்தியை பாதிக்கும் வகையில் மேலைத்தேயம் நுண்ணியமான முறையில் செயல்படுகிறது.

கிரிக்கெட்டில் மயங்கிவரும் மழையை எரிச்சலாகப் பாரக்கும் ரசிகர்கள், அம்மழை தம் நாட்டின் விவசாயத்திற்கு தேவையானது என்பதை மறந்து, ஆயிரக் கணக்கான பணத்தை செலுத்தி, கிரிக்கெட்டில் மயங்கி மழையை எரிச்சலாக பார்க்கும் மனோபாவத்தை எடுத்துக் காட்டுகிறது.

வெறும் காதல் துணுக்களும், வெறும் கோஷங்களும் கவிதைகளாக எழுதப்படும் காலகட்டத்தில் மெய்யனின் மேற்குறித்தக் கவிதை கவனத்திற்குரிய கவிதையாகுகிறது..

காலனித்துவ மனோபாவத்திற்கு (கிரிக்கெட்டை ரசிக்கும் மனோபாவம்) எதிரான ஒரு செயலாகவே, தம் விருத்திக்கான கடவுளாக மழையைப் பார்ப்பதுதான் இக்கவிதையை பின்காலனிய கவிதையாக மாற்றி இருக்கிறது. இக்கவிதையை இன்னும் கொஞ்சம் இறுக்கி இருந்தால் அது சொல்ல வந்த செய்தி இக்கவிதையின் வாசகர்களின் மனதில் ஆழமாக இறங்கி இருக்கும், இறுக்கம் செய்யப்பட்ட இக்கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய ஒரு கவிதையாகும்.

ஏலவே குறிப்பிட்ட பின்காலனிய திரைப்படமான 'லாகான் என்ற திரைப்படமும், மெய்யன் நடராஜ் முகநூலில் எழுதிய கிரிக்கெட் காண வந்த கடவுள் என்ற கவிதையும் ஒரே கோட்டில் பயணம் செய்யும் அதாவது காலனியத்திற்கு எதிரான இரு படைப்புகளாகும்.

மேமன்கவி

# நூல் வெளியீடு, கௌரவிப்பு விழா
























படங்கள்:
சமந்த வீரசிறி, அஷ்ரப் ஏ சமத்




லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளான தினகரன்,தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் எமது சிரேஸ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பான 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். றிஸ்மியுடனான நேர்காணலும்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) கொழும்பு 3 மென்டரினா ஹோட்டலில் நடைபெற்றது.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.